L.B
No8
118503

உ

கடவுள் துணை.

OF THE REGISTRAR OF ... 12 OCT 1908 49

வேதவியாச மஹாமுனிவரால் திருவாய்மலர்ந்தருளிய

# வியாச வைத்தியம்.

49 / 4.08

இஃது

சதுரை,

அ. சிவசிதம்பரப் பிள்ளை யவர்களால்.

பரிசோதிக்கப்பட்டு.

சென்னை சூளை

ஜி. ஆர். பாலையநாயுடு

அவர்களாற் றமது

பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

இதன் விலை] ரூபா 1.]

Registered Copy Right.

12 OCT 1908

118503

# முகவுரை.

அன்பர்காள்!

உலகத்திலுள்ள மாந்தர்களை நோயில்லா வாழ்வினந்த மெய்துதற்காகவே வேதவியாச மகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய இந்த வியாச வைத்தியம் எட்டுப்பிரதியா யிருப்ப, அநேகர் இதனை அச்சிட்டுத் தரவேணுமென்று அநேக நாளாய்க்கேட்டுக்கொண்டிருந்தமையால், யான் இதனை வெகு முயற்சியுடன் தேடி ஒரு பெரியவரால் கிடைக்கப்பெற்று அதனைத் தெளிவாய் அச்சிற் பதிப்பித்தேன். இந்த வைத்திய நூலில் விளங்கும் ஒவ்வொரு வைத்திய முறையும் உண்மையாகவே விளங்குமன்றி ஒன்றேனும் வீண்பழுதுறாது. அன்றியும் இவற்றில் கியாழவகை, லேகிய வகை, பஸ்பவகை, மூலிகைவகை, மாத்திரை வகை மாந்த எண்ணெய், கெணத்தெண்ணெய், முதலானவும் சூரணங்களும் கிருதங்களும், நோய் வகைகளும் வெகு விநோதமாகக் காண்பித்திருக்கின்றன. இவைகளைச் செய்யும் விதமும் விரிவா யெழுதியிருக்கின்றன, ஆகையால் இதனுடன் அடங்கிய முறைப்படியே செய்து புசிப்பவர்கட்கு எந்நாளினும் நோயணுகாதென்பது உண்மையென்றுணர்வீர்.

இந்நூலைக் கல்வியிற் றேர்ந்தோர் யாவரும் வாங்கி கையாண்டுவந்தால் வெகு பலனைத் தரும். அன்றியும் வைத்தியங் கற்றுக்கொள்வதற்கு அவாவுடையோர் இதனை ஓர் நூலாதாரமாக வைத்துக்கொண்டால் ஆசானில்லாமல் அவரவர்களே உலகோர் புகழ்ந்துரைக்கச் சிறப்புற்றெய்தும் வைத்தியரென சகல பண்டித முறைகளையும் தெரிந்துக் கொள்ளலாம். அன்றியும் வியாதியஸ்தர் இப்புத்தகத்தை கையில்வைத்துக்கொண்டால் வைத்தியர் துணையின்றி தாமே வைத்தியம் செய்துக்கொள்ளலாம்,

இங்ஙனம்,

சதுரை அ. சிவசிதம்பரம் பிள்ளை

உ

# சிறப்புப் பாயிரம்.

திருக்கடன்மல்லை.

வித்வான், பையனூர். வரதராஜப்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

நிலைமண்டில ஆசிரியப்பா.

திருவளர் நலகிற் றினகர னெனவொளி
மருவிய வியாச வைத்திய மென்றே
யாதியில் வடமொழி யாற்சூத் திரங்கள்
இலக்க லாயிர முறைசெய் திருந்ததைப்
பின்னர் யாரோ பிரபல முள்ளவர்க்

கன்னது கிடைப்ப வனவிற் றமிழினாற்
செய்வா ரகத்தரைச் சிரல மாறியாம்
சையுபி ராமபா ணங்களிற் கெடாமல்
ஒருவா றுகளில் வுலகத் தியங்கப்
பரிசோ திக்தவைப் பரிபா லனஞ்செய்தான்

அன்னவ னியாரெனி லறைகுதுங் கேண்மோ
மின்னும் விநாயகர் விருத்தப் பாவினம்
மேதினி புகழ்வடி வேலவ வெண்பா
ஓதுசற் கரிதா மொன்பா னென்புது
கோதிலா திற்றெனக் குறளெனும் பாடல்
தீதிலா நல்லவி சித்திர வினாவிடை
பரவிய சிவசிதம் பரசத கப்பா
உரதிரு வொற்றி யூரந் தாதிநற்
றிருவான் மியூர்க்குத் திகழ்க்கலம்பகம்
அரிதா மெனவே யதிமது ரக்கதை

பூவையர் பூஷணம் புகனுதற் குயர்வு
மேவிய வுலக விநோதமுஞ் சொற்றுற்
நாயகரை யாருறைச் சதுரை நகரினன்
வாமேசீர் கருணர் மரபினி துதித்தோன்
அருணா சலேந்திர னருந்தவப் புதல்வன்
கருணாக ரன்மிகு கல்விக் களஞ்சியன்
மலிபுகழ் வியாக்கிர மகாரிஷிக் கோத்திரன்
வலிசேரு மாசு லாயனச் சூத்திரன்
கவமன் மதனென ஞாலத் தினின்மிளிர்
சிவசிதம் பரமெனச் செப்பு நாவலனே.

சுந்தர ஜெய வீர சூர தீர கவிராஜ
கந்தசாமி பிள்ளை அவர்களா லியற்றிய

# சாற்றுக்கவி.

ஆசிரிய விருத்தம்.

சீரிலகு நான்மறைச் சிக்கறுத் தன்புடன்
சித்தாந்த மாயி ணைத்தாச்
சித்தர்முனி வரர்களும் தேவரும் மிகமெய்த
சிவார்ச்சனை விரத வோமம்

பாரிலகு மாந்தர்கள் மிகவிவா யுணர்ந்திடப்
பற்பலச் சாத்தி ரங்கட்
பண்பா யியற்றியே ஞானவடி வென்றுலகு
பகருரும் வியாச முனிவர்

தாரிலகு மாந்தர்க்கு நோயிலா வாழ்வெய்த
தற்கால வைத்திய நூலின்
தன்மையை யெவராலுங் காண்பதற் கரிதெனச்
சாற்றுமிக் காவியத்தை

நேரிலகு பெரியரொரு வர்த்தமிழ்ப் படுத்திட
நீர்மையுடன் பார்வை யிட்டான்
நீடுபுகழ் சீர்கருணர் குலதிலகத் தூறுசதுரை
நெடுஞ்சிவ சிதம்பர மனே.

12 OCT 1908

## விளம்பரம்.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், இங்கிலீஷ் புத்தகங்களும், பாடசாலை புத்தகங்களும், ரப்பர் முத்திரைகள், ஜர்மன், சில்வர், எலக்ட்றிக் தங்க ஆபரணங்கள், இந்து ஆயுள்வேத ஔஷதங்கள், உயர்ந்த அத்தர் தினுசுகள், புதிய ஜவுளி தினுசுகள் முதலிய யாவும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

ஜீ. ஆர். பாலைய நாயுடு அண்டு கம்பெனி,
சூளை போஸ்ட், மதராஸ்.

# அட்டவணை.


| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| **அ** | |
| அக்கினிகுமாரன் | 52 |
| அக்கினித்தம்பனம் | 63 |
| அசனமுண்ண | 54 |
| மேற்படி வேறு | 54 |
| அசனவில்வாதித் தைலம் | 53 |
| அசனவில்வாதி யெண்ணெ | 58 |
| அசமோதக கற்பம் | 61 |
| அசுவகந்தாங்கிச் சூரணம் | 45 |
| அசுவாதி சூரணம் | 50 |
| அச்சர மாந்தத்திற்கு | 151 |
| அடிகுத்து பட்டால் | 63 |
| அஷ்ட வாயுவுக்கு | 6 |
| அட்டகுணவாய்வுக்குபொடி | 61 |
| அட்டாதிச்சூரணம் | 138 |
| அண்ட வாதத்திற்கு | 55 |
| அண்ட வாயுவுக்கு | 62 |
| மேற்படி வேறுமுறை | 62 |
| மேற்படி வேறுமுறை | 62 |
| மேற்படி வேறுமுறை | 62 |
| அண்ட வாதத்திற்கு வச்சிரசிந்தாமணி | 37 |
| அதிசாரத்திற்கு | 56 |
| அதிசாரக்குளிகை | 49 |
| அதிசாரக்கழிச்சலுக்கு | 58 |
| அதிமதுரச் சூரணம் | 122 |
| அத்திசுரத்திற்கு | 51 |
| அத்திசுரத்திற்கு லேகியம் | 57 |
| அத்திசுரம் சோகை பாண்டு சகலத்துக்கும் | 56 |
| அபின் தின்பதை மாற்ற | 54 |
| அமிர்த சஞ்சீவி மாத்திரை | 120 |
| அமுக்குரா கற்பம் | 52 |
| அரஜனகடிக்கு ஷை | 63-66 |
| அரக்கெண்ணெ | 90 |
| அரக்கெண்ணெ தயிலம் | 55 |
| அரிதாரச் செந்தூரம் | 63 |
| அரோசிப்புக்குக் காந்த பற்பம் | 57 |
| அலகுகட்டுத் திறக்க | 61 |
| அழுகிலா வியாதிகள் எவைக்கும் புகை | 59 |
| அழுகை மாற்ற மருந்து | 60 |
| அழுகின குட்டத்திற்கு | 59 |
| மேற்படி வேறுமுறை | 61 |
| அறுமுகச் சூரணம் | 125 |
| அறுவகை மூலத்திற்கும் | 15 |
| அறையாப்புக்கு | 56 |
| ஷை வேறுமுறை | 57 |
| ஷை வேறுமுறை | 58 |
| ஷை வேறுமுறை | 58 |
| அறையாப்பு வீக்கம்வற்ற | 63 |
| ஷை வேறுமுறை | 63 |
| அனல் சூரணம் | 129 |
| **ஆ** | |
| ஆனந்தவாதத்திற்கு | 76 |
| ஆனந்தவாயுவுக்குப் புகை | 72 |
| மேற்படி | 72 |
| மேற்படி ஷை ஷை | 72 |
| ஆசனக்கடுப்புக்கு | 76 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| ஆநந்த வாயுவுக்கும் வெள்ளைக்கும் | 73 |
| ஆனந்தவைரவக் குளிகை | 75 |
| ஆநந்த பைரவி மாத்திரை | 1[illegible] |
| ஷை இன்னொன்று | 119 |
| ஆநந்தாபரணச் சூரணம் | 130 |
| ஆயாச மாத்திரை | 120 |
| ஆரோக்கிய சூரணம் | 76 |
| ஆறுத புண்ணுக்கு | 75 |
| ஷை வேறு | 75 |
| ஆறாத இரணங்களுக்கு தைலம் | 98 |
| **இ** | |
| இடுப்புப் பிடிப்புக்கும் குடைச்சலுக்கும் | 16 |
| இரத்தக்கழிச்சலுக்கு | 21 |
| இரத்தமூலத்திற்கு | 60 |
| ஷை வேறு | 60 |
| ஷை மற்றொன்று | 130 |
| இரத்தசீதங்கண்டால் குளிகை | 87 |
| இரணங்கள் ஆற்றுகிறதற்கு | 11 |
| இராசசந்திரசேகரக்குளிகை | 80 |
| இருமலுக்கு | 9 |
| இருமலுக்கு நாதவேளைய னுபோகக்குளிகை | 9 |
| இருமலுக்குங் காசத்திற்கும் | 26 |
| இருமலுக்குந் தொண்டைகட்டிக்கும் | 23 |
| இருமல், வரித சூராமலை,பக்கநோய்க்குக் குடிநீர் | 68 |
| இரைப்புக்கும் இருமலுக்கும் | 10 |
| இலகுபுன்னைவேர் மாத்திரை | 119 |
| இலிங்க மாத்திரை | 122 |
| **ஈ** | |
| ஈளைக்கு | 83 |
| ஈளை கூட்டோடேயிழுத்து தொண்டை வலித்தலுக்கு | 83 |
| ஈளை யிருமலுக்கு | 16 |
| ஷை வேறு | 45 |
| **உ** | |
| உடம்பு நாற்றத்திற்கு | 94 |
| உஷ்ணத்திற்கு | 78 |
| உப்பல் மாந்தத்திற்கு | 151 |
| ஷை வேறு | 152 |
| உப்பல் மாந்தம் முக்கு மாந்தம் தொந்த மாந்தத்திற்கு | 147 |
| உப்பு மெழுகு | 103 |
| உதர விருத்தலுக்கு | 149 |
| உருக்கு மாத்திரை | 117 |
| **ஊ** | |
| ஊதுகாமாலைக்கு | 142 |
| ஊதுமாந்தத்திற்கு | 151 |
| மேற்படி | 151 |
| ஊதுமாந்த கெணத்திற்கு | 147 |
| ஊளை மாந்தத்திற்கு | 146 |
| **எ** | |
| எலிகடிக்கு | 85 |
| மேற்படி | 95 |
| மேற்படி | 95 |
| மேற்படி | 95 |
| மேற்படி | 96 |
| மேற்படி | 96 |
| மேற்படி | 96 |
| மேற்படி | 92 |
| மேற்படி | 86 |
| மேற்படி | 88 |
| எலிகடிக்கு எண்ணெய் | 85 |
| எலி தொந்தரைக்கு | 89 |
| எல்லா நஞ்சுக்கும் மாற்று | 80 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| ஏ | |
| ஏலாதிச் சூரணம் | 139 |
| ஒ | |
| ஒருதலைநோய்க்கு | 24 |
| ஒருதலைவலிக்கு | 89 |
| ஷை வேறு | 87 |
| ஷை வேறு | 89 |
| ஒழுகுவெள்ளைக்கு | 73 |
| க | |
| கட்டுமாந்தத்திற்கு | 152 |
| கதலிக்கிருதம் | 144 |
| கண்தெரியாததற்கு | 131 |
| மேற்படி | 134 |
| ஷை கண்தெரியாததற்கு | 134 |
| கற்பம் நிற்க | 131 |
| கபாடச் சூரணம் | 131 |
| கருவாய்ப் பட்டைச் சூரணம் | 123 |
| கஸ்தூரி மாத்திரை | 119 |
| கணசஞ்சீவி மாத்திரை | 117 |
| கட்டுவாத மெழுகு | 106 |
| கண்டங்கத்திரி நெய் | 95 |
| கல்லடைப்புக்கு | 94 |
| கடினவாய்வுக்கு | 91 |
| கலங்கின கண்ணுக் | 89 |
| கல்லடைப்புக்கு | 92 |
| கண்சதைக்குக் குளிகை | 70 |
| கண்பூவுக்கு | 70 |
| கண்ணுக்குக் களிம்பு | 69 |
| கண்ணுக்கு நெய் | 69 |
| கடிக்கும்பெருங்குட்டத்திற்கு | 2 |
| கண்பூப் போட்டதற்கு | 10 |
| கபாலகுட்டத்திற்கு | 1 |
| கணத்திற்கு மாத்திரை | 19 |
| கணத்திற்கு | 20 |
| கணத்திற்கு இன்னொரு முறை | 20 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| கண்ணுக்கு ரத்நாதிகுளிகை | 70 |
| கண்ணுக்குக் குளிகை | 70 |
| இதுவுமது வேறு முறை | 72 |
| கல்லடைப்புக்கு | 21 |
| கழிச்சலுக்கு | 23 |
| கழிச்சற்கு உப்புகுழம்பு | 62 |
| கண்பொடி | 71 |
| கண்குளிகைக்கு | 72 |
| கண்ணுக்குத் தாரை | 81 |
| கல்லடைப்புக்கு | 82 |
| கண்ணோவிலே நெரிவிழுந்தால் | 87 |
| கண்டமாலைக்கு | 88 |
| கடிக்கும் பெருங்குட்டத்திற்கும் | 2 |
| கடினவாய்வுக்கு | 91 |
| கட்டுமாந்தத்திற்கு | 152 |
| கட்டுவாத மெழுகு | 106 |
| கணத்திற்கு | 20 |
| மேற்படி | 20 |
| மேற்படி | 20 |
| கணத்திற்கு மாத்திரை | 19 |
| கணசஞ்சீவி மாத்திரை | 117 |
| கண்டங்கத்திரி நெய் | 95 |
| கண்டமாலைக்கு | 88 |
| கண்ணுக்குக் களிம்பு | 69 |
| கண்ணுக்கு நெய் | 69 |
| கண்சதைக்குக் குளிகை | 70 |
| கண்பூவுக்கு | 70 |
| கண்பூப்போட்டதற்கு | 10 |
| கண்ணுக்கு குளிகை | 70 |
| மேற்படி வேறு | 71 |
| கண்பொடி | 71 |
| கண்குளிகைக்கு | 71 |
| கண்ணுக்குத் தாரை | 72 |
| கண்ணோவிலே நெரிவிழுந்தால் | 87 |
| கண்புழுவுக்கு | 82 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| கண்ணுக்கு ரத்நாதிகுளிகை | 70 |
| கதலிக்கிருதம் | 144 |
| கஸ்தூரி மாத்திரை | 119 |
| கபாடச் சூரணம் | 131 |
| கபாலகுட்டத்திற்கு | 1 |
| கலங்கின கண்ணுக்கு | 89 |
| கல்லடைப்புக்கு | 94 |
| மேற்படி | 92 |
| மேற்படி | 81 |
| மேற்படி | 25 |
| கருவாய்ப்பட்டைச்சூரணம் | 123 |
| கர்ப்பம் நிற்க | 131 |
| கழிச்சற்கு | 22 |
| கழிச்சற்கு உப்புகுழம்பு | 62 |
| கா | |
| காதுநோய்க்குத் தயிலம் | 99 |
| காதுப் புழுவிழ | 89 |
| காந்தரசபற்பம் | 77 |
| காப்பு | 1 |
| காய்ச்சலுக்குங் குளிருக்கும் குடிநீர் | 64 |
| காமாலைக்கு | 82 |
| கால்வெடிப்புக்கு | 8 |
| கி | |
| கிரந்திசூலை மாந்தத்திற்கு | 148 |
| கிரந்தி பவுத்திரத்திற்கு | 63 |
| கிரந்தி புண்ணுக்கு | 79 |
| கிரந்திக்குப் பரங்கிப் பட்டை சூரணம் | 46 |
| மேற்படி | 46 |
| மேற்படி | 47 |
| கிராணிக்கு | 42 |
| கிராணிக்கு மதவாரண சிங்கக்குளிகை | 91 |
| கீ | |
| கீரிப்பாம்பு விழ | 81 |
| கீரிப்பூச்சிக்கு | 80 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| கு | |
| குக்கிடச் சூரணம் | 140 |
| குங்குமப்பூ மாத்திரை | 118 |
| குடைச்சல் வாதத்திற்குத் தயிலம் | 105 |
| குட்டம், கடி, திமிர், விடம் இவைகட்கு | 2 |
| குழந்தைகட்குண்டாகும் விப்புருதிக்கு | 18 |
| மேற்படி | 18 |
| குழந்தைகளின் உள்ரோகக் குளிகை | 77 |
| குழந்தைகள் கன்னப்பாசிக்கு | 80 |
| குழந்தைகள் கணத்துக்கு மருந்து | 83 |
| குளிர்க்காய்ச்சலுக்கு | 134 |
| குளிர்சுரத்திற்கு ஆடாதோடை குடிநீர் | 73 |
| மேற்படி | 73 |
| குருநமைக்கு | 24 |
| குன்மத்திற்கு | 67 |
| கெ | |
| கெணத்திற்கு | 148 |
| கெந்த மெழுகு | 105 |
| கெணமாந்தத்திற்கு | 149 |
| கை | |
| கைத்தாழை நாற்றத்திற்கு | 93 |
| கொ | |
| கொள்ளைக்கழிச்சற்கு | 85 |
| கோ | |
| கோபம் ஆற | 76 |
| கோரோசனை மாத்திரை | 3 |
| மேற்படி | 118 |
| ச | |
| சகலகாய்ச்சலுக்கும் குடிநீர் | 65 |
| சகலசன்னிக்கும் தைலம் | 100 |
| சகலமாந்தரோக மாத்திரை | 111 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| சகலமூலக்கடுப்புக்குங்கிராணிக்கும் | 40 |
| சகலமேகத்திற்கும் | 97 |
| சகலமேகரோக நிவாரணமெழுகு | 101 |
| சகலரோக சண்டமாருதமெழுகு | 104 |
| சகலவாயுக்கும் எண்ணெ | 4 |
| சகலவாயுக்கும் | 96 |
| சத்திசிவக்கிருதம் | 142 |
| சந்தனாதித்தயிலம் | 46 |
| சந்திரோதயமாத்திரை | 125 |
| சர்வகிரந்திக்கும் | 77 |
| சர்வசன்னிக்கும் | 135 |
| சர்வசுரசம்மார மாத்திரை | 109 |
| சர்வபித்தத்திற்கும் பித்தகுன்மத்திற்கும் பித்தவாயுக்கும் | 29 |
| சன்னிக்கு ஷை | 64-88 |
| சன்னிக்கு | 133 |
| சன்னிக்கு | 132 |
| சன்னிக்குக் கலிக்கம் | 133 |
| சன்னிக்குத் தயிலம் | 88 |
| மேற்படி | 99 |
| சன்னிக்கு வயிரவச்சுடர்த்தயிலம் | 100 |
| சன்னிவாதத்திற்கு | 68 |
| சன்னிக்கு வேட்டுமாரணக்குளிகை | 78 |
| சா | |
| சாரமெழுகு | 103 |
| சாதிலிங்க மெழுகு | 98 |
| சாம்பிராணிப்பூ மாத்திரை | 121 |
| சி | |
| சிந்தாமணி மாத்திரை | 120 |
| சிரங்கிற்கு | 82 |
| சிராய்ப்பினிசத்திற்கு | 23 |
| சிலேட்டும சுரத்திற்குச் சூரணம் | 33 |
| சிவராஜபூபதி மாத்திரை | 116 |
| சிவதை சூரணம் | 44 |
| சிறுகீரைக் கிருதம் | 139 |
| சிறுநீர் அதிகமாய்ப் போகிறதற்கு | 82 |
| சிறுபிள்ளைகள் இருமல் அடைப்புக்கு | 86 |
| சிறுபிள்ளைகட்குசீரணை சூரணம் | 14 |
| சிறுபிள்ளைகளின் பலப்பிணிக்கும் | 67 |
| சீ | |
| சீதக்கழிச்சற்கு | 21 |
| மேற்படி | 22 |
| சு | |
| சுகபேதிச் சூரணம் | 123 |
| சுகபேதி ரத்தாவளிச் சூரணம் | 128 |
| சுண்டைவேர்ச் சூரணம் | 124 |
| சுரம் 64-க்கும் சன்னி 18-க்கும் பலத்திற்கும் | 65 |
| சுரமணி மாத்திரை | 109 |
| சுரமாந்தத்திற்கு | 17 |
| சுழிகணத்திற்கு | 42 |
| மேற்படி | 48 |
| சுரக்கொய்னா மாத்திரை | 119 |
| சுரசஞ்சீவி மாத்திரை | 113 |
| சுரசாந்த மாத்திரை | 114 |
| சுரசிந்தாமணி மாத்திரை | 113 |
| சுரபூபதி மாத்திரை | 114 |
| சுராங்குசு மாத்திரை | 113 |
| சுழிகணத்திற்கு | 150 |
| மேற்படி | 132 |
| சுழிமாந்தத்திற்கு | 152 |
| சுவாசகாச மாத்திரை | 116 |
| சூ | |
| சூதகத்திற்கு | 42 |
| சூதகவாயுக்கு மெழுகு | 107 |
| சூலை நோய்க்கு | 20 |
| சூதகவாயுக்குக் கண்டங்கத்திரி லேகியம் | 40 |
| சூலைக்கு | 66 |
| சூலைக்கழிச்சற்கு | 66 |
| சூலை வாயுக்கு | 65 |
| செ | |
| செயரசக்கற்பூராதி மாத்திரை | 110 |
| செய்யான் கடிக்கு | 134 |
| செவ்விளநீர்க் கிருதம் | 143 |
| சே | |
| சேத்துமசுரத்திற்குக் கியாழம் | 7 |
| சோ | |
| சோகைக்கு மருந்து | 83 |
| த | |
| தண்ணீர்விட்டான் கிழங்கு கிருதம் | 143 |
| தண்ணீர்உழலை தாகத்திற்கு | 22 |
| தலைசூலைக்கு | 132 |
| தலைநோய்க்கு | 83 |
| தலைமயிர்ப் புழுவெட்டுக்கு | 86 |
| தா | |
| தாகத்திற்கு | 132 |
| தாபசுரத்திற்கு | 133 |
| தாம்பிர மாத்திரை | 115 |
| தி | |
| திமிர் தீர்க | 134 |
| திமிர்வாதத்திற்கு | 6 |
| மேற்படி | 90 |
| திராட்சைச் சூரணம் | 124 |
| தினக்காய்ச்சலுக்கு | 131 |
| தீ | |
| தீபனத்திற்கு | 8 |
| து | |
| துருவாதிக்கிருதம் | 144 |
| தே | |
| தேரைதோஷத்தால் இளைத்த பிள்ளைகட்கு | 41 |
| மேற்படி | 42 |
| தேள்கொட்டுக்கு | 23 |
| மேற்படி | 23 |
| தொ | |
| தொண்டைக்குப் பூச்சு | 60 |
| ந | |
| நடுக்குக் காய்ச்சலுக்கு | 87 |
| நல்லபாம்புக்கு | 59 |
| நவமூல மாத்திரை | 121 |
| நளிருக்கு | 79 |
| நன்னாரிவேர் கிருதம் | 140 |
| நா | |
| நாள்சென்ற எலிகடிக்கு | 88 |
| நி | |
| நிதம்பசாற்றத்திற்கு | 92 |
| நிலப்பனைக் கிருதம் | 141 |
| நிலாவாரை கற்பம் | 3 |
| நீ | |
| நீரடைப்புக்கு | 82 |
| நீரிழிவுக்கு | 81 |
| மேற்படி | 81 |
| மேற்படி | 81 |
| நீராம்பலுக்கு லேகியம் பண்ணும் வகை | 28 |
| நீரிழிவுக்கு | 17 |
| ஷை ஷை ஷை ஷை ஷை | 25 |
| நீர்க்கட்டுக்கு | 94 |
| நீர்கட்டு வலக்கட்டுக்கு | 43 |
| நீர்த்திரட்சியாய்ப் போகிறதற்கு | 81 |
| மேற்படி | 81 |
| நீர் அதிகமாய் வேட்டற்கு | 8 |
| நு | |
| நுரையப்புத் தயிலம் | 99 |

நா

நாற்பலன் 1

நெ

நெஞ்சுகட்டுக்கு 49
மேற்படி 49

ப

பஞ்சபாஷாண மாத்திரை 122
பஞ்சசூதமெழுகு 104
படர்தாமரைக்கு 8
பரங்கிப்பட்டை சூரணம் 93
பலகாலும் நீரிரக்கத்திற்கு 25
பல்லசைவுக்கு 87
பல்லுறுதிக்கு மருந்து 87
பவுத்திரத்திற்கு 37
மேற்படி 38
பவுத்திரம்; புரைவிழுந்த புண்ணுக்கு எண்ணெய் 38

பா

பாம்பு கடிக்கு 59
பாஷாணத்திமிருக்கு 89
பாஷாண மெழுகு 10
பாவன ஓமச்சூரணம் 130

பி

பித்தத்திற்கு குடி 5-45
பித்தங்கக்க 84
பித்த வாயுவுக்கு 83
பித்தத்திற்குப் பொடி 82
பித்தசுரத்திற்குக் குடிநீர் 64
பித்த காமாலைக்கு 136
பித்தத்தால் தலை சுழற்றற்கு 82
பித்தம் நாற்பதுக்கும் 64
பித்தரோக நிவாரணச் சூரணம் 127
பித்தபாண்டு ரோகத்திற்கு 27
பித்தகாசத்திற்கு எண்ணெ 41
பித்தசுரத்திற்குக் கியாழம் 33
குடி குடி குடி 8-8-13
பித்தகாசம் சிலேட்டுமகாசம் க்ஷயம் இவைகட்கு லேக்கியம் 30
பிரண்டை கற்பம் 137
பித்தம் பசிரிபனம் சூடல் வாதம் இவைகட்கு 11
பிரம்மானந்த பைரவம் 12
பிரமேகம் குலை கடுப்பு கல்லை முடக்குப்பொடி 68
பிரமேகச் சூரணம் 126
பிள்ளைகளின் பித்தசுரத்திற்குக் கியாழம் 10
பிள்ளைகளின் வயிற்றுக்கடுப்புக்கு 13
பிள்ளைகட்கு மாந்த எண்ணெய் 11
பிள்ளைகளின் மாந்தம் சன்னி முதலியவற்றிற்கு 15

பு

புண்ணுக்கு 77
புண்ணுக்குப் புகை 84
புண்புரைகளுக்குத் தைலம் 97
புண்புழு விழ 86
புண்ணுக்குப் புரையடங்க 88
புண்ணுபிருக்கிறபெண்ணுக்கு 91

பூ

பூரமாத்திரை 112
பூரமெழுகு 108
பூபதிச் சூரணம் 126

பெ

பெண்கள் இரத்தமும் சீதமும் போகிறதற்கு 67
பெண்பிள்ளைகள் வயிற்று நோட்டுக்கு 67

பே

பேதிக்கு 79
பேய்ப்பிடிப்புக்கு எண்ணெ 88
பேய்ப்போக 64

பை

பைத்தியத்திற்கு 96
மேற்படி 138
பைத்தியத்திற்கு பஸ்பம் 36

ம

மகாகுமரித் தயிலம் 5
மகாகோட்டாகுரி குளிகை 13
மகாகோட்டாகுரி மாத்திரை 123
மகாகுரு மாத்திரை 116
மகாவாதகோடாரித் தயிலம் 98
மகாக்ஷீரபாண்டக் கிருதம் 145
மகோதரத்திற்கு 16
மஞ்சள் சோகைக்கு 84
மஞ்சள் காமாலைக்கு குடி 135
மண்டை வியாதிக்கு 136
மண்டூரச் சூரணம் 126
மஞ்சள் காமாலைக்கும் பாண்டு ரோகத்திற்கும் 82
மந்தார காசத்திற்கு 33
மேற்படி 32
மலசலவிரேசன மாத்திரை 117

மா

மாந்தமாறி சகலசுரத்திற்கும் 44
மாந்தத்தினால் வயிற்றுக் கழிச்சலுக்கு 24
மாந்தத்திற்கு மற்றொரு மாத்திரை 20
மாந்த மாத்திரை மேற்படி 15
மாந்தத்திற்குக் கியாழம் 16
மேற்படி மேற்படி 19
மாந்தகணத்திற்கும் அச்சரத்திற்கும் சூரியஸ்புடம்வைக்கிற யெண்ணெ 12
மாந்தகணத்திற்குக்கியாழம் 15
மேற்படி 18
மாந்தக்கழிச்சற்கட்டக் குளிகை 17
மாட்டுப்பிணிக்கு 79
மாதவிடாயில்லாதபேருக்கு 64
மாவிலிங்கன்பட்டைச் சூரணம் 129
மாலைக் கண்ணுக்கு 59
மேற்படி 78
மாந்த கணத்திற்கு 148

மு

முகத்திலேவிழுந்தகருப்புவாங்க 79
முடக்குவாதத்திற்கு 67
முறைக்காய்ச்சலுக்குச் சூரணம் 33
முறைக்காய்ச்சலுக்குக் கியாழம் 35
மேற்படி 36

மூ

மூலக்குத்துக்கு 77

மே

மேகபித்தவாயுவுக்கு 13
மேகநாதச் சூரணம் 128
மேகம் 21-க்கும் சம்பிராயச் சூரணம் 84
மேகரோக சண்டமாருத மெழுகு 102
மேகத்திற்குசஞ்சீவிலேகியம் 43
மேகப்புசத்திற்கு 134
மேகப்பூச்சுக்கு 69
மேகம்இருபத்தொன்றுக்கும் 30

வ

வர்ணகாமாலைக்கு 135
வடவாக்கினி சூரணம் 44
வச்சிரவல்லிச் சூரணம் 129
வயிற்றெரிப்புக்கு 60
மேற்படி 85
வயிற்றுக் கடுப்புக்கு 39
மேற்படி 40
மேற்படி 87
மேற்படி 84
மேற்படி 86

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| வயிற்றுக்கிழிச்சற்கு | 17 |
| மேற்படி | 17 |
| வயிற்றுக்கடுப்புக்குங் கிராணிக்கும் | 24 |
| வயிற்றிலுள்ள கிமிர்பூச்சு வீழ்தற்கு | 18 |
| வயிற்றுவலிக்கு | 87 |
| மேற்படி | 86 |
| மேற்படி | 17 |
| மேற்படி | 80 |
| வலஞ்சலஞ்சிலந்திவிழின் | 81 |
| வா | |
| வாதத்திற்கு | 6- |
| வாதசுரத்திற்கு | 34 |
| வாதம் 80-க்குந் தைலம் | 26 |
| வாதத்திற்கு எண்ணெய் | 69 |
| வாதத்திற்கு ஒச்சிக்குழம்பு | 67 |
| வாதகாமாலைக்கு | 140 |
| வாதராக்ஷஸ மாத்திரை | 108 |
| வாதசாந்த மாத்திரை | 109 |
| வாதசிந்தாமணி மாத்திரை | 110 |
| வாதராட்சதன் சூரணம் | 127 |
| வாயுக்குப்பொடி | -3 |
| வாயிலெடுக்கிறதற்கு | 132 |
| வாயிலிருந்து உதிரம்வருகிறதற்கு | 94 |
| வாலசந்நிசி மாத்திரை | 112 |
| வி | |
| விக்கலுக்குச்சிங்கார சூரணம் | 22 |
| விரோசன பூபதிமாத்திரை | 117 |
| விரோசன மாத்திரை | 118 |
| வீ | |
| வீக்கத்திற்கு | 85 |
| வீரமெழுகு | 105 |
| வீரிய விருத்திக்கு | 59 |
| வெ | |
| வெட்டுப்பட்ட புண்ணுக்கு | 84 |
| வெந்தபுண்ணுக்கு | 84 |
| வெள்ளொழுக்குக்கு | 10 |
| வெள்ளைகுட்டத்திற்கு | 1 |
| வே | |
| வேறு ஊதுமாந்தத்திற்கு | 151 |
| வேறு கெந்தமெழுகு | 107 |
| வேறு கணைத்திற்கு | 147 |
| மேற்படி | 148 |
| மேற்படி | 149 |
| மேற்படி | 150 |
| வேறு சன்னிக்குத் தைலம் | 99 |
| வேறு பிரமேகச் சூரணம் | 130 |
| வேறு சுழிகணைத்திற்கு | 150 |
| வேறு மாந்தமாத்திரை | 121 |


# வியாச வைத்தியம்.

OFFICE OF THE REGISTRAR OF ... 12 OCT 1903

காப்பு.

வையம் புகழ்வியாச வைத்தியங் கூறற்கு
மெய்ய னடிக ளேண.

நூற்பலன்

வியாசமுனி பரிகாரக் கியானிகளா வருமயப்
பியாசமுடை யருமாவார் பிணிவாரார் பாருலக
நியாசபண் டிதரையே தேடிச்செல்வார்போற்றும்
வியாசவைத் தியங்கற்ற வியாதமிலாப் பூதியரே.

நூல் விபலாறு

## 1 வெள்ளை குட்டத்திற்கு

மருளக்கிழங்கு ஐம்பதாகிலும், அறுபதாகிலும் கொண ர்ந்து சிறுக நறுக்கி ஆமணக்கிலையில் கட்டி, குப்பையில் மூன்று நாள் புதைத்துவைத்து, பின்பு எடுத்து வைத்துக்கொண்டு குட் டம் பற்றின் விடத்தில் கட்டவும்மூன்று நாளானபிறகு கட்டை யவிழ்த்து பார்க்கப்புழு விழும்.

பின்பு, வெள்ளாட்டுப் புழுக்கையைக் கொண்டுவந்து, கருக வறுத்து ஆமணக்கெண்ணெயில் குழப்பியாவது, வெள்ளெருக்கம் வேரும் தேங்காய்த் திருவலுங் கூட்டி, கருக வறுத்தரைத்தாவது பூச, வெள்ளை குட்டமானது வெள்ளைவேறு மின்றிப் போய் விடும்.

## 2 கபால குட்டத்திற்கு

1 ஆலம்வேர்
2 அழிஞ்சிப்பட்டை
3 குப்பமேனி வேர்
4 உள்ளி
5 வசம்பு

இவைகளை சமன் கூட்டி நல்லெண்ணெயில்கொதிக்கவைத்து கபாலத்திலிட்டுஸ்நானஞ் செய்ய கபால குட்டந் தீரும்.

### 3. குட்டம், கடி, திமிர், விடம் இவைகளுக்கு

1 கோடிவேலி வேர்   2 அழிஞ்சிவேர்

இந்தப் பட்டைகளை சமனாகக் கொண்டுவந்து இடித்துத் தூளிதமாக்கி வஸ்திரகாயஞ்செய்து, பின்னர் வரிக்கருணை சமூலங் கொணர்ந்து, கயிற்றையொப்பச் சிறுகச் சிறுக அறுத்துக் காயப் போட்டு, சட்டியைக் காயவைத்து வறுத்து, உடனே யிடித்துத் தூளிதமாக்கி, பிறகு கக்கா யிருபதிடித்துத் தூளிதமாக்கி, இப்பால், மூவகைத்தூளையும் ஒன்றுசேர்த்து, மூவிரற் பிரமாணந் தூளும், மூவிரற்பிரமாணம் நீரும் சேர்த்து கலந்து யுள்ளுக்குக் கொள்ளவும். இருபது நாள் கசப்பு தவிரவும்.

பத்தியம்.—ஆட்டுக்கறி யுப்புகண்டம், சுறா, திருக்கை வால், பசுவின் பால், நெய் யிவை கூட்டவும்.

### 4 கடிக்கும், பெருங்குட்டத்திற்கும்

| | | | |
|---|---|---|---|
| 1 வெள்பாஷாணம் | அரை காசிடை | 5 நேர்வாளக்கொட்டை | 4 |
| 2 துரிசு | ஷை | 6 நீரிடிமுத்து | 4 |
| 3 நெல்லிக்காய் | கழஞ்சு | 7 எருக்கம்பால் | ஆழாக்கு |
| 4 கெந்தகம் | ஷை | 8 ஷை இலைச்சாறு | ஷை |

இவையெல்லா மொன்றுகூட்டிப் பொடி செய்து, இரசம் கழஞ்சு விட்டுமுறியும்படி மத்திக்க, எட்டிக்கொட்டை யிரண்டு, கூட அரைத்துப் போடவும். நேர்வாளத்தை மாத்திரம் கஞ்சு வாங்கிப் போட்டுக்கொள்ளவும்.

பின்பு சீழக்கு நல்லெண்ணெய்விட்டுச் சாரித்து, ஒருநாளெல்லாஞ்*சூரியஸ்புடமிட்டு, மற்றுநாள் †காலை உடம்பில் விட்டுத் தேய்த்து, ‡வெந்நீரில் குளிக்கவும். இப்படியே மூன்று நாள் குளிக்க ()குறித்த நோய்கள் தீரும்.

பத்தியம்:—மோருஞ்சோறும் உண்ணவும்.

---

* சூரிய ஸ்புடம் மூன்று நாளைக்கும் வைத்து வந்தாலிதான் தினகாலையும் உதவும்.

† பகலிலுங் கூடும்.

‡ வெந்நீரில் குளிக்குந்தால், எண்ணெ பூசிக்கொண்டு இலுப்பைக்கட்டியாலுந் தேய்த்துக்கொள்ளலாம்.

() குறித்த நோய்களேயன்றி (விஷக்கடி) சிரங்கு, தினவு இவையுந் தீரும்.



### 5 கோரோசனை மாத்திரை

| | | |
|---|---|---|
| 1 கோரோசினை | விருகனிடை | 1 |
| 2 திப்பிலி | ஷை | 1 |
| 3 ஏலம் | ஷை | 1 |
| 4 வெற்றிலைகாம்பு | ஷை | 1 |

இவை நான்கும் முலைப்பாலில் பதினைந்து நாழிகை யரைத்து, மிளகு பிரமாணம் உண்டை செய்து, பிள்ளைகளுக்குண்டாம் பல வியாதிகட்கும் அனுபோகம் அறிந்து கொடுக்கலாம்.

### 6 நிலாவாரை கற்பம்

நிலாவாரையை சமூலத்துடன் பிடுங்கிவந்து, நிழலில் உலர்த்தி பொடிபண்ணி வத்திரகாயஞ் செய்து, பேய்ச்சுரை குடுக்கையில் வைத்துக்கொண்டு, ஒரு கழிப் பிரமாணம்.

1. வெந்நீரில் கொள்ள, விஷக்கடி தீரும்.
2. செருப்படைச் சாற்றில் குடிக்கப், பெருச்சாளி கடி தீரும்.
3. முருங்கையிலைச் சாற்றில் குடிக்க, எலி கடி தீரும்.
4. சாட்டரணை யிலைச்சாற்றில் குடிக்க, மூஞ்சுறு கடி தீரும்.
5. விழலையிலைச்சாற்றில் குடிக்க, நல்லபாம்பு கடி தீரும்.
6. இரிஞ்சா யிலைச்சாற்றில் குடிக்க, விரியம்பாம்பு கடி தீரும்.
7. பாகலிலைச் சாற்றில்*குடிக்க, செய்யான் கடி தீரும்.
8. அவுரி யிலைச்சாற்றில் குடிக்க, அரணை, அட்டை, குரங்கு, பேய்நாய், பேய்நரி யிவற்றின் கடி தீரும்.
9. கையாந்தகரைச் சாற்றில் குடிக்க, ஈளை இருமல் தீரும்.
10. நொச்சி யிலைச்சாற்றில் குடிக்க, குளிர்சுரந் தீரும்.
11. விளக்கெண்ணெயில் குடிக்க, வீக்கம் வெள்ளோக்காளம் தீரும்.
12. தேனிற் பருக, †வுடம்பிளைக்கும்.
13. பசுநெய்யிற் புசிக்க, தேகம் பருக்கும்.
14. வெள்ளாட்டுக் கோமயத்தில் குடிக்க, குடல்வாதம், அடுவை, சவுசி, நீரடைப்பு முதலானவை நீங்கும்.
15. பிரண்டை யிலைச்சாற்றிலாகிலும், நல்லெண்ணெயிலாகிலும் குடிக்க, மூலந்தீரும்.

---

* நண்டுவாக்காலி கடிகூட தீரும்.

† ஊதற்சரீரம் வாடுமெனபிதாம்.

16. குப்பைமேனிச் சாற்றிற்குடிக்க, கை நடுக்கந் தீரும்.
17. மோருடன் குடிக்க, கண் காது நோயெல்லாந் தீரும்.
18. வேப்பிலைச்சாற்றில் குடிக்க, கருப்புழுச் சாகும்.
19. எருமைத் தயிரில் குடிக்க, வயிறு கழிச்சல் தீரும்.
20. மிளகு பொடியுடன் கொள்ள, சர்ப்ப விஷந் தீரும்.
21. திப்பிலி பொடியுடன் கொள்ள, பித்தம் தீரும்.
22. சுக்கு பொடியுடன் குடிக்க, வாதம் தீரும்.
23. தண்ணீரில் குடிக்க, பிளவை, சிலந்தி, கிரந்தி கரப்பான் இவைகள் தீரும்.

24. மற்றுமுண்டான வியாதிகளையும் (இதற்கிது பொருந்துமெனப் பிரயோகிக்கின்) போக்கடிக்கக்கூடும்.

### 7 சகல *வாயுவுக்கும் எண்ணெ பண்ணும் வகை

1 சாரணைவேர்
2 முருங்கை வேர்
3 சிற்றுமணக்குவேர்
4 நொச்சிவேர்
5 சிவதைவேர்
6 வெள்ளுள்ளி

இவை வகைக்கு 1 பலம் கொண்டுவந்து நறுக்கி யிடித்து 4 படி நீரிற் கலந்து ஊறவைத்து ஐந்தானுள் காய்ச்சி, நாழியளவாயிருக்கும்போது இறக்கி, யசத்தெல்லாம் பிழிந்தெடுத்து, கூடவே முந்நாழி நீர் வார்த்து வைத்துவிடல் வேண்டும்.

இப்பால் வெள்ளாட்டுப்பாலில்

1 தேவதாரம்
2 வசம்பு
3 சிற்றரத்தை
4 சதகுப்பை
5 செவ்வியம்
6 சிறு மூலகம்
7 கடுகு
8 கோஷ்டம்
9 கடுகு ரோகணி
10 கோரோசனை
11 வேழப்பரிலரிசி
12 விழாலரிசி
13 பெருங்காயம்
14 கோடிக் கடலை பருப்பு
15 இரேணுகம்

* வாயுவேயன்றி வாயு சம்பந்தமான, பக்கசூலை ஆநந்தசூலை, பெருவயிறு, குடல்வாதம் முதலிய நோய்கள் போம் எனவும் கூறப்பட்டிருக்கிறது.



இவை யொன்றுக்கு மூன்று பலமாகவும், இந்துப்பு 1 பலமாகவும்; இளநீர் 1 வார்த்துக்கொண்டே நெகிழ அரைத்து, இதையும், மேற்செய்து காய்ச்சிவைத்த சாற்றையும் 2-படி நல்லெண்ணெயிற் கலந்து, ஐந்து நாள் ஆனபிறகு மெழுகு பதமாகக் காய்ச்சி வடிக்கட்டி, நாள் ஒன்றுக்குக் காலை யுச்சிகரண்டி யளவு சாப்பிட சகல வாயுவும் ஓட்டம் பிடிக்கும்.

### 8 பித்தத்திற்கு

1 முசு முசுக்கைச்சாறு 2 படி. 2 கையாந்தகரைச்சாறு 2-படி.
இதில்

1 கோஷ்டம்
2 சந்தனம்
3 ஏலம்
4 இலவுங்கம்
5 இருவேலி
6 விலாமிச்சை
7 செண்பகப்பூ
8 நன்னாரி
9 கடுகு ரோகணி

இவை வகைக்கு 2 கழஞ்சு கொண்டு யாவும் அரைத்து, இதையும், 2 படி சிற்றுமணக்கெண்ணெயும் 2 படி பாலும் கூடிய சாற்றையும் கரைத்து, பதமாய்க் காய்ச்சி வடித்து தலையிலிட்டு ஸ்நானஞ் செய்ய *பித்தம் யாவும் ஓடும்.

### 9 மகா குமரித் தயிலம்

1 நன்னாரி வேர்
2 குறுந்தொட்டி வேர்
3 விலாமிச்சம் வேர்
4 வெட்டி வேர்
5 முத்தக் காசு
6 சீந்திற் றண்டு
7 நீர்வள்ளிக் கிழங்கு
8 சந்தனம்

இவை வகைக்கு 1 பலங்கொண்டு, பதத்துத் தண்ணீர்விட்டு நாலஞ்சு நாள் ஊறியபின், நாழியளவாகக் காய்ச்சி வடித்து, 1-நாழி யெண்ணெயும், 1-நாழி குற்றுழைச்சாறும் விட்டு, இதனுடன்

1 கடுகு
2 நெல்லி
3 தானி
4 குருந்தடிவேர்

இவை, வகைக்குக் காசிடையாக 1-பிடி பசு நெய்யுடன் கலந்து ஊறியபின் காயவைத்து, பதத்தில் வடித்துக்கொண்டு, இதில் மேற்படி யெண்ணெயிற் சற்று கலந்து தலையில் தேய்த்துக்கொள்ள, தலை வேட்டை, கண் புகைச்சல், உடம்பு வரட்சி, காலெரிவு, கையெரிவு யிவை யாவுந் தீரும்.

* பித்தத்துடன் சம்பந்தமான கண்ணோய், கண் சிவப்பு, தலை நோக்காடு, தலையிடி யிவை யாவுந் தீரும்.

### 10 பைத்தியத்திற்கு

மேற்செய்து முடித்த தைலத்தோடு

1 எட்டிப்பழச் சாறு
2 ஆமணக்கிலைச் சாறு
3 இலைக்கள்ளிச் சாறு
4 தேவதாரு சக்கை
5 செங்கழு நீர்
6 சலிந்த லவணம்
7 மர மஞ்சள்
8 நல்ல சந்தணம்
9 எருக்கஞ் சமூலச் சாறு
10 நொச்சியிலைச் சாறு
11 அமுக்கிராங் கிழங்கின் சாறு
12 அதிமதுரம்
13 கோஷ்டம்
14 சித்திர மூலம்
15 திப்பிலி
16 இலவுங்கம்

இவை வகைக்கு 4 விராகனிடை கூட்டிச் சூரணஞ் செய்து போட்டு பக்குவமா யிறக்கவும். இறக்கித் தலைக்கிட்டு வந்தால் பைத்திய * வாய்வு எல்லாந் தீரும்.

### 11 திமிர் வாதத்துக்கு

1 நொச்சிக்கொழுந்து
2 மிளகு
3 மஞ்சள்

இவை மூன்றையுங் கூட்டி வார்த்தரைத்து, மேலரவுலரப் பூசிவர திமிர்வாதந் தீரும்.

### 12 அஷ்ட வாய்வுக்கு

1 தோலுரித்த வெள்வெண்காயம்
2 சுக்கு
3 மிளகு
4 திப்பிலி
5 சத்தி சாரம்
6 நவச்சாரம்
7 வெங்காரம்
8 திப்பிலி மூலம்
9 சீரகம்
10 பெருங்காயம்
11 கோஷ்டம்
12 சதா பலம்
13 கொத்த மல்லி
14 பஞ்ச லவணம்
15 கொடி வேலி
16 ஓமம்
17 எள்ளு,
18 கடுகு

* அவ்வாயுவிற் சில விருமாறு:—1 சில் வாயு, 2 சூலைவாயு, 3 மேகவாயு, (28-ம்) 4 பிக்குவாயு, 5 முதுகுவாயு, 6-நெற்றி வாயு, 7-கருணை வாயு, 8 தந்தவாயு 9-உதிரவாயு, 10 கை வாயு, எலும்பு 80-வாயு முதலியனவுமாம்.



இவை வகையொன்றுக்கு 1-பலமாகக் கூட்டிய 18-சரக்கையும் 4-சேர் விளக்கெண்ணெயிற் போட்டுக் கிளறி சூரியபுடத்தில் வைத்து தினம் ஒன்றுக்கு காலையும் மாலையும் கொட்டைப் பாக்களவு சாப்பிட அஷ்டவாயுவுந் தீரும்.

### 13 வாதசூலை எண்பத்துநாலுக்கும் எண்ணெ

1 நொச்சியிலைச் சாறு குருணி
2 வாதமடக்கிச்சாறு ௸
3 எருக்கிலைச்சாறு ௸
4 கதிர்கள்ளிச்சாறு குருணி
5 கள்ளிக்கொழுந்து சாறு ௸
6 *சிற்றாமணக்கு ௸

இவை யாவுங்கூட்டி, தினம் உள்ளுக் கொரு கரண்டி குடித்து மேலுக்கும் பூசவும். இந்தப்படி 5-நாள் கொடுக்கவும்.

பத்தியம்:—வீட்டில் நடந்துகொள்ளவும். மேலுக்குப் பூசவும், உள்ளுக்குக் குடிக்கவும் எண்ணெ வேறுவேறாகவைத்துக் கொள்ளவும்.

### 14 *சேத்தும சுரத்திற்குக் கியாழம்

1 அதிமதுரம்
2 கோஷ்டம்
3 நிலவேம்பு
4 கொத்தமல்லி
5 தேவதாரு
6 சிறு தேக்கு
7 கடுக்காய்
8 வசம்பு
9 திப்பிலி
10 ஏலம்
11 இலவுங்கம்
12 செண்பகப்பூ
13 கடுகு
14 கோரோசனை
15 சீரகம்
16 சுக்கு

இவை வகைக்கு 2 கழஞ்சும்

1 பேராமுட்டி வேர்
2 சிறுகாஞ்சொறி வேர்
3 நன்னாரிவேர்
4 குமுளம் வேர்
5 சீந்திற்றண்டு
6 இருவேலி
7 முத்தக்காசு
8 இலாமிச்சம் வேர்

* ஆமணக்கு முத்தை யிடித்து சாற்றிற் கலந்து ஊரவைத்துக்கொள்ளவும்.

* சேத்தும சுரசம்பந்தமான, நெஞ்சு நோயுந் தண்ணீர்த் தாகமும் தீரும்.

இவை வகைக்கு ஒரு பிடியாக யாவையுங் கூட்டி, யதில் இருநாழி தண்ணீர் வார்த்து உழக்காகக் காய்ச்சி 1 தேனும் 2 பெருங்காயமும் சேர்த்துக்கொடுக்கவும்.

### 15 நீர் அதிகமாய் வேட்டற்கு

குளிரிக்காய் குருணி கொணர்ந்து முற்றின காடியிற் றுவைத்து சாறு பிழிந்து மூன்று நாள் பருக † தாகந்தீரும்.

### 16 பித்த சுரத்திற்குக் கியாழம்

1 சீந்திற்றண்டு
2 முந்திரிப்பழம்
3 நன்னரிவேர்
4 நெல்லிமுள்ளி
5 வெட்டிவேர்
(வகைக்கு ஒருபிடி)

இவைகளை சமன்கொண்டு கியாழம் போட்டுக் குடிக்கவும்.

### 17 மற்றொரு முறை

1 தாமரை வளையம்
2 வெட்டிவேர்
3 கோரைக்கிழங்கு
(வகைக்கு ஒரு பிடி)

இவைகளையுங் கியாழமிட்டு உண்ணலாம்.

### 18 தீபனத்திற்கு

1 தம்புராஷ்டகம்
2 திப்பிலி
3 சுக்கு
(வகைக் கொரு பலம்)

இவைகளை யரைந்துச் சட்டியைக் காயவைத்து, 3-ஆழாக்கு ஜலம் வார்த்து உழக்காகக் காய்ச்சியபின், ஷை தூளைப்போட்டுக் குடிக்கவும்.

### 19 படர் தாமரைக்கு

1 மனோச்சிலை 3 பலம்
2 மஞ்சள் 2 ஷை
3 சுண்ணாம்பு 1 பலம்

இவை மூன்றுந் தண்ணீரில் அரைத்துப் பூசத்தீரும்.

### 20 கால் *வெடிப்புக்கு

1 ஆலமொகுள் பலம் 1
2 சேராமரத்துப் பிசின் ஷை
3 சைந்தவ லவணம் ஷை
4 எருக்கம்பால் பலம் 2
5-நெய் ஷை

இவை யாவுங் கலந்து கொதிக்கவைத்துப் பூசத் தீரும்.

---

† இத்துடன் சுரம், பித்தசுரம், சன்னி, தோஷம் இவையுந் தீரும்.

*(கால்) வெளுப்புக்குமாம்.



### 21 இருமலுக்குத் தூதுவேளை அநுபோகக் குளிகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சாதிக்காய் விராகனிடை | 3 | 7 ஓமம் | பலம் 2 |
| 2 சாதிபத்திரி | ,, 2 | 8 தம்புராஷ்டகம் | ,, 3 |
| 3 இலவுங்கம் | ,, 2 | 9 வெள்ளைப்பூண்டு | ,, 2 |
| 4 திப்பிலிமூலம் | ,, 2 | 10 † வெங்காரம் | ,, 3 |
| 5 தேசாவரம் | பலம் 2 | 11 கடுக்காய் | ,, 3 |
| 6 திப்பிலி | ,, 1 | | |

ஆக வகை பதினொன்றும் உலர்த்தியிடித்து சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு தூதுவேளை 6 தூக்கு உலர்த்தி குடத்திற் போட்டு, நிறையத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி, 2-படி சாறாக யிறுத்து, பின்னர் வேறடுப்பில் வைத்துக் காய்ச்சி கொதிக்கும் போது, ஷை சூரணத்தைப் போட்டு கிண்டிக் கிளறி, புளியங் கொட்டையளவு முருண்டைகளாக்கி யுருட்டி, யுலர்த்திவைத்துக் கொண்டு, சந்தியந்தி யொவ்வோ ருருண்டை சாப்பிடவும், இப் படி யொரு மண்டலஞ் சாப்பிடின், இருமல் குணமாம்.

பத்தியம்:—*இருக்கைச்சுறா கருவாட்டின் குட்டியைக் கைவிடவும்.

### 22 நீர்க்கட்டுக்கு

அரைக்கீரை கொண்டுவந்து, உப்பிடாமல் வேவித்து, அந் நீரை யிறக்கிக்கொண்டு அதிலே, மிளகு பலம் அரை வெள்ளைப் பூண்டு பலம் கால், இவையிரண்டையும் அரைத்துப் போட்டுக் கலக்கிக் காலையிற் குடிக்கவும்.

பத்தியம்:—பச்சை யரிசியைக் கஞ்சி காய்ச்சி வார்க்கவும் இச்சாபத்தியம்.

### 23 இருமலுக்கு

1 பூவம்பழம்
2 சிறு திப்பிலி
3 மாசிக்காய்
4 கோந்தாழைக் காய்
5 கருஞ் சீரகம்
6 கஸ்தூரி மஞ்சள்
7 சிற்றரத்தை
8 மிளகு
9 கடுக்காய்

---

† வெங்காரத்தைப் பசுவின் சாணத்திற் சுத்தி செய்க.

* இப்பத்தியமுஞ் செயிபலாமெனச் சிலர் சொல்வதை மறுத்ததாம்.

இவையெல்லாஞ் சமனாகக்கூட்டி நீர்விட்டரைத்து, உருண்டையாக்கி, இருமலுண்டாம்போது 2 மாத்திரை சாப்பிடப் பிடிக்கும்.

## 24 இரைப்புக்கும் இருமலுக்கும்

உத்தாமணி யிலை யொரு பிடி கொண்டுவந்து, பசுமை மாற வதக்கி, சாறு பிழிந்து, அதில், நெருப்பிற் சுட்ட திப்பிலி, பெருங்காயம் வகைக்கு விராகனிடையாகப் பொரித்துக்கலந்து 3-நாள் இந்தப்படி குடிக்கத் தீரும்.

## 25 பிள்ளைகளின் பித்த சுரத்திற்குக் கியாழம்

| | |
|---|---|
| 1 சுக்கு | 8 நிலவேம்பு |
| 2 திப்பிலி | 9 ஆயினிப்பட்டை |
| 3 நாட்டுமூலம் | 10 ஆதுவேளை |
| 4 கண்டு பாரங்கி | 11 முக்காவேளை |
| 5 தும்புராஷ்டகம் | 12 சிறு வழுதலை வேர் |
| 6 கோஷ்டம் | 13 சிறுமரஞ் சோறிவேர் |
| 7 மரமஞ்சள் | 14 ஆடாதோடைவேர் |

இவைகளை வகைக்கு அரை பலங் கொண்டுவந்து கியாழம் போட்டு, நித்தம் ஆழாக்கு ரசம் சாப்பிடக் குணமாம்.

## 26 வெள்ளெழுத்துக்கு

நாழிப் பாலில் நாழித் தண்ணீரைவிட்டு, நாற்பது மிளகை யறைத்துப் போட்டு கலக்கி, காய்ச்சியபின்னர் வெண்ணையை யெடுத்து கலவத்திற்போட்டு, ஒரு பணவிடை கற்பூரமுங் கலந்து நெகிழ அரைத்து, சிமிழில் பத்திரப்படுத்தி, கொஞ்சங்கொஞ்சமாய்க் கண்ணுக்கிட்டு வரவும், சுகம்.

## 27 கண் பூப்போட்டதற்கு

| | |
|---|---|
| 1 எலிப்பால் | 8 ஆண்டி |
| 2 ஈப்பால் | 9 பறட்டை |
| 3 எருமைப்பால் | 10 தேன் |
| 4 புலிப்பால் | 11 பேக்கரும்பு சாறு |
| 5 புத்தின்பால் | 12 தாமரைப்பூ சாறு |
| 6 மான் கொம்பு | 13 வெள்ளை மான்கொம்பு |
| 7 ஆணிப்பூ | |

இவைகளை மேற்படி முறைமைப்படி செய்து பூசவுந் தீரும்.



## 28 இரணங்க ளாற்றுகிறதற்கு பிளாஸ்திரி பண்ணுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 *மெழுகு | பலம் | ½ | 4 முதார்சிங் | பலம் | ½ |
| 2 கெந்தகம் | ,, | ¼ | 5 காசுக்கட்டி | ,, | ½ |
| 3 மயில்துத்தம் | ,, | ½ | | | |

இவை யாவையும் நல்லெண்ணை விட்டரைத்து இதில் மனிதார் அஞ்சி ½ பலம், வெள்ளைக் குங்கிலியம் ½ பலம், இரசம் விராகனிடை 2 எலுமிச்சஞ் சாற்றில் அரைத்துச் சேர்க்கப் பிளாஸ்திரியாம். அந்த சிறுவனல் காட்டி, துணிக் கட்டிகட்கிட சீக்கிர மாறும்.

## 29 பித்தம், பசி தீபனம், குடல்வாதம் முதலானவற்றிற்கு

எண்சீர்க்கழி நெடி லடியாகிரிய விருத்தம்.

†முக்கடுகே மிந்துப்பு விழலாம் வேலி
முத்தமொடு திரிபலையு மொக்கக் கூட்டி
யக்கணமே சிவதையெழு மணங்குங் கூட்டி
யதின் மணக்குஞ் சர்க்கரையுங் கூட்டியுண்ண
விக்கலொடு சாத்தியமாங் குடல்வாதங்கள்
வேழ்க்கையோடு பழமல மிகுத்தவாயு
சேர்க்கியிடுந் தலைசுழற்றற் பித்தந் தீரும்
அருசாகப் பசியெடுக்குஞ் சுகமுண்டாமே.
இஃதுரைப்பர், பொருள் வெளிப்படை.

## 30 பிள்ளைகட்கு மாந்த எண்ணை

| | | | |
|---|---|---|---|
| 1 வெங்காயம் சாறு | 1 படி | 3 விளக்கெண்ணை | 1 படி |
| 2 பசும்பால் | 1 படி | 4 தும்மட்டிக்காய் சாறு | 1 படி |

இவை நான்கும் காய்ச்சி மெழுகு பதமாயிறக்கிக்கொண்டு உச்சி கரண்டியளவு புகட்டி வரவும்.

பத்தியம்:—இச்சா பத்தியம்.

---

* மெழுக்கை நல்லெண்ணை விட்டுக் காய்ச்சி, நல்ல தண்ணீரில் விட்டு எரிக்கவும்.

† முக்கடுகமாவன:— மிளகு, திப்பிலி, சுக்கு.

## 31 மாந்த கெணத்திற்கும் அச்சரத்திற்கும் சூரியஸ்புடம் வைக்கிற யெண்ணை

| | | | |
|---|---|---|---|
| 1 ஆமணக்கெண்ணை | ¾ படி | 4 வசம்பு | பலம் 1 |
| 2 வெங்காயச்சாறு | ¼ படி | 5 முசுமுசுக்கை வேர் | ,, 1 |
| 3 வெள்ளைப்பூண்டு | 3 பலம் | | |

இவை யாவுஞ் சேர்த்து சூரியஸ்புடத்தில்வைத்துக்கொண்டு காலை 1 கரண்டி யெண்ணை வார்க்கவும்.

பத்தியம்:—இச்சா பத்தியம்.

## 32 ஆனந்த பைரவி மாத்திரை

| | |
|---|---|
| 1 சாதிலிங்கம் | 5 திப்பிலி |
| 2 * நாவி | 6 வெங்காரம் |
| 3 சுக்கு | 7 கெந்தகம் |
| 4 மிளகு | 8 கடுரோகணி |

இவை வகையொன்றுக்கு விருகன்இடை 8 ஆகக் கொண்டு, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து, குண்டுமணிப் பிரமாணம் உருண்டை பண்ணிக்கொள்ளவும்.

## 33 பிரம்மானந்த வைரவம்

| | |
|---|---|
| 1 சாதிலிங்கம் | 4 † நாவி |
| 2 வெண்காரம் | 5 தச்சம் |
| 3 வெள்ளை மிளகு | |

இவைகளை விருகன் இடையாக எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து மிளகுப் பிரமாணமாக வுருண்டை செய்து

1 இஞ்சி சாற்றிற் றர, பதினெட்டு சுரமுந் தீரும்,

2 முருங்கப்பட்டையைத் தும்பராஷ்டக சாற்றிற்றர, சன்னி பதின்மூன்றும் தேள்கடி, பாம்பு கடியுந் தீரும்.

---

* நாவியை முறிக்க, அரைக்கீரையும் பசுங்கோமயமும் விட்டு வேகவைத்து சுத்தி பண்ணிக்கொள்க.

† நாவியை மூத்திரஞ் சுத்தி செய்து ஆநந்த பைரவியிற் கலந்து கூட்டவும்.



## 34 பிள்ளைகளின் வயிற்றுக் கடுப்புக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 சாதிக்காய் | 1 | 8 தேன் | பலம் ½ |
| 2 கிராம்பு | 20 | 9 அபினி | ,, 1 |
| 3 வால்மிளகு | பலம் ¼ | 10 கசக்சா | ,, |
| 4 மிளகு | ,, ¼ | 11 அதிவிடயம் | ,, |
| 5 கண்ட திப்பிலி | ,, ¼ | 12 கோம்பரக்கு | ,, |
| 6 ஓமம் | ,, ½ | 13 செற்றுநைப்பூ | ,, |
| 7 சர்க்கரை | ,, ½ | | |

இவையெல்லாம் கருவாமல் வறுத்துப் பொடி செய்து, தேன் விட்டு மத்தித்து தூதுளங்காய்ப் பிரமாணம் உருண்டை செய்து மூன்று நாள் அந்தி சந்தி ஒவ்வொரு வுருண்டை சாப்பிட, சகல பேதியுங் கடுப்புந் தீரும்.

## 35 * மேக பித்தவாயுவுக்கு

வெள்ளறுகு, சிறு எலுமிச்சங்காளவு அரைத்து, ஆழாக்கு பசம்பாலில் வார்த்து ஐந்து நாள் கொள்ளவும்.

பத்தியம்:—உப்பு, புளிப்பு வேண்டாம்.

## 36 பித்த சுரத்திற்குக் கியாழம்

| | |
|---|---|
| 1 ஏலம் | 6 சுக்கு |
| 2 அதிமதுரம் | 7 சந்தணம் |
| 3 கோஷ்டம் | 8 நன்னாரி |
| 4 வெட்டிவேர் | 9 கோரைக்கிழங்கு |
| 5 குறுவேர் | 10 பற்பாடகம் |

இவை வகைக்கு பலம் காலாக ஏகமாயிடித்து, 1-படிப்பிரமாணம் தண்ணீரிற் போட்டு, முரியக் காய்ச்சி, அந்திசந்தி கொடுக்கவும். இல்லாவிட்டால், நெல்லி பருப்பு பலம் 1 வேளை வேளைக்குக் கியாழம்போட்டு சஞ்சீவி மாத்திரை கூட்டிக்கொடுக்கவும்.

## 37 மகா கோடாசூரி குளிகை

| | | | |
|---|---|---|---|
| 1 இரசம் விராகனிடை | 1½ | 6 வெண்காரம் விராகனிடை | 1 |
| 2 நாவி ,, | 2 | 7 சிறு கடுகு ,, | 3 |
| 3 கெந்தகம் ,, | 1 | 8 சிறுபாலை ,, | ½ |
| 4 அரிதாரம் ,, | 1 | 9 மனோச்சிலை ,, | 1½ |
| 5 அக்கிராகாரம் ,, | 1 | 10 நேர்வாளம் ,, | 1 |

---

* கைகண்ட முறையாம்.

இவை பத்துங் கூட்டிக் கலந்து, முதலில் குட்டி குப்பை மேனிச் சாற்றில் மத்தித்து, பின்னர் 7-நாள் * கையாந்தகரைச் சாற்றில் மத்தித்து, அப்பால் எலுமிச்சம் பழச்சாற்றில் மத்தித்துத் துவரைப் பிரமாணமாக வுருண்டை செய்து

1 சுரத்திற்கு இஞ்சிச் சாற்றிலிட்டுக்கொள்க.
2 விரோசனத்திற்கு ஆமணக்கெண்ணெயில் கொள்க.
3 பாம்பு கடிக்கு எலுமிச்சஞ் சாற்றில் கண்ணிலிடவும்.
4 தேள் கொட்டின், கொட்டின வாயில் எலுமிச்சஞ் சாற்றி லிடவும்.
5 விக்கலுக்கு பசு நெய்யில் கொடுக்கவும்.
6 சன்னிக்கு கரிசிலாங்கண்ணிச் சாற்றிற் றரவும்.
இரத்தப் பிரமேகத்திற்கு வெள்ளாட்டுப் பாலிற் றரவும்.

* கருசிலாங்கண்ணி.

## 38 சன்னிக்குக் குளிகை

| | |
|---|---|
| 1 இரசம் | 6 * நேர்வாளம் |
| 2 கெந்தகம் | 7 நாவி |
| 3 பொன்னரிதாரம் | 8 † வெங்காரம். |
| 4 நெல்லிவத்தல் | 9 அதிமதுரம் |
| 5 துத்தம் | |

இவை யொன்பதும், நெல்லி வற்றல் கியாழ நீரால் 6-நாள் அரைத்துப் பயிறு பிரமாணமாக வுருண்டை பண்ணி, இஞ்சிச் சாற்றில் இடவும். அலர் சன்னிக்கு உச்சித் தலையிலிடவும் தீரும்.

## 39 சிறுபிள்ளைகட்குச் சீரண சூரணம்

| | |
|---|---|
| 1 சீரகம் | 5 ஏலம் |
| 2 கருஞ்சீரகம் | 6 கடுரோகணி |
| 3 சுக்கு | 7 மிளகு |
| 4 தும்புராஷ்டகம் | 8 பெருங்காயம் |

இவைகளை வகைக்கு 1 பலமாகக் கொண்டு இடித்து வஸ்திர காயஞ் செய்து, தேனில் கொள்ள மந்தஞ் செரிக்கும்.

---

1 * நேர்வாளத்தை சாணத்திற் சுத்தி செய்க.
2 † வெங்காரத்தை யெரித்துப்போடவும்.



## 40 மாந்த மாத்திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நாவி | பலம் | 1 | 4 ஓமம் | பலம் | ½ |
| 2 நேர்வாளம் | ,, | 2 | 5 திப்பிலி | ,, | ¼ |
| 3 குரோஷாணி | ,, | | 6 அபினி | ,, | ⅛ |

இவைகளை எலுமிச்சஞ் சாறுவிட்டரைத்து, மிளகு பிரமாணம் உருண்டை செய்து கொடுக்கத் தீரும்.

## 41 பிள்ளைகளின் மாந்தம், சன்னி முதலியனவற்றிற்கு

1 வேப்பெண்ணை ½ படி 2 விளக்கெண்ணை ½ படி
இவற்றில்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 சிற்றரத்தை | 2 பலம் | 7 ஓமம் | பலம் | ½ |
| 2 கண்டு திப்பிலி | ½ ,, | 8 சதகுப்பை | ,, | |
| 3 சிறு தேக்கு | ,, ,, | 9 முருங்கைப்பட்டை | ,, | |
| 4 வெள்ளைப்பூண்டு | 1 ,, | 10 எருக்கம் வேர் | ,, | |
| 5 சுக்கு | ½ ,, | 11 மாவுலிங்கம்பட்டை | ,, | |
| 6 வசம்பு | ½ ,, | 12 நொச்சிலிபட்டை | பலம் | 1 |

இவைகளை யெல்லாங் கியாழம் வைத்து, கலக்கவும்.
பின்னர்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 வெள்ளைச்சார்வாளை | படி ⅛ | 5 சங்கிலை | படி | ⅛ |
| 2 கண்டங்கத்திரிச்சாறு | ,, ⅛ | 6 *முசிட்டு முட்டை | ,, | ⅛ |
| 3 வெள்ளைச்சாரணை | ,, ⅛ | 7 பூநாக சத்து | பலம் | 4 |
| 4 குப்பமேனி | ,, ⅛ | | | |

இவைகளையும் போட்டு, மெழுகு பதத்தில் திட்பிவர எரித்துக் கொடுக்கவும்.

## 42 அறுவகை மூலத்துக்கும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கோதும்பை | பலம் | 1 | 3 கழுதும்பை | பலம் | 1 |
| 2 தேங்காய் | ,, | 1 | | | |

இவை மூன்றும் அரைத்துப் பிசறி, பானையில் பிட்டுகட்டி தென்னம் வெல்லத்தில் தின்னவும்.

பத்தியம்:—புளிப்பு புகையிலை யிவை தவிர்க்கவும்.

---

* இந்த முட்டையை சற்று வேப்பெண்ணையில் போட்டு வறுத்துக்கொள்ளவும்.

## 43 நீர்க்கட்டுக்கு

நல்லெண்ணெ படி ½ இதில் வாழைச் சருகுசுட்ட சாம்பலை ஒரு கடிப் பிரமாணங் கலந்து கொடுக்கத் தீரும்.

## 44 ஈளை இருமலுக்கு

| | |
|---|---|
| 1 பூசுணிக்காய் குடல் | 4 தாணிக்காய் |
| 2 கற்கண்டு | 5 ஏலம் |
| 3 திப்பிலி | |

இவை 5-ம் வகைக்கு விராகனிடையாகக் கொண்டு 1 படி பசு நெய்யில் வேகவைத்துத் தின்னவும்.

## 45 இடுப்பு பிடிப்புக்கும் குடைச்சலுக்கும்

| | |
|---|---|
| 1 எள்ளு புண்ணாக்கு படி ¼ | 3 கோழிமுட்டை 5 |
| 2 நல்லெண்ணெ படி ¼ | |

இவற்றில் புண்ணாக்கை யிடித்து, எண்ணெயிற் கலந்து புது சட்டியில் முட்டையின் வெள்ளைக் கருவை மாத்திரமிட்டு மத்தித்து 10-நாள் சாப்பிடவும்.

## 46 மகோதரத்திற்கு

பேய் பீர்க்கங் கூண்டு 1 முறங் கொணர்ந்து, தண்ணீருங் காடியும் பதக்கஷயக் கலந்து, அதில் இதை ஊறவைத்து, மறுநாள் பிசைந்து பின்னர் பிழிந்து, வைக்கோலில்வடித்து இறையக் காய்ச்சி, இந்துப்பைப்பொடி செய்து தூவி இளகின பதத்திலே செப்பிலடைத்து, குண்டுமணிப் பிரமாணங் கொடுக்கக் கழியும்.

பத்தியம்:—பயித்தம் பருப்பு கஞ்சியும், தயிருஞ்சோறுமாம்.

## 47 மாந்தத்திற்குக் கியாழம்.

அத்திவேர்ப் பட்டையை நறுக்கித் தண்ணீரிலே போட்டு, கடுகுஞ் சீரகமும் கொஞ்சம் போட்டுக் காய்ச்சி காலாழகக்கு நீர் இறுத்து, கோரோசனம் வைத்து வார்க்கவும், இப்படி 3-நாள் 6-பொழுது வார்க்கவும்.



## 48 மாந்தக் கழிச்சல் கட்ட குளிகை

| | | | |
|---|---|---|---|
| 1 ஓமம் | பலம் ¼ | 4 கடுகு | பலம் ¼ |
| 2 கருஞ்சீரகம் | ,, | 5 எருக்க மொக்கு | ,, |
| 3 திப்பிலி | ,, | 6 பெருங்காயம் விராகனிடை | 1 |

இவைகளை வுத்தாமணி யிலைச்சாறு கொஞ்சம்விட்டு நெகிழ அரைத்து, குண்டுமணிப் பிரமாணந் திரட்டி, நிழலி லுலர்த்தி வேளைக்கு 1-மாத்திரையாக 12-வேளை (அதாவது 6-நாள்) புசிக்கவும் சுகம்.

## 49 சுர மாந்தத்திற்கு

| | | | |
|---|---|---|---|
| 1 சீக்கிரான் வேர் | பலம் ½ | 3 சிறுதரிஞ்சா | பலம் ½ |
| 2 கருஞ்சீரகம் | ,, | | |

இம்மூன்றும் கியாழமிட்டுக் கொடுக்க, சுரமாந்தந் தீரும்.

## 50 நீரிழிவுக்கு

| | |
|---|---|
| 1 ஆவாரம்பூ | 5 கல் நார் |
| 2 மஞ்சள் | 6 கல் மதம் |
| 3 நெல்லி | 7 சகச்சிர வேதி |
| 4 தான்றிவேர் | |

இவை யெழுஞ்சமன் கூட்டி, கியாழமிட்டு 2-போதுங்கொள்ளத் தீரும்.

## 51 வயிற்று வலிக்கு

சுக்கின் மேற்றோல் போக்கி பசுநெய் வார்த்தரைத்து, வயிற்றின்மேலும், முதுகுத் தண்டின்மேலும் பூத்துப் போட்டபின் உள்ளுக்கு மாவிலிங்கப்பட்டை யரைத்து, புளியங்கொட்டைப் பிரமாணம் எடுத்து, வெல்லத்திற் கொடுக்க, மலஞ்சலம் சுகமே வரும். வலியும் நிற்கும்.

## 52 வயிற்று கழிச்சலுக்கு

இலவம் பிசினை முலைப்பாலில் உரைத்துப் புகட்ட கழிச்சல் நிற்கும்.

## 53 இதுவுமது, வேறு முறை

நிலத்துத்தியை யரைத்து முலைப்பாலில் புகட்டினும் கழிச்சல் நிற்கும்.

### 54 குழந்தைகளுக்குண்டாகும் விப்புருதிக்கு

ஈர வேண்காயத்தை யுரித்து, (காடியில்) மாபோல் நெகிழ அரைத்து, காடியிற் கல்க்கிக் குழம்புபோற் காய்ச்சி, கொடுத்து வரவும்.

நோய்மேல் ஈர வேண்காயத்தை நறுக்கி வைத்துக்கட்டவும்.

### 55 வேறொரு முறை

பேய்மிரட்டி இலையைத் துவைத்து, காடி தெளித்துப் பிசறி, பின்னர் வறுத்து விப்புருதிமேற் கட்டிக்கொண்டு வந்தால் குணமாம்.

### 56 வயிற்றிலுள்ள திமிர்ப்பூச்சி விழுதற்கு

| | | | |
|---|---|---|---|
| 1 கடுக்காய் | 2 | 3 வேப்பீர்க்கு | பலம் 1 |
| 2 களிப்பாக்கு | 1 | | |

இவைகளைப் பிரண்டையிலைச்சாற்றில் அரைத்து, எண்ணெயிற் புரட்டி உருண்டையாகத் திரட்டி விழுங்க, மலசுத்தியுடன் விழும். * சீதமும் விழும்.

### 57 மாந்த கணத்திற்குக் கியாழம்

வரப்பூலாப் பட்டையைக் கொணர்ந்து நறுக்கிக் கியாழமிட்டு, அந்நீரில் சுட்ட பெருங்காயத்தை யரைத்து, யிற்பாடு கரைத்து காய்ந்த சட்டியில் வார்த்துக்கொடுக்கவும். இப்படியே 7-நாளைக்குஞ் செய்து கொடுக்கக் குணமாம்.

### 58 வேறொரு முறை

| | | | |
|---|---|---|---|
| 1 ஒதியம் பீர்க்கு | 10 | 3 பெருஞ்சீரகம் பலம் | ¼ |
| 2 சுக்கு (தேறு) | 1 | | |

இவை யெல்லாம் ஒன்றாய் வறுத்து கியாழங் காய்ச்சிக் கொடுக்க மாந்தம் பறக்கும்.

---

* இது குடலைச் சுற்றியிருப்பதென்றும், இது விழுந்தால் மிக்க பலக்குறைவென்றும் ஆகவே யிது விழுமவ்வளவு மருந்தை யுபயோகப்படுத்தலாகாதென்றும், பல வைத்தியர்கூறுவர். அஃதுண்மையே. அதுபோல நேர்வாள மாத்திரைக்கும் இக்குணம் இயல்பாகவே யுண்டு.



### 59 கணைத்துக்கு மாத்திரை

| | | | |
|---|---|---|---|
| 1 சுக்கு | பலம் ¼ | 5 திப்பிலி | பலம் ¼ |
| 2 மிளகு | ,, | 6 சீரகம் | ,, |
| 3 இலவுங்கம் | ,, | 7 சாதிக்காய் | 1 |
| 4 சாபத்திரி | ,, | 8 மாசிக்காய் | 2 |

இவைகளை சமனாகக் கொண்டு, அதிவிடயம் விராகனிடை 3-ங்கொண்டு, ஓர் மாதளங்காயைக் குடைந்து தோண்டி, உள்ளிருக்கும் விதை யாவு மெடுத்துப் போட்டு, சீர்க்கு ஒன்பதையும் அதனுள் அடக்கஞ் செய்து மேலே சீலையைக் கட்டி, யதன்மீது மண்ணைப்பூசி, புடம் போட்டு, அப்பால் எடுத்துத் தட்டி, கலவத்திட்டு மாதளம் பட்டை, ஆவாரம்பட்டை யிவை யிரண்டையுங் கியாழம் வைத்து அக்கியாழத்தால் மேற்படி புடம் வைத்த மருந்தை யரைத்து, மசிந்த பிறகு குண்டுமணிப் பிரமாணமாக வுருண்டை செய்து வைத்துக்கொள்ளவேண்டும்.

1 (பாராவது) வெளுப்பாகக் கழிந்தால், மிளகையும் வசம்பையும் பற்பமாக்கி, கியாழமிட்டு அதிலொரு மாத்திரையைக் கலக்கிக் கொடுக்கவும்.

2 பச்சென்று கழிந்தால் பெருமாப்பட்டை பலம் ½ கியாழமிட்டு, அதில் ஒரு மாத்திரையைக் கலக்கிக் கொடுக்கவும்.

### 60 மாந்த மாத்திரை

கடுகுரோகணியை வேண்டியமட்டுங் கொண்டுவந்து, ஆற்றுத் தும்மட்டிக்காயைச் சாற்றிலரைத்து, குண்டுமணிப் பிரமாணந் திரட்டி நிழலில் உலர்த்தி ஓமத்துடனாவது, மிளகுடனாவது வேறு () பச்சிலைகளிலாவது வைத்துக் கொடுக்கவும்.

### 61 மாந்தத்திற்குக் கியாழம்

| | |
|---|---|
| 1 நாய்வேளை | 4 சமுத்திர லவணம் |
| 2 ஓமம் | 5 வீட்டத் திருப்பி |
| 3 மஞ்சள் | 6 சுக்கு |

இவைகளை சமன் கொண்டு கியாழமிட்டுத் தரவும்.

### 62 இதுவு மதற்கே

| | |
|---|---|
| 1 இரட்டைப் பேய்மிரட்டி | 3 கறிமுள்ளி |
| 2 கோழியாவாரை | 4 செம்முள்ளி |

---

() மாந்த நிவாரணமாகும் பச்சிலைகளை.

இவை நாலுஞ் சமன் கொண்டு, துவைத்து முப்பிடியாகப் பிடித்து பிட்டாவிக் கொண்டு, பிழிந்து அதில் வசம்பைச் சுட்டு நன்று யிழைத்து, மூன்று வேளை கொடுக்க மாந்தந் தீரும்.

## 63 கணத்துக்கு

வேந்தயம் 3-நாள் கருக்கி கியாழம் வைத்து கொடுக்கவும்.

## 64 சூலை நோய்க்கு

உள்ளி 3 கொணர்ந்து புடமிட்டுக் கொடுக்க வாங்கும்.

## 65 கணத்திற்கு இன்னொரு முறை

கோழியிலைச் சாற்றைப் பிழிந்து, காய்ந்த சட்டியிலூற்றி * முறித்து, தெளிவை யிறுத்துக்கொடுக்கவும்.

## 66 மாந்தத்திற்கு மற்றொரு மாத்திரை

| | |
|---|---|
| 1 உத்தாமணி வேர் | 6 கருஞ்சீரகம் |
| 2 சிறுகுறிஞ்சாவேர் | 7 மாசிக்காய் |
| 3 ஓமம் | 8 நாயுருவி விரை |
| 4 பெருங்கிழங்கு | 9 தாணிக்காய் |
| 5 ஆமையோடு | |

இவை யொன்பதும் சரியிடை கொண்டு பிரமி யிலைச்சாறு துளி விட்டு, சாமநேரம் அரைத்து குண்டுமணியளவாக வுருண்டை செய்து நிழலி லுலர்த்தி, ஒரு குளிகையை கியாழத்திலாவது, பச்சிலைச் சாற்றிலாவது கொடுக்கவும்.

## 67 கணத்திற்கு

1 கற்றாழை மட்லை நடுவே வகிர்ந்து அதில் பச்சைப்பயறு அரை ஆழாக்கு கொட்டி, வீட்டின் மேற்புறத்தில் வைத்து விடியற்காலையி லெடுத்து, சோறும் பருப்பும்போல் ஓர் குழிக்கல்லிலரைத்து, பின்பு

| | | | |
|---|---|---|---|
| 1 வெள்ளைமிளகு பலம் ¼ | 4 கல்நார் | பலம் ⅛ | |
| 2 சீரகம் ,, | 5 சாதிக்காய் | ,, ½ | |
| 3 லவுங்கப்பட்டை ,, | | | |

இவைகளைத் தூள் பண்ணி, முன் மருந்தோடுகூட்டிப் போட்டு நெகிழ அரைத்து, புளியங்கொட்டைப் பிரமாணம் அந்தி சந்தி கொடுக்கத் தீரும்.



## 68 இதுவுமதற்கே அங்காய வுருண்டை

ஓமம் பலம் 1 கொணர்ந்து வந்து புது சட்டியில் எழு விசை தேய்த்துப் புடைத்து தூள் பண்ணி, சுக்கு ¼ பலம் மிளகு பலம் ⅛ இவையிரண்டையுந் தூள்பண்ணி அத்தூளுடன் இத்தூளையுங் கலந்து, மீண்டும் அரைத்து அந்திசந்தி வேளைக்கு புளியங் கொட்டை யளவு தேனில் சாப்பிடவும்.

## 69 இதுவுமதற்கே மற்றொரு முறை

| | |
|---|---|
| 1 ஓமம் | 3 சாதிக்காய் |
| 2 இலவுங்கம் | 4 வேப்பங்கொழுந்து |

இவைகளைச் சரிகொண்டு தண்ணீர் விட்டரைத்து, உருண்டை செய்து அந்திப் பொழுதில் * தரவும்.

## 70 இதுவுமதற்கே கியாழம்

| | |
|---|---|
| 1 இரட்டைப் பேய்மிரட்டி | 5 மணத்தக்காளி |
| 2 ஒற்றைப் பேய்மிரட்டி | 6 கணப்பூண்டு |
| 3 துளசி | 7 குப்பைமேனி |
| 4 தும்பை | 8 நிலத்துளசி |

இவை யெட்டும் சமனாய்பிட்டிட்டு பின்னீர் பிழிந்து கோரோசனை வைத்து, கிராலையில் † வார்க்கவும்.

## 71 சீதக் கழிச்சலுக்கு

உப்பை யுரைத்து சுக்கு மேற்றடவி புடமிட்டெடுத்து கீழா நெல்லி வேர் பலம் அரை கூடப்போட்டு, ஒரு படி தண்ணீர் விட்டு காய்ச்சி, ஆழாக்கு நீராக வடிகட்டிக் கொடுத்துவரத் தடையின்றி ‡ தீரும்.

## 72 இரத்தக் கழிச்சலுக்கு

| | |
|---|---|
| 1 ஆற்கம்பு | 7 கற்கடக சிங்கு |
| 2 கோடசபாலை | 8 இலவன் |
| 3 விரை | 9 சாதிக்காய் |
| 4 இலவுங்கம் | 10 வட்டத்திருப்பி |
| 5 திப்பிலி மூலம் | 11 மாதளம் இலை |
| 6 சீரகம் | |

---

* இளந்தக் குழந்தைக்கும் வார்க்கலாம்.

† வார்க்கவும் என்றதால் குழந்தைகட்கிது கைகண்டதாகும்.

‡ அஜீரணக் கழிச்சல் மாந்தக் கழிச்சல் இவையுந் தீருமாம்

இவை பதினொன்றும், வகைக்கு விராகனிடையாகக்கொண்டு பொன்னிறமாக வறுத்து, சட்டியிற் போட்டு படி தண்ணீர் வார்த்து ஆழாக்காய்க் காய்ச்சி வடிகட்டிக் கொடுத்துவரத் * தீரும்.

## 73 சீதக் கழிச்சலுக்கு மற்றொரு முறை

| | | | |
|---|---|---|---|
| 1 இலவுங்கம் | பலம் ¼ | 4 திப்பிலி | பலம் 1 |
| 2 சாதிக்காய் | ,, | 5 சுக்கு | ,, ¼ |
| 3 சாதிபத்திரி | ,, | | |

இவை யைந்துங்கொண்டு வந்து, உப்பை யரைத்துத் தடவி, சுட்டெடுத்து சீவிப்போட்டு, இதுவும் மற்ற மருந்தும் அம்மியில் வைத்தரைக்கும்போது காரை வேரும் கீழாநெல்லி வேரும் கியாழம் வைத்து அந்நீரால் அரைத்து அடைதட்டி, கால் பலம் ரசத்தை யிலையில் பொதுக்கி, சட்டியடுப்பின்மீது காயச்சே, யிம் மருந்தையும் போட்டு வெந்தபிறகு திருப்பிப் போட்டெடுத்து, மறுபடியும் அரைத்துப் புடம் போடவும். இப்படி 7 விசை யரைத்துப் புடம் போட்டு எடுத்து வைத்துக்கொண்டு இரண்டு வேளையும் 1 கடியளவு கொடுத்துவரத் தீரும்.

இதனால் மூலக்கிராணி, சேரியாக்குணம் இவையுந் தீருமாம்.

பத்தியம்:—கவிச்சும், புளிப்புந் தவிர்க்கவும்.

## 74 தண்ணீர் உழலை தாகத்திற்கு

ஒரு புதுக்குடங் கொண்டுபோய், குளத்தின் ஆழம் மட்டுந் தண்ணியிலிறங்கி, மண்ணுந் தண்ணீருமாக எடுத்துவந்து, புதுச் சட்டியைக் காயவைத்து, மண்ணை நன்றாய் வறுத்துக்கொண்டு பசும்பனையோலையைச் சிறுக அரிந்து கூடப்போட்டு, கேழ்வரகாவது நெல்லாவது பொரித்துக்கூடவேபோட்டு, வறுத்தவுடனே தண்ணீர் வார்த்து கொதிவருமட்டுங் காய்ச்சி யிறுத்துக் கொடுக்கத் தண்ணீர் உழலை தீரும்.

## 75 விக்கலுக்கு சிங்கநாத சூரணம்

| | |
|---|---|
| 1 கற்கடக சிங்கு | 4 கண்டங்கத்திரி தோல் |
| 2 பிசிறி கடுகு | 5 தோல்சிறு வேர் |
| 3 வழுதலைவேர் (தோல்) | 6 மயிரா வேர் |

* இன்னும் அஜீரணம், சீதக் கழிச்சல் மூலக்கிராணி முதலியனவுந் தீருமாம்.



இவையாறும் சமன் கூட்டி யிடித்து, வத்திரகாயஞ் செய்து தேனிற் கொள்ள, ஒருதரம் வயிறுபேதிக்கும். தண்ணீர் தேவை.

## 76 வேறு.

விளாம்பிசின் பொடி செய்து தேனில் குழப்பிக் கொடுக்க, விக்கலுடன் இருமலும் தீரும்.

## 77 தேள் கொட்டுக்கு

உள்ளி தைலத்தில் பெருங்காய மிழைத்துத் தடவ, கொட்டுவாய் குளிரும்.

## 78 இதுவுமதுவே வேறு

எலுமிச்சம் பழச்சாற்றில் பெருங்காய மிழைத்துத் தடவக் கொட்டுவாய் குளிரும்.

## 79 இருமலுக்குந் தொண்டை கட்டுக்கும்

| | | | |
|---|---|---|---|
| 1 மிளகு | விராகனிடை 10 | 3 திப்பிலி | விராகனிடை 5 |
| 2 சுக்கு | ,, 1 | 4 வெங்காரம் | ,, 1 |

இவைகளைப் பொரித்து, கையாந்தகரைச் சாற்றில் கலந்து 3-நாள் கொடுக்கவும்.

பத்தியம்:—புளிப்பு ஆகாது.

## 80 மந்தார காசத்துக்கு.

செம்பருத்திப் பூவும், சீரகமும் அரைத்து, அந்தி சந்தி ஏழு நாள் சாப்பிடவும்.

## 81 இதுவுமதே வேறு முறை

நாயுருவி விதையைப் பொடி செய்து, தேனில் அந்தி சந்தி சாப்பிடவும் தீரும்.

## 82 சிராப் பீனிசத்திற்கு

பசு மாட்டுக் கொம்பை சீவி, வெள்ளைத் துணியெடுத்துப் புகையிலையைக் கொஞ்சங் கலந்து, புதுச் சுங்கானிலே போட்டு 3 அல்லது 4 மூச்சு பிடிக்கத் தீரும்.

## 83 கழிச்சலுக்கு

| | |
|---|---|
| 1 பசுவின் நெய் | 4 சர்க்கரை |
| 2 எருள்ளிச்சாறு | 5 அதிமதுரம் |
| 3 பசும்பால் | |

இவை யைந்தும் லேகியமாக்கிச் சாப்பிடவும், தீரும்.

### 84 மாந்தத்தினால் வயிறு கழிச்சலுக்கு

1 மாவீர்க்கு
2 புளியம் ஈர்க்கு
3 வேப்பீர்க்கு
4 பொடுதலை யீர்க்கு
5 நொச்சி யீர்க்கு

இவைகளைச் சமமாகக் கொண்டுவந்து

1 வசம்பு துட்டிடை
2 ஓமம் ,,
3 திப்பிலி துட்டிடை
4 வெள்ளுள்ளி ,,

இவை நாலையுங் கூடச் சேர்த்துக் கியாழமிட்டுக் கொடுக்க; கழிச்சல் நிற்கும்.

பத்தியப்படி யிருத்தல் வேண்டும்.

### 85 ஒருதலை நோவுக்கு

1 சிறுகீரை வேர்
2 மிளகு
3 மஞ்சள்

இவைகள் மூன்றையும் நறுக்கி, நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி, முழுக்கு முழுகவும் தீரும்.

### 86 குளிர்மைக்கு

1 முருங்கப்பட்டை
2 மாவிலிங்கப் பட்டை
3 வெள்ளுள்ளி
4 கைம்மாறு வெற்றிலை

இவைகளை, சமன் கொண்டு [illegible] கொடுக்கவும். பரங்கி சாம்பிராணி புகை காட்டவும்.

### 87 வயிற்று கடுப்புக்கும் கிராணிக்கும்

1 சாதிக்காய்
2 சாபத்திரி
3 கிராம்பு
4 அதிவிடயம்
5 மாசிக்காய்
6 காசுக்கட்டி
7 களிப்பாக்கு
8 சீரகம்
9 ஓமம்
10 கஞ்சாயிலை
11 அபின்
12 வட்டத்திருப்பி

இவைகள் 12 சரக்கு வகைகளையும் சமன் கொண்டு தனித் தனியே வறுத்து ஆர்க்கப் பொடி செய்து, வெல்லம் போட்டு அரைத்து, தூதுளங்காய்ப் பிரமாணம் உருண்டை செய்து, வேளைக்கொன்றாக காலை மாலை யிரா ஆக மூன்று வேளையாக் கிப்படி 8-நாள் தின்னவும் கடுப்புக் கிராணி, மூலக்கிராணி தீரும்.



### 88 நீரிழிவுக்கு

பொன்னுவாரங் கொழுந்து கொண்டுவந்து பிட்டுவைத்து அத்துடன் கிராம்பு 1 பலம் வறுத்துப்போட்டு, தேன் விட்டரைத்து பாக்குப் பிரமாணம் உருண்டை பண்ணி அதை காய்ச்சிய தேனில் குழைத்து அந்திசந்தி 15 நாட்கள் தின்னவும்.

பத்தியம்:—1 வாழைக்கச்சல், எருமைத்தயிர் வெள்ளாட்டுக் கறி யிவை யுபயோகப்படுத்திக்கொள்ளவும்.

### 89 இதுவுமதே வேறுமுறை

3 நத்தையை யவித்து, தேன் துளி குத்தியரைத்து, 8-நாள் விழுங்கவும் தீரும்.

8 நத்தையைக் கொண்டுவந்து, நெய்யில் பொரித்து 8-நாள் தின்னவும் குணம்.

### 90 இதுவுமதே வேறு முறை

நெல்லிமுள்ளி வழக்குக் கொண்டுவந்து 2-நாழி நீர்விட்டு, உழக்காய்க் காய்ச்சி, யதில் கழஞ்சு தேத்தாங்கொட்டைப் பொடி செய்து போட்டுக் குடிக்கவும் நன்மை.

### 91 இதுவுமதே வேறு முறை

கைத்தாழஞ் சாறு ஆழாக்கு, பசுநெய் ஆழாக்கு கலந்து கொடுக்கத் தீரும்.

### 92 இதுவுமதே வேறு முறை

முருக்கம் விரை 1 அரைத்து, நல்லெண்ணெயில் 6-நாள் குடிக்கவும் சுகமாம்.

### 93 பலகரிலும் நீர் இறக்கத்திற்கு

செவ்வத்திப்பட்டையைக் கொணர்ந்து, மாபோல் அரைத்து 8-நாள் பசும்பாலிற் கொள்ளவும் குணம்.

### 94 இதுவுமதே வேறு முறை

ஓரிதழ்த்தாமரையை, பசும்பாலில் அரைத்துக் குடிக்கத் தீரும்.

### 95 கல்லடைப்புக்கு

நெருஞ்சிக்காயும் வெள்ளறுகும் பசும்பாலிற் குடிக்கச் சுகமாம்.

## 96 மூலத்துக்கு

பேய்ப்பீர்க்கங் கூண்டை சுட்டுப் பொடி செய்து, கூட உப்பும் புளியும் பொடி செய்து பிசைந்து உருண்டையாகப் பிடித்து அபான வாயிலுள் * தடவி, காத்துப் படாமலிருக்கின், அன்றே மூளையற்று விழும். விழாவிட்டால் மறு நாளிலும் அப்படியே செய்யவும்.

## 97 இருமலுக்கும் காசத்துக்கும்

| | | | |
|---|---|---|---|
| 1 அதிமதுரம் | பலம் 4 | 3 கற்கண்டு | பலம் 4 |
| 2 சுக்கு | ,, | 4 சர்க்கரை | ,, |

இவைகளை யிடித்து வடித்துக்கொண்டு

| | | | |
|---|---|---|---|
| 1 பசும்பால் | படி ¼ | 3 இஞ்சிச்சாறு | படி வீசம் |
| 2 நெய் | ,, | 4 எலுமிச்சம் பழச்சாறு | ,, ¼ |

இவையெல்லாம் லேக்கிய பதமாக வருகிறபோது எடுத்து வைத்துக்கொண்டு, பசும் வெண்ணெயில் எலுமிச்சம் பழமளவு தினகாலையும் சாப்பிடவும்.

பத்தியம் பிடிக்கவும்.

## 98 பிளாஸ்திரி

| | | | |
|---|---|---|---|
| 1 துருசு வராகனிடை | 1 | 3 கோட்டைப்பாக்குவிராக | 1 |
| 2 காசுக்கட்டி | ,, | | |

இவை 3-ம் சீலையில் சுற்றிச் சுட்டு, வெண்ணெயில் மத்தித்துப் போடவும்.

## 99 வாதம் என்பதுக்கும் தைலம்

| | | | |
|---|---|---|---|
| 1 எருக்கம் வேர் பலம் | 10 | 9 உத்தாமணி வேர் பலம் | 10 |
| 2 திருக்கள்ளி வேர் | ,, | 10 காக்கட்டான் வேர் | ,, |
| 3 முருங்கை வேர் | ,, | 11 முக்காவேலை வேர் | ,, |
| 4 மாவலிங்கம் வேர் | ,, | 12 நாயுருவி வேர் | ,, |
| 5 சங்கங்குப்பி வேர் | ,, | 13 நாய்க்கடுகு வேர் | ,, |
| 6 சதற்சாரணை வேர் | ,, | 14 தொடுவேலி வேர் பலம் | 5 |
| 7 சாரணை வேர் | ,, | 15 உப்பிலம் வேர் | ,, 55 |
| 8 நொச்சி வேர் | ,, | | |

* எற்றி என்னும் பாடம்.



இவை பதினாறும் சிறுகக் கொத்தி, பானையில் அடைத்து 4 மரக்கால் தண்ணீர் விட்டு ஆறிலொன்றாகக் காய்ச்சி, 2¼ படியாழமிறுத்துக்கொண்டு அதில்

| | | | |
|---|---|---|---|
| (1) வேப்பெண்ணை படி | 1 | 3. இலுப் பெண்ணை படி | 1 |
| (2) புங்கம் எண்ணை | ,, | | |

ஆயவிந்த 3 வகையெண்ணையும் கூட விட்டு, இதனுடன்

| | | | |
|---|---|---|---|
| 1 திப்பிலி பலம் | 1 | 9 வளகிலுப்பு பலம் | 1 |
| 2 திப்பிலி மூலம் | ,, | 10 செவ்வள்ளிக் கொடி | 1 |
| 3 தேசா புரம் | ,, | 11 கருஞ் சீரகம் | 1 |
| 4 அசம தாகம் | ,, | 12 மரமஞ்சள் | 1 |
| 5 குங்கிலியம் | ,, | 13 அரத்தை | 1 |
| 6 கேந்தகம் | ,, | 14 வசம்பு | 1 |
| 7 இந்துப்பு | ,, | 15 வெள்ளை வெண் | |
| 8 பொட்டி லுப்பு | ,, | காயம் பலம் | 2 |

ஆக இந்த 15 வகையும் இடித்து, எண்ணை பதமாக வருஞ் சமயத்தில் ஏலுமிச்சங் காயளவு பாதாளி மூலிகையும் போட்டு, வடித்து மேலுக்கு 4 * முறை போடவும்.

பத்தியம்:—கார்ப்பு புளிப்பு தவிர்க்கவும்.

## 100 பித்த பாண்டு ரோகத்திற்கு

| | | | |
|---|---|---|---|
| 1 நொச்சி யிலைச் சாறு | படி ¼ | 8 காட்டு மல்லிகையிலைச் சாறு | படி ¼ |
| 2 பிரமியிலைச் சாறு | ,, | 7 புளியிலைச் சாறு | ,, |
| 3 நீர் முள்ளி யிலைச் சாறு | ,, | 9 சங்கங் குப்பி யிலைச் சாறு | ,, |
| | | 10 நிலவாகை யிலைச் சாறு | ,, |
| 4 ஆடு தோடா யிலைச் சாறு | ,, | 11 முடக்கத்தானிலைச்சாறு | ,, |
| | | 12 காட்டா மணக்கிலைச் சாறு | ,, |
| 5 எலுமிச்சம் பழச் சாறு | ,, | 13 முசுமுசுக்கை யிலைச் சாறு | ,, |
| | | 14 வேதுப் புடுக்கி யிலைச் சாறு | ,, |
| 6 பொடுதலைச் சாறு | ,, | 15 கையாந்த கரைச் சாறு | ,, |

இவை பதினைந்து வகைச்சாறும் பிழிந்து கூட்டியபின்,

* முறைக்கு மூன்று நாளைக்கொருகால்.

இதில் சேர்க்கவேண்டிய மற்ற சரக்குகளாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1 திப்பிலி விராகனிடை | 5 | 10 அதிமதுரம் விராகனிடை | 3 |
| 2 திப்பிலிமூலம் | ,, | 11 கோஷ்டம் ,, | 3 |
| 3 கடுகு | ,, | 12 அரத்தை ,, | 5 |
| 4 செவ்வியம் | ,, | 13 சீரகம் ,, | 5 |
| 5 தேசாபுரம் | ,, | 14 சாதிக்காய் ,, | 1 |
| 6 அசமதாகம் | ,, | 15 கிராம்பு ,, | 4 |
| 7 வாய்விளங்கம் | ,, | 16 காந்தம் ,, | 8 |
| 8 கோத்தமல்லி | ,, | 17 அகிஷ்டம் ,, | 1 |
| 9 மிளகு | ,, | 18 நெல்லிமுள்ளி ,, | 1 |

இவைகளில் அரைக்கவேண்டியதை அரைத்தும், இடிக்க வேண்டியதை மாபோல மசிய யிடித்தும் நெய் சாற்றில் போட்டு லேகியமாகக் கிண்டிக்கிளறி குறுகிவருஞ் சமயத்தில் சர்க்கரை பலம் 30 பால்படி கால் விட்டு மீண்டும் நன்றாய்க் கிளறியெடுத்து வைத்துக்கொண்டு இரு வேளையும் கொட்டைப்பாக்களவு 13-நாள் தேனில் அனுபானம் செய்துக்கொள்ள * பித்தப்பாண்டு ரோகம், விஷப்பாண்டு ரோகம், காமாலை, மஞ்சள் காமாலை, பித்த குன்மம், வாய்வு இவையெல்லாம் நீங்கும்.

பத்தியம்:—புளிப்பு தவிர்க்கவும்.

## 101 நீராம்பலுக்கு லேகியம் பண்ணும் வகை

| | | | |
|---|---|---|---|
| 1 நிலாவரைக்கைச்சாறு படி | 1 | 3 இஞ்சிச் சாறு படி | 1 |
| 2 காட்டா மணக்குச் சாறு படி | 1 | | |

இவைகளை யொன்றாய்க் கலந்து வடித்துக் கொண்டு; இதற்குக் கடைச் சரக்கு வகை:—

| | | | |
|---|---|---|---|
| 1 திப்பிலி பலம் | 5 | 5 பொட்டி லுப்பு விராக | 5 |
| 2 தேசா புரம் விராக | 5 | 6 வளகி லுப்பு | ,, |
| 3 கடுகு ரோகணி | ,, | 7 பெருங்காயம் | 3 |
| 4 குங்கிலியம் | ,, | 8 வெள்வாளம் | 3 |

* இதின் குணங்களாவன:—இளைப்புண்டாதல், நெஞ்சு திடிதுடித்தல், மந்தப்படல், கிறுகிறுத்தல், மேனி வெளுத்தல் வீங்கல் என்பவையாம்.



| | | | |
|---|---|---|---|
| 9 கீரிடி முத்து | ,, | 12 துருசு | 3 |
| 10 இந்துப்பு | ,, | 13 வெள்ளைப்பூண்டு பலம் | 2 |
| 11 கல்லுப்பு | ,, | 14 கடுக்காய் | ,, |

இவைபதினைந்து வகையும் இடித்து, அரைத்து, லேகியமாக்கிக் கிண்டி பதமாய் வருஞ்சமயத்தில், கால்படி தேன் விட்டு, இறக்கி வைத்துக்கொண்டு, தினகாலையும் ½ கொட்டைப் பாக்களவு தேனில் அனுபானஞ் செய்யவும்.

இந்தப்படி 13-நாள் சாப்பிட * குணமாம்.

## 102 சர்வ பித்தத்திற்கும், பித்த குன்மத்திற்கும் பித்த வாய்வுக்கும்

| | | | |
|---|---|---|---|
| 1 தூதுவேளை வேர் பலம் | 5 | 8 சித்திரைமூலம் வேர் பலம் | 5 |
| 2 கண்டங்கத்திரி வேர் | ,, | 9 சித்தாமுட்டி வேர் | ,, |
| 3 சிறுவழுதலை வேர் | ,, | 10 சீதேவி செங்கழுநீர் வேர் | ,, |
| 4 முசுமுசுக்கை வேர் | ,, | 11 பேய்ப்புடலை | ,, |
| 5 முடக்கத்தான் வேர் | ,, | 12 வில்வ வேர் | ,, |
| 6 முக்காவேளை | ,, | 13 நெல்லிமுள்ளி | 3 |
| 7 சாரணை வேர் | ,, | | |

இப்பதின்மூன்று வகையுங் காயப்போட்டு, இடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக்கொண்டு இதோடு

| | | | |
|---|---|---|---|
| 1 மிளகு விராகனிடை | 5 | 13 இந்துப்பு விராகனிடை | 5 |
| 2 திப்பிலிமூலம் | ,, | 14 இலவங்கப்பட்டை | ,, |
| 3 செவ்வியம் | ,, | 12 கல்லுப்பு | ,, |
| 4 தேசாம்பரம் | ,, | 16 பொட்டிலுப்பு | ,, |
| 5 ஓமம் | ,, | 17 வளகிலுப்பு | ,, |
| 6 சீரகம் | ,, | 18 சாதிக்காய் | ,, |
| 7 சுக்கு | ,, | 19 கிராம்பு | ,, |
| 8 வாய்விளங்கம் | ,, | 20 குரோசணி ஓமம் | ,, |
| 9 கோத்தமல்லி | ,, | 21 கடுக்காய் | 1 |
| 10 கடுகுரோகணி | ,, | 22 தாணிக்காய் | 1 |
| 11 ஏலம் | ,, | 23 வெள்ளைப்பூண்டு | 2 |
| 12 இலவுங்கம் | ,, | | |

* நீராம்பலுடன், மலக்கவுசி, பெருவயிறு முதலியனவுந் தீருமாம்.

இவ்விருபத்துமூன்று வகையும் இடித்து கலந்துக்கொண்டு தினம் இருவேளை 1 கடிப் பிரமாணம் ½ மண்டலந் தேனில் அநுபானம் பண்ணி வரவும்.

பத்தியம்—கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

### 103 மேகம் இருபத்தொன்றுக்கும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கோஷ்டம் விராகனிடை | 5 | | 9 அக்கிராகாரம் விராகனிடை | | 5 |
| 2 முள்ளுருணைவேர்ப்பட்டை | ,, | | 10 கடலுருஞ்சிப்பட்டை | | ,, |
| 3 ஆவாரம் விரை | ,, | | 11 சாதிக்காய் | ,, | 2 |
| 4 கல்நாரி விரை | ,, | | 12 சாதிப்பத்திரி | ,, | 1 |
| 5 பரங்கிப்பட்டை | 30 | | 13 கிராம்பு | ,, | 2 |
| 6 நற்சீரகம் | ,, | | 14 குரோசணியோமம் | | 2 |
| 7 வால்மிளகு | ,, | | 15 இலவுங்கப்பத்திரி | ,, | 5 |
| 8 அதிமதுரம் | ,, | | 16 தாளிசப்பத்திரி | ,, | ,, |
| | | | 17 சிறுநாகப்பூ | ,, | ,, |

(இப்பதினேழில், கல்நாரை மாத்திரம்,) புதுச் சட்டியில் ஒரு பிடி ஆவாரம் இலையை வைத்து, அதின் மேல் (ஷை) கல்நாரை வைத்து, மறுபடியும் ஒரு பிடி ஆவாரம் இலையைக் கொண்டு மூடி, நெருப்பை யெரிய விட்டு, சாம்பலான பிறகு எடுத் தரைத்து பஸ்பம் பண்ணி இதோடே, மற்றச் சரக்கியா வற்றையும் இடித்துப் பொடித்து வஸ்திர காயஞ் செய்து கலக்கிக் கொண்டு, வேளைக்கு 1-கடிப் பிரமாணமாக 2-வேளையும் இஞ்சி சாற்றிலே யநுபானம் பண்ணிக் கொள்ளவும் குணம்.

பத்தியம்:—கார்ப்புப் புளிப்புத் தவிர்க்கவும்.

### 104 * பித்த காசம், சிலேட்டும காசம், க்ஷயம் இவைகளுக்கு ஒரே லேக்கியம்

1 சிற்று மணக்கு வேரும் இலையும் 2 எருமிச்சங்காயளவு.
2 தூதுவேளை வேரும் இலையும் ஷை
3 கண்டங்கத்தரி வேரும் இலையும் ஷை



4 சிறுவழுதலை வேரும் இலையும் ஷை
5 இன்புறல் வேரும் இலையும் ஷை
6 முருக்கிலை ஷை
7 முசுமுசுக்கிலை ஷை
8 முடக்கத்தானிலை ஷை
9 ஆவாரம் வேர்ப்பட்டை ஷை
10 ஆவாரச் செவ்வுந்தி ஷை
11 ஆவாரம் நெத்து ஷை

இவை பதினொன்றும் தனித்தனியே பசும்பால் விட்டரைத்து, பிறகு ஒன்றுகூட்டி சட்டியிற்போட்டு அதில் தூதுளம்பழச் சாறு 1 பிடியும் ஈர வெங்காயச்சாறு 1 பிடியும் விட்டு இதோடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மிளகு விராகனிடை | 5 | 9 சிற்றரத்தை விராக | | 8 |
| 2 திப்பிலி | ,, | 10 தாளிச்சபத்திரி | ,, | 5 |
| 3 சீரகம் | ,, | 11 சாதிபத்திரி | ,, | 2 |
| 4 அதிமதுரம் | ,, | 12 கிராம்பு | ,, | 3 |
| 5 கோஷ்டம் | ,, | 13 ஏலம் | ,, | 3 |
| 6 கஸ்தூரி மஞ்சள் | ,, | 14 சாதிக்காய் | ,, | ,, |
| 7 வாய்விளங்கம் | ,, | 15 இலவுங்கப்பட்டை | | 10 |
| 8 கோத்தமல்லி | ,, | | | |

இவை யெல்லாமும் பசும்பால் வார்த்தரைத்து கூடப் போட்டு மிஞ்சி நின்ற பாலையும் விட்டு பின்னர் 1 படி பசுநெய் விட்டு அப்பால் 30 விராகனிடை சர்க்கரை போட்டு லேக்கியமாகக் கிண்டிக் கிளறி வைத்துக்கொண்டு வேளைக்கொரு கரண்டியாக இரண்டு வேளையும் அரை மண்டலங் கொள்ளவும் குணம்

பத்தியம்:—உப்பு புளிப்பு தள்ளவும்.

---

* இதின் குணம் யாதெனில்:—

கதித்தே பித்தந் தானுமிகுத்தால்
கம்முந் தொண்டை யனலாக
மதித்தே நெஞ்சில் வழலையுண்டாம்
வாயோயாமல் இருமலுண்டாம்

## 105 மந்தார காசத்துக்கு

| | |
|---|---|
| 1 தூதுளை வேர் | 5 முசுமுசுக்கை யிலை |
| 2 கண்டங்கத்தரி வேர் | 6 சத்தசாரணை வேர் |
| 3 சிறுவழுதலை வேர் | 7 முக்காவேளை வேர் |
| 4 முருல் வேர் | 8 காட்டாமணக்கு வேர் |

இவைகள் வகைக்கு எலுமிச்சங்காயளவு.

சித்திரமூலம் கொட்டைப்பாக்களவு.

இவ்வொன்பது வகையும் அரைத்து 1 படி பசும் நெய்யிற் போட்டு இதில் இத்தின்னணி வேளாவால் 5 கொண்டுவந்து கால், தலை, சிறகு, குடல் இவைகளை வாங்கிக் கூழாக அரைத்து இத்துடன்

| | | | |
|---|---|---|---|
| 1 திப்பிலிவிராகனிடை | 5 | 9 இந்துப்பு விராகனிடை | 5 |
| 2 கண்டந்திப்பிலி | ,, | 11 பொட்டிலுப்பு | ,, |
| 3 ஓமம் | ,, | 12 வளகி லுப்பு | ,, |
| 4 அரத்தை | ,, | 13 சாதிக் காய் | 2 |
| 5 கஸ்தூரி மஞ்சள் | ,, | 14 சாதி பத்திரி | 1 |
| 6 கருஞ்சீரகம் | ,, | 15 கிராம்பு | 2 |
| 7 வசம்பு | ,, | 16 கடுகு ரோகணி | ,, |
| 8 குரோசணியோமம் | ,, | 17 வெள்ளை வெண் | |
| 10 கல்லுப்பு | ,, | காயம் | பலம் 1 |

இப்பதினேழு வகையும் அரைத்து, கூடப் போட்டுக் கிண்டி, கால் படி தேன் விட்டுக்கிளறி லேகிய மாக்கி வைத்துக் கொண்டு, வேளைக்குக் கொட்டைப் பாக்களவு ½ மண்டலஞ் சாப்பிடச் சுகம்.

பத்தியம்:—கைப்பும் புளிப்புந் தவிரவும்.

---

சதித்தே மெத்த மேனியைப்புந்
தாக முடனே வாய்வுண்டாம்
வதித்தே பித்த காசமென்ன
வகைவா யறிந்து கொள்வீரே.



## 106 முறைக்காய்ச்சலுக்குச் சூரணம்

| | | | |
|---|---|---|---|
| 1 தூதுளைவேர் | பலம் 10 | 6 சத்திசாரணைவேர் | பலம் 2 |
| 2 கண்டங்கத்தரிவேர் | ,, | 7 முக்காவேளை வேர் | ,, |
| 3 காட்டாமணக்கு வேர் | ,, | 8 சங்கங்குப்பிவேர் | 5 |
| 4 இம்புரால்வேர் | ,, | 9 சின்னிவேர் | ,, |
| 5 கோடிவேலிவேர் | 2 | | |

இவ்வொன்பது வகையும் காயப்போட்டு, இடித்து வஸ்திர காயம் பண்ணி இத்துடன்,

| | | | |
|---|---|---|---|
| 1 திப்பிலி விராக | 5 | 8 சீரகம் விராகனிடை | 5 |
| 2 மிளகு | ,, | 9 கஸ்தூரிமஞ்சள் | ,, |
| 3 சுக்கு | ,, | 10 கருஞ்சீரகம் | ,, |
| 4 தேசாபுரம் | ,, | 11 கடுக்காய் பலம் | 1 |
| 5 அசமதாகம் | ,, | 12 நெல்லி முள்ளி | ,, |
| 6 வாய்விளங்கம் | ,, | 13 பேய்ப்புடலை | 2 |
| 7 கோத்தமல்லி | ,, | | |

இப்பதின்மூன்று வகையு மிடித்துப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கூடக்கலந்து 1 கழஞ்சுப் பிரமாணம் இரு வேளையுமாகப் பதின்மூன்று நாள் தேனில் அனுபானம் பண்ணிக்கொள்ள நிற்கும்.

பத்தியம்:—கைப்பும் புளிப்புந் தவிர்க்கவும்.

## 107 பித்த சுரத்திற்குக் கியாழம்

| | | | |
|---|---|---|---|
| 1 நொச்சியிலை | பிடி 1 | 3 தூதுளையிலை | பிடி 1 |
| 2 துளசியிலை | ,, | | |

இம்மூன்றுந் துவைத்துப் புட்டாக வைத்து, அதில் 8 திப்பிலி முடிந்துவைத்து வெந்தபிறகு சீலையுடனே சாற்றைப்பிழிந்து திப்பிலி 8-ம் அரைத்து சாற்றுடனே (3-நாள்) 8-வேளையுங் கொடுக்க நிற்கும்.

பத்தியம்;—கைப்பும் புளிப்புந் தவிர்க்கவும்.

## 108 சிலேட்டும சுரத்திற்குச் சூரணம்

| | |
|---|---|
| 1 தூதுளைவேர் | 3 முக்காவேளைவேர் |
| 2 கண்டங்கத்திரிவேர் | 4 வில்வவேர் |

5 நுளசி வேர் 7 சிறு காஞ்சோரி வேர்
6 சிறுவழுதலைவேர்

இவ்வெழு வகையும் சரி யின்டைகொண்டு ஒரு பானையி லடைத்து, இதில்

1 வேப்பம் ஈர்க்கு பிடி 1 3 புள் ஈர்க்கு பிடி 1
2 நெல்லி ஈர்க்கு ,,

இம்மூவகை யீர்க்கையுங் கூட அறுத்துப்போட்டு இத்துடன்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 திப்பிலி விராகனி | 3 | 6 கடுகுரோகணி விராக | 3 |
| 2 திப்பிலிமூலம் | ,, | 7 அரத்தை | ,, |
| 3 தேசாபுரம் | ,, | 8 கடுக்காய் | 10 |
| 4 வாய்விளங்கம் | ,, | 9 பேய்ப்புடலை | பலம் 2 |
| 5 கோத்தமல்லி | ,, | | |

இந்த 9 வகையும் இடித்து வஸ்திரகாயம் பண்ணி கூட்டிப்போட்டு (யாவும் பானையிலடைத்து) முக்குறுணி தண்ணீர் விட்டுக் கியாழமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு ½ படியாக 2 வேளையுந் துட்டெடைதேன் விட்டு 4-நாள் குடிக்க இலகுவாம்.

பத்தியம்:—கைப்பும் புளிப்புந் தவிரவும்.

## 109 * வாத சுரத்திற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| 1 கொஞ்சிவேர் பலம் | 2 | 7 சங்கம்வேர் | பலம் 2 |
| 2 சித்தாமுட்டிவேர் | ,, | 8 சிறு வழுதலைவேர் | ,, |
| 3 கிளாவேர் | ,, | 9 நாயுருவிவேர் | ,, |
| 4 முக்காவேளை வேர் | ,, | 10 கோடவேலிவேர் | ,, |
| 5 ஊதுவேளைவேர் | ,, | 11 பேய்முட்டிவேர் | ,, |
| 6 கண்டங்கத்திரிவேர் | ,, | | |

* இதின் குணமாவன:—
வெட்டையே மிகவே மிஞ்சி
மிகுத்திடும் வாதந் தானும்
திட்டமாய்ச் சுரமுங் கீர்ணும்
சிலேட்டும மிஞ்சிக் காணும்



இப்பதினொர் வேர்வகையையும் கொத்தி, பானையிலடைத்து, இதில்

| | | | |
|---|---|---|---|
| 1 நோச்சியிலை | 1 பிடி | 3 பிரமியிலை | 1 பிடி |
| 2 ஆடாதோடையிலை | ,, | 4 கிலாவாரை | ,, |

இவைகளைக் கூடப்போட்டு முக்குறுணி தண்ணீர்விட்டு, குறுணி கியாழமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு, இதின்மேல்

| | | | |
|---|---|---|---|
| 1 திப்பிலி விராக | 3 | 4 கடுக்காய் விராகனிடை | 10 |
| 2 தேசாபுரம் | ,, | 5 நெல்லிமுள்ளி பலம் | 1 |
| 3 சுக்கு | ,, | | |

இவ்வைவகையும் இடித்து வஸ்திரகாயஞ் செய்து, தூவி. காலைமுழக்கு மாலை முழக்காக 4-நாள் உட்கொள்ளின் சகல சுரமுந் தீரும்.

பத்தியம்:—கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

## 110 * முறைக் காய்ச்சலுக்குக் கியாழம்

| | | | |
|---|---|---|---|
| 1 திப்பிலி விராகனி | 5 | 6 கடுக்காய் | பலம் 1 |
| 2 சுக்கு | 3 | 7 பேய்ப்புடலம் | ,, |
| 3 சேவ்வியம் | 3 | 8 நெல்லி | ,, |
| 4 வாய்விளங்கம் | 5 | 9 முள்ளி | ,, |
| 5 கோத்தமல்லி | ,, | | |

இவ்வொன்பது வகையுமிடித்துப் பொடித்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 1-கடிப்பிரமாணம் எடுத்து தண்ணீரில் போட்டுக் காய்ச்சி, கால் படி கியாழமானதின் பிறகு வடிகட்டி குடிக்கவும். இந்தப்படி 3-நாள் 6-பொழுது குடிக்கவும்.

சிட்டமா யிரண்டு காணுஞ்
சீதளங் குளிர்ந்து காணும்
நட்டணும் வாதந் தானும்
சூழ்ச்சியா யறிந்து கொள்ளே.

* இதின் குணம்:-பித்தம் அதிகப்பட்டாற்றுஞ் நடுக்கல்சுரம் வருவது.

## 111 (இன்றேல்) வேறு முறை

தவிசினீர்த்துறை மணலிலே 2-பிடி மண்ணெடுத்து நன்றாய் வறுத்து நொச்சியிலையைக் கொண்டுவந்து நுனைத்து சாற்றைப் பிழிந்து விடக் கொதிக்கும். அதை யிறுத்து திப்பிலி 1பலத்தைப் பொடி செய்து பேலே நாவி 3-நாளைக்கு 3-பொழுது கொடுக்க நடுக்குச்சுரம் நீங்கும்.

பத்தியம்:—கூர்ப்பு புளிப்பு தவிர்க்கவும்.

## 112 * வைத்தியத்திற்குப் பஸ்பம்

| | | | |
|---|---|---|---|
| 1 மிளகு விராகனிடை | 10 | 4 அரைபொடி விராகனிடை | 10 |
| 2 காந்தம் | 10 | 5 பலகரை | ,, |
| 3 கிட்டம் | 10 | | |

இவ்வைந்து வகையும் இடித்துப் பஸ்பமாகப் பண்ணிக்கொண்டு, அதை

| | |
|---|---|
| 1 முசுமுசுக்கைச்சாறு. | 4 நெல்லிக்காய்ச்சாறு. |
| 2 தாழம் விழுதுசாறு. | 5 6-மாதத்துக்காடி. |
| 3 எலுமிச்சம் பழச்சாறு. | |

இவை ஐந்தும் வகைக்கு ¼படியாகக் கொண்டு, ஒருபிடித்த செப்புபாத்திரம் 5 கொண்டுவந்து அவற்றில் சமமாகப் போட்டு காலையில் கொடுக்கவும்.

கரைமண்ணைக் குழம்பாய்க் கரைத்து, உச்சிமுதல் உள்ளங்கால் வரை, காயக் காயப்பூசி, மறுநாள்பொழுதுவிடிய 3-நாழிகையிருக்கும்போதே (பயித்தியக்காரர்தம்) தலையை மொட்டையடித்து குளத்தண்டை கொண்டு சென்று 70-எலுமிச்சம் பழச் சாற்றை யுச்சியில் விட்டுவிட்டுத் தேய்த்துத் தண்ணீர் விடவும் இந்தப்படி 13-நாள் செய்யவும் குணமாம்.

பத்தியம்:—கைப்பு புளிப்பு தவிரவும்.

---

* உற்றதோர் சரீரந் தன்னில்
உகந்ததோர் பித்தம் பாய்ந்து
சுத்தமா யுடம்பி லிரத்தம்
சுகமுட னுருந்தி தானும்
மெத்தவே யுடம்பில் பாய்ந்து
மேல்விசை யுசாவி யேறில்



## 113 * அண்ட வாதத்திற்கு வச்சிர சிந்தாமணி

| | |
|---|---|
| 1 நொச்சிக்கொழுந்து | 8 நிலவாகை |
| 2 களக்கோட்டி கொழுந்து | 9 காட்டாமணக்கு யிலை |
| 3 புங்கங்கொழுந்து | 10 சங்கமிலை |
| 4 குன்றங்கொழுந்து | 11 குப்பியிலை |
| 5 குப்பமேனி | 12 எருக்கங் கொழுந்து |
| 6 தைவேளை | 13 மலராதஎருக்கம்பூ 21 |
| 7 பிரமி | |

இவை வகைக்குப் பிடி பிடி கொண்டுவந்து இத்துடன்

| | | | |
|---|---|---|---|
| 1 திப்பிலி விராகனி | 5 | 7 பொட்டிலுப்பு விராகனி | 3 |
| 2 அசமதாகம் | ,, | 8 வளகிலுப்பு | ,, |
| 3 கருஞ்சீரகம் | ,, | 9 வசம்பு | 5 |
| 4 பெருங்காயம் | 3 | 10 சித்திரைமூலம் | ,, |
| 5 இந்துப்பு | ,, | 11 வெள்ளைப்பூண்டு பலம் | 5 |
| 6 கல்லுப்பு | ,, | | |

இவை பதினேரு வகையுஞ் சேர்த்து, வேலிப்பருத்தியின் சாற்றை விட்டரைத்து, பாக்களவு வுருண்டை செய்து, நிழலுலர்த்தா யுலர்த்தி, வேளைக்கு 1-உருண்டையாக 2-வேளையும் புசிக்க.

இப்படி 13-நாள் இளம்வெந்நீரிலாகிலும், இஞ்சிச்சாற்றிலாகிலும் கொள்ள குணமாம்.

## 114 பவுத்திரத்திற்கு

| | | | |
|---|---|---|---|
| 1 வெள்ளறுகு பலம் | 5 | 4 சங்கங்குப்பி பலம் | 5 |
| 2 சிவனார் வேம்பு | ,, | 5 சித்திரமூலம் | 3 |
| 3 சங்கம்பட்டை | ,, | | |

---

பித்தனைப் போவா னென்று
பேசினர் பெரியோர் தானே.

* மேகத்தின் வாய்வுமஞ்சி
யிருந்ததோர் உடலில் பாய்ந்து
கால்கை தன்னுடன் கடுப்பும்
கண்டுதான் என்பதால் இந்நோயக் குணங் காண்க.

இவ்வைந்து வகையுங் காயப்போட்டு இடித்துத் தூள் பண்ணி, இத்துடன்,

| | | | |
|---|---|---|---|
| 1 மிளகு விராகனிடை | 5 | 8 சாதிக்காய் விராகனிடை | 2 |
| 2 பரங்கிப்பட்டை | 30 | 9 கடுகுரோகணி | 3 |
| 3 திப்பிலி | 5 | 10 சாதிபத்திரி | 1 |
| 4 திப்பிலிமூலம் | ,, | 11 கிராம்பு | 2 |
| 5 தேசாபுரம் | ,, | 12 குரோசணி யோமம் | 5 |
| 6 ஓமம் | ,, | 13 கடுக்காய் | பலம் 1 |
| 7 சுக்கு | ,, | 14 தாணிக்காய் | 1 |

இப்பதினாலு வகையும் இடித்துத் தூள் பண்ணி வைத்துக் கொண்டு, வேளைக்கு விராகனிடைப் பிரமாணமாக 2-வேளை சாப்பிடவும்,

இப்படி 13-நாள் கொள்ள பவுத்திரக்கட்டு *விற்கும்.

## 115 இதுவுமதே வேறு முறை

† பால்சூரிஞ்சாயிலையைப் பறித்துவந்து சட்டியைக் காய வைத்து, அதில் விளக்கெண்ணை தடவி வதக்கி, அடுகவைத்து 6-நாள் கட்ட பவுத்தரக் கட்டைக் கரைத்துப் போடும்.

முற்கூறிய சூரணத்தைப் புசித்துக்கொண்டே யிக்கட்டும் கட்டிவர நன்மையாம்.

## 116 பவுத்திரப் புரை விழுந்த புண்ணுக் கெண்ணை

1 ஆடுதின்னாப்பாளையின் சாறு
2 காட்டாமணக் கிலைச்சாறு
3 சின்னி யிலைச்சாறு
4 அவுரியிலைச்சாறு
5 புங்கமிலைச்சாறு அல்லது பால்.
6 சங்கமிலைச் சாறு
7 ஆலம்பால்
8 கருவேலம் பட்டைச்சாறு

---

† இதைப் பசலையென்றுங் கூறுவர்.
* வயிற்றுக்கடுப்புக்கு.



இவ்வெண்வகைச் சாற்றையும் சமன் கொண்டு ½ படி விளக் கெண்ணையுடன் கலந்து இதில்

| | | | |
|---|---|---|---|
| 1 சாதிலிங்கம் விரா | 3 | 8 துரிசு விராகனிடை | 3 |
| 2 அரிதாரம் | ,, | 9 கார்போகவரிசி | ,, |
| 3 சிறுதாபசிங்கு | ,, | 10 கருஞ்சீரகம் | ,, |
| 4 கந்தகம் | ,, | 11 வசம்பு | ,, |
| 5 சீனகாரம் | ,, | 12 வெம்பாளும் பட்டை | ,, |
| 6 சங்கமிலைச் சாறு | ,, | 13 கோரக்காப்புளி | ,, |
| 7 வெள்ளை குங்கிலியம் | ,, | 14 சித்திரமூலம் | ,, |

இப்பதினாலு வகையையும் பொடி செய்து போட்டு, எண்ணையைக் கொதிக்க வைத்து, பதமாய் எடுத்து வைத்துக்கொண்டு புண்ணுக்குப் பூச பொடசலை சவிப்பூருதி சூலையில் வெடித்தது மற்ற எவையேனும் உடனே ஆறும்.

## 117 * வயிற்றுக் கடுப்புக்கு

பேய்ப்பாச்சோத்தியிலையைக் கொண்டுவந்து கொஞ்சமாய்த் தோய்த்து, பானையின் வாயிலே சீலைநனைத்துக் கட்டி, புட்டாக வைத்து வெந்தபிறகு, சாற்றைப்பிழிந்து அதில், ½-விராகனிடை சாதிக்காயும், ½-விராகனிடை கிராம்பும், அரைத்துக் குழப்பி, 3-நாள் 6-பொழுது கொடுக்கச் சுகமாம்.

பத்தியம்:—கைப்பும் புளிப்புந் தவிரவும்.

---

*சுரமே மிகுத்தே யெடுத்ததென்றால்
சுரம் போய் வயிறுகடுப்பெடுக்கும்
திறம்போய் சீயு மிரத்தமு மாய்
திணம்போல் வலமுந்தான் விழும்
திறமாய் மூலமீதிற் பிறக்கும்
சீவன் குறைக்கு மீடும் பிளைக்குஞ்
சரம்போல் வயிற்றி லனலிதெனத்
தானறிந்து கொள்வீரே.

### 118 இதுவுமதே வேறு முறை

| | |
|---|---|
| 1 * மாதளம்பிஞ்சு. | 5 சாதிக்காய் |
| 2 சீரகம். | 6 தேத்தான்கோட்டை. |
| 3 ஆவாரம் வேர்ப்பட்டை | 7 தேத்தான்விதை. |
| 4 ஆவாரம் அரிசி. | 8 லவுங்கப்பட்டை. |

இவை யெட்டுவகைக்குந் தனித்தனியே பெரிய கொட்டைப்பாக்களவு சமன்கொண்டு,பின்னரிமைய அரைத்து, தென்னம்பாளைப்பூத்து வைத்த ½-படி சாற்றிற் கரைத்துக் கொடுக்கவும். இப்படி 3-நாள் 6-பொழுது கொடுக்க நலம்.

### 119 சகல மூலக் கடுப்புக்கும் கிராணிக்கும்

| | | | |
|---|---|---|---|
| 1 மிளகு விராகனி | 2 | 7 அபின் பணவிடை | 3 |
| 2 அசமதாகம் | ,, | 8 கஞ்சா விராகனிடை | 3 |
| 3 திப்பிலி | ,, | 9 இந்துப்பு | ,, |
| 4 சாதிக்காய் | 1 | 10 பெருங்காயம் | ,, |
| 5 சாதிபத்திரி | 1 | 11 கல்லுப்பு | ,, |
| 6 கிராம்பு | 1 | | |

இப்பதினோரு வகையையும் மாதளம்பழங்கொணர்ந்து கண் திறந்து விதைகளையெலா மெடுத்து, அதனுள் ஷை வகைத் தினுசுக வியாவையும் வைத்து, வாய்மூடி சீலை சுற்றி சாணம்பி நெருப்பிற் புடம் போட்டு, வெந்த பிறகெடுத்து கையாந்தகரைச் சாறுவிட்டரைத்து தூதுளங்காய் பிரமாணம் உருண்டைபண்ணி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு உருண்டை யெருமைத் தயிரிற் குழப்பிக்கொள்ள தீர்க்கும்.

பத்தியம்—கார்ப்புப் புளிப்புத் தவிரவும்.

### 119 சூதக வாய்வுக்கு கண்டங்கத்திரி லேகியம்.

| | | | |
|---|---|---|---|
| 1 கண்டங்கத்தரிச் சாறு | படி 1 | 5 ஓமம் விராகனிடை | 5 |
| | | 6 சுக்கு | ,, |
| 2 மிளகு விராக | 5 | 7 பெருங்காயம் | 3 |
| 3 திப்பிலி | ,, | 8 கடுகுரோகணி | ,, |
| 4 தேசாபுரம் | ,, | 9 உள்ளி | பலம் 2 |

* மாதளம்பழ வோடானலுஞ் சரி.



இவை யொன்பதையும் நல்லெண்ணெய்விட்டு லேகியமாகக் கிளறி வைத்துக்கொண்டு அந்திசந்தி 1-கரண்டியாக 6-நாள் புசிப்பத் தீரும்.

பத்தியம்:—கைப்புப் புளிப்புத் தவிரவும்.

### 120 * பித்த காசத்திற்கு எண்ணெ

| | | | |
|---|---|---|---|
| 1 நல்லெண்ணெ | படி 1 | 4 ஆதோண்டைச்சாறு | படி ¼ |
| 2 கையாந்தகரைச்சாறு | ¼ | 5 எலுமிச்சம் பழச்சாறு | ,, |
| 3 முசுமுசுக்கைச்சாறு | ,, | 6 நெல்லிச்சாறு | ,, |

இவைகளை யொன்று கலக்கி யிதில்,

| | | | |
|---|---|---|---|
| 1 மிளகு விராகனி | 5 | 6 கோத்தமல்லி விராகனி | 5 |
| 2 நற்சீரகம் | ,, | 7 செண்பகப்பூ | ,, |
| 3 அதிமதுரம் | ,, | 8 இலவுங்கப்பட்டை | ,, |
| 4 கோஷ்டம் | ,, | 9 விலாமிச்சம்வேர் | ,, |
| 5 வாய்விளங்கம் | ,, | | |

இவ்வொன்பது வகையுமிடித்துப் போட்டு எண்ணெயைப் பதமாக வடித்து வைத்துக்கொண்டு மூன்று நாளைக் கொருதரமுழுகி, அப்புறம் 8-நாளைக்கொருகால் தப்பாமல் முழுக பித்த காசமும் நேத்திர வாயுவும் தீர்க்கும்.

பத்தியம்:—முழுகினவன்று கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

### 121 நேரை தோஷத்தால் இளைத்த பிள்ளைகளுக்கு

| | |
|---|---|
| 1 வில்வவேர் | 4 அதிமதுரம் |
| 2 சிறுபுள்ளடிவேர் (இலையோடு) | 5 கோஷ்டம் |
| | 6 சீரகம் |
| 3 சிறுகீரை, வேர் | 7 மிளகு |

இதன் குணங்களாவன:—

*சரீரமெங்கும் பித்தமிஞ்சி தலையிலேறி தானிருந்து
தூரிதமாக நீரிரங்கி துலங்கு கண்ணையே மறைக்கும்
கண்ணில்நீரும் கலந்து கலையும்
வலியெடுக்கும் கரு கருத்த
காசமென்றறிந்து கொள்வீரே.

இவையெல்லாம் எரித்து உள்ளுக்குப் புகட்டிவிடவும். மேனுக்கும் உச்சியிலுந் தடவவும்.

## 122 இதுவுமதே வேறு முறை

தேரையைப் பிடித்து உள்ளிவசம்பு கூட்டி நெய்யில் வெரித்து உள்ளுக்கு ஒரு துட்டத்தனை கட்டவும். மேனுக்குந் தடவவும். 20-நாளில் பிள்ளைக்கு உடம்பு பூரிக்கும்.

## 123 * கிராணிக்கு

பேய்முட்டியிலையைக் கொண்டுவந்து எருமை பசு ஆடு இவற்றின் மோர் கொணர்ந்து, குறுணி புளிப்பாக புளிக்க வைத்து இலையை மோரில் போட்டு இதில்

| | |
|---|---|
| 1 சுக்கு | 6 சாதிக்காய் |
| 2 திப்பிலி | 7 ஓமம் |
| 3 மிளகு | 8 திப்பிலி |
| 4 சீரகம் | 9 வெள்ளுள்ளி |
| 5 கருஞ்சீரகம் | 10 பெருங்காயம் |

இவை வகைக்கு 1-பலம்.

இப்பத்து வகையுள்ளும் பெருங்காயத்தை மாத்திரம் வேறே வைத்து மற்ற மருந்தையெல்லாம் ஒரு மெல்லிய குட்டையில் நன்றாய் மூடிந்து, மேற்படி மோரிற் கூட்டி வேக வைத்து, கொஞ்சந் தண்ணீரிருக்கும்போதே யெடுத்துப்பிழிந்து பொட்டளத்தை யரைத்து சற்று காயவைத்து 2-படி நெய்யைக் காயவைத்து உருகிய பிறகு பெருங்காயத்தையுங் கலந்துமெழுகு பதமாக யிறக்கி தினகாலை பாக்களவு தின்று வரத் தீரும்.

## 124 குதகத்திற்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கருஞ்சீரகம் | பலம் | ½ | 5 ஓமம் | பலம் | ½ |
| 2 காசுகட்டி | ,, | | 6 மிளகு | | ¼ |
| 3 சுக்கு | ,, | | 7 அதிவிடயம் | | ¼ |
| 4 கோடுவேலி | ,, | | 8 திப்பிலி | | ,, |

இவை யெட்டையும் ஊனுங்கொடி யிலைச்சாறுவிட்டரைத்து சதாகாலமும் எருமைத் தயிரில் பாக்களவு புசிக்கவும் சுகம்.

* பிள்ளைபெற்ற பச்சுடம்பின், மேற்கழிச்சற்கான முறையிது.



## 125 மேகத்துக்கு சஞ்சீவி லேக்கியம்.

| | | | |
|---|---|---|---|
| 1 அமுக்கிருங்கிழங்கு | பல 2½ | 20 கடுக்காய் | பலம் 1 |
| 2 அரத்தை | ½ | 21 தாணிக்காய் | ,, |
| 3 சேவியம் | ,, | 22 வெள்ளருகு | ,, |
| 4 கண்டு பறங்கி | ,, | 23 தாளிச்சபத்திரி | ¼ |
| 5 பூமிச்சக்கரைக் கிழங்கு | ,, | 24 நிலப்பனை | ,, |
| 6 சுக்கு | ,, | 25 தண்ணீர்விட்டான்கிழங் | ,, |
| 7 கோடுவேலி | ,, | 26 நெல்லிபருப்பு | ,, |
| 8 தாதுவேளை | ,, | 27 தேன் | 2 |
| 9 வாய்விளங்கம் | ,, | 28 ஆகாசகெருடன்கிழங்கு | 2 |
| 10 தாமரைக்கிழங்கு | ,, | 29 திப்பிலி மூலம் | ¼ |
| 11 சிறுநாகப்பூ | ,, | 30 திப்பிலி | ,, |
| 12 இலவங்கப்பத்திரி | ,, | 31 இலவுங்கப்பட்டை | ,, |
| 13 ஏலம் | ,, | 32 மிளகு | ,, |
| 14 நிலாவரை | ,, | 33 கடுகுரோகணி | ,, |
| 15 கொத்தமல்லி | ,, | 34 வால்மிளகு | ,, |
| 16 சீரகம் | ,, | 35 நன்னாரி வேர் | ,, |
| 17 சோம்பு | ,, | 36 சர்க்கரை | 10 |
| 18 வெட்டிவேர் | ,, | 37 நெய் | 8 |
| 19 எலுமிச்சம்வேர் | ,, | 38 குழைநீர் | ⅛ |

இவை முப்பத்தெட்டும் ஒன்றாய்க் காய்ச்சி லேக்கிய பதத்திலெடுத்து வைத்துக்கொண்டு, தினம் காலை மாலை கோலியளவு சாப்பிட்டுவரின் சுகம்.

[சரக்கு வகையுள் நெய் சர்க்கரை தேன் தவிர மற்றவெல்லாம் பொடித்துச் சூரணமாக்கி யவற்றுடன் கலக்கி லேக்கியமாக்குக.]

## 126 நீர்க்கட்டு வலக்கட்டுக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நெய் | படி | ¼ | 4 பொடுதலைச்சாறு | படி | ,, |
| 2 ஆமணக்கெண்ணெ | ,, | | 5 நீர்க்காட்டான்வேர் | பலம் | 4 |
| 3 தேங்காய்ப்பால் | ,, | | 6 கடுரோகணி | பலம் | 2 |

இவை யாறுங் காய்ச்சி மெழுகு பதமாக வடித்து, காலை 1 சரண்டி கொடுக்க வல சலக்கட்டு விடும்.

## 127 மாந்தமாதி சகல சுரத்திற்கும்

| | | | |
|---|---|---|---|
| 1 கடுகுரோகணி விராக | 10 | 4 நேர்வாளம் விராகனி | 16 |
| 2 இரசம் | 4 | 5 நாவி | 2 |
| 3 கெந்தகம் | 5 | 6 வெண்காயம் | 2 |

இவை யாவும் துளசிச் சாற்றில் 2-நாள் அரைத்து உளுந்தளவுப் பிரமாணம் உருண்டை பண்ணி ஓமச்சாற்றிலாவது வெந்நீரிலாவது ஒரு மாத்திரை வைத்துக்கொடுக்க சன்னி கூட நீரும்.

## 128 வடவாக்கினி சூரணம்

| | |
|---|---|
| 1 பிரண்டை | 11 ஓமம் |
| 2 திப்பிலி | 12 கருந்திப்பிலி மூலம் |
| 3 மிளகு | 13 வெள்ளைப்பூண்டு |
| 4 சுக்கு | 14 இலவுங்கம் |
| 5 காயம் | 15 எருக்கம்பூ |
| 6 சவுக்காரம் | 16 வெந்தியம் |
| 7 திரிபலை | 17 உப்பு |
| 8 வேப்பிலை | 18 சாதிக்காய் |
| 9 ஏலம் | 19 இந்துப்பு |
| 10 சீரகம் | |

இவை பத்தொன்பதும் சமனிடையாகக் கொண்டு வேறு வேறு வறுத்துப் பொடியாக்கி 1-கடிப்பிரமாணம் தேனிற் குழைத்து காலையிற் கொள்ள வாதம் பித்தம் அரோசிகம், சரோகை, குன்மம், சூலை, அக்கினி, மாந்தம் முதலியன நீருமாம்.

## 129 * சிவதை சூரணம்

| | |
|---|---|
| 1 ஏலம் | 5 வாய்விளங்கம் |
| 2 இலவுங்கம் | 6 சிவதை |
| 3 திரிபலை | 7 சர்க்கரை |
| 4 கோஷ்டம் | |

---

* ஏலம் லவுங்கம் திரிபாலை
இசைந்த கோஷ்டம் வாய்விளங்கம்
சாலசிவதை யோர்பங்கு
சரியாய்ச் சர்க்கரை யுடன்கூட்டி
காலம்பெற வெந்நீரிற் கரைத்து
கருதிக்கொடுக்க வயிறுவிடும்.



இவை யாவுஞ் சமனிடை கூட்டி காலை காலை வெந்நீரிற் கலந்துக்கொடுக்க மலக்கட்டு மூலவாய்வு பித்தவெட்டை யிவை மூன்றும் போம்.

## 130 ‡ பித்தத்துக்கு

| | |
|---|---|
| 1 நெல்லிமுள்ளி | 4 சுக்கு |
| 2 குவளையம் | 5 சித்தாமுட்டி |
| 3 சீரகம் | 6 பொரி |

இவை யாவும் கியாழமிட்டுண்ண லகுவாம்.

## 131 * ஈளையிருமலுக்கு

| | |
|---|---|
| 1 நெல்லி | 3 நெற்பொரி |
| 2 திப்பிலி | 4 சர்க்கரை |

இவை நாலையும் நல்ல தேனிலாவது பசு நெய்யிலாவது குழைத்துண்ணச் சுகம்.

## 132 அசுவந்தாக்கிச் சூரணம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கிராம்பு | பலம் | 1 | 6 சீரகம் | பலம் | 6 |
| 2 நாகம் | ,, | 2 | 7 கோத்தமல்லி | ,, | 7 |
| 3 ஏலம் | ,, | 3 | 8 மிளகு | ,, | 8 |
| 4 இலவுங்கப்பட்டை | ,, | 4 | 9 திப்பிலி | ,, | 16 |
| 5 இலவுங்கப்பத்திரி | ,, | 5 | 10 அமுக்கிராங்கிழங்கு | ,, | 32 |

இவை பத்தும் உரலிலிட்டுப் பொடித்து வத்திரகாயஞ் செய்துக்கொண்டு, பின்பு 2-வீசை சர்க்கரையைக் கொட்டிக் கலந்து தினம் இரு வேளையும் 1-கடிப் பிரமாணஞ் சாப்பிட்டு வர சுவாசகாசம், பாண்டு, பயித்தியம், தோஷம், வாய்வு, இடி, யிருமல், ஈளையிருமல், சுரம் கிராணி முதலியன நீங்கும்.

---

‡ இதற்கு போலி வெண்பா.
பரிசைந்த நெல்லிமுள்ளி பரியதோர் குவளையும்
சீரிசைந்த சீரகமும் சேர்ந்த சுக்கும் — வேரிசைந்த
சித்தாமுட்டியும் பொரியும் சிறக்கக் கியாழமிடில்
பித்தம் விட்டுப் போம்.

*இதற்கு விருத்தம்.—
நெல்லி திப்பிலி நெற்பொரி சர்க்கரை
நல்ல தேனில் நறுநெய்யிற் குழைத்துண்ணில்
இல்லையில்லை யிருமலு மீளையே.

### 133 சந்தனாதித் தைலம்

| | |
|---|---|
| 1 சீந்திற்சாறு படி 1 | 6 செவ்விய யிளநீர் படி 1 |
| 2 நெல்லிக்காய் சாறு ,, ,, | 7 முசுமுசுக்கைச்சாறு ,, |
| 3 சிறுகீரைச்சாறு ,, ,, | 8 கீழாநெல்லிச் சாறு ,, ,, |
| 4 நெய்ச்சட்டிச் சாறு ,, ,, | 9 கரிசலாங்கண்ணி ,, ,, |
| 5 பொன்னாங்கண்ணி ,, ,, | 10 நீலகரிசாலை ,, ,, |

இவை யாவும் ஒன்றுகூட்டி யிதில்

| | |
|---|---|
| 1 கரண்டிகாம்புவேர் | 6 சந்தனம் |
| 2 வெட்டிவேர் | 7 கோணக்கிழங்கு |
| 3 குறுவேர் | 8 செண்பகப்பூ |
| 4 இலாமிச்சம்வேர் | 9 கிச்சிலிக்கிழங்கு |
| 5 சேஞ்சந்தனம் | |

இவை யொன்பதும் வகைக்கு 5-பலமாகக் கொண்டு தூய வைத்து சூரணஞ்செய்து மேற்படி சாற்றிற் கலந்து பின்னும் அரை படி பால் விட்டு கூடவே குங்குமப்பூ பலம் 4 பச்சை கற்பூரம் விராகனிடை 1 புனுகு சட்டம் 1 இவை கலைத்துத் தைல மிறக்கி உச்சி முதலிய விடங்கட்குத் தேய்த்து ஸ்நானஞ்செய்து வரின் கபாலச்சூடு முதலியன போம்.

### 134 கிரந்திக்கு பரங்கிப்பட்டை சூரணம்

1 பரங்கிப்பட்டை பலம் 5 2 நற்சந்தனம் பலம் 5

இவை யிரண்டையுந் தூளாக்கி 1-வீசை சர்க்கரையிற் போட்டு உலரவைத்து புதுச் சட்டியிற் போட்டு மூடி மேலே 1 - திருகுகள்ளி, 2 - சத்திரக்கள்ளி, 3 - சித்திரமூலம் இவையெல்லாங் கண்டங் கண்டமாய் நறுக்கிக்கூட்டி சீலைமண் செய்து புடமிட்டு மேல் சட்டி வெடித்தது மெடுத்து, இறக்கி வைத்துக் கொண்டு நாள் 1-க்கு ஒரு கடிப்பிரமாணம் இரண்டு காலமுங் கொள்ளவும்.

பத்தியம்.—கைப்பும் புளிப்புந் தவிர்க்கவும்.

### 135 இதுவுமதுவே வேறு முறை
### பரங்கிப்பட்டைச் சூரணம்

| | |
|---|---|
| 1 பரங்கிப்பட்டை பலம் 6 | 3 சாதிபத்திரி பலம் 1 |
| 2 கிராம்பு ,, 3 | 4 ஓமம் ,, ,, |



| | |
|---|---|
| 5 திப்பிலி பலம் ¼ | 9 கூழஞ்சு ,, ,, |
| 6 சுக்கு ,, ,, | 10 கோரோசனை ,, ,, |
| 7 (கோரோசணி) ஓம வி 1 | 11 மிளகு 1¼ ,, |
| 8 சாதிக்காய் பலம் 4 | 12 சிற்றரத்தை கழஞ் ,, ,, |

பரங்கிப்பட்டை தவிர மற்றைய யாவையுஞ் சிறுக வீழ்த்துத் தூளாக்கி யிதில் மேற்படி பரங்கிப்பட்டையையுஞ் சிறுகச் சீவி யிடித்துத் தூளாக்கிக் கலந்து, ஒரு கடிப் பிரமாணம் அந்தியும் சந்தியுமாக 40-நாள் சாப்பிடின், கிரந்தி பனிரண்டும் சூலை பனிரண்டும் பீனிசம் பனிரண்டும் தீரும்.

பத்தியம்.—காலையும் மாலையும் வெந்நீரிற் குளிக்கவேண்டும் 1 ஆட்டுக்கறி, 2 கோழிக்கறி, 3 பசுவின் பால், 4 பசு நெய் இவை யாகும். கருவாடு முதலியனவற்றிற்கு உப்பு புளிப்புக்கொள்ள வேண்டும்.

அவபத்தியம்.—1 பாகற்காய், 2 சுரைக்காய், 3 நாரத்தங்காய் 4 சுண்டைக்காய் இவை யாகாது.

### 136 இதுவுமதே வேறு முறை
### கருங்கோழி சூரணம்

| | |
|---|---|
| 1 பறங்கிப்பட்டை பலம் 6 | 13 அசமதாகம் பலம் 1 |
| 2 செங்கத்தாரிப்பட்டை ,, 8 | 14 சீருப்படை பிடி 1 |
| 3 சங்கம்பட்டை ,, 3 | 15 சங்கங்குப்பி ,, ,, |
| 4 மூலக்குனைபட்டை ,, ,, | 16 சாதிக்காய் விராகனி 2 |
| 5 புங்கம்பட்டை ,, ,, | 17 சாபத்திரி ,, ,, |
| 6 அழிஞ்சிப்பட்டை ,, ,, | 18 கிராம்பு ,, ,, |
| 7 வெள்ளெருக்கம்பட்டை ,, ,, | 19 சீரகம் ,, ,, |
| 8 சிவனார்வேம்பு ,, ,, | 20 கருஞ்சீரகம் ,, ,, |
| 9 சுக்கு ,, 1 | 21 அதிமதுரம் ,, ,, |
| 10 மிளகு ,, ,, | 22 கோஷ்டம் ,, ,, |
| 11 வெள்ளுள்ளி ,, ,, | 23 பெருங்காயம் ,, ,, |
| 12 திப்பிலி ,, ,, | |

இவையெல்லாம் இடித்துச் சூரணம் பண்ணிக்கொண்டு கருங்கோழியின் கால் குடல் தலை யிவைகளை நீக்கி கோழியின் வயிற்றில் இச் சூரணத்தைக் கொட்டி பின்னர் குறுக்கி வயிற்

லை நகக் கைக்குவிட்டு திரிகள்ளி, யிணைகள்ளி, கோடிகள்ளி யிவை களைக் கண்டம் கண்டமாய் ஒரு பானையில் விட்டுத் தண்ணீர் மட்டாக வார்த்து ஏடு கட்டி, அதின்மேலே கருங்கோழியை வைத்து அகல சட்டிகொண்டு மூடி சீலைமண் செய்து ஒருசாதி விரகாயி 4 சாமம் எரிவிட்டு எடுத்தால் கோழி நன்றாய் வெந் திருக்கும். இவையெல்லா மிடித்துச் சூரணம் பண்ணி ஒருகடிப் பிரமாணம் 7-நாள் கொள்ளவும்.

பத்தியம்—உப்பு புளிப்பு ஆகாது. மறு பத்தியத்திற்கு உப்பு வறுத்துப் போட்டுக்கொள்ளவும். அரிசியைப் பொரித்து முன்னிடித்த சூரணம் பண்ணி பிறகு கடைச் சரக்குக் கூடப் போட்டிடிக்கவும், முளைக்கீரை உப்பின்றி யெலும்பை யிடித்து யெரிந்துபோட்டு நன்றாய் பிசைந்து அகலில் வைத்து உலர்த்தி யிடித்துக்கொண்டு சூரணம் பண்ணியெடுத்து மூவிரற் பிரமாணம் அந்திசந்தி இரண்டு நேரமும் கொள்ளவும். சகல கிரந்திகளும் கற்பசூலை வாதங்களும் தீரும்.

பத்தியம்—கடும் பத்தியம் பிடிக்கவும்.

### 137 * சுழிகணத்துக்கு.

| | |
|---|---|
| 1 வடக்கேபோகிற கருவேலம் வேர்ப்பட்டை | 5 முடக்கத்தான்சாறு |
| | 6 முசுமுசுக்கைச்சாறு |
| 2 ,, வீடவேர்ப்பட்டை | 7 ஆவாரையிலைச்சாறு |
| 3 தூதுளம்வேர்ப்பட்டை | 8 தகையிலைச்சாறு |
| 4 வெண்ணொச்சிவேர்சாறு | |

இவைகளுள் சாறு வகை யொன்றுக்கு ஆழாக்காகக் கொண்டு இதில் ஈர வெண்காயம் ஒரு கையளவு யரித்துப் போட்டு பின்னர் வேர் வகை யொன்றுக்கு ¼ பலமாகப்போட்டு இத்துடன் வசம்பும் வெள்ளைப்பூண்டு விராகனிடை 2 போட்டு சிவக்க யெரிக்கவும் எரித்த எண்ணெயில் சிறு கடுகும் ஏலமும் அரைத்துப்போட்டு பத்திரமாய் வைத்துக்கொண்டு தினம் ஆழாக்கு வெந்நீரில் 2-காசிடை யெண்ணை வார்த்துக்கொடுக்கச் சுகம். மூன்று நாளைக்கொருவிசை யடுத்தடுத்துக் கொடுக்கவும்.

* இதின் குணம் மேலே யிழுக்கும் மேல்மூச்சு வாங்கும்.



### 138 இதுவுமதே வேறுமுறை.

குப்பைமேனி யிலையை நறுக்கிப் புகட்டின் * மாந்த சுரமும் போம்.

### 139 நெஞ்சுகட்டுக்கு.

அகத்திநாயகனிலையை நருக்கிச் சாறுபிழிந்துக்கொண்டு, கம்பிபிசின், கருஞ்சீரகமிவை பொடிசெய்துப்போட்டு புகட்டவும், சுகம்.

### 140 இதுவுமதே வேறுமுறை.

| | |
|---|---|
| மணத்தக்காளிச்சாறு படி ⅛ | சிற்றாமணக்கெண்ணெ படி ¼ |
| ஈரவெண்காயச்சாறு ,, ,, | சீரகம் 1-பாக்களவு |

இவை நாலையும் கூட்டி பொரித்துப் பதமா யிறக்கி வைத்துக்கொண்டு தினம் 1-கரண்டி சாப்பிட 3-நாளையிற் சுகம்.

### 141 அதிசாரக் குளிகை.

| | |
|---|---|
| 1 சாதிக்காய் | 6 திப்பிலி |
| 2 இந்துப்பு | 7 முத்தக்காசு |
| 3 சுக்கு | 8 பொன்னூமத்தைவிதை |
| 4 நவாச்சாரம் | 9 கிராம்பு |
| 5 சாதிலிங்கம் | |

இவையெல்லாஞ் சமனிடை கூட்டி, எலுமிச்சம் பழச்சாற்றில் ஒரு நாளெல்லாம் அரைத்து, மறுநாள் இஞ்சிச் சாற்றிலரைத்து, பின்னொருநாள் ஊமத்தஞ்சாற்றி லொரு சாமம்வரை அரைத்து, பின்னர் குன்றிமணியளவா யுருண்டை செய்து; நெல்லிப் பருப்புத் தமருடன் கலந்து ஒரு உருண்டை கொடுக்க அதிசாரசுரந் தீரும்.

இக்குளிகையை சர்க்கரையிற் றர சூலையினால் வந்த கிராணி தீரும்.

இதே குளிகையை இலுப்பைவேர்ப் பட்டை சுக்கு வெல்ல மிவைகளை 2-நாழி நீர்விட்டு உழக்காகக் காய்ச்சி யதிற் போட்டுத்தர மற்றுமுறைய கிராணி நீங்கும்.

* இதின் குணங்களாவன—வாய்வெந்து நாக்குப் பூத்திருக்கும் இருமலுண்டாம். விலா விழும். சுழிந்திழுக்கும். நெஞ்சில் செருட்டென்று இழுக்கும்.

## 142 அசுவாதி சூரணம்.

| | | | |
|---|---|---|---|
| 1 கிராம்பு | பலம் ¼ | 5 திப்பிலி | பலம் 4 |
| 2 சிறுநாகப்பூ | ,, ½ | 6 சுக்கு | ,, 8 |
| 3 ஏலம் | ,, 1 | 7 அசுவந்தாதி | ,, 16 |
| 4 மிளகு | ,, 2 | 8 சீனிச்சக்கரை | ,, 5 |

இவையெல்லாம் பொடிபண்ணி அந்திசந்தி 1-கரண்டிப் பிரமாணம் தின்றுவர க்ஷயம், குன்மம், அட்டபீலிகை, குத்துவாய்வு, திராப்பிரமேகம், பாண்டு சோகை யிவை தீரும்.

## 143 * அண்டவாதத்திற்கு

| | |
|---|---|
| 1 ஆமணக்கெண்ணெ 1-நாழி | 14 நற்சீரகம் |
| 2 வெள்ளுள்ளி பலம் 20 | 15 சிறுபுள்ளடி |
| 3 பெருங்காயம் | 16 கோள்ளு |
| 4 கடுகைநீறு | 17 சிறுதேக்கு |
| 5 புகையிலை | 18 சித்திரமூலம் |
| 6 உப்பு | 19 திப்பிலி |
| 7 இந்துப்பு | 20 † திரிகடுகம் |
| 8 கல்லுப்பு | 21 சங்கங்குப்பிவேர் |
| 9 கடுகுரோகணி | 22 வட்டகிலுகிலுப்பை வேர் |
| 10 சதகுப்பை | 23 சங்கம்வேர் |
| 11 தேவதாரம் | 24 களச்சிவேர் |
| 12 ஆயிலியம்பட்டை | 25 உய்யாவேர் |
| 13 கருஞ்சீரகம் | 26 முடக்கத்தான்வேர் |

இவைகளை வகைக்குப் பலம் 1-ஆகக் கொண்டு, வெள்ளாட்டுப் பால் வார்த்தரைத்து ஷெ யெண்ணெயிற் கலக்கி பதமாகக் காய்ச்சி, தினம் 4-காசிடையாக 40-நாள் சாப்பிடவும்.

பத்தியம்:—இச்சா பத்தியம்.

---

* அண்டவாதம் அறுவகைப்படும்.

அவையாவன.—ஏறு வாதம் இறங்கு வாதம், வலிவாதம், அந்திரமுட்டி வாதம், நரம்பு வாதம் ஆக வாதம் 6. இவற்றில்

1 ஏறு வாதத்தின் குணம்—விதை வீங்கும், குளிர் கண்டால் விடாது, நோவெடுக்கும், கண் புகைசூழ்ந்திருக்கும், கால் நரம் பிழுத்துக்கொள்ளும், மூச்சுப் போகவொட்டாது.



## 144 இதுவுமதற்கே வேறுமுறை

| | | | |
|---|---|---|---|
| 1 களச்சிக்காய் | பலம் 2 | 4 ஷெ பட்டை | பலம் 2 |
| 2 வெள்ளெருக்கின்கிளங் | ,, | 5 கருப்புகாட்டி | ,, 10 |
| 3 ஷெ கொழுந்து | ,, | ,, | |

இவையெல்லாம் அரைத்து உருண்டைபண்ணி நெல்லிக்காயளவு 3-நாள் அந்திசந்தி தின்றுவரவும்.

## 145 அத்திசுரத்திற்கு

| | |
|---|---|
| 1 நெய் 1-நாழி | 2 பசும்பால் 2-நாழி |

இவை யிரண்டையும் புதுப் பாண்டத்திலிட்டு, வெள்ளைக் குங்கிலியத்தைப் பொடிபண்ணிப் போட்டுவைக்கத் தயிராம். இதை மத்தாலே கடைந்து, வந்த வெண்ணெயில் தினகாலை சிறு நார்த்தங்காயளவு தின்ன, காயாசு வாதம், அத்தி சுரம், வரட்சி, உஷ்ணரோகம், மூலக்கடுப்பு இவை தீரும்.

---

2 இறங்கு வாதத்தின் குணம்.—திரண்டு விதை வீங்கும், கனத்துக்கொள்ளும், நிமிரவொட்டாது, வயிற்றே யொருபுறத் திழுத்துக்கொள்ளும், குளிர் காய்ச்சலாகும், அசனம் பண்ணப்போகாது, என்னேரமும் மேலேப்ப முண்டாம், காற்றுப் பரியும். மூலந் தீயும்.

3 வீங்கு வாதத்தின் குணம்—அண்டம் இளநீர்போல் வீங்கும், நடக்க வொட்டாது, காலிரண்டும் நரம்பிழுத்துக்கொள்ளும், அனல் கண்டால் எரிவெடுக்கும், கசப்புத்தின்றால் அமரும், மிளகு பொருந்தாது.

4 வலிவாத குணம்.—மயிர் பற்றாது, புண்ணுகி யிருக்கும், வயிற்றிரைச்சல் அதிகப்படும், மார் உளையும், விதையும் வீங்கும்,

5 அந்திரமுட்டி வாதகுணம்.—அடி வயிற்றிலே பிலா விரை போலே கிடக்கும், வாயால் கொதிப்புத் தள்ளும், வயிறு வலிக்கும், வாயுமேல் நோகவிக்கிகொள்ளும்.

6 நரம்புவாத குணம்—நாக்கு நோவுண்டாகும், தலைவலியெடுக்கும், விக்கலெடுக்கும், அண்டமீ வீங்கும், தினவுண்டாகும், அமுக்கினல் வலியாது, கருணைக்கிழங்குபோலே கடிக்கும்.

† மிளகு, சுக்கு, திப்பிலி.

## 146 அக்கினிகுமாரன்

| | |
|---|---|
| 1 காந்தம் | 9 நற்சீரகம் |
| 2 வெட்பாலையரிசி | 10 கடுரோகணி |
| 3 அதிவிடயம் | 11 கார்கோலரிசி |
| 4 பொன்னிமிளை | 12 சாதிக்காய் |
| 5 நீலம் | 13 கிராம்பு |
| 6 அரிதாரம் | 14 இந்துப்பு |
| 7 கர்க்காடகசிங்கி | 15 இரத்தம் |
| 8 சுக்கு | 16 சவுக்காரம் |

இவை பதினாறும் சமனிடையாகக் கூட்டி, செம்பொனெருஞ்சிச் சாறு 3-நாள் வார்த்தரைத்து கடலைப்பிரமான உருண்டை செய்து

1 சன்னிக்கு—இஞ்சிச் சாற்றி லிடவும்.
2 கழிச்சலுக்கு—பசுமோரி லிடவும்.
3 வயிரேரிவுக்கு—தாமரைக் கிழங்கின் சாற்றி லிடவும்.
4 வாயுவுக்கு—*தேங்காய்த் தண்ணீரி லிடவும்.

## 147 அமுக்குறா கர்பம்

அமுக்குறா சமூலங் கொண்டுவந்து நிழலுலர்த்திப் பொடி செய்து, சர்க்கரையும் நெய்யும் கூட்டித் தின்றால் பிபண் கட்டிவிடும்.

1 ஆட்டாங்கோட்டை மூலை, சுக்கு திரிப்லை, யிவைகளை வகைக்குக் களஞ்சியாக்கி கொண்டு 1-படி நீரிற் போட்டு கால்படியாக விரக்கி ஷை பொடியையுங் கூட்டி 48-நாள் கொள்ள, பித்த கபம் போம். வயிற்றிற் புழுக்கள் சாகும். தாகமுண்டாம்.

2 சிற்றாமணக்கெண்ணெயில் இப்பொடியையும், 2-மணியுப்பையுங் கூட்டியுண்ண, தேகம் பறக்கும்.

3 ஷை பொடியை தயிரிலுண்ண, பாண்டு தீரும்.

4 ஷை பொடியை பசும் வெண்ணெயிலுண்ண, வயிற்றுப்புழுச்சாகும்.

5 இப்பொடியை எள்ளும் மஞ்சளும் கூட்டியுண்ண, நரை திரை மாறும்.

---

* கோமயத்து மிடலாம்.



6 இதே பொடியை கடுசெண்ணெயி லுண்ணினும் நரைதிரை மாறும். பலமுண்டாம். புத்தியுண்டாம். இப்பொடியை மார்கழியிலுண்ண உற்பனமாகும்.

## 148 அசன வில்வாதித் தயிலம்

| | |
|---|---|
| 1 மிளகு | 15 இந்துப்பு |
| 2 திப்பிலி | 16 காவிகாட்டி |
| 3 வசம்பு | 17 மஞ்சட்டி |
| 4 உள்ளிப்பூடு | 18 கொத்தமல்லி |
| 5 வலம்புரிக்காய் | 19 வெந்தயம் |
| 6 அரத்தை | 20 முத்தக்காசு |
| 7 சதகுப்பை | 21 கடுரோகணி |
| 8 ஏலம் | 22 பற்பாடகம் |
| 9 இலவங்கம் | 23 தண்ணுரகலம் |
| 10 (அதி) மதுரம் | 24 தம்பிறப்பீ |
| 11 செண்பகப்பூக்கிழங்கு | 25 சீனக்கற்கண்டு |
| 12 சீதளத்தயில மதகாம் | 26 பெருங்காயம் |
| 13 வெள்ளிலோத்திரம் | 27 குடல்நுனை |
| 14 அதிவிடயம் | |

இவை வகைக்குப் பலம் 2 இடித்துப் பொடிபண்ணி, நெய்யிற் கலக்கிக் கொதுப்பித்து, மெழுகு பதத்தில் வடித்து, (யிந் நெய்யை) குடித்து வரவும், அல்லது பொடியைத் தேனிற்குழைத் துண்ணவுண்டை சூலை, மகோதரம், இருமல், வாய்நாற்றம், பித்தம், காதிரைச்சல், பீனிசம், கபால சன்னி முதலியன போம்.

## 149 அக்கினி குமாரன் செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| 1 இரும்பு பொடி | பலம் 2 | 8 காந்தம் | பல 1ம் |
| 2 உருக்குப்பொடி | ,, ,, | 9 சாதிலிங்கம் | ,, ,, |
| 3 பித்தளைப்பொடி | ,, ,, | 10 அரிதாரம் | ,, ,, |
| 4 செம்புப்பொடி | ,, ,, | 11 வெண்காரம் | ,, ,, |
| 5 வெள்ளிப்பொடி | ,, ,, | 12 கெந்தகம் | ,, ,, |
| 6 பொன்பொடி | ,, 1 | 13 பூநீறு | ,, 4 |
| 7 இரசம் | ,, ,, | | |

இவைகளைச் சேகரித்து கலவத்திலிட்டு ஒரு சாமமும், கைத்தாழஞ் சாற்றால் 1-சாமமும், ஆயில்யப்பட்டைச் சாற்றால் ஒரு

சரமமுமாக மூனு சாமம் அரைந்து ஒரு கலசத்திலிட்டு மேலே ஒரு ஓடு மூடி, கலசமுகத்தில் 7-சீலை மண் செய்து புடம் போட்டெடுக்கச் சிவந்திருக்கும். சிவந்திருக்காவிட்டால் மறுபடி ஒரு புடம் போடவும். பின்னர் நாவி பலம் 1 கடுகுரோகணி பலம் 1 திரிகடுகு கூடக்கூட்டி, சிவந்தால் முலைப்பால் விட்டுச் செந்தூர முங் கூடப்போட்டு, அரைத்துப் பணம்போலே உருண்டை பிடித்து உலர்த்தி நந்தச் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

இதிற் றீரும் வியாதி யாவையோவெனின்—

1 இச்செந்தூரத்தை மர்தனாம் பழந் தண்ணீரில் 6-வேளை கொடுக்க, மேகம் 20-ந் தீரும்.

2 இதை தேனில் 10-நாள் கொடுக்க க்ஷயம் இளைப்பு முதலியன தீரும்.

3 இதிற் குன்றியிடை திரிகடுகிற் போட்டு அரை மண்டலம் உண்ண, வாதம் 80-ந் தீரும்.

4 இதிற் குன்றியிடை யெடுத்து, பரங்கிப்பட்டை பிரப்பன் கிழங்கு கருஞ்சீரக மிவைகளாற் செய்த 1-கடி சூரணத்திற் போட்டுக்கொடுக்க, குஷ்டம் 18-ம், குட்டம் 18-ம், கிரந்தி, புண் முதலான யெல்லாந் தீரும்.

5 இதிற் குன்றியிடையெடுத்து நாதுவேளை பொடியிற்கூட்டி, தேனிலிழைத்து அரை மண்டலங் கொள்ள, சிலேட்டுமந் தொண்ணூற்றுமுந் தீரும்.

6 இதிற் குன்றியிடை யெடுத்து சுக்குக் கியாழத்திற் கொள்ள, வாய்வெல்லாந் தீரும்.

## 150 அசனமுண்ண

வெள்ளாடு அசைவெடுக்கிறபோது உதப்பியை வாங்கி, சிமிழில் வைத்து மூடி, யிதழில் வைத்துக்கொண்டு அசனமுண்ணா எவ்வளவு தின்றாலும் வயிறு நிறையாது.

## 151 இதுவுமதே வேறு

துளசி வேரும், மிளகும் வெற்றிலையில் வைத்துண்ண வேண்டிய புசிப்புண்ணலாம்.

## 152 அபின் தின்பதை மாற்ற

| | | | |
|---|---|---|---|
| 1 சாதிக்காய் | விராகனி 5 | ஊமத்தம் விராகனி | ,, 10 |
| 2 சாதிப்த்திரி | ,, ,, | வெட்டிவேர் | ,, 10 |



இவையெல்லாம் அரைத்து பாக்களவு குளிகை பண்ணி நிழலுலர்த்தி, மருந்து கொடுக்கிறபோது பசும்பாலில் கஞ்சி காய்ச்சி கொடுக்கவும் நன்று.

## 153 அரக்கெண்ணைத் தயிலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கோம்பரக்கு | பலம் | 5 | 15 திப்பிலிமூலம் | பலம் | $\frac{1}{4}$ |
| 2 சந்தணம் | ,, | 6 | 16 செருங்கிழங்கு | ,, | 21 |
| 3 தேவதாரம் | ,, | ,, | 17 பாக்கிழங்கு | ,, | ,, |
| 4 அகில்கட்டை | ,, | ,, | 18 நன்னாரிவேர் | ,, | ,, |
| 5 கிராம்பு | ,, | ,, | 19 அரேணுகம் | ,, | $\frac{1}{4}$ |
| 6 மஞ்சட்டி | ,, | ,, | 20 குங்குமப்பூ | ,, | ,, |
| 7 வெட்டிவேர் | ,, | $\frac{3}{8}$ | 21 சதகுப்பை | ,, | ,, |
| 8 சாதிபத்திரி | ,, | ,, | 22 செங்கழுநீர் கோஷ்டம் | | ,, |
| 9 அதிமதுரம் | ,, | ,, | 23 கருநாவிதளிர் | ,, | ,, |
| 10 இலாமிச்சம்வேர் | ,, | $\frac{1}{4}$ | 24 தேசாபத்திரி | ,, | ,, |
| 11 கடுகுரோகணி | ,, | ,, | 25 சாதிக்காய் | ,, | $\frac{1}{4}$ |
| 12 மரமஞ்சள் | ,, | ,, | 26 ஏலம் | ,, | ,, |
| 13 அமுக்குராங்கிழங் | ,, | ,, | 27 கோரோசனை | ,, | 1 |
| 14 மூலைமுறுக்கு | ,, | ,, | 28 புனுகுசட்டம் | ,, | ,, |

இம்மருந்தையெல்லாம் உரலில் நன்றாக யிடித்து பசும்பால் 2-படி, மோர் 2 படி விட்டுப் பிசைந்து, கடைச்சரக்கையும் பொடி பண்ணிப் போட்டு எண்ணை விட்டு வேகவைத்து, மெழுகு பதத்தில் இரக்கவும். மூன்று நாளைக்கொரு விசை முழுகி வரவும்.

இதனால் தீரும் வியாதிகளாவன—வாயு, பொருமல், இரைச்சல், கால் கடுப்பு, இடுப்பு பிடிப்பு, பீநிசம், வெட்டை யிவை சகலமுந் தீரும்.

பத்தியம்:—கைப்பு புளிப்பு விடவும்.

## 154 அண்டவாதத்துக்கு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 விளக்கெண்ணை | படி | $\frac{1}{4}$ | 6 வரிகத்தாழை வேர் | பிடி | 2 |
| 2 ஈர வெங்காயம் | பிடி | 2 | 7 சிரரணை வேர் | | ,, |
| 3 புங்கங்கொழுந்து | | ,, | 8 முடக்கத்தானிலை | | ,, |
| 4 களச்சிக்கொழுந்து | | ,, | 9 ஓமம் | | ,, |
| 5 வாதமடக்கி கொழுந்து | | ,, | | | |

இவையெல்லாஞ் சமனாய்ப்பிடித்து, எண்ணெயில் வேகவைத்து நல்ல பதத்தி லிறக்கி, நாளொன்றுக்கு உச்சி கரண்டி வீதம் 5-நாள் சாப்பிடப் பத்தியங் காக்கவும்.

## 155 அரையாப்புக்கு

1 பழம்புளி
2 கோழிமுட்டை
3 வெள்ளை கிளுவைப்பால்
4 எருக்கம்பால்

இவையெல்லாமரைத்து அரையாப்பைக் கசக்கிக்கொண்டு, பின்னர் வெந்நீர் விட்டு பற்று போடவும். புரை விழுந்தால் புங்கம்பால் போடவும்.

## 156 அத்திசுரம் சோகை பாண்டு சயலத்துக்கும்

1 பசுநெய் 1 நாழி • 2 ஆடாதோடைச் சாறு 2 நாழி

இதில்

1 திப்பிலி
2 அத்தி திப்பிலி
3 இந்துப்பு
4 சுக்கு
5 கோடிவேலி வேர்
6 சவுக்காரம்

இவை வகைக்கு பலம் ¼ நாலு சாமம் அரைத்து மேற்படி பசு நெய்யிற் கலக்கி, மெழுகு பதத்தில் வடித்துக் காலமே கொள்ளவும் சுகமாம்.

பத்தியங் காக்கவேண்டும்.

இதற்குக் குடிநீர்,

1 திப்பிலி
2 திரிபாலை
3 கடுகுரோகணி
4 வில்லை வேர்
5 வேப்பம்பட்டை
6 முந்திரிகை
7 விலாமிச்சம் வேர்
8 இந்துப்பு

இவை வகைக்கு பலம் ¼ கொண்டு 1-படி தண்ணீர் விட்டு, லொன்றாய்க் காய்ச்சி, சாயுங்காலம் கொடுத்து வரவும்.

காலையில் நெய்யும், மாலையில் குடிநீரும் கொடுக்கத்தீரும்.

## 157 அதிசாரத்துக்கு,

1 பால் நாழி 1
2 கும்பளங்காய்ச் சாறு ,,
3 விருளிக்கிழங்கு நாழி 1
4 நெய்



இத்துடன்

1 திரிகடுகு
2 திரிவேகிரி
3 நெல்லி பருப்பு
4 அசமதாகம்
5 கச்சோலம்
6 மாய (சி) க்காய்
7 இந்துப்பு
8 வெள்ளுள்ளி
9 நற்சீரகம்
10 கெருடப்பச்சை

இவைகளையும் சமனிடையாகக் கொண்டு, இளநீரிலரைத்து மெழுகு பதத்தில் வடித்து 1-காசளவு கொடுக்கத் தீரும்.

## 158 அரோசிப்புக்குக் காந்த பற்பம்.

1 திரிகடுகு
2 பெருங்காயம்
3 இந்துப்பு
4 நற்சீரகம்
5 கருஞ்சீரகம்
6 வெள்ளுள்ளி
7 ஊசி காந்தம்

இவை வகைக்குப் பலம் - 1 ஆக எடுத்து, தனித்தனியே வறுத்துப் பொடிசெய்து, கழிச்சலுக்கு, தூதுளங்காயளவு தேனில் கொள்ளவும்.

இரத்தம் விழுந்தால், 5-நெல்லிப்பருப்பெடுத்து, தண்ணீர்விட்டரைத்துப் பசுமோரில் அவித்துத் தண்ணீர்போக்கிக் காடி— பொடிபோட்டுக் கொடுக்கத் தீரும்.

## 159 அத்திசுரத்திற்கு லேக்கியம்.

1 கோஷ்டம் பலம் 8
2 சந்தணம் ,, 1
3 * மதுரம் பலம் 4
4 நற்சீரகம் ,, ,,

இவைகளை சூரணஞ்செய்து, இளநீர் படி 2-இல் கலக்கிக் காய்ச்சிப் பதத்தில் பொடிதூவி கிண்டிக் கிளறி, கொள்ளவும்.

## 160 அறையாப்புக்கு

* அகப்பைக்காம்பைத் தணலிலேபுதைத்து அறையாப்பின் மேல் 3-நாள் வைக்க மாறும்.

## 161 இதுவுமதே வேறுமுறை

நற்சந்தணத்தை முலைப்பாலில் உரைத்துப் பூச மாறும்.

---

* அதிமதுரம்.

## 162 இதுவுமதே மற்றொருமுறை

வெள்ளை வெண்காயமும், மாவலிங்கம் இலையும், அரைத்து, வலதுபுறமிருந்தால், இடது காற்பெருவிரல் நகக்கண்ணிலும், இடதுபுறமிருந்தால் வலக்காற் பெருவிரல் நகக்கண்ணிலுங் கட்டவும். இப்படி 3-நாள் அரைத்துத்தடவவும்.

## 163 இன்னொருமுறை

தவ்வளிவேரும், இலையையும் உள்ளியும் அரைத்து, அரை யாப்பில் வைத்துக்கட்ட மாறும்.

## 164 அதிசாரக் கழிச்சலுக்கு

அம்மளங்காய் மரத்தின்புட்டையும் நல்ல சீரகமுஞ் சமன் கூட்டி பசுந்தயிரி லரைத்து,பசுந்தயிரிலேயே கலக்கிக்கொடுக்கவும்.

## 165 அசன வில்வாதி யெண்ணை

ஆசுமுகத் தானே யசனவில் வாதியெண்ணை
வாகடத்தின் கூறு மருந்துகேள்-தாகமுடன்
அசன மகில்வில்வ மிமுக்கிராசித் தாமுட்டி
வசனமுநீறு வள்ளி வாகா யிசையவே
சீரக மிளகு தான்றி திரிபலை நன்றாரி
நீரவிரக் காச்சிவிதை நீறிடித்துப்-போர்பெரிய
பாளமுநீ ரேண்ணை சமனாக வேகலந்து
மேல்மருந்து தனினில் விளம்பக்கேள்-கோலமுறு
வெட்பா லரிசி விளாவரிசி சிற்றரத்தை
நட்பாஞ் சிறுதேக்கு ருமிச்சு-செப்பமுடன்
சிறுமூலங் கோஷ்டந் தேவதார முடனே
நறுவிய கசோலமுட னாகப்பூ-மறுவில்லா
வாசமுள்ள பச்சை மதிற்பூ மஞ்சட்டி
மோசமிலா திப்பிலி மூலமுடன்-நேசமுள்ள
செவ்வள்ளிக்குக் கிழிவை சேரொன்று கணஞ்சாரய
அவ்வகையாக வரைத்து நன்றாய் - இவ்வகையாய்
வொக்கவிட்டுக் காச்சி யூறிப்பதம் வடித்துப்
பக்குவமாய்த் தான் முழுகத் தீரும்நோய்-எக்காலும்



மண்டையுறு சீலை மகோதரத்தினீர்த்தோஷங்
கண்டத் திருமல் கரகரப்பும்-துண்டத்தில்
பீனிசமுங் காயம் பெருத்த தலைநோவு
மூலத்திற் கொண்டிருக்கு முட்காச்சல்-மானிடர்க்கு
வாதபித்த சிலேற்பம் வருநோயை மாற்றுவிக்குந்
தீதறவே நோய்களெல்லாந் தீருமே-வேதமெனச்
சொன்னார் மறைமுனிவர் சூழ்ந்த பிரசைகட்கு
முன்னூலாம் வேத முறை.

## 166 அழுகின் குட்டத்திற்கு

1 கோடிவேலி வேர் பலம் 10
2 சாரணை வேர் பலம் 10
3 கரரை வேர் „

இவை மூன்றும் பொடியாக்கி சதுரக்கள்ளி யிலைச் சாற்றி லும், எருக்கிலைச் சாற்றிலும் கூட்டி கோமூத்திரத்திற் (1 நாழி) கலந்து எரித்து வகுத்து உடம்பில் தடவவும்.

## 167 மாலைக்கண்ணுக்கு

திப்பிலியை பூசணியிலைச் சாற்றிலரைத்துப் போட, கண் தெரியும்.

## 168 பாம்பு கடிக்கு

சிறு கொம்மட்டி யுலர்த்திப் பொடி செய்து 1-கடி தூள் வெந்நீரில் கொடுக்கவும்.

## 169 நல்ல பாம்புக்கு

முக்காவு சாரணை வேர் பில்லை பில்லையாய் நறுக்கி நிழலி லுலர்த்தி, சுங்கான் களிம்பைப்பொடி செய்து, சருள்ளி கலந்து நாசியில் விட உயிர்வரும். வெந்நீரிலுந் தரலாம்.

## 170 வீரிய விருத்திக்கு

குமரிக்கிழங்கு கொட்டைப்பாக்களவு பசும் வெண்ணையுடன் கலந்து 2-வேளை மூன்று நாள் கொள்ளவும்.

## 171 அலகிலா வியாதிகள் எவைக்கும் புகை

நீர்முள்ளிவேரும், கிராம்பும் சுங்கானில் வைத்துப் புகை பிடிக்க தொண்டைநோய் தீரும்.

## 172 இரத்தமூலத்துக்கு

1 காட்டு கருணைக் கிழங்கு 4 கோடிவேலி வேர்
2 புளிக்கருணை 5 பிரண்டைக் கிழங்கு
3 மருளக்கிழங்கு

இவை வகைக்கு ¼ பலம்.

பஞ்சுபோல் நறுக்கி நெய்யிற்போட்டு காய்ச்சியுண்க.

## 173 இதுவுமதே வேறுமுறை

1 பசுநெய் படி ¼ 3 முருங்கைவேர்பட்டை
2 வெங்காயச் சாறு ,, சாறு படி ¼

இவை மூன்றுங் காய்ச்சி சீரகத்தூள் ½ பலம் போட்டு பக்குவத்திற்கு அந்திசந்தி புசிக்க.

## 174 தொண்டைக்குப் பூச்சு

சில்லுவட்டுப்பருப்பு, சங்குசுண்ணும்பு, பெருங்காயம் இவை மூன்றும் அரைத்துப்பூச நன்மை.

## 175 அழலைமாற்ற மருந்து

1 ஆவாரையரிசி 3 ஆவாரப்பட்டை
2 ஆவாரைக்கொழுந்து 4 நற்சீரகம்

இந்நாலையும் பசும்பாலி லவித்து, மூன்றுங்கொதியி லிறக்கி, மூடிவைத்துக் காலமே குடிக்கவும்.

பால் கொதிக்குமுன்னே, சாதிக்காய், ஏலம், கிராம்பு இவைகளைப் போடவும்.

## 176 அக்கினித் தம்பனம்

1 சிறுபயிறு 3 மிளகு
2 நெல்லிபருப்பு

இவை சரியிடைகொண்டு, கையாந்தகரைச்சாறு விட்டரைத்துப், பொருப்பித்து, சிரசில் தம்பளமிட்டு வெந்நீர் வைத்துக் குளிக்கவும்.

## 177 வயிற்றெரிப்புக்கு

முருங்கையிலைச்சாகமும், வெற்றிலைச்சாகமும் வகைக்கு 2-பிடி நல்லெண்ணெயில் மத்திச்சு 3-நாள் 6-பொழுதுங் கொடுக்க மாறும்.



## 178 அசமோதகக் கற்பம்

அசமோதகத்தை களிப்புள்ள கலசத்திலேயிட்டு, பழச்சாறு விட்டுப் பிசிறி நிழலிலுலர்த்தி, மறுபடியும் கையாந்தகரைச் சாறு விட்டு நன்றாயுலர்த்திப் பொடிபண்ணிச் சிறுகத் தின்று வரவும்.

பத்தியம்:—நெய், பால், மிகுதியாக வேண்டும்.

இதனால் சோணிக, காமாலை, பித்தம், பாண்டு, படர்தாமரை, சிரங்கு, குட்டம் இவைகள் தீரும்.

## 179 அழுகின குட்டத்திற்கு

கோடுவேலி வேர், சாரணை வேர், நல்லெண்ணெயிற் கலந்து கொடுத்து மேலுக்குந் தடவத் தீரும்.

## 180 அட்டகுணவாய்வுக்கும் பொடி

1 நற்சீரகம் 5 திப்பிலி
2 கருஞ்சீரகம் 6 அசமதாகம்
3 சுக்கு 7 இந்துப்பு
4 மிளகு 8 பெருங்காயம்

இவைகளை சமன் இடை கொண்டு பொடி செய்து, தினம் 1 கடி தூள் தின்றுவர நன்மை.

## 181 அமுத வெண்ணை

வெள்ளைக் குங்கிலியம் பலம் 3 தூள் செய்து, இருப்புக் கரண்டியில் விட்டு நல்லெண்ணெயிட்டுக் காய்ச்சி, ஒரு கிண்ணத்தில் தண்ணீர் விட்டு அதிலூற்றி கையாற் பிசைந்து, இப்படி 7 முறை செய்ய வெண்ணையாம். கொட்டைப்பாக்களவு தினமு முண்ணத் தீரும்.

இதனால் நீர்க்கடுப்பு, நீர்ச்சுருக்கு, மேகம் இவை தீரும்.

## 182 அலருகட்டுத் திறக்க

1 மிளகு 12 4 குருஞ்சா வேர்
2 உப்புகல் 5 5 வெள்ளுள்ளி
3 நாயுருவித்தோல் 6 எலுமிச்சம்பழத் தோல்

இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கண்ணில் தடவத் தீரும்.

## 183 கழிச்சற்கு உப்புக்குழம்பு

| | |
|---|---|
| 1 சுக்கு | 4 வெள்ளுள்ளி |
| 2 மிளகு | 5 நொச்சிக்கொழுந்து |
| 3 ஓமம் | 6 முருங்கைக் கொழுந்து |

இவ்வகைளை வகைக்கு 1 பலமாகக் கொண்டு பொடிசெய்து உப்பு பலம் 1 போட்டு வறுத்து, பனைவெல்லம் பலம் 1 நல்லெண்ணை படி ¼ விட்டு லேக்கிய பதமாக்கி நெல்லளவு 2 வேளையும் தின்று வரக் குணம்.

## 184 அண்டவாய்வுக்கு

பூனை முருங்கையிலையை யரைத்து, பசும் வெண்ணெயில் 5-நாள் கொடுக்கவும்.

பத்தியம்:—

## 185 அரிதாரச் செந்தூரம்

| | | | |
|---|---|---|---|
| 1 புரசம்பட்டைச் சாம்பல் | படி 2 | 2 அரசம்பொருக்கு சாம்பல் | படி 2 |
| | | 3 அரக்கீரை தண்டு சாம்பல் | ,, |

இவைகளைக் கொட்டிப்பரப்பி, மேலே எருக்கிலை 2 வைத்து, இதின்மேல் வேண்டிய அரிதாரம் வைத்து அதின்மேல் இலை மூடி, அதின் தண்டு சாம்பலையும் அதன்மேல் அரசன்பொருக்குச் சாம்பலையும் பரப்பி 30-நாழிகை ஊமத்தங்காயளவு எரித்து ஆற விட்டுப் பார்க்கச் செந்தூரமாம். பணவிடை செந்தூரங் கொள்ள குட்டம், குறைநோய், ஈளை, இருமல், வாதம் 80 இவைகள் தீரும்.

## 186 அண்டவாய்வுக்கு

இலுப்பக்கட்டியை புளியங்கொட்டையளவு கோழிக்காரம் சமன் கொண்டு முலைப்பால் விட்டரைத்துக் கொடுக்கவும் நன்று.

## 187 இதுவுமதே வேறுமுறை

கோதும்பை யரிசி பலம் 1-க்கு 3-பங்கு வைத்து, பசும்பாலி லரைத்துச் ாடுக்கவும் நன்று.

## 188 இதுவுமதே மற்றொருமுறை —

நாயுகரந்தையும் வெள்ளுள்ளியும் அரைத்து 3-நாள் முள்ளிக்காயளவு கொடுக்கவும் வாங்கும்.



## 189 அரையாப்புக்கு வீக்கம் வற்ற

ஊமத்தப்பட்டைகள் சுட்டு, அந்த அளவுக்கு கல் சுண்ணும்பை சிறுநீர் விட்டரைத்துப் போட 1 நாளோடே வற்றும்.

## 190 இதுவுமதே வேறுமுறை

முட்டையின் வெள்ளைக் கருவுஞ் சுண்ணும்பும் மத்தித்துச் சீலையிலூட்டிப் போட வத்தும், கட்டி கரைந்தால் பத்து விடும்.

## 191 கிரந்தி பவுத்திரத்துக்கு

| | |
|---|---|
| 1 சிற்றாமணக்கெண்ணை படி ¼ | 2 திருகு கள்ளிப்பால் படி ¼ |

இவை யிரண்டையும் மெழுகு பதத்தில் காய்ச்சிக்கொள்ளவும்.

## 192 அடி குத்து பட்டால்

பருத்தியிலைச் சாறு 2-பிடியளவு கொடுக்கக் குணமாம்.

## 193 அரிதாரச் செந்தூரம்

அரிதாரத்தைச் சுத்திபண்ணி, மூக்கரைச் சாரணையை யிடித்து அண்டை பிடித்து சட்டிக்குள் வைத்து, அதின்மேல் மேற்படி அரிதாரத்தை வைத்து, மேலோடு அடையகல் மூடி, சட்டியில் வைத்து மூடி சீலமண் செய்து எட்டுச் சாமம் எரியிட்டு ஆற விட்டாத்திக் தூள் செய்து சீலை வடிகட்டிக்கொண்டு ஒருதலை நோவுக்கும் புண்ணுக்கும் சிரங்குக்கும் பணவிடையளவு தேனிற் கொடுக்கவும்.

1 வாதத்துக்கு:—கருப்பு கட்டியில் கொடுக்கவும்.

2 வயிற்றுக்கடுப்புக்கு:—முந்திரிகைப் பழத்தி லிடவும்.

3 கண்ணோவுக்கு:—எலுமிச்சம்பழச் சாற்றி லிடவும்.

4 பிரமேகத்துக்கு:—பூசுணிக்காய்ச் சாற்றிற் கொடுக்கவும் நன்று.

## 194 அரணை கடிக்கு

சாரணை சமூலஞ் சிறுநீரிலரைத்து உள்ளுக்குக் கொடுக்க மேலுக்கும் பூசத் தீரும்.

## 195 சன்னிக்கு

சாரணை வேறும் குப்பைமேனியும் கொட்டைப்பாக்கும் வெற்றிலையு முண்ணத் தீரும்.

## 196 பித்தம் நாற்பதுக்கும்

பழம் பீர்க்கங்காய் விதை 16 கொணர்ந்து தண்ணீரிலரைத்துக் கொடுக்க, கபம் வாயாலெடுக்கும்.

1. ஷை விதை 16 முலைப்பாலில் அரைத்து நாசியில் நசியங் கொடுத்தால், தலையிலிருக்கிற தண்ணீரெல்லாம் வாங்கிப்போகும்.

2. இப்படி 3-நாள் (காலை) இந்தப்படி செய்தால் முன்சொன்ன வியாதி யாவுந் தீரும்.

## 197 பித்த சுரத்திற்குக் குடிநீர்

| | |
|---|---|
| 1 பேய்ப்புடலை | 5 சந்தம் |
| 2 கடுகுரோகணி | 6 பங்கம்பாலைவேர் |
| 3 பெருங்குரும்பை | 7 கோத்தமல்லி |
| 4 சீந்தில் | 8 சுக்கு |

இவை வகைக்கு பலம் 2 இருநாழி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி கொடுக்கவுந் தீரும்.

## 198 மாதவிடா யில்லாத பேருக்கு

சிவந்த துளசி ரெண்டு பச்சை பாக்களவு நல்ல வினுகரியிலரைத்து மாதவிடாய் கண்டால் 3-நாளைக்கொருகால் கொடுக்கவும். இப்படி 3-மாதங்கொடுக்க மாதவிடை நன்றாய்க் காணும்.

## 199 காய்ச்சலுக்குங் குளிருக்குங் குடிநீர்

| | | | |
|---|---|---|---|
| 1 சுக்கு | பலம் 1 | 5 நன்னாரிவேர் | பலம் 1 |
| 2 கோத்தமல்லி | ,, ,, | 6 கோடித்துவ்வைவேர் | ,, ,, |
| 3 சாரணைவேர் | ,, ,, | 7 நாயுருவிவேர் | ,, 2 |
| 4 சுண்டைவேர் | ,, ,, | | |

இவையெல்லாம் எட்டொன்றாய்க் காய்ச்சி 3-நாள் 6-பொழுது கொடுக்கவும் நன்று.

## 200 பேய்ப்போக

பெருதும்பை வேறும், வெள்ளைச்சாரணை வேறும் பொடித்து கண்ணிலிடப் பேய்விடும்.



## 201 சுரம் 64-க்குஞ் சன்னி 18-க்கும் பலத்திற்கும்

| | | | |
|---|---|---|---|
| 1 விஷ்ணுகிராந்தி | பிடி 1 | 3 நெற்பொரி | பிடி 3 |
| 2 சிறுபுள்ளடி | ,, 2 | 4 கோத்தமல்லி | ,, ,, |

இவையெல்லா மிடித்து எட்டொன்றாய்க் காய்ச்சி நாழியில் 1-பங்கெடுத்து,

| | |
|---|---|
| 1 போஞ்ச் | 6 அதிமதுரம் |
| 2 வெள்ளி | 7 மாசிக்காய் |
| 3 கோரோசினை | 8 கலங்கொம்பு |
| 4 காண்டாமிருகத்தின் கொம்பு | 9 உத்திராக்கிசம் |
| 5 கடற்றேங்காய் | 10 சாகற்பேதி |

இவையெல்லாஞ் சமன்கொண்டு வெந்நீரிலரைத்துப் பூசவும்.

## 202 சகல காய்ச்சலுக்கும் குடிநீர்

| | |
|---|---|
| 1 கோத்தமல்லி | 9 கிராம்பு |
| 2 சீரகம் | 10 இருவேலி |
| 3 அதிமதுரம் | 11 தென்னம்வேர் |
| 4 சந்தனம் | 12 கிளிப்பட்டை |
| 5 கடுக்காய் | 13 சாதிக்காய் |
| 6 ஏலம் | 14 மாசிக்காய் |
| 7 நெல்லிக்காய் | 15 மூங்கிற்றேல் |
| 8 திப்பிலி | |

இவையெல்லாஞ் சமன் கூட்டி வொரே பொட்டளமாகக் கட்டி, தண்ணீர் விட்டுச் சிறிது எரித்து சிவந்து வருகிறபோது இரக்கிக் கொடுக்கவும்.

## 203 சூலை வாய்வுக்கு

| | |
|---|---|
| 1 சீரகம் | 8 இருவேலி |
| 2 கருஞ்சீரகம் | 9 விலாமிச்சம் |
| 3 ஓமம் | 10 கோத்தமல்லி |
| 4 சாதிக்காய் | 11 வெள்ளுள்ளி |
| 5 கிராம்பு | 12 சத்திரபேதி |
| 6 ஏலம் | 13 சுக்கு |
| 7 இருசந்தனம் | |

1 கூவிளம் 3 மாதளத்தோடு
2 ஆடாதோடைவேர்

இவை வகைக்கு 1-பலம்.

இவை யாவற்றையுங் கூட்டி 1½ படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி ¼ படியிலிறக்கி, சீரகத்தையும் ஜாதிக்காயையும் வெவ்வேறே பொடித்து மேற்படி பொடி ஒரு பொழுது சாதிக்காயினும் ஒருவிசை சீரகத்தினுமாகத் தேனும் ஊற்றிக்கொடுக்கவுந் தீரும்.

## 204 சூலைக்கு

1 நெய் 4 உள்ளிச்சாறு
2 பசுநெய் 5 அன்னுசிச்சாறு
3 பனவெட்டு

விளக்குப் படி ¼

1 சாதிக்காய் 5 ஏலம்
2 கிராம்பு 6 வெள்ளுள்ளி
3 கிரிமி 7 சோமனுதி
4 அயமோதகம் 8 காயம்

இவை வகைக்குப் பலம் 1 நன்றாய்க் கட்டி கூட்டிட்டு மெழுகு பதத்திலிறக்கி ½-உச்சிக்கரண்டி வீதங் கொடுக்கவும் தீரும்.

## 205 சூலை கழிச்சலுக்கு

1 சீரகம் 4 சாதிக்காய்
2 ஓமம் 5 கிராம்பு
3 மாதளத்தோடு

இவை சமன் கொண்டு நாலொன்றாய்க் காய்ச்சி யிறுத்து, இதற்கு மேற்பொடி சாதிக்காய், கிராம்பு, மாதளத்தோடு, வசம்பு, காயம் இவை சமன் கொண்டு பொடித்து மேற்பொடி யிட்டுக் கொடுக்கத் தீரும்.

## 206 அரணை கடிக்கு

வெற்றிலேயும் அகத்தியிலேயும் மிளகும் அரைத்துப் பூசவுந் தீரும்.



## 207 குன்மத்துக்கு

சிலைத்தாமரையும் முசுமுசுக்கை யிலையும் பசும்பாலி லரைத்து கலக்கிக் கொடுக்கத் தீரும்.

## 208 சிறு பிள்ளைகளின் பல பிணிக்கும்

1 நற்சீரகம் 4 சிறுபுள்ளடி
2 கொத்தமல்லி 5 பூவாங்குருத்தியிலே
3 கரியுள்ளி

இவையெல்லா பிடித்து, அரை படித் தண்ணீர்விட்டு ¼ படியாக்கி, சர்க்கரைப் பொடியிட்டு 3-நாள் கொடுக்கவும்.

## 209 பெண், பிள்ளைகள் வயிற்றுருட்டுக்கு

1 அருகை பிடி 1 3 வெள்ளுள்ளி பிடி 3
2 அல்லோசு ,, ,, 4 ஓமம் ,, 1½

இவையெல்லாந் துவைத்து நீரெடுத்து கருத்தாக்கில் கலந்து அடி வயிற்றிலும், வயிற்றிலும் பூசவும்.

## 210 பெண்கள் இரத்தமும் சீதமும் போகிறதற்கு

காட்டுச்சீரகம் பொடித்து நெய்யிற் குழைத்து மூன்றுநேரமுந் தின்னத் தீரும்.

## 211 வாதத்துக்கு நொச்சிக் குழம்பு

1 நொச்சியிலேச்சாறு உழக்கு 3 பழங்கூருப்பொடி உழக்கு
2 தேங்காய்ப்பால் ,, ,,

இம்மூன்று மருந்துங் கூட்டித் தின்னவும். இப்படி 6-நாள் 2-நேரமுந் தின்ன, நடுவில் நீர் விழுந்தாலும், கண்களில் நீர் விழுந்தாலும், கைகால் களைத்தாலும் தீரும்.

## 212 முடக்கு வாதத்துக்கு

1 தேங்காயெண்ணெ ஆழாக் 4 சதுரக்கள்ளிச்சாறு உழக்கு
2 நல்லெண்ணெ ,, ,, 5 குந்திரிக்கம் பலம் 2
3 பசுநெய் ,, ,, 6 கஸ்தூரிமஞ்சள் ,, 20

இவையெல்லாங் கூட்டிக் காய்ச்சி நோயுள்ள இடங்களில் பூச முடக்குவாதந் தீரும்.

## 213 சன்னி வாதத்துக்கு

1 வெள்ளாட்டுப்பால் உரி 4 கள்ளிப்பால்
2 புளியிலைச்சாறு ,, 5 எருக்கம்பால்
3 ஆமணக்கெண்ணெ ,,

ஆக யிவையெல்லாங் கூட்டிவந்து, மெழுகு பதத்தில் வடித்து உள்ளுக்குஞ் சற்று கொடுத்து, மேனியிலும் நாடி நரம்புகளிலேயுந் தடவி, ஒருநாள் சும்மாயிருந்து மறுநாளுமிப்படிச்செய்து சாயுங்காலம் அரைப்பூத் தேய்த்து வெந்நீரிற் குளிக்கவும்.

## 214 இருமல் வாத கிரிமாலை பக்கநோவுக்குக் குடிநீர்

1 சுக்கு 4 சீந்திற்றண்டு
2 கோஷ்டம் 5 கண்டங்கத்திரி
3 சிறுமூலம்

இவைகள் வகைக்கு 5-ம் 12 களஞ்சியிடை கொண்டு நெகிழயிடித்து 2-நாழி சலம் விட்டு உழக்காகக் காய்ச்சி, திப்பிலிப் பொடி போட்டுக் குடிக்கத் தீரும்.

## 215 பிரமேகம் சூலை கடுப்பு கால்சோருதற்கு யிவைகட்குப் பொடி

1 சீனிப்பூவு புலம் 2 3 அசமோதகம் பலம் ¼
2 திப்பிலி ,, 1

இம்மூன்றையும் வெவ்வேறு பொடித்து அசமோதகம் புடமிட்டு யாவும் ஒன்றாய்க் கூட்டி 8-நாள் 16-வேளை தின்னவும்.

பத்தியம்;—கார்ப்பு புளிப்பு தவிரவும், கோழிக்கறி கோழி முட்டையுங் கூட்டவும், வெந்நீர் சொஞ்சமாய்க் குடிக்கவும், 8-நாள் சென்றபிறகு, அவிழ்தத்தை விட்டு மறுபடி 3-நாள் விட்டு தலைமுழி வெந்நீர்விட்டு குளிக்கவும். இப்படி 4-நாளைக்கும் பிறகு எண்ணை தேய்த்து முழுகவும்.

## 216 வாதத்துக்கு

1 நொச்சியிலை 2 மஞ்சள்

இவை யிரண்டுங் கூட்டிக் காடிநீர் தண்ணீரிலரைத்து உலர உலரப் பூசவும்.



## 217 முடி வாதத்துக்கு எண்ணை

1 எருக்கிலை 3 நொச்சியிலை
2 புளியிலை

இவை வகைக்கு 1-பிடி கொண்டுவந்து

1 கோமூத்திரம் 1 நாழி 7 ஈந்து
2 குளவிந்த மஞ்சள். 8 இருவேலி
3 வெஞ்சிறுகடுகு 9 சதகுப்பை
4 அமுக்குரா வேர் 10 வசம்பு
5 கொடுவேலி வேர் 11 சாரணை வேர்
6 விலாமிச்சம் 12 செவ்வியம்

இவ்வகைசமன் கலந்சு வாங்கி, யதைக் கரைத்து நல்லெண்ணை விட்டுக் காய்ச்சி, பதத்தில் வடித்துப் பூசவும். முடங்கின வாதமும் வலியுந் தீரும்.

## 218 மேற் பூச்சு

1 கோழிமுட்டை 3 2 கடுக்காய் 9

இவ்வ யிரண்டையும் எருக்கிலைப் பாலும் ஊமத்தஞ் சாறும் விட்டரைத்து முதுகிலே பூசவும் வாதந் தீரும்.

## 219 கண்ணுக்கு நெய்

1 அதிமதுரம் 4 ஏலத்திரி
2 கோரோசனை 5 நற்சீரகம்
3 குங்குமப்பூ

இவை வகைக்கு 1களஞ்சு இஞ்சி நீர் பலம் 3. கொடுப்பை வேர் பலம் 1, சிறுகீரைவேர் பலம் 1.

இம்மருந்தெல்லாம் பசுவின் பாலி லரைத்து, பசு நெய் ஆழாக்கு ஊற்றிக் காய்ச்சிப் பதத்தில் வாங்கி வைத்துக் கொண்டு இட, கண் வியாதி 96-ம் தீரும்.

## 220 கண்ணுக்குக் களிம்பு

1 சாதிபத்திரி 5 கிராம்பு
2 வாய்விளங்கம் 6 மாசிக்காய்
3 இலவுங்கம் 7 கூருச்சி
4 கர்ப்பூரம்

இம்மருந்தெல்லாம் நன்றாய்ப் பொடி செய்து, பசும் வெண்ணெயிற் சாலித்துக் குழம்பாக்கி யெடுத்துக் கண்ணிலிட, கண்ணி லுண்டான வியாதியெல்லாந் தீரும்.

## 221 கண் பூவுக்கு

1 தேத்தாம் விரை
2 காய்கலத்தின் வேர்
3 சமுத்திரப் பச்சை

இவை யிடைக்கிடை யெடுத்து, கயிறு பிடித்து, நிழலுலர்த்தி, உமிழ் நீரிலரைத்து, கண்ணிலிடப் பூமாறும்.

## 222 கண்சந்தைக்குக் குளிகை

1 கோரோசனை
2 கோட்டம்

இவை யிரண்டையும், புங்கன்பட்டைச் சாற்றி லரைத்து, நிழலுலர்த்தி, முலைப்பாலி லுரைத்துக் கண்ணிலிடச் சதைமாறும்.

## 223 கண்ணுக்கு ரத்நாதி குளிகை.

1 பொன்
2 வெள்ளி
3 பவளம்
4 செம்பு
5 ஈயம்
6 முத்து
7 புலிநகம்
8 மாட்டெலும்பு
9 கலங்கொம்பு
10 துத்தம்
11 சாதிலிங்கம்
12 கற்பூரம்
13 பொன்னாங்கணிவேர்
14 சமுத்திரப்பளம்
15 செங்கழுநீர்க்கிழங்கு
16 துரிசு
17 கிராம்பு

இவை சமன்கொண்டு, எலுமிச்சம் பழச்சாற்றி லரைத்து, கயிறுபிடித்து, நிழலுலர்த்தி, முலைப்பாலில் உரைத்திட, கண் வியாதி யாவுந் தீரும்.

## 224 கண்ணுக்குக் குளிகை

1 சந்தனம்
2 மறத்துச்சந்தனம் (தேவதாரம்)
3 காவிமண்
4 கோலாக்கு
5 சமுத்திரவேதி
6 கல்பிச்சகமோட்டு

இவை சமன்கொண்டு, முலைப்பாலி லரைத்து, கயிறு பிடித்து நிழலுலர்த்தி, முலைப்பாலி லிழைத்துத் தீட்ட கண் ணோவு தீரும்.



## 225 இது வுமது

1 பசும்பால்
2 சந்தனம்
3 பளிங்குமுத்து
4 இந்துப்பு
5 மனோசிலை
6 மஞ்சள்
7 மிளகு
8 கோழிமுட்டையோடு
9 ஆமையோடு
10 கவிடி
11 ஆனைப்பல்லு
12 கலங்கொம்பு
13 கடல்நுரை
14 செம்புப்பொடி
15 துத்தம்
16 கழுதைப்பால்

இவை சமன் கொண்டு, நார்த்துங்காய்ச் சாற்றி லரைத்து கயிறு பிடித்து, நிழலுலர்த்தி, முலைப்பாலிலும், கருக்கின வெள்ளத்திலும், கண்ணிலெழுத கண்வியாதி யாவுந் தீரும்.

## 226 கண்பொடி

1 துரிசு பணவிடை 3
2 மிளகு பலம் ¼
3 சுக்கு „ ¼
கர்ப்பூரம் பலம் 1
புனுகு „ 2

இவை யெல்லாம் நன்றாய்வடிய அரைத்து, பொடியாக்கி வடிக்கட்டி கண்ணிலிட படலம், மாசு முதலியனப் போய்விடும்.

## 227 கண்குளிகைக்கு

1 துரிசு
2 துத்தம்
3 மிளகு
4 கர்ப்பூரம்
5 சுக்கு
6 திப்பிலி
7 கடுக்காய்

இவை வகைக்கு 3-பணவிடையும்;

1 ஆனைப்பல்லு
2 குதிரைப்பல்லு
3 கோழிநெஞ்சின் முட்டெலும்பு

இவை யொவ்வொன்றும், பணவிடை நாலாகக்கொண்டு, யாவுங்கூட்டி, முதலாவது பண்ணைக்கிழங்கிலும், இரண்டாவது முலைப்பாலிலும், மூன்றாவது புலியிலைச் சாற்றிலுமாக வரைய யிடித்து, நாலாவது நார்த்தங்கா நீரிற் கலந்து, ஐந்தாவது கோடுப்பை வேர் இடித்து அதிற் பிசைந்து, சிறிது முலைப்பாலிற் கூட்டியிட, புல்லிம்படலம் நீர்வடிதல் முதலியன தீரும்.

## 228 கண்ணுக்குந் * நாரை

| | |
|---|---|
| 1 மஞ்சிட்டிபோடி | 7 அதிமதுரம் |
| 2 திப்பிலி | 8 முந்திரிக்கைப்பழம் |
| 3 இருவேலி | 9 கோலரக்கு |
| 4 விலாமிச்சம் | 10 நேற்றும்பால் |
| 5 மரமஞ்சள் | 11 சந்தனம் |
| 6 தேவதாரம் | 12 பாச்சோத்தியிலை |

இவை வகைக்குப் பலம் ஒன்றாகக்கொண்டு, இடிக்கவேண்டியன யிடித்து, கலக்கவேண்டியன கலக்கி,யப்பால் ஒன்று கூட்டிக் காய்ச்சி, பலாயிலையாற் கிளறி, ஒரே கல்மூலில் 51-துளிவிட, இரத்தப்படலம், பூ, சதை, யிவை யாவும் தீரும்.

## 229 ஆநந்தவாய்வுக்குப் பூகை

களச்சிக்கோடி வேரைத் துவைத்து, சிற்றுமணக்கெண்ணையிற் கலக்கி சூரியஸ்புடம் வைத்து 2-காசிடை கொடுக்கவும் வீக்கத்திற்குந் தடவவும். சீக்கிரத்தில் இலகுவாம்.

## 230 இதுவுமதே வேறு

களச்சிக் கோடியின் கொழுந்தை, 4-காசிடை யரைத்து, ஒரே நாளைக்குக் கொடுக்கவும்.

## 231 இதுவுமதே வேறு

| | |
|---|---|
| 1 வெள்ளாட்டின் புழுக்கை | 3 சேந்தவிடு |
| 2 வெள்ளுள்ளிச்சருகு | 4 வேப்பம்புண்ணாக்கு |

இவை யாவும் சமனிடை கூட்டி யெரித்துப் புகை காட்டவும்.

நோய் நிற்கிற யிடத்திலே, வேப்பெண்ணையும், ஆமணக்கெண்ணெயுந் தடவிப் புகை காட்டவும்.

## 232 இதுவுமதே வேறு

முள் முருக்கம் பட்டையை, எலுமிச்சம்பழ மளவு, தேங்காய்ப்பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

---

* நக்ஷத்திரமுந் தெரியு மென்பதாம்.



## 233 ஆநந்த வாயுவுக்கும் வெள்ளைக்கும்

வெள்ளுள்ளி பலம் 1 சிலையிலாட்டி, ஆமணக்கெண்ணெயில் விளக்கேற்றி, சீலையில் மை பற்றும்படியாக வாட்டித் தைலம் வடித்து அத்தைலத்திலே 2-க்கு கை யளவு சமுத்திராப்பழம் பொடி செய்து போட்டுக் குடிக்கவும்.

இதனால் மாறாத பிரமேகமும் 3-நாளைக்குள் மாறும்.

## 234 குளிர் சுரத்திற்கு ஆடாதொடைக் குடிநீர்

| | |
|---|---|
| 1 ஆடாதோடை | 5 நீர்முள்ளி |
| 2 பேய்ப்புடலம் | 6 கோடுப்பை |
| 3 சீந்திற்றண்டு | 7 நன்னாரி |
| 4 முத்தக்காசு | 8 வேப்பாலை |

இவை யெட்டும் சரியிடை கொண்டு 2-நாழி தண்ணீர் விட்டு உழக்கா யிரக்கி அரை ஆழாக்குக் கொடுக்க சுரம் 64-ம் தீரும்.

## 235 இதுவுமதே வேறு

| | |
|---|---|
| 1 சந்தணம் | 4 தாணிக்காய் |
| 2 சுக்கு | 5 மிளகு |
| 3 கோஷ்டம் | 6 இருவேலி |

இவை 6-யும் வகைக்கு 1 பலமாகக் கொண்டு மூன்றொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

## 236 ஆனந்த வைரவச் சந்தனாதி குளிகை

| | |
|---|---|
| 1 கடுகுரோகணி | 11 அதிமதுரம் |
| 2 பொன்னரிதாரம் | 12 வெண்காரம் |
| 3 கருஞ்சீரகம் | 13 விளாவரிசி |
| 4 நற்சீரகம் | 14 சந்தணம் |
| 5 திரிகடுகம் | 15 செஞ்சந்தணம் |
| 6 சிற்றரத்தை | 16 வசம்பு |
| 7 திரிபலை | 17 கல்நார் |
| 8 பச்சை நாவி | 18 சத்திரபேதி |
| 9 கேந்தி | 19 சாதிலிங்கம் |
| 10 தேவதாரம் | 20 களிப்பாக்கு |

இவை யிருபதாம் வகைக்கு 1-கழஞ்சாகக் கொண்டு இவற்றுடன் 2-பலம் அபினை முருக்கிலைச் சாற்றில் ஒருநாளெல்லாம் அரைத்துவைத்து மறுநாள் கையாந்தகரைச் சாற்றில் அரைத்து இலவங்கொட்டைப் பிரமாணம் உருண்டை செய்து நிழலுலர்த்தி யிதை:

1 இரத்த சீதக்கடுப்புக்கு—பெருஞ்சூரைச் சாற்றில் தேங்காய்ப்பால் கூட்டி யிட்டுக் கொடுக்கவும்.

2 பெருங்கழிச்சல், பொருமல், அசீரணத்துக்கு—நொச்சியிலைச் சாற்றி விடவும்.

3 வாத வுதிரத்துக்கு—தேன் கூட்டியிட்டுக் கொடுக்கவும்.

4 வாத குன்மத்துக்கு—வேப்பெண்ணெயி லிட்டுக் கொடுக்கவும்.

5 பித்த குன்மத்துக்கு—தேனி லிடவும்.

6 சிலேற்பன குன்மத்துக்கு—முருங்கைப் பட்டைச் சாற்றி லிட்டுக் கொடுக்கவும்.

7 பெருவயிருக்கு—கோமயத்தி லிடவும்.

8 உதிர வாதத்துக்கு—ஆமணக்கெண்ணெயி லிட்டுக் கொடுக்கவும்.

9 தண்ணீர் தாகத்திற்கு—கோடிக்கச்சிச் சாற்றிலிட்டுக் கொடுக்கவும்,

10 நெஞ்சு விரோசனத்திற்கு—பீரும்பட்டைச் சாற்றிலிட்டுக் கொடுக்கவும்.

11 நீர்க்கடுப்புக்கு—ஆவிரைச் சாற்றி லிட்டுக் கொடுக்கவும்.

12 ஈளைக்கு—துளிர் வேப்பிலைச் சாற்றிலிட்டுக் கொடுக்கவும்.

13 சுரத்துக்கு—சீனியி லிட்டுக் கொடுக்கவும்.

14 பெரும்பாட்டுக்கு—தென்னங்கள்ளிலிட்டுக் கொடுக்கவும்

15 நீர்ச்சேர்ப்புக்கு—இளநீரி லிட்டுக் கொடுக்கவும்.

16 நஞ்சுண்ணதற்கு—தவிட்டாலிலைச் சாற்றிலிட்டுக் கொடுக்கவும்.

17 கோரவிர்ப்புருதி கடுப்புக்கு—மருக்காரைப் பழச்சாற்றி லிட்டுக்கொடுக்கவும்.



18 கல்லடைப்புக்கு—முடக்கத்தான் சாற்றிலிட்டுக் கொடுக்கவும்.

19 சகல வாய்வுக்கும்—முலைப்பாலி லிட்டுக் கொடுக்கவும்

20 வீக்கத்திற்கு—வடிபுளியி லிட்டுக் கொடுக்கவும்.

21 அசீரணத்துக்கு—இலைக்கள்ளி யிலைச் சாற்றி லிடவும்.

22 மாந்த சுரத்திற்கு—முருங்கையிலைச் சாற்றி லிடவும்

பத்தியம்—காக்கவும்.

## 237 ஆனந்த பைரவக் குளிகை

| | |
|---|---|
| 1 இரசம் | 5 கடுக்காய் |
| 2 கெந்தி | 6 நெல்லிக்காய் |
| 3* வெள்ளை பாஷாணம் | 7 சாதிக்காய் |
| 4 திரிகடுகு | 8 சாதிப்பத்திரி |

இவை வகைக்கு 1 பலமாகக் கொண்டு கையாந்தகரைச் சாற்றி லரைத்து வேண்டிய அளவா யுருட்டி நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு ஒரு திப்பிலி இரண்டு கிராம்பு வெதுப்பிப் பொடி செய்து குளிகையொன்று கூட்டி வெந்நீரிற் கொடுக்க சன்னி, தோஷம், வலி, சயித்தியம், பிரதமை, குளிர் மாறல், நடுக்கல் இவை முதலியன தீரும்.

## 238 ஆருத புண்ணுக்கு

| | |
|---|---|
| 1 வெள்ளுள்ளி | 3 ஊமத்தம் வேர் |
| 2 வசம்பு | |

இவை சமனிடை கூட்டி யரைத்து நல்லெண்ணெயிற் கலக்கி வேகவைத்து, வெந்தபிறகு சிவந்த பக்குவத்தி லிறக்கிப் புண்ணி லிட மாறும்.

## 239 இதுவுமதே வேறு

| | |
|---|---|
| 1 துத்தம் | 3 யவ்வன மனிதன் எலும்பு |
| 2 துரிசு | |

இவைகளை விலாமிச்சஞ் சாறு வார்த்தரைத்துப் பிறகு பசும் வெண்ணெயி லரைத்துப் புண்ணிற் போடவும்.

* அழிஞ்சிச்சாற்றி லூறப்போட சுத்தியாம்.

## 240 ஆரோக்கிய சூரணம்

| | |
|---|---|
| 1 சதகுப்பை | 5 கருவாய்ப்பட்டை |
| 2 கருஞ்சீரகம் | 6 மகிழம்பூ |
| 3 நற்சீரகம் | 7 மகிழம் விதை |
| 4 இலவங்கப்பட்டை | 8 அதிமதுரம் |

இவை வகைக்கு 1 கழஞ்சும் இவற்றுடன் கோத்தமல்லி பலம் 8-ம், வெள்ளை கற்கண்டு பலம் 16-ம் ஆக எல்லா மிடித்து வஸ்திரகாயஞ் செய்து 2-வேளை 2-கடி தின்று வரவும்.

இதனுற் பயன் யாவையெனில் ஈரல் குலையைப் பலப்படுத்தும், தலையெரிவை மட்டுப் படுத்தும், நெஞ்சு மிருதுவாகும், இருதய அசுத்தங்களைத் தள்ளும், நடுமேனியைப் பலப்படுத்தும், கண்ணீர் நிறுத்தும், கண்ணுக்குப் பிரகாசங் கொடுக்கும், அசீரணத்தை சீரணமாக்கும், நித்திரை வரப்பண்ணும், வயிற்றுப்பூச்சிகளைத் தள்ளும், இடுப்பு நோயை நீக்கும், கல்லடைப்பினைத் தள்ளும், நன்மூச்சு வாங்கப்பண்ணும், கழுத்துவலி போக்கும், பசியேடுக்கும், சரீரக்கட்டு விடுவிக்கும்.

## 241 ஆசனக் கடுப்புக்கு

பெருச்சாளித் தோலைபுலர்த்திப் பொடி செய்து (ஆசனத்தில்) புகை காட்டத் தீரும்.

## 242 ஆசன் வாயுவுக்கு

இவ்வாய்வு இடப்புறமாகில் வலப்*புறங்காலினும் வலப்புறமாகில் இடப் புறங்காலினும் ஊசியாற் சூடு போட நிற்கும்.

## 213 ஆனந்த வாதத்துக்கு

| | |
|---|---|
| 1 ஆமணக்கு வேர் | 4 முடக்கத்தான் வேர் |
| 2 களச்சி வேர் | 5 பசும்பால் |
| 3 சாரணை வேர் | |

இவைகளைக் கியாழமாக வைத்துக்கொடுக்க எவ்வாய்வும் பறந்தோடும்.

## 244 கோபம் ஆற

| | |
|---|---|
| 1 சிறுநீர் | 3 நல்லெண்ணை |
| 2 நாயுருவிச்சாறு | |

இவை மூன்றையுங் காய்ச்சி முழுக கோபம் அடங்கும்.

* வெள்ளைக் கோலுக்கும் கருங்கோலுக் கும் மத்தியில்.



## 245 குழந்தைகளின் உள்ரோகக் குளிகை

| | |
|---|---|
| 1 செங்நன்ஞரி | 3 பாலக் கருடப்பச்சை |
| 2 நீலக் கெருடப்பச்சை | 4 மாசிக்காய் |

இவை சமன் கொண்டு, கருக்கிக்கொண்டு நெகிழ அரைத்து மஞ்சாடியளவு உருட்டி நிழலுலர்த்தி வெந்நீரில் கொடுக்கவும்.

## 246 புண்ணுக்கு

| | |
|---|---|
| 1 துத்தம் | 2 துரிசு |

இவை யிரண்டுஞ் சமனிடையாக 1-பலங் கொண்டு அனலில் 4-காசுகட்டி வெதுப்பி இத்துடன்

| | |
|---|---|
| 1 வெள்ளை குங்கிலியம் | 4 களிப்பாக்கு |
| 2 கஸ்தூரி மஞ்சள் | 5. கைம்மாறு வெற்றிலை |
| 3 முராரிசிங்கு | |

இவைகளையும் சமனிடை கொண்டு முடித்து கூட்டியரைத்துத் தடவவும்.

## 247 மூலைக் குத்துக்கு

நிலைப்பனங் கிழங்கை முலைப்பாலில் வார்த்தரைத்துப் பூசவுடனே தீரும்.

## 218 சர்வ கிரந்திக்கும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சாதிக்காய் | விராக | 4 | 5 எள்ளு | பலம் | 5 |
| 2 சித்திரமூலம் | ,, | ,, | 6 செங்கோட்டை | ,, | 10 |
| 3 வெள்ளுள்ளி | ,, | ,, | 7 கருப்புக்கட்டி | ,, | 4 |
| 4 சங்கம் வேர் | ,, | ,, | | | |

இவையெல்லாம் ஒன்ருய் லேக்கியம் பண்ணி சாப்பிடவும். பத்தியம்—7-நாள் சாப்பிட்டு 13-நாள் வெந்நீருஞ் சாதமுஞ் சாப்பிடவும். தலைக்குத் தண்ணீர் வார்த்துக்கொள்ளவும்.

## 249 காந்தரச பற்பம்

| | |
|---|---|
| 1 கேந்தகம் | 6 இரசம் |
| 2 அரிதாரம் | 7 சாதிலிங்கம் |
| 3 மனோசிலை | 8 சுக்கு |
| 4 காந்தம் | 9 கருஞ்சீரகம் |
| 5 சூடங்கர்ப்பூரம் | |

## 250 மாலைக் கண்ணுக்கு

திப்பிலியைப் பூசுணி யிலைச்சாற்றி லிழைத்துப் போட ஒளி வரும்.

## 251 உஷ்ணத்துக்கு

| | |
|---|---|
| 1 சித்திரமூலம் | 6 சீரகம் |
| 2 திப்பிலி | 7 ஓமம் |
| 3 மிளகு | 8 பெருங்காயம் |
| 4 சுக்கு | 9 சயிந்தவலவணம் |
| 5 கடுக்காய் | 10 விடர்பவம் |

இவையெல்லாஞ் சமனிடை கூட்டி, சூரணம் பண்ணி வெந்நீரில் கொள்ளத் தீரும்.

இவை வகைக்கு வீராகனிடை 1, இவற்றுடன் வெள்ளைப் பாஷாணம் மஞ்சாடி 1 எல்லாச் சரக்கையுஞ் சுத்தி செய்து குப்பைமேனிச் சாற்றிலாவது தண்ணீரிலாவது 4 சாம மரைத்து மஞ்சாடிப் பிரமாணம் உருண்டை செய்து நிழலுலர்த்தி ஓட்டில் வைத்துச் சீலை செய்து தாளிக்குள் மணலிட்டு ஒரு சாமமெரித்து பின்னர் எடுத்து வைத்துக்கொண்டு தேனில் ஒரு மஞ்சாடி கொடுக்க குட்டம், சொறி, சிரங்கு, பரங்கிப்புண், சூலையிவையெல்லாந் தீரும்.

பத்தியம்—பாலுஞ்சோறும் உண்ணவும்.

## 252 சன்னிக்கு வேட்டுமோரணக் குளிகை

| | |
|---|---|
| 1 காந்தம் | 6 ஓமம் |
| 2 நாவி | 7 சீனக்காரம் |
| 3 வெண்காரம் | 8 கோரோசினை |
| 4 திரிகடுகு | 9 இலிங்கமரெட்டி. |
| 5 திரிபலை | |

இவைகளைச் சமனிடை கொண்டு சுத்தி செய்யவேண்டியதைச் சுத்தித்து இஞ்சிச்சாற்றி லரைத்து சிறு பயிறு பிரமாணம் உருண்டை செய்துத் தேனிலிடத் தீரும்.

## 253 ஒழுகு வெள்ளைக்கு

| | | | |
|---|---|---|---|
| 1 கெந்தகம் | விராக் 2 | 3 கற்கண்டு | விராகனிடை 5 |
| 2 இரச கற்பூரம் | ,, 3 | 4 வெள்ளை குங்கிலியம் | ,, |



இவை யாவுஞ் சுத்திசெய்துக் கூட்டி யரைத்து, 6 பொட்டலங்களாகக் கட்டி 3-நாள் 6-பொழுது சாப்பிடவும்.

பத்தியம் இருக்கவும்.

## 254 இரந்தி புண்ணுக்கு

| | |
|---|---|
| 1 இரச கற்பூரம் விரா 1 | 3 வேப்பங்கொழுந்து பலம் ¼ |
| 2 வெல்லம் பலம் 5 | |

இவற்றுள் இரச கர்ப்பூரத்தை முலைப்பாலி லரைத்து, பின் கூறிய வேப்பங்கொழுந்தைப் போட்டு இரண்டையு மரைத்து, பின்னர் வெல்லத்தையுங் கூடப்போட்டு அரைத்து 14-உருண்டைகளாகப் பண்ணி 7-நாள் 14-உருண்டையுஞ் சாப்பிடவும். பத்தியம்:— * 7-நாள் மறுபத்தியமிருந்து 15-ம் நாள் தலைமுழுகி சிறுகீரைச்சாறு குடிக்கவும், பிறகு மிளகு நீருஞ் சாதமுஞ் சாப்பிட கர்ப்பூர வேகந் தீரும்.

## 255 நளிருக்கு

| | |
|---|---|
| 1 உள்ளி பலம் ¼ | 3 கள்ளிக்கொழுந்து பலம் ¼ |
| 2 மிளகு ,, ,, | 4 வெற்றிலை 3 |

இவை வறுத்து நளிரு வரும்போது 3-நாள் குடிக்கவுந் தீரும்.

## 256 † மாட்டுப் பிணிக்கு

1 நெய்க்கோட்டான் பழம் 2 கோழிக்காரம்

இவற்றை யளவாய்க் கொண்டு காடித்தெளிவிலே கலக்கிக் கொடுக்க நீங்கும்.

## 257 பேதிக்கு

நல்லெண்ணெயில் எலிப்பிழுக்கையை யுரைத்து, தொப்புளிற் றடவ பேதியெடுக்கும் துடைக்கப் பேதி நிற்கும்.

## 258 முகத்தில் விழுந்த கருப்பு வாங்க

நத்தைச்சூரி வேர் பிடுங்கி பசும்பாலில் 3-நாள் அரைத்து கொடுக்க வாங்கும்.

---

* உப்பு வறுத்துக் கூட்டவும்.

† இதின் குணங்கள்:—நாலு நடையு முடைந்தாற்போல பதறும். கண் பீளையாகும். நீர்விட்டால் குன்றி நிற்கும். மயிர் சிலிர்க்கும்.

### 259 கிரிப் பூச்சிக்கு

தேவதாரம் முக்களஞ்சு கொண்டுவந்து தட்டித் தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கொடுக்க பூச்சியெலாங் கூட்டோடே விழும்.

### 260 வயிற்று வலிக்கு

பிரண்டையை யரைத்து 1-பாக்களவு தேனிற் கொள்ளவுந் தீரும்.

### 261 எல்லா நஞ்சுக்கும் மாற்று

சிறுகீரையுஞ் செந்நாயுருவி சமூலமும் பிடுங்கி, பச்சரிசி கூடக் கஞ்சி வைத்து தண்ணீர் மாத்திரம் கொடுக்க சகல விஷ நஞ்சும் முரியும்.

### 262 இராச சந்திர சேகரக்குளிகை

1 கோரோசினை
2 சாதிலிங்கம்
3 சூடன் கர்ப்பூரம்

இவை வகைக்குப் பலம் 1 முலைப்பாலி லரைத்து, உளுந்து பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி, முலைப்பாலில் குடிக்க சுரவகை யாவுந் தீரும்.

### 263 குழந்தைகள் * கன்னப்பாசிக்கு

1 கோளிஞ்சி பிடி 1
2 பொன்னுவாங்கு ,,
3 வெள்ளுள்ளி 1 கழஞ்சு

இம்மும்மருந்துஞ் சரியாயிடித்து நாவுரிச் சாற்றில் வேக வைத்து ஆழாக்களவு கொடுக்கவுந் தீரும்.

---

* இதின் குணங்களாவன:—

உச்சிநெஞ்சங் குளிர்ந்திருக்கும்
உண்ணும் பாலுந் தங்காது
பச்சை நிறமே வயிறு கழியும்
பாகம்போலச் சிறிதாகும்
நெற்சரங்கிருக்கு மெழுந்திருக்கு
மெடுத்துக் குடிக்குந் தண்ணீரை
கச்சாங்கருத் முலைமடவீர்
கன்னப்பாசி குணமிதுவே.



### 264. கிரிப்பாம்பு விழ

முருக்குமான் கொம்பை 2 அல்லது 3-நாள் சாராயத்தில் ஊறவைத்துக் கொடுக்க, பூச்செலாம் விழும்.

### 265. வெள்ளெழுத்துக்கு வேறொருமுறை.

பருத்தி பழுக்க யிலையைக் கையில் வைத்துக் கசக்கிக் கண்ணிற் பிழிய மாறும்.

### 266. நீரழிவுக்கு.

நெல்லிக்காயும் நல்ல களிப்பாக்கு மரைத்து, பசும்பாலில் நீர்ப்பாகத்தியாய்க் குருக்கிக் காய்ச்சி குடிக்கவுந் தீரும்.

### 267. வலஞ்சலஞ் சிறுத்துவிழின்

இலாமிச்சம் வேர் பாக்களவு அரைத்து நல்லெண்ணெயிற் கொடுக்க நன்றாய்விடும்.

### 268. நீரழிவுக்கு வேறொரு முறை

பூவரசன் தோலுலர்த்திப் பொடிசெய்து, தேனில் குழைத்து ஒரு சுண்டைக்காய் அளவு கொள்ள நீரழிவு நிற்கும்.

### 269. நீர் திரட்சியாய்ப் போகிறதற்கு

கோழித்தோல் உரித்து அந்தத் தோலை வெய்யிலி லுலர்த்திப் பொடிசெய்து பனிநீரிற் குழைத்து 3-நாள் பொழுது தின்ன இருநீர் திரட்சியாய்ப்போகாது நிற்கும்.

### 270. இதுவுமதே வேறு முறை

பழப்புப் பலாயிலையை யுலர்த்திப் பொடிசெய்து, தேனில் குழைத்துண்ணினும் தீரும்.

### 271. நீரழிவுக்கு இன்னொரு முறை

வட்டக்கெகுமி கைத்தாழை வேரைக் கொண்டுவந்தரைத்து அத்துடன் எலுமிச்சங்கா யளவு சந்தனங் கூட்டி மீண்டும் அரைத்து பசும்பாலில் குளப்பிக் கொடுக்க நீரழிவை நீக்கும்.

### 272. கல்லடைப்புக்கு

நற்சுரை யிலையை வாட்டிப் பிழிந்து 1-காசளவு வெங்காரமும் பொரிக்க சர்க்கரையுங் கூட்டிக்கொடுக்க கல் விழும்.

### 273. நீரடைப்புக்கு

ஆட்டுப்புழுக்கையைக் கொணர்ந்து, பின்னைகள் சிறுநீரிற் கலக்கி புடினை காய்ச்சி, வெந்ததாம் அடி வயிற்றிற் பூச நீர்விடும்.

### 274. சிறுநீர் அதிகமாய்ப் போகிறதற்கு

பச்சைப்பலாயிலையை புலர்த்திப் பொடி செய்து, வெட்டத் தூத்தியிலைச் சாறெடுத்து ஈருள்ளியைச் சுட்டு,

1. பன்றிக்கொழுப்பு 3. கோழிமுட்டை
2. தேங்காயெண்ணை 4. கைத்தாழையிலைச்சாறு

இவையெல்லாஞ் சமன் கொண்டு இடித்துக் காய்ச்சி பக்குவத்தி லெடுத்து வைத்துக்கொண்டு, அம்மருந்துகளையுங் கூட்டி 1-கா. புன்னை நிற்கும்.

### 275. பித்தத்தால் தலை சுழற்றலுக்கு

நாயுருவி யிலையை யரைத்து வெந்நீரில் கொள்ள நீங்கும்.

### 276. காமாலைக்கு

தேங்காய்ப்பால் 1-படியில் கருங்குங்கிலியம் பொடி செய்துப் போட்டு ௩-நாள் கொடுக்கத் தீரும்.

### 277. * மஞ்சள் காமாலைக்கும் பாண்டுரோகத்துக்கும்

குப்பைமேனி வேரும் வெள்ளைச்சாரணை வேரும் பசும்பாலி லரைத்து அந்திசந்தி 3-நாள் கொடுக்கத் தீரும்.

### 278. பித்தத்துக்குப் பொடி

1. நற்சீரகம் 3. கற்கண்டு.
2. சமுத்திராப்பழம்

இவை மூன்றும் பொடிசெய்துண்ண பித்தந் தீரும்.

### 279. கண் புழுவுக்கு

அதனைப்பாலை சிலேபிருட்டி புலர்த்தி எண்ணையில் கலந்து தேய்க்கவுந் தீரும்.

### 280. சிரங்கிற்கு

வாகைப் பட்டையை யிடித்து வஸ்திரகாயஞ் செய்து, ௨-முக்கா வேப்பெண்ணையின் வேச வைத்திடவும் சுகம்.



### 281. சோகைக்கு மருந்து

1. மஞ்சள்வேர் 1-பிடி 4. அரப்பொடி 1-பிடி
2. நாயுருவியிலை ,, 3. மிளகு ,,

இவை நான்கையுஞ் சிவக்க வறுத்துப் பொடிசெய்து கூட்டித் தின்ன நீங்கும்.

### 282. தலைநோவுக்கு

தேத்தான்விதைச் சத்தை முலைப்பாலில் அரைத்து நசியம் பண்ண மாறும்.

### 283. ஈளைக்கு

முதலையின் அனதியைக் (காஷ்டம்) பாக்களவாய் எருமை மோரிற் கொடுக்கவுமே.

### 284. ஈளிகூட்டோடே விழுந்து தொண்டை வலித்தால்

பச்சைப்பயிரும், பச்சையரிசியும் அவித்து கஞ்சி கொடுக்கவும் நன்று.

### 285. குழந்தைகள் கணத்துக்கு மருந்து

1. மந்திப்பூ 7. கறுவாப்பட்டை
2. கிராம்பு 8. கோத்தமல்லி
3. வசுவாசி 9. கடுக்காய்
4. சாதிக்காய் 10. ஈருள்ளி.
5. சீரதம் 11. மாதளம்பூ.
6. மாசிக்காய்

இவை சமன் கொண்டு இடித்துக் கியாழமிட்டு, ஒரு கை கொடுக்க கணையெட்டுந் தீரும்.

### 286. பித்தவரீய்வுக்கு

நற்சீரகத்தைத் தண்ணீரிலிட்டுக் காய்ச்சி, வெல்லம் போட்டுக் குடிக்கவும் தீரும்,

### 287. வாயுவுக்குப் பொடி

1. சுக்கு 3. வெண்காயம்
2 மிளகு

இவை சமன் கொண்டு பொடி செய்துண்ணவும்,

## 288 வெந்த புண்ணுக்கு.

1. நெல்லிக்காய். 2. மாதளத்தோடு

இவையிரண்டும் சமன் கொண்டு கருக கரித்து மூலிப் பாலி லரைத்துக் குழம்பாக்கிப் பூசவும்.

## 289 வெட்டுப்பட்ட புண்ணுக்கு.

தும்பையிலையை யரைத்து எண்ணெயில் வேகவைத்து மெழுகுபதத்தி லிரக்கி புண்ணிற்போட ஆறும்.

## 290 வயிற்றுக் கடுப்புக்கு.

சாதிக்காய் ஒன்றை நெய்யிற் போட்டு பொரித்தரைத்துத் தயிரிற் குழைத்துத் தின்ன தாகமும் அமரும்.

## 291 மந்தர் சோகைக்கு.

கோவையிலைச் சாறு 1 கை, இதில்

1. சிறுபயிறு ¼ ஆழாக்கு 2. சீனி பலம் 2

கூட்டிக் காய்ச்சக் தீரும்.

## 292 புண்ணுக்குப் புகை.

1. கெந்தகம் பலம் 2 3. ஈயம் பலம் ½
2. இரசம் „ 1

இவை மூன்றையும் பொடித்துக்கொண்டு மோருஞ்சோறு முண்டபின்னர் இப்புகையைக் காட்டவும். பிறகு குளித்துவர நலம்.

## 293 மேகம் இருபத்தொன்றுக்கும் சம்பிரதாய சூரணம்.

வெள்ளைச்சாரணை வேரை பசும்பாலில் அவித்து உலர்த்தி சூரணஞ்செய்து தேன்சர்க்கரையிற் குழப்பி, நெல்லிக்காயளவு அந்திசந்தி தின்று வரவும். (பத்தியம்).

## 294 பித்தங்கக.

1. கடுக்காய் 2. சீனி

இவையிரண்டுஞ் சமனெடுத்துச் சூரணித்து 1-கடி வெந்நீரில் கொள்ள, சர்வபித்தமும் போம்.



## 295 * கொள்ளைக் கழிச்சலுக்கு.

1. ஓமம் பலம் 1 4. நெல்லிபருப்பு பலம் 1
2. சாதிக்காய் „ 1½ 5. பொரியரிசிமா ஒரு கை
3. கிராம்பு „ 20 6. விஷக்கோரு „

இவையெல்லாஞ் சூரியபுடம் வைத்து இடித்துச் சூரணஞ்செய்து, 1-கடி பசுந்தயிரில் கொடுக்கவும் மாறும்.

## 296 எலிகடிக்கு.

1. * சிறுவிளாவேர் 1-பிடி 3. அத்தியிலைச்சாறு ¼-ஆழாக்
2. பசும்பால் ஆழாக்கு 4. பழந்தண்ணீர் „

இவைகளைக் கூட்டி யரைத்துக் கொடுக்கவும்.

## 297 எலிகடிக்கு எண்ணெ.

1. * அரசம்வேர் 5. கருவேப்பம்வேர்
2. வில்வவேர் 6. குதிரைவாலிவேர்
3. அவுரிவேர் 7. சாரணைவேர்
4. முருங்கைவேர்

இவை வகைக்குச் சமன் கொண்டு இத்துடன்,

1. உள்ளி 3. கருஞ்சீரகம்
2. வசம்பு

இவையுஞ் சமன் கூட்டி யிடித்துப்போட்டு நல்லெண்ணெயிற் காய்ச்சி உள்ளுக்குக் கொடுக்கவும்.

## 298 வயிறெரிவுக்கு.

1. சீனி 3. நற்சீரகம்
2. நெய்

இவை மூன்றுஞ் சிரங்கை யளவாகக் கொண்டு நறுக்கி வேகவைத்துத் தின்னவும்.

## 299 வீக்கத்திற்கு.

உப்பை பழச்சாற்றில் அரைத்துப்பூச மாறும்.

---

* வாந்திபேதியென்பார்.
* வடக்கு போன வேராயிருத்தல் நலம்.
* பட்டைகூட.

300 தலைமயிர் புழுவெட்டுக்கு.

1. வேப்பமுத்து. 3. மிளகு
2. கருஞ்சீரகம்

இவை சமன் கூட்டி எண்ணெயி லரைத்துக் கலக்கித் தலை முழுகி வரவும் நன்று.

301 புண் புழு விழ.

சுருள்ளியைக் கூட்டு எண்ணெயிற் பிழிந்து புண்ணிலிடப் புழு விழும்.

302 வயிற்று வலிக்கு.

1. கடுக்காய் பலம் 2 2. வேப்பிலை பலம் 10

இவை யிரண்டையும் பிரண்டைச் சாற்றி லரைத்து விளக் கெண்ணெயிற் சாரித்து விழுங்க புழு மலக்கட்டு விழும்.

303 சிறு பிள்ளைகள் இருமல் அடைப்புக்கு.

1. தேத்தான் கொட்டை 3. மாசிக்காய்
2. கடுக்காய் 4. சீனிகாரம்

இவை சமன் கூட்டி முலைப்பாலி லரைத்து கலக்கிக் கொடுக் கவும்.

பத்தியம்.—வெந்நீர் தரவும்.

304 எலிகடிக்கு.

பேரியும், குரிஞ்சாயிலைச் சாறும், பாலிற் கூட்டிக் கொடுக்க வுந் தீரும். (பத்தியம்)

305 வயிற்றுக் கடுப்புக்கு.

1. மாதளங்தோல் 5. நெற்பொரி
2. உலுவாய் 6. மாசிக்காய்
3. நற்சீரகம் 7. சுக்கு
4. அசமதாகம்

இவையெல்லாஞ் சமன் கூட்டி தயிராண்டையி லரைத்து கலக் கிக் கொடுக்கவும்.



306 இரத்தசிதங் கண்டால் குளிகை.

1. வில்வவேர் 3. நற்சீரகம்
2. நிலக்குமிழ்வேர் 4. நன்னாரிவேர்

இவை சமன் கொண்டு முலைப்பாலில் அரைத்து உருண்டை செய்து பழந்தண்ணீரிற் கொடுக்கவும்.

307 பல்லுறுதிக்கு மருந்து.

1. சதுரக்கள்ளிபட்டை 2. மகிழம்பட்டை

இவை யிரண்டையுஞ் சமனிடித்து சுட்டுப் பொடித்து தினந் தோறுந் தேய்த்துவரப் பல்லுறுதியாகும்.

308 பல்லசைவுக்கு.

நொச்சி யிலையில் சுக்கை யரைத்துத் தெளித்து நிழலுலர்த்தி வாழைச் சருகில் சுருட்டி அந்திசந்தி புகை பிடிக்கவும்.

309 நடுக்குக் காய்ச்சலுக்கு.

கீழாநெல்லி யிலையை பாக்களவா யரைத்து, இத்துடன் 2,பணவிடை வெண்காரத்தைப் பொரித்துக் கலந்து வெற்றிலை யில் வைத்துத் தின்ன ஆறும்.

310 கண்ணிலே நெரிவிழுந்தால்.

கத்தாழஞ் சோற்றை 7-விசை தண்ணீரிற் கழுவி சீனிகாரம் பொரித்து நற்சீரகமுங் கூட்டி, (சமனுக்கு) சீலையைத் துணியில் கூட்டி, முலைப்பாலில் நனைத்துக் கண்ணிலிட பூ மாறும்.

311 வயிற்றுக் கடுப்புக்கு.

சுக்கைப் பொடி செய்து 1-கடிப் பிரமாணம் எலுமிச்சம்பழச் சாற்றில் கொடுக்கவும் பிடிக்கும்.

812 வயிற்று வலிக்கு.

1. முருங்கைப்பட்டை 4. வசம்பு
2. வெங்காயம் 5. சுக்கு
3. உள்ளி 6. மிளகு

இவை சரியிடை கொண்டு தண்ணீரிற் போட்டுக் காய்ச்சி அரைப்பாக வற்றி, பெருங்காயங் கூட்டி உள்ளுக்குக் கொடுக்க

## 313 புண்ணுக்குப் புரையடங்க.

புங்கம்பால் 1 சிரங்கை கொணர்ந்து நல்லெண்ணெய் யிரு சிரங்கை விட்டுக் காய்ச்சி துருசு கால் களஞ்சி கூட்டிப்போட்டு, மணற்பதமாய் வருகிறபோது இறக்கி வைத்துக்கொண்டு எவ்வி தப்புண்ணுக்குஞ் சீலையி லூட்டிப்போட ஆறிவிடும்.

## 314 சன்னிக்கு.

முருங்கைப்பட்டைச் சாறுந் தேனுஞ் சமன் கூட்டிப் பண்ணுக்குக் கொடுக்கவும் சுகம்.

## 315 சன்னிக்கு நசியம்.

1. முருங்கை 4. குப்பைமேனி
2. தும்பை 5. மிளகு
3. வேப்பம்பட்டை

இவை சமன் கொண்டரைத்து நசியம் பண்ண எல்லா சன்னியுஞ் சொல்லாதோடும்.

## 316 பேய் பிடிப்புக்கு எண்ணெய்.

மூஞ்சூரைப் பிடித்துவந்து தோலெல்லாம் உரித்து இத்துடன் வசம்பும் வெள்ளுள்ளியும் வேப்பெண்ணெயில் சமனாக வேகவைத்து உடலிலிட்டுக்கொள்ள காலனும் விட்டோடுவன்.

## 317 கண்டமாலைக்கு.

பச்சைநாவியை புரைத்து 3-நாளைக்கொருவிசை வீக்கத்திற் றடவவும்.

## 318 எலிகடிக்கு.

எலி * புழுக்கையை 2 களஞ்சி பசும்பாலிற் குழப்பிக் கொடுக்கவும். (பத்தியம்) 6-நாளைக் கிருக்கவேண்டியது.

## 319 நாள் சென்ற எலிகடிக்கு.

ஊமத்தனிலைச் சாறும் நல்லெண்ணெயுஞ் சரியாக மத்தித்து மூன்று காசிடை திவசாவேயுங் கொடுக்கவும். இப்படி 3-நாள் கொடுத்தாற் போகும்.

---

* இதைக் கூட்டிக் குடிக்க யாரும் மனமொப்பார்கள். ஆகலான் தெரியாது கொடுத்தல் நன்மை.



பத்தியம்:—6-நாள் உப்பு புளிப்புத் தவிரவும் மயக்கமேல் பச்சைத் தண்ணீர் வார்க்கவும்.

## 320 எலி தொந்தரைக்கு.

முதலில் ஒரு எலியைப் பிடித்துவந்து அதின் உடல் முழுதும் குப்பைமேனியுஞ் சாதிலிங்கமும் அரைத்துப் பூசிவிட சகல எலிகளும் வீட்டைவிட்டு ஓடிப்போகும்.

## 321 ஒரு தலை வலிக்கு.

இலுப்பைக்கட்டியைப் பாக்களவு ஊறப்போட்டு சீலையிற் கட்டி நோகிற பக்கக் காதிற் பிழியவும்.

## 322 இதுவுமதே வேறுமுறை.

1. பெருங்காயம் 3. மஞ்சள்
2. வெள்ளுள்ளித்தோல் 4. இலுப்பைக்கட்டி

இவ்வகைக்கு 1 களஞ்சு ஆகக்கொண்டு அரைத்துச் சீலையிலூட்டி திரிகாட்டிப் புகை பிடிக்கவும்.

## 323 இதுவுமதே இன்னொரு முறை.

1. கிராம்பு 3. கழற்சிப் பருப்பு
2. அபின்

இவ்வகைக்குக் காஞ்சாகக்கொண்டு, திரிசெய்து புகை பிடிக்கவும்.

## 324 கலங்கின கண்ணுக்கு.

ஊமத்தயிலையைக் கசக்கி, 3-துளி கண்ணில் விட்டு, நின்ற திப்பியிலும், 3-மிளகு வைத்தரைத்து கட்டவும் குணம்.

## 325 காதுப்புழு விழ.

பிரண்டைச் சாறும், எலுமிச்சம் பழச்சாறும் சமன் கூட்டிக் காதிலிட, புழுச்செத்து விழும்.

## 326 பாஷாணத் திமிருக்கு.

1. எலுமிச்சம்வேர் பல 5 2. கொம்புப்பாகற்கொடி ப 2

இவை தண்ணீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி, குருணியானபின் விளக்கெண்ணெ 3-நாழி விட்டு உள்ளி வசம்பு கூட்டி யெரித்து, உள்ளுக்குங் கொடுத்து மேலுக்கும் பூசவும்.

## 327 திமிர் வாதத்துக்கு.

1. சுக்கு பலம் 1 3. சாறுவேளைவேர் பலம் 1
2. வெள்ளுள்ளி ,, ,,

இவைகளை நாழி வேப்பெண்ணெயில் எரித்து இந்த எண்ணெயில் 1-பலம் மிளகு பொடி பண்ணிப்போட்டு கலக்கி தினம் 1-கரண்டி உள்ளுக்குக் கொடுக்கவும். 20-நாள் கொடுக்கத் திமிர் வாங்கும்.

பத்தியம்:—காப்பு புளிப்பு தவிரவும்.

## 328 அரக்கெண்ணை.

மட்லரக்கு 10-பலம் பொடிபண்ணி, நாழி தண்ணீர் காய வைத்து, (அரக்கை) உறத்த சீலையில் பொட்டணங் கட்டிவைத்து அடிக்கடி தோய்த்தெடுத்து, (அரக்கு) இரத்தம்போலானக், பொட்டளம் ஒட்டடைப்போல விழும். அப்பக்கு ... இரக்கி ஒரு சட்டியிலிட்டு,

1. நல்லெண்ணெ
2. சிற்றாமுட்டி
3. பேராமுட்டி
4. இலாமிச்சம் வேர்
5. முத்தக்காசு
6. இருவேலி
7. சீந்திறறண்டு
8. அமுக்குரு வேர்
9. நன்னாரி

இவை வகைக்குப் பலம் 2½ யாகக்கொண்டு, தாணி நாழி தண்ணீர்வார்த்து 2-நாழியாகக்காய்ச்சி, கூடி யெண்ணெயில்விட்டு,

1. சீரகம்
2. அதிமதுரம்
3. மஞ்சள் அரக்கு
4. கடுகுரோகணி
5. சந்தனம்
6. அமுக்குருவேர்
7. சதுகுப்பை
8. கோட்டம்
9. தேவதாரம்
10. அரேணுகம்
11. இந்துப்பு
12. விலாமிச்சை

இவை வகைக்கு சமுஞ்சு 3 கூட்டியரைத்துப் பதத்திலே வடித்து, உடம்பெங்கும் பூச, மாந்தசுரம் தீரும். உலர்ந்த சரீரமும் வற்றின சரீரமும் ஒழிந்து பலமுண்டாம். கர்ப்பிணிக்கு இட்டால் சுகமாய்ப் பிரசவிமாவாள்.



## 329 புண்ணுயிருக்கிற பெண்களுக்கு

1. இலுப்பைநெய் படி ¼ 5. புங்கம்பால் உழக்கு
2. சங்கங்குப்பி வேர் 6. நிலக்கடம்பு வேர்
3. சங்கம்வேர் 7. பரங்கிப்பட்டை
4. செங்கத்தரி வேர்

இவை வகைக்குப் பலம் ஒண்ணரையாகக்கொண்டு, ஒன்றாய்க் கூட்டி யெரித்து உள்ளுக்கு ஒரு கரண்டி கொடுத்து வரவும். பிள்ளை பெற்றால் சற்றுப் புகட்டி, மேலுக்கும் தடவவும்.

## 330 கிராணிக்கு மகாவாரணா சிங்கக் குளிகை.

1. இரசம்
2. சாதிலிங்கம்
3. நாவி
4. ...காரம்
5. அதிவிடயம்
6. சுக்கு
7. மிளகு
8. திப்பிலி
9. ஓமம்
10. கடுக்காய்
11. சீரகம்
12. வெட்பாலை
13. அரிசி
14. அரைபொடி
15. ஊமத்தை விரை
16. கழற் பருப்பு
17. மாதளத்தோடு

இவையெல்லாஞ் சமனிடைகொண்டு, சரியிடை அபினுங் கூட்டி ஊமத்தங்கியாழத்தை விட்டு அரைத்து குன்றியளவு உருண்டைபண்ணி மார்நோயுக்கு மோரிலே கொள்ளவும்.

## 331 கடின வாயுவுக்கு.

1. தூதுளம்பழம் படி 1 2. கண்டங்கத்திரிப்பழ படி 1

இவை யிரண்டிலும் சார்பிழிந்து இந்தச் சாற்றுக்குப் பாரு பழம் பாசிச்சாறு விட்டுக்காய்ச்சிக் குழம்பாகிறபோது,

1. அரத்தை
2. சீரகம்
3. திரிகடுகு
4. திப்பிலி மூலம்
5. கொடுவேலி வேர்
6. பரங்கிப்பட்டை

இவைகள் சூரணம்பண்ணி, வகைக்குப் பலம் அரைபோட்டு இரக்கி, யாறவிட்டுப் பொடிபண்ணி, தேனில் ஒருகடி கொள்ளவும்.

## 332 எலி கடிக்கு.

1. சித்திரமூலத்தைலம்
2. கோடவேலிவேர்
3. அலரிவேர்
4. பெருமருந்து
5. எட்டிவேர்
6. புன்னை வேர்
7. முருங்கை வேர்
8. புன்முருங்கை வேர்
9. எருக்கம் வேர்
10. பேய்ப் பீர்க்கம்வேர்
11. ஊமத்தை வேர்
12. ஆடுதின்னாப்பாளை வேர்
13. மிளகரணை வேர்
14. சிறுகுறிஞ்சான் வேர்
15. காட்டாமணம் வேர்
16. சிற்றுவரைக் கிழங்கு
17. பிராயம் வேர்
18. உத்தாமணி வேர்
19. கண்டங்கத்திரி வேர்

இவைகளை வகைக்கு பலம் 1 கொண்டு தண்ணீர் விட்டு குறுணியாகக் காய்ச்சி இதற்கு,

1. சிற்றாமணக்கு எண்ணை படி 1
2. வெள்ளாட்டுப்பால் ,, ,,
3. மிளகு ,, ,,
4. வெள்ளைப்பூண்டு ... 1
5. ஆவாரம்பட்டை
6. காட்டாமணக்குமுத்து ,, ,,
7. பெருங்காயம் விராகனி ½

இந்தப்படிக்குக் கூட்டி, பதத்தில் வடித்து, உள்ளுக்கு ஒரு கரண்டி கொடுக்கவும்.

## 333 கல்லடைப்புக்கு.

1. மாவிலிங்கம் வேர்
2. நெருஞ்சி வேர்
3. சிறுபூளை வேர்
4. விருமுட்டிவேர்
5. மூங்கில்வேர்
6. சிற்றாமணக்கு வேர்
7. நீர்முள்ளி வேர்
8. மணலி வேர்
9. செங்நெருஞ்சிவேர்
10. கருத்தகாக்கோணன்வேர்

இவை சமனிடை கொண்டு கியாழம்வைத்துக் கொள்ளவும்.

## 334 நிதம்ப நாற்றத்திற்கு.

1. கருவேலம்பட்டை
2. வேப்பம்பட்டை
3. பேய்ப்புடலை
4. சீந்திற்றண்டு
5. கண்டங்கத்தரி

இவை யைக்தையுஞ் சமன் கொண்டு பாணையில் போட்டு கியாழமிட்டுக் கழுவவும்.



## 335 பரங்கிப்பட்டை சூரணம்.

1. பரங்கிப்பட்டை ப 5
2. சுக்கில் ,,
3. கடுக்காய் ,,
4. தானிக்காய் பலம்
5. நெல்லிபருப்பு ,,

இவையும் இவற்றுடன்;

1. சுக்கு
2. மிளகு
3. திப்பிலி
4. திப்பிலி மூலம்
5. செவ்வியம்
6. அரத்தை
7. சித்திரமூலம்
8. சீரகம்
9. கருஞ்சீரகம்
10. வாய்விளங்கம்
11. சிறுதேக்கு
12. அதிவிடயம்
13. சாதிக்காய்
14. கிராம்பு
15. சாதிபத்திரி
16. இலவங்கப்பட்டை
17. இலவங்கப்பத்திரி
18. சிறுநாகப்பூ
19. ஏலம்
20. தாளிச்சபத்திரி
21. கடுகுரோகணி
22. குருசாணி
23. ஓமம்
24. விழலரிசி
25. கற்கடகசிங்கி
26. அரேணுகம்
27. கிலவேம்பு
28. கொத்தமல்லி
29. கார்போக அரிசி
30. கடாமாஞ்சில்
31. வலம்புரிக்காய்
32. கசகசவிரை
33. பெருங்காயம்
34. வசம்பு
35. சதகுப்பை
36. வட்டத்திருப்பி வேர்

இவையெல்லாம் பலம் 5-ஆகச் சொன்னவுடன் பொடி. கெந்தகம் பலம் இரண்டரை சுத்தி பண்ணி யாவற்றையும் வறுத்துக் கூட்டி யிடித்து, சூரணம் பண்ணி, ஒரு படி வெந்நீரில் கொள்ளவும்.

## 336 கைத்தாழை நாற்றத்திற்கு.

1. பீர்க்கிலை
2. முளிமஞ்சள்

இவை யிரண்டையும் ஊமத்தம் இலைச்சாறு வார்த்தரைத்துப் பூசவும்.

## 337 நீர்க்கட்டுக்கு.

1. கல்நார் 
2. கல்மதம் 
3. கர்ப்பூரசிலாசத்து 
4. வெண்காரம் 
5. பலகரை சுட்ட சாம்ப

இவை யைந்துஞ் சரிகொண்டு, பொரித்து, யொழம்வைத்து கால் படி கருங்கொள்ளுங் கூட்டி, 4-நாழி தண்ணீர் வார்த்து உழக்காய்க் காய்ச்சி கடைமருந்து கூட அரைத்துக் கரைத்துக் கொடுக்கவும். கல் முரிந்து விழும்.

## 338 இதுவுமதே வேறு முறை.

ஆடாதொடை வேரைக் யொழமிட்டு 2-நேரும் கழுவத் தீரும்.

## 339 உட்டம்பு நாற்றத்திற்கு.

1. தும்பை பலம் 1 2. கரந்தை பலம் 1

இவை யிரண்டும் அரைத்து மேனுக்குப் பூசவும்.

## 340 வாய் நாற்றத்திற்கு.

1. கோட்டம் 
2. கருங்காலித்தோல் 
3. சேருப்படை 
4. பொடுதலை

இவை சமன்கொண்டு பொடி செய்து தண்ணீரிற் காய்ச்சிக் கொப்பளிக்கவுந் தீரும்.

## 341 கல்லடைப்புக்கு.

தேந்தாங் கொட்டை 12-வெள்ளாட்டுப் பாலில் அரைத்து நாழிப் பாலிற் கொடுக்கவும்.

[கறுத்த ஆட்டின் பாலிற் கூட்டவும். கல் 3-நாழிகையில் முறிந்து விழும்.]

## 342 வாயிலிருந்து இரதகம் வருகிறதற்கு.

1. நற்சந்தனம் 
2. சர்க்கரை

இவை சமன்கொண்டு சமன்வெண்ணெயிற் பிசைந்து கொடுக்கவும்.



## 343 கண்டங்கத்திரி நெய்.

கண்டங்கத்திரி இரண்டையை விராகனிடை நாழித் தண்ணீரிற் போட்டுப் பதக்காகக் காய்ச்சி,

| | | | |
|---|---|---|---|
| 1. நெய் | பலம் 4 | 9. இந்துப்பு | பலம் 5 |
| 2. பசும்பால் | ,, ,, | 10. திரிபலை | ,, ,, |
| 3. பிரமிச்சாறு | ,, ,, | 11. சிறுதேக்கு | ,, ,, |
| 4. ஆடாதோடை யிலைச் சாறு | ,, ,, | 12. தோளகடைவேர் | ,, ,, |
| | | 13. வசூசிகை | ,, ,, |
| 5. கையாந்தகரை யிலைச் சாறு | ,, ,, | 14. கோட்டம் | ,, ,, |
| | | 15. ஏலம் | ,, ,, |
| 6. கண்டங்கத்திரி யிலைச் சாறு | ,, ,, | 16. சிற்றுமல்லி | ,, ,, |
| | | 17. பேராமல்லி | ,, ,, |
| 7. கரக்கம் | ,, ,, | 18. வழங்கருப்பு படி | பலம் 1 |
| 8. தூர்கனு | ,, ,, | | |

இவை யரைத்துக் கரைத்து வடித்து 4-துளி நக்க, க்ஷயம், காசம், உடம்பெரிவு. விடாயிருமல், உடம்பு வறட்சி, யிவையெல்லாந் தீரும்.

## 344 எலி கடிக்கு.

1. நாகல்பட்டை 
2. நல்லத்திப்பட்டை 
3. கருவேலம்பட்டை 
4. மருதம்பட்டை

இவை நான்கின் சாறும் உழக்குப் பசும்பாலில் கூட்டி, 8-நாள் கொடுக்கவும்.

பத்தியம்—உப்பு, புளிப்பு ஆகாது.

## 345 இதுவுமதே வேறு முறை.

நுணாயிலையில் பசும்பால்விட்டு, இடித்து உரிசாறுபிழிந்து கொம்புதேன் அரை ஆழாக்கு விட்டுக்கொடுக்கவும்.

## 346 இதுவுமதே மற்றொரு முறை.

1. கடுக்காய் 
2. தாமரைப்பூவின்உள்ரேகை

இவையிரண்டையுஞ் சமன் கொண்டு, தேனில் அரைத்துக் கொடுக்கவும்.

### 347 இதுவுமதே யின்னொரு முறை.

இருவேளைவேர்ச்சாற்றைப் பாலிற் கொடுக்கவும்.

### 348 இதுவுமதே பிறிதோர் முறை.

1. இலவம் பிசின் 2. இலவமுகிள்

இவை யிரண்டுந் தேனில் அரைத்துக் கொடுக்கவும்.

### 349 இதுவுமதே வேறொரு முறை.

கொம்பரக்கை வெள்ளாட்டுப்பாலிற் கொடுக்கவும்.

### 350 பைத்தியத்திற்கு.

| | | | |
|---|---|---|---|
| 1. கைத்தாழஞ்சாறு | பலம் 4 | 4. தண்ணீர்விட்டான் கிழங்கு | |
| 2. நரிப்பயித்திலைச்சாறு | ,, 2 | சாறு | பலம் 4 |
| 3. எருமையருகுச்சாறு | ,, 2 | 5. நிலப்பாகற்சாறு | ,, ,, |

இவையுங் காய்ச்சித் தலை முழுகவும். கைப்பும் புளிப்புந் தவிரவும்.

### 351 சகல வாயுவுக்கும்.

| | |
|---|---|
| 1. நீர்முள்ளிவேர் | 13. கோடசபாலப்பட்டை |
| 2. வட்டத்திருப்பிவேர் | 14. கோட்டைக்கரந்தை |
| 3. வெள்ளக்களாப்பட்டை | 15. தேத்தாம்பட்டை |
| 4. பேரண்டைவேர் | 16. நிலவிளாம்பட்டை |
| 5. புளிகருணைவேர் | 17. பெருவிளாம்பட்டை |
| 6. நிலாவாரைவேர் | 18. அச்சுளிப்பட்டை |
| 7. தழுதாழைவேர் | 19. வெண்வேர் |
| 8. நிட்டபேர்முட்டிவேர் | 20. செம்பைப்பட்டை |
| 9. வட்டப்பேய்மிரட்டிவேர் | 21. சிறுகீரைவேர் |
| 10. விஷ்ணுகரந்தை | 22. பரல்போரப்பட்டை |
| 11. செம்பிளிச்சம்பட்டை | 23. சேருப்பட்டை |
| 12. சிவனார்வேம்பு | 24. கரிசிலாங்கண்ணி |

இவைச் சமன் கொண்டு, உலர்த்தியிடித்துக்கொண்டு வஸ்திரகாயம் பண்ணி, கெந்தக வகைசெய்து பொடி 3-பங்கு, சிலவு 1-பங்குமாய்க் கூட்டவும்.



### 352 சகல மேகத்துக்கும்.

| | |
|---|---|
| 1. மிளகரணைப்பட்டை | 19. ஆதொண்டம் வேர் |
| 2. ஆயில்யப்பட்டை | 20. மாவலிங்கம்பட்டை |
| 3. பொரிவிளாப்பட்டை | 21. சிறு கிளாவேர் |
| 4. பேராமுட்டி வேர் | 22. புங்கம் வேர் |
| 5. குட்டிபோரப்பட்டை | 23 சங்கங்குப்பி சமூலம் |
| 6. கோடிவேலி | 24. சாறுவேளை வேர் |
| 7 முருங்கப்பட்டை | 25. மூக்குறட்டைவேர் |
| 8. தூதுவளை வேர் | 26. சத்திசாரணைவேர் |
| 9. உத்தாமணி வேர் | 27. சித்தாமணம்வேர் |
| 10. பூனைகாஞ்சொறி வேர் | 28. இலுப்பப்பட்டை |
| 11. முக்காவேளை | 29. வெட்டகிலுகிலுப்பைவேர் |
| 12. நிலவேம்பு | 30. வில்வபத்திரிவேர் |
| 13. வேப்பம்பட்டை | 31. முருங்கைப்பட்டை |
| 14. முக்கத்தாரி வேர் | 32. புலிதடக்கம்பட்டை |
| 15. முள்ளிச்சுண்டை வேர் | 33. எருக்கம்பட்டை |
| 16. முழுமுருக்கம்பட்டை | 34. சிறுகொஞ்சல்வேர் |
| 17. விசிரிவேர் | 35. கோட்டைகரந்தை |
| 18. கீழ்வேர் | 36. செசப்பூ |

இவை சமனாகக் கொண்டு உலர்த்தி யிடித்துக்கொண்டு வஸ்திரகாயம் பண்ணி, கெந்தக வகை செய்து பொடி 3-பங்கு சிலவு 1-பங்குமாய்க் கூட்டவும்.

| | | | |
|---|---|---|---|
| 1. தேசாவரம் | பலம் 1 | 4. திப்பிலி | பலம் 1 |
| 2. கஸ்தூரிமஞ்சள் | ,, ,, | 5. ஓமம் | ,, ,, |
| 3. பரங்கிப்பட்டை | ,, ,, | 6. கண்டுபாரங்கி | ,, ,, |

இவ்வயாறுங் கூட்டித்தின்னவும். வேளைக்கு பனைப்பட்டையைக்கொண்டு வந்து அரைத்து வெந்நீரிற் குடிக்கவும்.

### 353 புண்புரைகளுக்குத் தைலம்.

நொச்சிவேர், அழிஞ்சல்வேர், விழுதிவேர், புங்கன்வேர், பூவரசன் வேர், சிவன்வேம்புவேர் வகைக்குப் பலம் 10 நையவிடித்துப் பாண்டத்திட்டுக் குழித்தைலமிறக்கிப் புண்புரைகளுக்குப் பூச ஆறும்.

## 351 அருக இரணங்களுக்குத் தைலம்

நெல்லிக் கெந்தகம் பலம் 2, மஞ்ஞளிலை, கெளரி வகைக்கு விராகனிடை 2, இவைகளை ஆவின் நெய்யாலரைத்து அவ்விய சீலையில் தடவி திரிகளாக்கி நெய்யில் தோய்த்து கழி கம்பியிற்கோர்த்துக் கொளுத்திப் பிழிந்து அடியில் பீங்கான் கோப்பை வைக்கத் தைலமிறங்கும். தைலத்தை மூக்கு இரணம், காது இரணம், புரையோடிய இரணம், மேக இரணம் முதலியவைகளுக்கு உபயோகிக்கவும் அன்றி குன்றிப்புடைக் கம்மாறு வெற்றிலையில் வைத்து 5-நாள் உள்ளுக்குக் கொடுக்கக் குட்டம், யோனிப்புற்று, லிங்கப்புற்று, இரத்த இரணங்கள் முதலியவை நீங்கும்.

## 355 மகாவாத கோடரித் தைலம்.

தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய், எள்ளெண்ணெய், புங்கெண்ணெ வகைக்கு கால்படி, தில்லைப்பால், பிரம்மதண்டிப் பால், புங்கம்பால், முருங்கை வேர்ச்சார், கொட்டைக்கரந்தைச்சார், வெள்ளெருக்கன் பால், வெள்ளைக் காட்டாமணக்குப்பால் வகைக்கு அரை ஆழாக்கு, தேங்காய்ப்பால் அரை படி, ஒன்றுசேர்த்துப் பாண்டத்தேற்றிக் கற்கடகம், கரிப்புப்பு, இந்துப்பு, வெள்ளுள்ளி, கடுகு, காயம், மிளகு, மாவிலிங்கன் வேர், வசம்பு, திப்பிலி வகைக்கு 1-கழஞ்சு. இவைகளை தேங்காய்ப்பாலாலரைத்து மேற்படி எண்ணெயிற் கலந்து சிவந்த பதமாய்க் காய்ச்சி வடித்துத் தீல்வாதம், கர்ண வாதம், சித்தவாதம், முடக்குவாதம், நடுக்கு வாதம், வீக்க முதலியவைகளுக்கு மேற்பூச நீங்கும்.

## 356 சாதிலிங்க மெழுகு.

கட்டின லிங்கம் அல்லது சுத்தித்த லிங்கம் பலம்-1, பீங்கான் கோப்பையிலிட்டுச் சாரஜெயநீர் அல்லது சாரத்திராவகம் நிரம்ப விட்டு மேல்கோப்பையால் மூடி வாய்ப்புறம் உருத்துமாவு சீலை செய்து சட்டியில் பீங்கான் கோப்பையின் பாகம் புதையும்படி மணலிட்டு அக்கோப்பையை வைத்து மேற்சட்டிக்கொண்டு மூடிக் கல் அடுப்பு வைத்து தீபமேற்றி மேற்படி சட்டியை வைத்து ஒரு ஜாமமெரித்து மருந்தைக் கல்வத்திலிட்டு திப்பிலி, வெண்மிளகு வகைக்குப்பலம் கால், பூரம் கழஞ்சு 1, சேர்த்து மைபோலரைத்து தேனாலரைத்துக் கடலைப்பிரமாணம் 3, 5, வேளை யுண்ணக் காசம், வலி, பிரமேகம், கட்டசாரம், சன்னி இசிவு, கிரகணி, வாதரோகங்கள் மகாசன்னி முதலியவை நீங்கும்.



## 357 சன்னிக்குத் தைலம்.

மாவிலிங்கன் வேர், புனல்முருங்கை வேர், கூவிளம் வேர், நொச்சி வேர், எருக்கன் வேர், வாதமடக்கி வேர், கருவாய்ப் பட்டை, வெட்டிவேர், அழிஞ்சல் வேர், புங்கன் வேர் வகைக்கு பலம் 5, இவைகளை யொன்றுசேர்த்து நைய யிடித்துப் பாண்டத்திட்டுப் புங்கெண்ணெய், வேப்பெண்ணெ, எள்ளெண்ணெச் சமன் சேர்த்து மேற்படி சாரத்தில் வார்த்துப் பிசறி குழித்தைலமிறக்கிச் சன்னிகளுக்கு மேற்பூச நீங்கும்.

## 358 காதுநோய்க்குத் தைலம்.

கொள்ளுக்காய்த் தோல், கொழுஞ்சி வேர்த்தோல், வலம்புரிக்காய், இடம்புரிக்காய், கடல், நுரை, மருள்பட்டை, நண்டிரைச்சி, வகைக்கு அரை பலம், ஆவின்பாலாலரைத்து எள்ளெண்ணெய், வேப்பெண்ணெச் சமன் சேர்த்துக் காய்ச்சி வடித்துக் காதில் 5-துளி விடக் காதுக்குத்து, காதெழுச்சி, காதில் சீழ்வடிதல், காதிரைச்சல் முதலியவை நீங்கும்.

## 359 வேறு ஜன்னிக்குத் தைலம்.

வேப்பம்பட்டை, அதிமதுரம், வேப்பம்வித்து, ஆவாவேர், ஊமத்தன்வேர், மேனிவேர், குன்றிவேர், இந்துப்பு வகைக்கு விராகனிடை 1, இவைகளை ஆடாதோடைச் சாற்றாலரைத்து மேற்படிசார் எள்ளெண்ணெய், தேங்காய்ப்பால் வகைக்குப் படி-1, கலந்துக் காய்ச்சிவடித்து மேலுக்குப்பூச சன்னிசுர முதலியவைபோம் அன்றி உள்ளுக்கு முபயோகிக்கலாம்.

## 360 நுரையீரப்புத் தைலம்.

கடல்நுரை, கோஷ்டம், மஞ்சள், கெந்தி, சந்தனம், சதகுப்பி, தேன்மெழுகு, விளாமிச்சு, முத்தக்காசு, மஞ்சிட்டி, இலுப்பைப்பூ, கடுகுரோகணி, வேலம்பிசின், பெருங்குரும்பை, அவுரிவேர், வெட்டிவேர், கொடிக்கள்ளிவேர், எருக்கன்வேர் வகைக் குகழஞ்சு-1; பிரம்மதண்டிப்பாலாலரைத்து வேப்பெண்ணெய் நல்லெண்ணெய், நெய் வகைக்குக் கால் படி ஒன்றுகலந்து பதமாய்க்காய்ச்சிவடித்து மேற்பூசி சகலவாதரோகஜன்னி சுரங்களும் நீங்கும்.

## 361 சகல சன்னிக்குத் தைலம்.

வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், எள்ளெண்ணெய், ஆவின் நெய், ஆமணக்கெண்ணெய் வகைக்கு கால்படி. பாண்டத்திலிட்டுக் கோழிமுட்டை வெண்கரு 25, உடைத்து வார்த்து

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. இலிங்கம் | பலம் | 1 | 6. ஆனைத்திப்பிலி | பலம் | ¼ |
| 2. மிளகு | ,, | ,, | 7. சூதம் | ,, | ,, |
| 4. திப்பிலி | ,, | ¼ | 8. நாபி | ,, | ,, |
| 5. பாஷாணம் | ,, | ¼ | 9. லவங்கம் | ,, | ,, |
| 3. தீமுருகல் | விரா | 1 | 10. கேந்தி | ,, | ⅛ |

இவைகளைக் கொடிவேலிச் சாமுத்தாலாட்டி மேற்படி எண்ணெயிற் கலந்து அடுப்பேற்றிக் கொதி வருஞ் சமயத்தில்

1. எருக்கன்பால்
2. சதுரக்கள்ளிப்பால்
3. திருகுகள்ளிப்பால்
4. முள்ளுகள்ளிப்பால்
5. கேசரிப்பால்
6. தேசிச்சார்
7. முலைப்பால்
8. இலைக்கள்ளிப்பால்
9. முசல்செவிக்கள்ளிப்பால்
10. கோடிக்கள்ளிப்பால்

வகைக்கு அரை ஆழாக்கு சேர்த்து காட்டெருமைப்பால் பலம் 1, ஆற்றலரிசி, வெள்ளுள்ளி வகைக்கு கால் பலம், ஒக்கக் கலந்துப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கோரோசனம், குங்குமப்பூ, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம் வகைக்கு விராகனிடை 1, பொடித்துப்போட்டுக் கலந்து தைலத்தை மேற்பூச முடக்கு வாதம், நடுக்குவாதம், சர்வ வாதம், கல்வாதம், குடைச்சல் வாதம், குத்துவாதம், வீக்கம், ஜன்னிரோக முதலியவை யாவும் நீங்கும் அன்றி பரங்கிப்பட்டைச் சூரணத்தில், 5 துளி விதம் வைத்துண்ணலாம். கடும்பத்தியம்.

## 362 ஜன்னிக்கு வீரவச்சுடர்த் தைலம்.

கல்லாயின் மாங்கிஷம், இரசம், கெந்தகம், வாளம், நாபி அரிதம், மனோசிலை, கௌரி, அரிதாரம், படிகாரம், வெண்காரம், வகைக்கு விராகனிடை 1. பொடித்து நல்லிய சீலையில் பொட்டளங்கட்டி வேப்பெண்ணெய் விட்டெரித்து முட்டையை யப்புறப்படுத்தி தைலத்தை பிரலாப சன்னிக்கு மேற்பூச நீங்கும்.



## 363 சகல மேகரோக நிவாரண மெழுகு.

1. சதுரக்கள்ளிவேர்
2. இலைக்கள்ளிவேர்
3. சிறுசின்னிவேர்
4. பூவரசன்வேர்
5. சிவகரந்தைச்சமூலம்
6. அரசன்வேர்
7. நுணாவேர்
8. நற்சங்கன்வேர்
9. சித்திரமூலம்வேர்
10. வெள்ளறுகுசமூலம்
11. திரிமூலக்கள்ளிவேர்
12. கோம்புகள்ளிவேர்
13. சீந்தில்வேர்
14. சிவன்வேம்புசமூலம்
15. நிம்பவேர்
16. புங்கன்வேர்
17. வெள்ளெருக்கன்வேர்
18. மாவேர்
19. அழிஞ்சல்வேர்
20. கழற்சிவேர்

வகைக்குச்சூரணம் பலம்-1.

1. கார்போகிவரிசி
2. பரங்கிச்சக்கை
3. கடுக்காய்த்தோல்
4. சித்தரத்தை
5. தாளிசப்பத்திரி
6. சீரகம்
7. கோஷ்டம்
8. மாசக்காய்
9. காட்டுச்சீரகம்
10. மிளகு
11. ஓமம்
12. அரிசிதிப்பிலி
13. தேத்தான்வித்து
14. வாலுளுவையரிசி
15. தேவதாரி
16. சிறுதேக்கு
17. கஸ்தூரிமஞ்சள்
18. கிராம்பு
19. கருஞ்சீரகம்
20. வசம்பு
21. சாதிக்காய்
22. மூந்திரிகை
23. சோம்பு
24. ஏலம்
25. எட்டிவிரை
26. வாய்விளங்கம்

வகைக்குச்சூரணம் பலம் அரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கேந்தி | பலம் | 1 | 5. தாரம் | பலம் | ¼ |
| 2. படிகாரி பற்பம் | ,, | ,, | 6. ஊசிக்காந்தம் | ,, | ,, |
| 3. பூரம் | ,, | ½ | 7. மனோசிலை | ,, | ,, |
| 4. சூதம் | ,, | ,, | 8. விரம் | ,, | ⅛ |

இவைகளை யொன்றாக் கலந்து கல்லுரலிலிட்டு 20 கோழி முட்டை உடைத்து வார்த்துப் பதமாய்ப் பனைவெல்லஞ் சேர்த்துப் பூணில்லா உலக்கையால் மெழுகாகும் வரையில் இடிப்பரக்க

னாடி கொட்டைப்பாக்குப் பிரமாணம் தேக பலமறிந்து கால், அரை மண்டலமுண்ண கைகால் வெடிப்பு, சூலை, அரைக்கால் குடைச்சல், சிப்புருதி, கண்டமாலை, குஷ்டரோகம், நமைப்பு, யோனிப்புற்று, லிங்கப்புற்று, அரையாப்பு, கருப்பிரந்தி, செம்பிரந்தி, நாணற்பிரந்தி, வெடிப்பிரந்தி, கட்டைப் பிரந்தி, தொடைக்குப் புண், குழிப்புண், இரணம், கீல் வாதம், தமரக வாதம், குத்து வாதம், சச்சு வாதம், குடைச்சல் வாதம், நரித்தலை வாதம், விக்க முதலியவை நீங்கும். இச்சா பத்தியம்.

## 364 மேகரோக சண்டமாருத மெழுகு.

| | |
|---|---|
| 1. வெள்ளருகுச்சமூலம் | 12. சிவனார்வேம்புச்சமூலம் |
| 2. நற்சங்கன்வேர் | 13. முத்தின்தேங்காய்நெற்று |
| 3. கேருடன்கிழங்கு | 14. குமுளன்வேர் |
| 4. அமுக்கனாங்கிழங்கு | 15. விளாத்திவேர் |
| 5. அத்திவேர் | 16. சீந்தில்வேர் |
| 6. வெட்பாலைவேர் | 17. மிளகுகருணைவேர் |
| 7. சேங்கத்தாரிவேர் | 18. குன்றிமணிவேர் |
| 8. நீர்முள்ளிவேர் | 19. கருஞ்சீரகம் |
| 9 பிரப்பங்கிழங்கு | 20. சித்திரமூலம் |
| 10. நற்சீரகம் | 21. கரப்பான்பட்டை |
| 11. பூதவிருட்சப்பட்டை | 22. கூவிளம்வேர் |

இவை வகைக்கு சூரணம் பலம் 1.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. நெல்லிக்கெந்தி | பலம் | 1 | 5. சூதம் | பலம் | ¼ |
| 2. இலிங்கம் | „ | ½ | 6. சேங்கொட்டை | „ | 2½ |
| 3. துருசு கழஞ்சு | „ | „ | 7. பூரம் | „ | ¼ |
| 4. துத்தம்கழஞ்சு | „ | „ | 8. பரங்கிச்சூரணம் | „ | 5 |

இவைகளை யொன்றாயடித்து முன் சூரணத்தோடு கலந்து கல்வத்திலிட்டுக் கோழிமுட்டை 10 உடைத்து வார்த்தரைத்து பதமாய்ப் புளியவிட்டுச் சேர்த்துப் பூவில்லா உலர்ந்தபின் திப்பிலிக் கொட்டைப்பிரமாணம் தக்கப் பலமறிந்து கால், அரைமண்டலந் தாக்க சூலை, பிரந்தி, புண், சொருக்கு, முடைக்கு, சொறி சிரங்கு, புழுவெட்டு, வெடிப்புண் முதலிய மேகரோகங்கள் நீங்கும்.



## 365 உப்பு மெழுகு.

பசும்பால், தும்மட்டிக்காய்ச் சாறு வகைக்கு அரை படி பாண்டத்திலிட்டு

| | |
|---|---|
| 1. வெடியுப்பு | 8. இந்துப்பு |
| 2. மூங்கிலுப்பு | 9. வளையலுப்பு |
| 3. கருப்புப்பு | 10. அமுரியுப்பு |
| 4. உவருப்பு | 11. வெண்காரம் |
| 5. சவட்டுப்பு | 12. சிகப்புப்பு |
| 6. பூநீர் | 13. படிகாரம் |
| 7. பாறையுப்பு | 14. சோற்றுப்பு |

வகைக்கு கால் பலம் பொடித்து மேற்படி பாண்டத்திற் கரைத்து அத்தி வேரால் துழாவிக்கொண்டே சுண்டக் காய்ச்சிக் கல்வத்திலிட்டு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பூரம் | பலம் | 1 | 4 வீரம் | பலம் | ¼ |
| 2. மிளகு | „ | „ | 5. திப்பிலி | „ | ½ |
| 3. சுக்கு | „ | ¼ | 6. வாளம் | „ | „ |

சேர்த்து திரிபலைக் கியாழத்தால் 2-ஜாமம் முலைப்பாலால் 2-ஜாமம் மலைத்தேனால் அரைச்சாமம் ஆட்டி மெழுகுபோற் செய்து கடலைப் பிரமாணம் அந்திசந்தி 5-7-நாள் சுக்கு நீரி லன்னைபித்தவாய்வு, குன்மம், புளியேப்பம், அக்கினி மந்தம், அசீரண பேதி, வயற்றிரைச்சல், உப்பிசம், பசி, மந்தம், வாய் நீரூறல், வாந்தி, பித்தவெரிச்சல் முதலியவை போம். இச்சா பத்தியம்.

## 366 சார மெழுகு.

ஒரு பலம் நாட்டுச் சாரத்தை கொடிக்கள்ளிச் சாற்றில் ஒரு ஜாமம் வேலிச் சாற்றில் ஒரு ஜாமம் வெள்ளெருக்கன் பாலில் ஒரு ஜாமம் கொடிக்கள்ளிப் பாலில் ஒரு ஜாமம் அரைத்து மேற்படி பாலாலாட்டி சிறு சுண்டக்காய் பிரமாணம் காலைமாலை 5-7-நாளுண்ண நடுக்கு வாதம், முடக்கு வாதம், பட்சவாதம், நரித்தலை வாதம், குடைச்சல் வாதம், குன்மக்கட்டு, பிரமேகம், நீரடைப்பு, வாய்வுக்கட்டு, அன்னிய தேச ஜலக்கட்டு, முதலியவை நீங்கும் பேதியதிகரித்தால் பழச்சாறுமோரும் பத்தியம் வியாதிகளுக்குத் தக்கவைகளாம்.

## 367 பஞ்சாருத மெழுகு.

கட்டினவீரம், அல்லது சுத்திசெய்த வீரம் பலம் 1, சட்டியிலிட்டுச் செப்புநெரிஞ்சிச்சாறு, முலைப்பால், கொடிக்கள்ளிப்பால் வகைக்கு ஒருஜாமஞ் சுருக்கியிட்டு சாரஜெயநீர் அல்லது சாரத்திராவகம் ஒருமணிநேரஞ் சுருக்கிட்டுக் கல்வத்திலிட்டு இலிங்கச்செந்தூரம், சுத்தித்தபூரம் வகைக்குக்கழஞ்சு 1, மிளகு, திப்பிலி, சித்திரமூலவேர்த்தூள் வகைக்குப்பலம் கால் சேர்த்து மலைத்தேனுவிட்டி மிளகுப்பிரமாணம் அரைத்த மிளகில் வைத்துண்ணவுமிப்பேதியென்னும் வாந்திபேதி; உருத்திரசன்னி, விஷச்சன்னி, அலர்ச்சன்னி, பிடரிசன்னி, மூலவாதசன்னி, சீதஜ்வரம், ஜ்ஞனந்தவாய்வு, கைகால்முடக்கு, பாரிசவாய்வு, பவுத்திரம், திமிர் வாதை, அரையாப்பு, கண்டமாலை, கிரந்திப்புண், குன்மம், சூலை, பாரிசவாய்வு, யோனிப்புற்று, மருட்கொறுக்கு முதலிய மேக ரோகங்கள் நீங்கும்.

## 368 சகலரோக சண்டமாருத மெழுகு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. சுக்கு | கழஞ்சு | 2 | 8. நன்னாரி | கழஞ்சு | 11 |
| 2. திப்பிலி | ,, | ,, | 9. பரங்கிச்சக்கை | ,, | ,, |
| 3. மிளகு | ,, | ,, | 10 கொடிவேலி | ,, | ,, |
| 4. நெல்லிக்காய் | ,, | ,, | 11. சாதிக்காய் | ,, | ,, |
| 5. தான்றிக்காய் | ,, | ,, | 12. கோரோசனை | ,, | 1 |
| 6. கடுக்காய் | ,, | ,, | 13. குங்குமப்பூ | ,, | ,, |
| 7. வட்டத்திரிவேர் | ,, | 11 | 14. பச்சைகற்பூரம் | ,, | ,, |

இவைகளைச் சூரணித்து சுத்தித்த வீரம், பூரம், லிங்கம், அரிதாரம், மனோசிலை வகைக்குக் கழஞ்சு 1. சேர்த்து தான்றிக்காய், மிளகு, சமன்கொண்டு கியாழமிட்டு அக்கியாழத்தால் ஒருஜாமமாட்டித் தேன்விட்டரைத்துக் கடலைப்பிரமாணம் தக்க வனுபானங்களில் தாக்க சூலை, குடல்வாய்வு, திமிர்வாய்வு, சுரோணிதவாய்வு, கரப்பன்பாண்டு, தலைச்சுழட்டல், பித்தவாய்வு, புண், சொறி, சிரங்கு, இரணம், பந்தாரகாசம், சுவாசகாசம், வலி, கால்கரவாதம், பிரவீச்சு நீர்ப்புற்று, குடைச்சல்வாதம், பிடிப்புவாதம், யோனிச்சூலை முதலியவை நீங்கும். வைத்தியம் வியாதிக்குத் தக்கவைகளாம்.



## 369 கெந்தக மெழுகு.

சுத்தித்த கெந்தியலம் 1, சட்டியிலிட்டுப் பிரம்மதண்டி யென்னைக் கொஞ்சங்கொஞ்சமாய் விட்டுக்கிளறிக்கொண்டே தீபாக்கினியாய் எரிக்கமெழுகாகும் அம்மெழுகைச் சுண்டக்காயளவு 3-நாளிருபோதுண்ணக் குடல்வாய்வு, விரைவாதம், பாண்டிவீக்கம், சொறிசிரங்கு, இரணம், குன்மமுதலியவை நீங்கும்பத்தியம் வியாதிக்குத்தக்கவைகளாம்.

## 370 வீர மெழுகு.

| | |
|---|---|
| 1. பூநீர் | 8. அமுரியுப்பு |
| 2. கல்லுப்பு | 9. பாறையுப்பு |
| 3. இந்துப்பு | 10. வளையலுப்பு |
| 4. சோற்றுப்பு | 11. வெடியுப்பு |
| 5. மூங்கிலுப்பு | 12. முள்ளங்கியுப்பு |
| 6. கருப்புப்பு | 13. சீயப்புப்பு |
| 7. நுரையுப்பு | 14. படிகாரம் |

வகைக்குப்பலம் கால்.

இவைகளைப் பொடித்துப்பாண்டத்திட்டுப் பேய்ச்சுரைமட்டிச்சார் ஆவின்பால் வகைக்குப்படி அரை, வார்த்து சுத்திவெரியில் கிளறி மணல்களை அப்புறப்படுத்தி அடுப்பேற்றிச் சுண்டயெரித்துக் கல்வத்திட்டுச்சுத்தித்த வீரம் பலம் 1, பூரம் பலம் அரை, திரிகடுகுவகைக்குக்கழஞ்சு 2, வாளம் பலம் கால், கூட்டித்திரிபலைக்கியாழம் முலைப்பால் வகைக்கு ஒரு சாமமாட்டி மலைத்தேனால் அரை மணிநேரமரைத்து மிளகுப்பிரமாணம் அந்தி சந்தி 3-5-நாள் பனைவெல்லத்தில் வைத்துண்ண சூலை, மகோதரம், கிரந்தி, குன்மம், நீர்க்கோவை, வாதரோகம், முடக்குவாதம், வலி, அண்டவாதம், தமரகவாதம், தந்திவாதம், குதிகவாய்வு அட்டகுன்மம் ஜன்னி 13-ம் போம். பத்தியம் சிறுகீரை, முருங்கைப்பிஞ்சு, பொன்னாங்கண்ணி, தூதுளை, காடை, கோழி, சிற்றண்டம், ஆவின்பால், நீர்மோர், வெண்ணீர்சாதம், வறுத்தஉப்பு, சுட்டபுளி ஆகும்.

## 371 குடைச்சல் வாதத்திற்குத் தைலம்.

எள்ளெண்ணெய், வேப்பெண்ணெய், எருக்கன் பால், புளியிலைச்சார், நொச்சிச்சார், வெள்ளாட்டுப்பால் வகைக்கு அரைசேர், அபின் அரை தோலா, ஒன்றுசேர்த்துக் காய்ச்சி வடித்து மேற்பூசக் குடைச்சல்வாதம் நீங்கும்.

## 372 கட்டுவாதி மெழுகு.

1. சாதிக்காய்
2. அதிவிடயம்
3. லவங்கம்
4. சீனப்பட்டை
5. கற்கடகசிருங்கி
6. சுக்கு
7. காசுகட்டி
8. காயம்
9. சாதிபத்திரி
10. கூகைநீறு
11. காட்டாத்தி
12. ஓமம்
13. குரோசானி
14. புளியங்கொட்டைத்தோல்
15. கஞ்சா
16. அசமதாகம்

வகைக்கு பலம் 1.

இவைகளைச் சூரணித்துச் சம்பழச் சாற்றால் ஒரு ஜாமமாட்டி பின் விளாம்பிசினி அரை பலம், அபின் கால் பலம், கெந்தி அரை பலம் சேர்த்து மேற்படி சாற்றால் மூன்று நாள் விடாதாட்டி நான்காவது நாள் கற்கடகசிருங்கி, மாதுளம்பழத் தோல் சமன் சேர்த்து எரக்கிய கியாழத்தால் ஒரு ஜாமமாட்டி குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கற்பூரம் வகைக்கு முக்கால் பலம் சேர்த்து தேன் விட்டு மெழுகுபோற் செய்து சுண்டக்காயளவு கொடுக்க ஆமபேதி, சீதபேதி, உஷ்ணபேதி, மந்தபேதி, கிரகணி, அதிசாரம், மூலச்சூழிச்சல் முதலியவை நீங்கும்.

## 373 இலிங்க மெழுகு.

1. சுக்கு
2. திப்பிலி
3. நெல்லிக்காய்
4. பரங்கிச்சக்கை
5. ஏலரிசி
6. மிளகு
7. தான்றிக்காய்
8. கடுக்காய்
9. சீரகம்
10. தேத்தான்விதை

வகைக்குச்சூரணம் பலம் 1, இலிங்கம் பலம் 1, பூரம் கால், அரிதாரம் விராகனிடை 1, வீரம் கால், வெண்காரம் பலம் 1, படிகாரம் பலம் 1, கெளரி விராகனிடை கால், இவைகளை ஒன்றாயடுத்திச் சம்பீரச் சாற்றால் 6-நாள் விடாதாட்டிக் குன்றிப் பிரமாணம் அநுபான மறிந்துண்ண சகல வாதசுர சன்னிகள் நீங்கும்.



## 374 நாகரச மெழுகு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. நாகம் | பலம் | 1 | 8. சூதம் | பலம் | 1 |
| 2. வீரம் | ,, | ,, | 9. கெளரி | ,, | ,, |
| 3. இலிங்கம் | ,, | ,, | 10. அரிதாரம் | ,, | ,, |
| 4. அயம் | ,, | ,, | 11. காந்தம் | ,, | ,, |
| 5. சாரம் | ,, | ,, | 12. பூரம் | ,, | ,, |
| 6. துத்தம் | ,, | ,, | 13. துருசு | ,, | ,, |
| 7. காரம் | ,, | ,, | 14. சீனம் | ,, | ,, |

வகைக்கு பலம் கால்.

நாகத்தை உருக்கி சூதம் தொந்தித்து மற்றைய சரக்குகளையொன்றாயடித்து மருந்துகளெடைக்கு இரட்டிப்பு மிளகு சேர்த்து நிம்பழச்சாற்றால் மூன்று நாள், மிளகு கியாழத்தால் மூன்று நாள், மலைத்தேனால் ஒரு ஜாமமாட்டி ரவியில் நவநாள் வைத்து குன்றிமணியளவு 5-நாள் இருவேளை யுண்ண கிரந்தி, புற்று, இரணம், வாதரோகங்கள் முதலியவை போம். இம்மருந்தை வாததேகிகளுக்கு பலமறிந்து சர்வ ஜாக்கிரதையுடன் கையாடவும். மருந்துண்டவுடன் மிளகு கியாழம் குடிப்பிக்கவும்.

## 375 சூதகவாய்வுக்கு மெழுகு.

வரிக்கும்மட்டிச் சார், வெள்ளுள்ளிச் சார், நொச்சிச்சார், வகைக்குப் படி 1, பாண்டத்திட்டு இலிங்கம், ஓமம், பொரித்தகாயம், வெண்காரம், மிளகு, வாளம், வகைக்குப் பலம் 1, ஆர்க்கப் பொடித்து மேற்படி பாண்டத்திற் கரைத்துச் சுண்டவெரித்துக் கல்வத்திட்டு மலைத்தேனால் ஒரு ஜாமமாட்டி சிறு சுண்டைக்காயளவுண்ண சூதகவாய்வு, குன்ம முதலிய வாத ரோகங்கள் நீங்கும்.

## 376 வேறு கெந்தக மெழுகு.

நெல்லிக்கெந்தியை ஓட்டிலிட்டு அடுப்பேற்றி சிறு சின்னிச் சார், காட்டுக்கள்ளிச்சார், சமன் சேர்த்து மேற்படி கெந்திக்குக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கிளரிக்கொண்டே ஒருநாள் சுருக்கேய்ந்தெடுத்துக் கல்வத்திட்டுச் சமன் திப்பிலி சேர்த்து மலைத்தேனலாட்டி 2-குன்றிப் பிரமாணம் தக்க அனுபானங்களில் தாக்க சகல வாத சீதள ரோகங்களும் நீங்கும்.

## 377 பூர மெழுகு.

திரிபலை, திரிகடுகு, திரித்திரி வகைக்குப் பலம் 1, பூரம் அரை பலம், இலிங்கம் விராகனிடை 1, ஒன்றாய்ச் சேர்த்துக் கழற்சி யிலைச்சாறு, வெள்ளருகஞ்சாறு, மலைத்தேன், இவைகளில் வகைக் கொரு ஜாமமாட்டிக் கடலைப் பிரமாணம் 5-7-நாள் பலமதிக் கொட்ட குடல்வாதம், குருவிக்கரைநோய், பக்கசூலை, வாதக்குடைச்சல், வாதசுர முதலியவை நீங்கும். பத்தியம் உப்பு, புளி, புகை புகைல் நீக்கவும்.

## 378 பாஷாண மெழுகு.

வெள்ளைப் பாஷாணம் கழஞ்சு 1, சுக்கு, திப்பிலி, பரங்கிச் சக்கை, மதுரம், ஏலரிசி, மிளகு வகைக்குப் பலம் 1, ஒன்றாய்ச் சேர்த்து பிரண்டைச் சாற்றால் 2-ஜாமம், மிளகு பொரித்தால் ஒரு நாள், நிம்பழச்சாற்றில் 3-ஜாமம், மலைத்தேனால் ஒரு ஜாமமாட்டிக் குன்றிப் பிரமாணம் தக்க வனுபானங்களில் பலமதிந்து தாக்க ஊழிப்பேதி, கண்ட சீதளம், மலைச்சுரம், விஷச்சுரம், ஜன்னி தோஷம் தீர்க்கும். பத்தியம் வியாதிக்குத் தக்கவைகளாம்.

## 379 வாதராக்ஷத மாத்திரை.

| | |
|---|---|
| 1. வாய்விளங்கம் | 12. அக்ராகாரம் |
| 2. திப்பிலி | 13. தான்றிக்காய் |
| 3. மிளகு | 14. சாதிக்காய் |
| 4. கிராம்பு | 15. வசுவாசி |
| 5. இலவங்கம் | 16. ஏலம் |
| 6. மஞ்சிட்டி | 17. இருவி |
| 7. திப்பிலிமூலம் | 18. கச்சோலம் |
| 8. கஸ்தூரிமஞ்சள் | 19. சித்தரத்தை |
| 9. சீரகம் | 20. கருஞ்சீரகம் |
| 10. வாலுளுவை | 21. கார்போகவரிசி |
| 11. வெளிச்சப்பிசின் | 22. சடாமாஞ்சில் |

வகைக்கு ஒரு கழஞ்சு 1, வாலைரசம், தாரம், வெண்காரம், கெந்தி, மனோசிலை, லிங்கம், பொன்னரிதாரம் வகைக்குக் கழஞ்சு 1, வாளம் பலம் 2, ஒக்கச் சேர்த்துக் குமரிச் சாற்றால் 4-ஜாமமாட்டி பட்டாணிப் பிரமாணம் மாத்திரைசெய்து தேன், இஞ்சி, நிம்பழச்சாற்றில் கொடுக்க வாதச் சுரரோகங்கள் நீங்கும்.



## 380 சர்வசுரச் சம்மார மாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. நிம்பத்தோல் | பலம் | 10 | 6. நீலிவேர் | பலம் | 7½ |
| 2. இருவேலி | | 5 | 7. வெள்ளெருக்கன்பூ | | 5 |
| 3. தும்பைப்பூ | | 5 | 8. புளியந்தோல் | | 5 |
| 4. சிவன்மூலி | | 3 | 9. நிலவேம்பு | | 10 |
| 5. வெள்ளைப்பரிகாரி | | 7½ | 10. வச்சநாபி | | 1 |

இவைகளைச் சூரணித்து, வெள்ளைச்சுண்ணம் அரை, பிரவாளபற்பம் 2½, ஒக்கச் சேர்த்துக் கல்வத்திலிட்டு தேசிச்சாற்றில் விளாம்பிசினி ஆரவைத்து தெளிவாலாட்டி சிறு சுண்டை வீதம் அனுபான மறிந்தூட்டச் சுரம் 64-ம் நீங்கும்.

## 381 வாதசாந்த மாத்திரை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பூரம் | விராகனிடை | 10 | 8. மிளகு | விராகனிடை | 2 |
| 2. குடன் | ,, | 1 | 9. வாய்விளங்கம் | ,, | [illegible] |
| 3. சுக்கு | ,, | 2 | 10. மோடி | ,, | [illegible] |
| 4. திப்பிலி | ,, | 2 | 11. கச்சோலம் | ,, | ,, |
| 5. கருஞ்சீரகம் | ,, | 1 | 12. வெண்காரம் | ,, | 2½ |
| 6. ஏலரிசி | ,, | 1 | 13. லவங்கம் | ,, | 1 |
| 7. சாம்பிராணி | ,, | 1 | 14. வாளம் | ,, | 4 |

இவைகளைச் சுக்குக் கியாழத்தால் 4-சாமமாட்டிக் குன்றிப் பிரமாணம் மாத்திரை செய்து அனுபானமறிந்தூட்ட சகல வாத ரோகங்கள் சாந்தப்படும்.

## 382 சுரமணி மாத்திரை.

| | |
|---|---|
| 1. வெண்காரம் | 6. இலிங்கம் |
| 2. சிவதைவேர் | 7. வசம்பு |
| 3. சுக்கு | 8. சயிந்தியலவணம் |
| 4. வாய்விளங்கம் | 9. ஓமம் |
| 5. காயம் | 10. காட்டாமணக்கன்பருப்பு |

வகைக்குப் பலம் 1,

வாளஞ்சமன் சேர்த்து நிம்பழச்சாற்றால் 4-ஜாமமாட்டிக் குன்றிப் பிரமாணம் மாத்திரை கட்டி அனுபான மறிந்தூட்ட வாதச்சுரம், மந்தச்சுரம், குடைச்சல்வாதம், குழந்தைகள் மாந்தச்சுரம், வயிற்றுப்பிசம், மலக்கட்டு முதலியவை நீங்கும்.

## 383 வாத சிந்தாமணி மாத்திரை.

1. உத்தாமணிவேர்
2. சங்கங்குப்பிவேர்
3. நல்வேளைவேர்
4. வெண்சாரணைவேர்
5. தும்பைவேர்
6. எருக்கன்வேர்
7. ஊமத்தன்வேர்
8. பிரம்மராக்காசிவேர்
9. வாதமடக்கிவேர்
10. வெள்ளறுகுவேர்
11. கள்ளிவேர்
12. கழற்சிவேர்

வகைக்குப் பலம் 1,

1. மாமஞ்சள்
2. சுக்கு
3. கார்போகம்
4. மிளகு
5. வாளம்
6. சித்திரமூலம்
7. சன்னராஷ்டகம்
8. கருஞ்சீரகம்
9. அமுக்கரா
10. கேந்தி
11. தாரம்
12. பொரிகாரம்
13. கௌரி
14. பூண்டு
15. காட்டுச்சீரகம்
16. திப்பிலி
17. காயம்.
18. கடுக்காய்
19. கஸ்தூரிமஞ்சள்
20. செங்கொல்லரிசி
21. வெண்கடுகு
22. பரங்கிப்பட்டை
23. மனோசிலை
24. சூதம்
25. இலிங்கம்
26. வெண்ணுமி

வகைக்குப் பலம் கால்,

இவைகளை யொன்று சேர்த்து கிப்பழச்சார் தும்பைச்சார், கரிசாலைச்சார், மிளகுக்கியாழும் வகைக்கு 7-சாமமாட்டி மிளகுப் பிரமாணம் குளிகையை தக்கவநுபானங்களில் கொடுக்க வாதசுரம், கைகால்குடைச்சல், சூலை, பித்தவாய்வு, விப்புருதிப்பொருமல், அண்டவாதம், வெள்ளோக்காசம், குக்குலவாதமுதலியவை நீங்கும், பத்தியம் வியாதிக்குத் தக்கவைகளாம்.

## 384 ஜெய ரசக்கற்பூராதி மாத்திரை.

பூரம், வெண்மிளகு, வகைக்குப் பலம் 1, விடத்தாரி வேர் முக்கால், இவைகளை தேசிச் சாற்றால் இரு சாமமாட்டி பனிப்பயரளவு மாத்திரை செய்து, அநுபானமறிந்தூட்ட வாய்வு, சூலை, குத்தல், குடைச்சல், அண்டவாத முதலியவை நீங்கும்.



## 385 சகல மாந்தரோக மாத்திரை.

1. வில்வம்
2. நாய்வேளை
3. விஜா
4. கஞ்சாங்கோரை
5. சின்னி
6. சப்ஜா
7. சிறுதும்பை
8. அசுவகெந்தி
9. மணை
10. முடக்கத்தான்
11. கொழிஞ்சி
12. பீநாரி
13. பிரமி
14. மணத்தக்காளி
15. கையாந்தகரை
16. மொச்சை
17. தும்பை
18. கண்டங்கத்திரி
19. சங்கங்குப்பி
20. வேலிப்பருத்தி
21. கொள்ளுக்காய்வேளை
22. சாரணை
23. புன்னைக்குப்பூண்டு
24. சித்திரமூலம்
25. கோவை
26. கீழ்க்காய்நெல்லி

வகைக்கு வேர்ச் சூரணம் பலம் 1.

1. வசம்பு
2. சுக்கு
3. தான்றிக்காய்
4. கடுக்காய்
5. ஆனைத்திப்பிலி
6. கருஞ்சீரகம்
7. ஞாழலுனை
8. புரசம்வித்து
9. ஓமம்
10. சதகுப்பி
11. நெல்லிக்காய்
12. தேசாவரம்
13. அரத்தை
14. காட்டுச்சீரகம்
15. போஸ்தக்காய்
16. பரங்கிச்சக்கை

வகைக்குச் சூரணம் பலம் அரை,

பூரம் விராகனிடை 1, வாளம் பலம் 1, கல்வத்திலிட்டு ஜானகிப் பூண்டுச்சார், அப்புகோவைச்சார், வேலைச்சார், அத்திச்சார், சயக் கொழுந்துச்சார், பொடுதலைச்சார், முசுமுசுக்கைச்சார், கையாந்தகரைச்சார், குப்பைமேனிச்சார், நிலவாகைச்சார், இவைதக்கியாழும் இவைகளில் வகைக்கு ஒரு ஜாமமாட்டி அவரைப் பிரமாணம் குளிகைசெய்து அநுபான மறிந்தூட்ட அஜீரணமாந்தம், வயற்றுப்பிசம், இசிவு, வலி, கோழைக்கட்டு, இருமல், பொருமல், கெணமாந்தம், ஊதுமாந்தம், வாதச்சுரம், மலபந்த முதலிய மாந்தரோகங்கள் நீங்கும் பத்தியம். வியாதிக்குத் தக்கவைகளாம்.

## 386 சுரக்கொல்லி மாத்திரை.

1. அக்கிரகாரம்.
2. மிளகு
3. தான்றிக்காய்
4. நெல்லிக்காய்
5. நிலவாகைத்தோல்
6. சுக்கு
7. திப்பிலி
8. கடுக்காய்
9. வேப்பந்தோல்
10. சிவன்வேம்பு

வகைக்குச் சூரணங் கழஞ்சு 1, கொய்னா, கழஞ்சு 4, கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றால் 2-சாமமாட்டி வேலங்கோந்து ஷூரத்தால் தெளிவாகப் பிரமாணம் மாத்திரைசெய்து தேகபலமறிந்து 3, 5, 7-நாள் அநுபானமறிந்து தாக்க சகல வாதபித்த சிலேஷ்ம சுரங்களும் நீங்கும்.

## 387 வல்லச்சஞ்சீவி மாத்திரை.

1. சுக்கு
2. திப்பிலி
3. மிளகு
4. கடுக்காய்
5. தான்றிக்காய்
6. ஓமம்
7. கடுரோகணி
8. வெண்மிளகு
9. நிலவாகை
10. நெல்லிக்காய்
11. கிராம்பு
12. பீதரோகணி
13. கருஞ்சீரகம்
14. பன்னீர்ப்பூ

வகைக்குச் சூரணம் பலம் 1, இலிங்கம், கழஞ்சு 2, பூரம் 1, வெண்காரம் பலம் அரை, படிகாரம் பலம் அரை, இவைகளை பொன்னுபடுத்திச் சம்பீரச் சாற்றால் 4-ஜாமமாட்டி உளுந்துப் பிரமாணம் மாத்திரைசெய்து அநுபான மறிந்தூட்ட வாதரோகம், மாந்தம், சுர முதலியவை நீங்கும்.

## 388 பூர மாத்திரை.

பூரம் விராகனிடை 5, பூண்டு விராகனிடை 20, மிளகு விராகனிடை 30, கம்மாறு வெற்றிலை விராகனிடை 40, கொடிவேலி வேர்ப்பட்டை விராகனிடை 20, கல்வத்திலிட்டுக் கம்மாறு வெற்றிலைச் சாற்றால் 8-சாமமாட்டி சிறு சுண்டைக்காய் பிரமாணம் மாத்திரை செய்து அநுபான மறிந்தூட்ட கிரந்தி, கொறுக்குப்புண், மதுள் கொறுக்கு, யோனி விக்கப்புற்று, குழிப்புண் முதலியவை நீங்கும். பத்தியம் உப்பு, புளிப்பு, புகை, இறைச்சி நீக்கி ஆவின்பால் சாதமுண்ணவும்.



## 389 சுராங்குச மாத்திரை.

1. கிர்விஷம்
2. நாபி
3. இலிங்கம்
4. வெண்காரம்
5. வாலைரசம்
6. அரிதாரம்
7. கெந்தி
8. அக்கல்காரம்
9. இருவி
10. தான்றிக்காய்
11. மிளகு
12. வேற்கொம்பு
13. கடுக்காய்
14. நெல்லிப்பருப்பு
15. திப்பிலி
16. வெண்மிளகு

வகைக்கு கழஞ்சு 1, வாளம் கால் பலம், இவைகளை தேசிச்சாற்றால் 21-நாள் அரைத்து மிளகுப் பிரமாணங் குளிகை செய்து ஒரு மாதத்திற்குப் பின் அநுபானமறிந்து கொடுக்க சகல வாத சீதள சுரரோகங்கள் நீங்கும். பத்தியம் வியாதிக்குத் தக்கவைகளாம்.

## 390 சுரசஞ்சீவி மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| 1. சூதம் | 1 | 4. கெந்தி | 1 |
| 2. கருவூமத்தன் விதை | 3 | 5. சுக்கு | 4 |
| 3. திப்பிலி | 5 | 6. வெண்மிளகு | 6 |

கல்வத்திலிட்டு இஞ்சிச்சார், பழச்சார் இவைகளில் வகைக்கு 4-ஜாமமாட்டிக் கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து வெந்நீர், புதினா, பழச்சார், புளியாரைச்சார், இஞ்சிச்சார், தேன், அநுபானத்திலூட்ட சகல சுரவாத ரோகங்கள் நீங்கும்.

## 391 சுர சிந்தாமணி மாத்திரை.

வாளம் பலம் 1, பூரம் கால், பாஷாணம் விராகனிடை அரை, அழிஞ்சல் பட்டை, சித்திரமூல வேர்ப்பட்டை, வகைக்குப் பலம் கால், வெண்மிளகு பலம் 1, கல்வத்திலிட்டு நிம்பழச்சார், முலைப்பால், கையாந்தகரைச்சார், மிளகு கியாழம் இவைகளில் வகைக்கு ஒரு சாமமாட்டி துவரைப் பிரமாணம் மாத்திரைசெய்து அநுபான மறிந்தூட்டச் சுரவாத ரோகங்கள் நீங்கும்.

## 392 சுரபூபதி மாத்திரை.

| | |
|---|---|
| 1. திப்பிலி | 7. சுக்கு |
| 2. மிளகு | 8. கடுக்காய் |
| 3. வாய்விளங்கம் | 9. கடுகுரோகணி |
| 4. கோஷ்டம் | 10. நெல்லி |
| 5. முள்ளி | 11. பரங்கிச்சக்கை |
| 6. சீரகம் | 12. பூண்டு |

வகைக்குப் பலம் 1.

| | |
|---|---|
| 1. நாளகம் | 4. கெந்தி |
| 2. சூதம் | 5. பூரம் |
| 3. வாளம் | 6. ரசச்சிந்தூரம் |

வகைக்கு விராகனிடை 1, கல்வத்திலிட்டு நிம்பழச்சார், சிறுகீரைச் சார், நொச்சிக் கியாழம், மிளகுக் கியாழம் இவைகளில் வகைக்கு இரு ஜாமமாட்டி மிளகுப் பிரமாணம் மாத்திரை செய்து அனுபானமறிந்தூட்ட சுரம், வாதரோகம், சேத்துமரோக முதலியவை போம்.

## 393 சுரசாந்த மாத்திரை.

| | |
|---|---|
| 1. முந்திரிகை | 7. இலுப்பைப்பூ |
| 2. திப்பிலி | 8. பேரீச்சு |
| 3. கோஷ்டம் | 9. முந்தரிக்காசு |
| 4. வெட்டிவேர் | 10. பன்னீர்ப்பூ |
| 5. தாமரைப்பூ | 11. நன்னாரி |
| 6. சூரத்துநிலவாகை | 12. சந்தணத்தூள் |

வகைக்குப் பலம் 1.

இலிங்கம், ரசகற்பூரம், நாரம், வகைக்கு விராகனிடை 1, நாபி அரை, இவைகளை யொக்கச்சேர்த்துத் தண்ணீர்விட்டான் கிழங்குச் சாற்றால் மூன்று நாளாட்டி உளுந்தளவு மாத்திரை செய்து அனுபானமறிந்து கையாட சுவிர்ச்சுரம், விடாச்சுரம், முறைச்சுரம், மாந்தச்சுரம், மந்தச்சுரம், மலபந்தச்சுரம், வாதரோக முதலியவை நீங்கும், பத்தியம் வியாதிக்குத் தக்கவைகளாம்.



## 394 வாதரோக நிவாரண மாத்திரை.

| | |
|---|---|
| 1. சடாமாஞ்சில் | 11. மிளகு |
| 2. லவங்கம் | 12. கடுகுரோகணி |
| 3. ஓமம் | 13. வாய்விளங்கம் |
| 4. கருஞ்சீரகம் | 14. சிவதைவேர் |
| 5. தக்கோலம் | 15. கோஷ்டம் |
| 6. மதுரம் | 16. சன்னீராஷ்டகம் |
| 7. லவங்கப்பட்டை | 17. அஜாருன் |
| 8. ருமஸ்தகி | 18 குங்குமப்பூ |
| 9. சுக்கு | 19. வாளம் |
| 10. பூரம் | 20. இரசகற்பூரம் |

வகைக்கு விராகனிடை 1,

கஸ்தூரி விராகனிடை கால், கோரோசனை அரை, பச்சை கற்பூரம் அரை, மூசாம்பரம் 10, கல்வத்திலிட்டு துளசிக்கியாழம், ஆடாதோடைக்கியாழம் இவைகளில் வகைக்கு இருஜாமமாட்டிக் குன்றிப் பிரமாணம் மாத்திரையை அனுபான மறிந்தூட்டச் சகல வாதபித்த ரோகங்கள் நீங்கும்.

## 395 தாம்பர மாத்திரை.

இரசவின தாம்பரப்பொடியைச் சட்டியிலிட்டு புளியாஞ்சிறுகீரை ஜாமத்திற்கு ஒவ்வொருபிடியாய் 4-ஜாமம்போட்டு வறுத்தெடுத்தபொடி கழஞ்சு 6, வாலைரசம் 5, கெந்தி 10, ஒன்றுப்படுத்தி வேளைச்சாற்றில் 4-ஜாமமாட்டி அடைதட்டி யுலர்த்தி, நிம்பழச்சாற்றாலாட்டி யெடுத்த காக்காமிளையை சசவிரகுபோல் மேற்பூசி யுலர்த்தி மணலில்வைத்து 4-ஜாமமெரித்துக் கல்வத்திட்டு கெந்தி பலம் அரை, சேர்த்து சிறுசெருப்படைச் சாற்றால் 4-ஜாமமாட்டி மிளகளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்திக் குப்பியிலிட்டுச் சீலைசெய்து 2-ஜாமம் வாலுகையில் கமலாக்கினியா யெரித்துக் கல்வத்திட்டு இஞ்சிச்சாற்றால் 2-ஜாமமாட்டிப் பருத்திவிரைப் பிரமாணம் மாத்திரைசெய்து அனுபான மறிந்தூட்ட வெண்குட்டம், மகோதரம், பாண்டுவீக்கம், சில்விஷம், கிருமேகம், சுரம், சன்னி, 13 ம் போம்.

## 396 பொது பூபதி மாத்திரை.

1. உத்தாமணி
2. வெள்ளெருக்கன்
3. வாதமடக்கி
4. நல்வேளை
5. வெள்ளைப்பரிகாரி
6. கருவூமத்தை
7. பிரம்மராக்ஷசி
8. சங்கங்குப்பி

வேர் வகைக்குச்சூரணம் பலம்-1.

1. திப்பிலி
2. நன்னாரி
3. வாலுளுவை
4. குராசானி
5. பரங்கிச்சக்கை
6. சோம்பு
7. வெண்மிளகு
8. ஓமம்

இவை வகைக்கு சூரணம் பலம் 1.

கல்வத்திலிட்டு தங்கச்சுண்ணம் விராகனிடை அரைக்கால், வெள்ளிச்சுண்ணம் 1, அயச்சிந்தூரம் 1, கருவங்கச்சிந்தூரம் கால், நாகச்சிந்தூரம் கால், பூரச்சுண்ணம் அரை, சேர்த்து நிம்பழச்சாற்றால் 21-நாள் ஆட்டி பனிப்பயறளவு மாத்திரை செய்து அநுபானமறிந்தூட்ட வாதம் 70, பித்தம் 40, குன்மம் 8, மூலம் 9, மேகம்-21ம், நீங்கும். பத்தியம் வியாதிகளுக்குத் தக்கவைகளாம்.

## 397 மகாகுரு மாத்திரை.

காந்தச்சிந்தூரம், சூதச்சிந்தூரம், கெந்தகச் சிந்தூரம், அரிதாரச்சுண்ணம், தாம்பிரச்சிந்தூரம், இலிங்கச்சிந்தூரம் வகைக்கு விராகனிடை 1, திப்பிலிமூலம், சாதிபத்திரி, கடுகுரோகணி வகைக்குப் பலம் 1, சீரகம், வெள்ளுள்ளி வகைக்குப் பலம் கால், பரங்கிச்சூரணம், நன்னாரிச்சூரணம் வகைக்குப் பலம் 1½. ஒன்று சேர்த்து அண்டவெண்கருவால் 4-ஜாமம் நிம்பழச்சாற்றால் 1, ஜாமமாட்டி குன்றிப் பிரமாணம் மாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட ஜன்னி 13, சுரம், வாதரோக முதலியவை நீங்கும்.

## 398 சுவாசகாச மாத்திரை.

வாலேரசம், கெந்தி, வெண்காரம், கலப்பைக்கிழங்கு, மனோசிலை, தாரம், பற்பாடகம் வகைக்குப் பலம் 1, திப்பிலி 2, ஒக்கச்சேர்த்து கொத்தமல்லிச்சார், கண்டங்கத்திரிச்சார், ஆடாதோடைச்சார், மேனிச்சார் இவைகளில் வகைக்கு ஒருநாளாட்டிப்பயறளவுமாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட மேல்சுவாசம், ரத்தகாசம், சேத்துமகாசம், சுவாசகாச முதலியவை நீங்கும்.



## 399 உருக்கு மாத்திரை.

இலிங்கம், வீரம், பூரம், சூதம், சிங்கத்தொட்டி வகைக்கு விராகனிடை 1, அண்டவெண்கருவில் மஞ்சள் நூலிட்டு தெளிந்த நீரால் மேற்படி சரக்குகளை 4-ஜாமமாட்டி கோதுமை அரிசியைப்போல் மாத்திரைகள் செய்துலர்த்தி சிறிய வெற்றிலைத்துண்டில் ஒவ்வொரு மாத்திரையாய் மடித்து நால்கயத்தால் தனித்தனிக்கட்டி ஓலைச்சுருளுக்குள்வைத்து மணல்மூடி 15-எருவில் புடமிட உருக்கு மாத்திரையாகும் அநுபானமறிந்தூட்ட சுரம், சன்னி, வாதரோக முதலியவை நீங்கும், பத்தியம் வியாதிகளுக்குத் தக்கவைகளாம்.

## 400 மலஜல விரேசன மாத்திரை.

பூரம் பலம் 3, பூநீக்கிய லவங்கம் முக்கால், ஓமப்பொட்டு முக்கால், வெண்காரம், படிகாரம், வகைக்குப் பலம் 1, பரங்கிச்சூரணம் கால், ஒத்தச்சேர்த்து தும்மட்டிக்காய்ச் சாற்றால் 12-ஜாமமாட்டி பட்டாணிப் பிரமாணம் மாத்திரை செய்து கிராக்ஷைப்பழம், சோம்புசமன்சேர்த்துக் கொழமிட்டு மேற்படி மாத்திரையை யிழைத்துண்ண மலசலம் பிரியும், உடனே பிரியாவிடில் செவ்விளநீரில் மாத்திரைப் பொடித்துப் போட்டுக் கலக்கியுண்ணவும்.

## 401 கணசஞ்சீவி மாத்திரை.

கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைகற்பூரம், கோரோசனை வகைக்கு விராகனிடை கால், மதுரம், கோஷ்டம், வெலிப்பருத்தி, திப்பிலி, மிளகு வகைக்குப் பலம் 1, பூரம் கால், ஒன்றுசேர்த்துப் பாவைப் பாலாலாட்டிப் பனிப்பயர்ப் பிரமாணம் மாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட சகல கணமாந்தங்களும் போம்.

## 402 விரேசனபூபதிமாத்திரை.

வாளம் பலம் 1, லிங்கம், பூரம், வெண்காரம், ரசபற்பம் வகைக்கு விராகனிடை முக்கால், சுக்குநூர் பலம்கால், நேர்வாளம் பலம் 1, ஒன்றுபடுத்தி வெந்நீரால் இரண்டு சாமமாட்டி கடலைப் பிரமாணம் மாத்திரை செய்து தேகபலமறிந்து 2-3-4 வீதம் சுக்குநீர், சுக்குக்கியாழத்தில் கொடுக்கவும்,

## 403 கோரோசனை மாத்திரை.

| | |
|---|---|
| 1. கருஞ்சீரகம் | 7. சாதிபத்திரி |
| 2. திப்பிலி | 8. ஓமம் |
| 3. கஸ்தூரி | 9. மதுரம் |
| 4. சாதிக்காய் | 10. சூடன் |
| 5. லவங்கம் | 11. கோஷ்டம் |
| 6. அக்கல்காரம் | 12. பரங்கிச்சக்கை |

வகைக்குப் பலம் அரைக்கால்,

கோரோசனை அரை, ஒன்றாய்ப் பொடித்து மணத்தக்காளிச் சாற்றால் ஒருசாமமாட்டி பூலாப் பயறளவு மாத்திரை செய்து அதிமானமுமிந்நாட்ட தோஷக் கபரோகங்கள் நீங்கும்.

## 404. குங்குமப்பூ மாத்திரை.

| | |
|---|---|
| 1. சுக்கு | 8. தான்றிக்காய் |
| 2. மிளகு | 9. கிராம்பு |
| 3. கடுக்காய் | 10. சந்தனத்தூள் |
| 4. சாதிக்காய் | 11. தேவதாரம் |
| 5 ஏலம் | 12. தாளிசம் |
| 6. திப்பிலி | 13. வாய்விளங்கம் |
| 7. நெல்லிக்காய் | 14. கடுகுரோகணி. |

வகைக்குச் சூரணம் பலம் கால்,

குங்குமப்பூ பலம்-1, ஒக்கச்சேர்த்துப் பழச்சார், இஞ்சிச்சார், கண்டங்கத்திரிப் பழச்சார் இவைகளில் வகைக்கு இரண்டு சாமமாட்டிப் பயறளவு குளிகை செய்யவும்.

## 405 விரேசன மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| 1. வாலேரசம் | 1 | 5. இலிங்கம் | 1 |
| 2. இந்துப்பு | 3 | 6. வெண்காரம் | 1 |
| 3. கடுக்காய் | 3 | 7. ரோகணி | 3 |
| 4. வாளம் | 8 | 8. வெள்ளைக்காக்கணம்வேர் | 3 |

ஒக்கச்சேர்த்துப் பிரண்டைச்சார் சிவனார்வேம்பியாமும், கல்லாரைக்கியாமும் இவைகளில் வகைக்கு ஒருசாமமாட்டி கடலைப்பிரமாணம் மாத்திரை செய்து தேகபலமறிந்து 2-3-4-வீதம் இஞ்சிச்சாரம் சுக்குகியாழத்திலிட பேதியாகும்.



## 406 கஸ்தூரி மாத்திரை.

வாய்விளங்கம், கடுகுரோகணி, பீதரோகணி, குராசானி, ஏலம், திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம் வகைக்குச் சூரணம் பலம் அரை, கஸ்தூரி விராகனிடை 1, பச்சைகற்பூரம் அரை, ஒன்றாய் சேர்த்துக் கம்மாறு வெற்றிலைச்சார், தூதுவிச்சார், கையாந்தகரைச்சார், நிம்பழச்சார் வகைக்கு ஒருசாமமாட்டிக் கடலையளவு மாத்திரை செய்யவும்.

## 407. ஆனந்தபயிரவ மாத்திரை.

| | |
|---|---|
| 1. சாதிலிங்கம் | 4. வெண்காரம் |
| 2. சுத்திரநாபி | 5. சுக்கு |
| 3. மிளகு | 6. திப்பிலி |

வகைக்குப் பலம் அரைக்கால்.

ஒன்றாய்ச் சேர்த்து முலைப்பால், சம்பீரச்சார் இவைகளில் வகைக்கு ஒரு சாமமாட்டி சிறுபயறளவு மாத்திரை செய்து திரிகடுகுச்சூரணம் இஞ்சிச்சார், தேன் அனுபான மறிந்தூட்ட சுரம் நீங்கும், அன்றி மேற்படி மாத்திரையில் கெந்தி ஒருவிடை சேர்த்தால் வாதரோகப்பாண்டு நீங்கும், இரண்டெடை வாளஞ்சேர்த்தால் சுரத்தின்மேல் மலச்சிக்கல் நீங்கும், பத்தியம், சுட்டப்புளி வறுத்தவுப்புக் கூட்டவும்.

## 408 இலகுபுன்னைவேர் மாத்திரை.

| | |
|---|---|
| 1. கோஷ்டம் | 6. இந்துப்பு |
| 2. வெள்ளுள்ளி | 7. ஊசிக்காந்தம் |
| 3. கருஞ்சீரகம் | 8. திப்பிலி |
| 4. சந்தணம் | 9. மிரிசம் |
| 5. முத்தக்காசு | 10. சீனிக்காரம் |

வகைக்குக் கழஞ்சு 1.

புன்னைவேர்ச் சூரணம் பலம் 1, பேட்டாளி வைத்துச்சேர்த்துக் கொடிவேலிக்கியாழத்தாலாட்டி சிறுகண்டைக்காய் பிரமாணம் அனுபான மறிந்துண்ணச் சயலை வாதபித்த ரோகங்கள் நீங்கும்.

## 409 ஆயாச மாத்திரை.

லவங்கம், திப்பிலி வகைக்கு விராகனிடை 2, வாலேந்திர போளம் 1, குங்குமப்பூ அரை, இரசபற்பம் அரை, ஒன்றாசேர்த்து மோர் விட்டாட்டி களாக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து அநுபான மறிந்தூட்ட உதிரச்சிக்கல், சூதகவாய்வு, குன்மம், பிரசவித்தவர்களுக்கு அழுக்கு முதலியவைபோம் பத்தியம், புளி, புகை, புலால் நீக்கவும்.

## 410 அமிர்தசஞ்சீவி மாத்திரை.

1. நன்னாரி
2. இருவேலி
3. முத்தக்காசு
4. முந்திரிகை
5. ஏலம்
6. விலாமிச்சு
7. சாத்திரபேதி
8. பேரீச்சு
9. கோஷ்டம்
10. லவங்கப்பத்திரி
11. சந்தணம்
12. இலுப்பைப்பூ
13. கடுரோகணி
14. திப்பிலி

வகைச்குச் சூரணம் பலம் 1,

இவைகளை கருப்பஞ் சாற்றாலரட்டிக் கழலைப் பிரமாணம் மாத்திரை செய்து முலைப்பால் வென்னீரில் தாக்க கணம், சுரம், தாகமுதலியவை நீங்கும்

## 411 சிந்தாமணி மாத்திரை.

1. துளசி
2. காஞரைவேர்
3. விடயும்
4. ஓமம்.
5. குராசாணி
6. மாயீர்க்கு
7. விளா
8. தென்னம்பூ
9. சாதிபத்திரி
10. உள்ளி
11. முகிழ்
12. மதுரம்
13. சீரகம்
14. பெருமரப்பட்டை
15. மாதுளம்பிஞ்சு
16. வில்வம்
17. வில்வப்பிசின்
18. வேர்க்காய்
19. வால்மிளகு
20. திப்பிலி

வகைக்குப் பலம் அரை,

இவைகளைக் கெஞ்சாக் கொழுந்தாலாட்டி சாதிக்காயளவு மாத்திரை செய்து தயிரில் அருந்த நீர்கடுப்பு, நீர்ச்சுருக்கு, ஆசனக்கடுப்பு, மூலக்கடுப்பு, இரத்தசீதக்கடுப்பு பேதி முதலியவை நீங்கும்.



## 413 மாந்த மாத்திரை.

சீரகம், காயம், கருஞ்சீரகம், உள்ளி, ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு விராகனிடை 8, வசம்பு 3, கடுக்காய் விராகனிடை 15, சாரணைவேர் பொடுதலைக்கொழுந்து வேலிப்பருத்தி, அம்பைக்கொழுந்து வகைக்கு விராகனிடை 5, கல்வத்திட்டு தும்பைச்சார், பொடுதலைச்சார், முசுமுசுக்கைச்சார், மேனிச்சார், கையாந்தகரைச்சார் இவைகளில் வகைக்கு ஒரு ஜாமமாட்டிச் சிறு சுண்டையளவு மாத்திரை செய்துக் குழந்தைகள் பலமறிந்து கால் அரை வீதம் முலைப்பால், வெந்நீரில் தாக்க மாந்தம், பொருமல், வலிப்பு, இசிவு முதலியவை நீங்கும்.

## 414 வேறு மாந்த மாத்திரை.

வசம்பு, சீரகம், அதிவிடயம், மாசிபத்திரி, தாளிசபத்திரி மாசக்காய், லவங்கம், ஏலம், திப்பிலி, வெண்மிளகு வகைக்குப் பலம் கால், பூரம் அரை கல்வத்திட்டு விஷ்ணுக்கரந்தைச் சார், மாசிபத்திரி வேர்க்கியாழும் இவைகளில் வகைக்கு ஒரு ஜாமமாட்டி கொத்துமல்லி விரைப் பிரமாணம் மாத்திரை செய்து குழந்தைகள் பலமறிந்து தக்க அநுபானத்தி லூட்டச் சகல மாந்த ரோகங்களும் நீங்கும். பத்தியம் வியாதிக்குத் தக்கவைகளாம்,

## 415 நவமூல மாத்திரை.

தாரம், பூரம், கல்நார், பற்பம், மிருதார்சிங்கி, வெண்காரம் வகைக்குங் பலம் 1, இவைகளைக் கொடிக்கள்ளிப் பாலாலாட்டி குகையிலிட்டு மேல்மூடிச் சீலை செய்து எருப்புடமிட்டெடுத்துக் கல்வத்திட்டு ஆவின் பால், கிம்புரச்சார், குமரிச்சார், கையாந்தகரைச்சார் இவ்வைகளில் வகைக்கு ஒரு சாமமாட்டி மிளகுப்பிரமாணம் மாத்திரைசெய்து அநுபானமறிந்தீய நவமூலங்களும் நீங்கும்.

## 416 சாம்பிராணிப்பூ மாத்திரை.

சாம்பிராணிப்பூ பலம் கால், கிராம்பு பலம் காலே அரைக்கால், கோரோசனை, அரைக்கால், பச்சைகற்பூரம் அரை, கஸ்தூரி விராகனிடை அரைக்கால், இவைகளைக் கம்மாறு வெற்றிலைச் சாற்றாலாட்டிக் குன்றியளவு மாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட உஷ்ணசீதள கபரோகங்கள் நீங்கும்.

## 417 பஞ்சபாஷாண மாத்திரை.

1. கிராம்பு
2. மாசிபத்திரி
3. சுக்கு
4. திப்பிலி
5. தான்றிக்காய்
6. வால்மிளகு
7. சாதிபத்திரி
8. ஏலம்
9. மிளகு
10. நெல்லிக்காய்
11. கடுக்காய்
12. வெண்மிளகு

வகைக்குச் சூரணம் பலம் 1-

இலிங்கம் பலம் 1, அரிதாரம் கழஞ்சு 1, வீரம் கழஞ்சு 1, பூரம் கழஞ்சு 1, கெந்தி பலம் 1, ரசச்சிந்தூரம் 1, இரசபற்பம் கழஞ்சு 1, வச்சநாபி அரை, வாளம் பலம் 1, கல்வத்திட்டு நிம்பழச்சார், குமரிச்சார், முலைப்பால் இவைகளில் வகைக்கு ஒரு சாம மாட்டிக் குன்றிப்பிரமாணம் மாத்திரை செய்து இஞ்சி, தேன், முலைப்பால், நிம்பழச்சார், கொடிவேலிக்கியாழத்தில் தாக்கச் சகல சுரவாத சன்னிரோகங்கள் நீங்கும், இச்சா பத்தியம்.

## 418 இலிங்க மாத்திரை.

இலிங்கம் 2- பூரம் 1, திப்பிலி 4, வெண்மிளகு 3, இவைகளை ஆவின் பாலாலாட்டிப் பயறளவு மாத்திரை செய்து அனுபான மறிந்தூட்ட வாதசீதள சுரரோகங்கள் நீங்கும்.

## 419 அதிமதுரச் சூரணம்.

1. மதுரம்
2. மாஞ்சில்
3. மிளகு
4. நெல்லிவற்றல்
5. தாளிசம்
6. நன்னாரி
7. சீரகம்
8. கோஷ்டம்
9. சுக்கு
10. திப்பிலி
11. கிராம்பு
12. ஏலம்
13. சந்தணம்
14. மஞ்சிட்டி

வகைக்குச் சூரணம் பலம் 1,

பச்சைகற்பூரம் கழஞ்சி 2, ஒன்று சேர்த்து சூரணத்திற்கு நிகர் சீனிகலந்து திரிகடிப் பிரமாணமுண்ண தலைசுழட்டல், விக்கல், கக்கல், நடுக்கல், வாய்நீரூறல் முதலிய பித்த ஊஷ்ணங்கள் நீங்கும்.



## 420 மகா கோடாசூரி மாத்திரை.

1. சந்தணத்தூள்
2. மிளகு
3. கடுக்காய்
4. நெல்லிக்காய்
5. தேவதாரி
6. சாதிக்காய்
7. கோஷ்டம்
8. சித்திரமூலம்
9. தெஞ்சாவேர்
10. திராக்ஷி
11. சிறுநாகப்பூ
12. பூண்டு
13. சுக்கு
14. திப்பிலி
15. தான்றிக்காய்
16. வசுவாசி
17. கிராம்பு
18. சாதிபத்திரி
19. கடுரோகணி
20. சூராசாணி
21. பேரீச்சங்காய்
22. மஞ்சிட்டி
23. வலம்புரிக்காய்
24. தாளிசம்

வகைக்குப் பலம் 1,

1. தாளகம்
2. சூதம்
3. பூநீர்
4. அன்னபேதி
5. பால்துத்தம்
6. பாஷாணம்
7. இலிங்கம்
8. கெந்தி
9. நுருசு
10. செப்புத்தொட்டி
11. மனோசிலை
12. கௌரி

வகைக்கு விராகனிடை 1.

வீரம் விராகனிடை கால், பச்சைகற்பூரம் 1, வெண்காரம் 1, இந்துப்பு அரை, சாரம் கால், படிகாரம் 1, வாளம் பலம் அரை, கல்வத்திட்டு மிளகு கியாழம் நிம்பழச்சார், கரிசாலைச்சார், நொச்சிச்சார், விஷ்ணுகரந்தைச்சார், சிறுகீரைச்சார் இவைகளில் வகைக்கு 7-நாளாட்டிச் சிறுபயர்ப் பிரமாணங் குளிகை செய்து அனுபானமறிந்து தாக்க சகல சுரவாத சன்னிதோஷங்கள் நீங்கும்.

## 421 சுகபேதிச் சூரணம்.

சுக்கு, காக்கட்டான்விதை, சூரத்துநிலவாகை, கடுக்காய், வசம்பு, சோம்பு, பன்னீர்ப்பூ, சேவல்சின்னி வகைக்குப் பலம் 1, சிவதைவேர் பலம் 8, இவைகளைச் சூரணித்து பல மஞ்சிந்து 1-2, விராகனிடை வாயிலிட்டு வெந்நீருண்ண பேதியாகும்.

## 422 மொகரி சூரணம்.

1. முந்திரிகை
2. கெற்போரி
3. ஏலம்
4. சந்தணம்
5. பேரீச்சு
6. மதுரம்
7. விலாமிச்சு
8. திப்பிலி

வகைக்குப் பலம் அரை,

1. நெல்லி
2. சிறுநாகப்பூ
3. சீரகம்
4. லவங்கப்பட்டை
5. கிராம்பு
6. லவங்கப்பத்திரி
7. தாமரைவளையம்
8. நெய்தற்கிழங்கு
9. கல்நார்பற்பம்
10. முள்ளி
11. இருவேலி
12. தாளிசம்
13. சாதிக்காய்
14. மல்லி
15. கோஷ்டம்
16. கூகைநீர்
17. சிலாசத்துபற்பம்
18. சிங்கிபற்பம்

வகைக்குப் பலம் கால்,

குங்குமப்பூ பச்சைகற்பூரம் வகைக்கு விராகனிடை கால், இவைகளில் கற்கவகைகளைச் சூரணித்து மற்றைய சரக்குகளை யொன்று படுத்தி 8, பலம் சீனிசர்க்கரைக் கலந்து திரிகடிப் பிரமாண மிருவேளை யுண்ண பித்தவாய்வு, பித்தச்சூடு, அரோசகம் சத்தி, அக்கினி மந்த முதலியவை போம்.

## 423 சுண்டை வேர்ச் சூரணம்.

| | | | |
|---|---|---|---|
| 1. ஏலம் | 8 | 5. சீரகம் | 4 |
| 2. மிளகு | 7 | 6. நெல்லிக்காய் | 3 |
| 3. கொற்றுமல்லிவிதை | 6 | 7. கடுக்காய் | 2 |
| 4. திப்பிலி | 5 | 8. தான்றிக்காய் | 1 |

சுண்டைவேர் 8, நிலவாரை 4, பன்னீர்ப்பூ 2, இவைகளைப் பொன்வறுப்பாய் வறுத்துச் சூரணித்து திரிகடிப் பிரமாணம் சீனி கலந்துண்ண பக்கச்சூலை, தொண்டைக்கட்டு, கபம், கோழை பித்தவாய்வு, உஷ்ணபேதி, பசிமந்த முதலியவை நீங்கும்.



## 424 பரங்கிப்பட்டைச் சூரணம்.

1. சாதிபத்திரி
2. சாதிக்காய்
3. திப்பிலி
4. குராசானி
5. தாளிசப்பத்திரி
6. லவங்கம்
7. வால்மிளகு
8. சீரகம்

வகைக்குச் சூரணம் பலம் 1,

கற்பூரசிலாசத்து பற்பம், கல்நார்பற்பம், ஜெங்கால் பச்சை பற்பம் வகைக்குப் பலம் 1, பரங்கிப்பட்டைச் சூரணம் பலம் 11, ஒன்று படுத்தி திரிகடிப் பிரமாணம் வெந்நீரிற்கொள்ள மேகச்சூடு நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, சூலை, சொரிபுண், மேகவாய்வு, பித்தவாய்வு, சொரிகுட்டம், புடை, இரண முதலியவை நீங்கும்.

## 425. அறுமுகச் சூரணம்.

1. சீரகம்
2. மதுரம்
3. சதகுப்பி
4. கருஞ்சீரகம்
5. சோம்பு
6. கருவாய்ப்பட்டை

வகைக்குப் பலம் 1,

கொற்றுமல்லி விதை பலம் கால், தேத்தான்வித்து அரை, பரங்கிச்சக்கை 24, இவைகளைச் சூரணித்து கற்கண்டு 24, சேர்த்து திரிகடிப் பிரமாண முண்ண மேகச்சூடு, மேகவெள்ளை, குலையெரிவு, குன்மம், வாந்தி, குடல்பிரட்டல், வலி, ஊரல், மயக்கம், கிருமிரோக முதலியவை நீங்கும்.

## 426 சந்திரோதய மாத்திரை.

ரசகற்பூரம், பச்சைகற்பூரம், லவங்கம், மிளகு, லவங்கப்பட்டை, கோஷ்டம், திப்பிலி, கடுக்காய், லவங்கப்பூ வகைக்குப் பலம் கால், குங்குமப்பூ பலம் 1, மஞ்சள் அரை, கல்வத்திலிட்டுச் சந்தனம், தாளிசம், முத்தக்காசு, சடாமாஞ்சில் சமன் சேர்த்துக் கியாழமிட்டு மேற்படி சரக்குகளை 2, நாளரைத்து பணிப்பயிர்ப் பிரமாணம் மாத்திரை செய்து அனுபான மறிந்துகொடுக்கச் சுரம், வாய்வு, கபம், ஜலதோஷ முதலியவை நீங்கும், இவை சிறுவர்களுக்கும் கையாடலாம்.

## 427. மண்டூரச் சூரணம்.

காந்தச்செந்தூரம், அயச்செந்தூரம், மண்டூரச்செந்தூரம் வகைக்குக் கழஞ்சு 1, தான்றிக்காய், நெல்லிக்காய், கடுக்காய், சுக்கு, பொரித்தகாயம், மிளகு, திப்பிலி, பூண்டு, இருசீரகம் இவைகளின் சூரணம் வகைக்குப் பலம் 1, ஒன்றுபடுத்தி கால், அரை, முக்கால், விராகனிடை அநுபான மறிந்துண்ண சோகை, காமாலை, பாண்டு, பித்தரோக முதலியவை நீங்கும்.

## 428 புபதிச் சூரணம்.

1. சாதிக்காய்
2. கிராம்பு
3. சுண்டி
4. கரிவேப்பீர்க்கு
5. காசுக்கட்டி
6. சூராசாணி
7. அதிவிடயம்
8. நாகேசுரம்
9. சாதிபத்திரி
10. புளியங்கோட்டைதோல்
11. சந்தனம்
12. மாசுக்காய்
13. சீரகம்
14. வெந்தயம்
15. கசகசா
16. போஸ்தக்காய்
17. கற்கடகசிருங்கி
18. தாளிசபத்திரி

வகைக்குச் சூரணம் பலம் 1,

இச்சூரணத்தை திரிகடிப் பிரமாணம் நெய், தேன் சர்க்கரையிலுண்ண வயிற்றுளைவு, வயிற்றுக்கடுப்பு, சீதரத்தபேதி, உஷ்ணபேதி முதலியவை போம்.

## 429 பிரமேகச் சூரணம்.

1. முந்திரிகை
2. நெல்லிவற்றல்
3. ஏலம்
4. சிறுபுள்ளடிவேர்
5. கோற்றுமல்லிவிதை
6. பேரீச்சு
7. மதுரம்
8. திப்பிலி
9. சந்தனம்
10. வெள்ளரிவித்து

வகைக்குச் சூரணம் பலம் 1,

கல்நார்பற்பம் பலம் 1, இவைகளை யொன்று சேர்த்து திரிகடிப் பிரமாணம் வெண்ணெய், புளிச்சதண்ணி, புளித்ததயிர், இவைகளி லுண்ண பிரமேகம், கிரிச்சனம், நீரெரிச்சல், நீர்கடுப்பு, நீர்ச்சுருக்கு முதலியவை போம்.



## 430 வாதராட்சதன் சூரணம்.

1. சுக்கு
2. திப்பிலி
3. சீரகம்
4. லவங்கம்
5. மிளகு
6. ஓமம்
7. ஏலம்
8. சாதிக்காய்

வகைக்குச் சூரணம் பலம் 1,

வாலேரம், கெந்தி, பொரித்த வெண்காரம் வகைக்கு விராகனிடை 2, கல்வத்திட்டு உரவு படவரைந்து கொஞ்சங் கொஞ்சமாய் மேற்படி சூரணத்தைக் கொடுத்தாட்டிக்கல்க்கஞ் செய்து சட்டியிலிட்டு கொஞ்சம் வெண்ணெய்போட்டு புகையாமல் இளவறுப்பாய் வறுத்துக் கல்வத்திலிட்டு அபின் விராகனிடை 1, போட்டு ரேகிக்க ஆட்டி வேளைக்கு கால் விராகனிடைச் சூரணம் தேனில் மைழத்துண்ண மேகவாய்வு, சூலைவாய்வு, சூதிகாவாய்வு, வயிற்றுவலி, கிரகணி, அதிசார முதலியவை நீங்கும், பத்தியம் வியாதிக்குத் தக்கவைகளாம்.

## 431 பித்தரோக நிவாரணச் சூரணம்.

வேப்பம்பட்டை, சுசுகுப்பி, தாளிசப்பத்திரி வகைக்குப் பலம் 10, இடித்துப் பாண்டத்திட்டு 2படி ஜலம்விட்டெரித்து கால் படியாகச் சுண்டித்து வடித்து ஆய்ந்தெடுத்த சீரகம் பலம் 10, சேர்த்து இரவில் ஊறவைத்து பகலிலுலர்த்தி இவ்வாறு கியாழம் சுண்டும் வரையில் செய்து பழச்சார், முசுமுசுக்கைச் சாறு, கீரணிச்சார், புளியாரைச்சார், நாரத்தம்பழச்சார், கற்பூரவள்ளிச்சார், புளிப்பு மாதுளம் பழச்சார், மணத்தக்காளிச்சார் வகைக்குப் படி கால், இவைகளில் முன் கியாழத்திலூறவைத் தெடுத்த சீரகத்தைத் தனித்தனிச் சாறுகளில் ஊறவைத்துலர்த்தி சாறுகள் சுண்டும் வரையில் செய்துக்கொள்ளவும். அப்படி செய்துலர்த்திய சீரகத்தைச் சூரணித்து திரிகடிப்பிரமாணம் சீனி சர்க்கரையிற் கலந்துண்ண இருகிறுப்பு சுழலை, மூர்ச்சை, அழலை, பித்தவாய்வு, உஷ்ணபேதி, அசீரண வாய்வு, பசிமந்தம், சூத்தி, நெஞ்சுக்குத்து முதலியவை நீங்கும்.

## 432 சுகபேதி பத்மாவெளிச் சூரணம்.

1. சூரத்து நிலவாகை
2. சுக்கு
3. சீரகம்
4. கருவாய்ப்பட்டை
5. ரேவல்சின்னி
6. கடுக்காய்த்தோல்
7. வாலுளுவை
8. கல்தாமரைக்கிழங்கு

வகைக்குச் சூரணம் பலம் 1,

சீனிசர்க்கரைச் சமஞ்சேர்த்து தேகபலமறிந்து அரை 1-2-விராகனிடையுண்ணச் பேதியாகும்.

## 433 மேகநாதிச் சூரணம்.

1. செம்முள்ளிவேர்
2. சுங்கன்வேர்
3. குப்பைமேனிவேர்
4. சுக்கு
5. திப்பிலி
6. சித்தரத்தை
7. சித்திரமூலம்
8. தாளிசம்
9. ஆடாதோடைவேர்
10. சயக்கொழுந்துவேர்
11. கண்டங்கத்திரிவேர்
12. மிளகு
13. ஏலம்
14. கடுக்காய்
15. கையாந்தகரைவேர்
16. வால்மிளகு

வகைக்குச் சூரணம் பலம் 1,

மூன்றிலொரு பங்கு சீனி கற்கண்டு சேர்த்து திரிகடிப் பிரமாணமெடுத்து அரிசியடை தாளக பற்பம் வைத்துண்ண க்ஷயம், காசம், ஈளை இருமல் முதலியவை போம்.

## 434 கருவாய்ப் பட்டைச் சூரணம்.

முசுமுசுக்கைச் சார், நல்லெண்ணெய், நெய், ஆவின்பால்வகைக்குப் படி 1, பாண்டத்திலிட்டு சூதம் பலம் 1, குங்கிலியம் அரை, சூடன் அரை, கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாண்டத்திற் கலந்து சட்டி வாய்ச்சீலை கட்டி அச்சீலைமேல் லவங்கப்பட்டைப் பலம் 10, பொடித்து மேல்சட்டி மூடி சீலை மண் வலுக்கச் செய்து அடுப்பேற்றி எரிக்கும்போது இறையும் ஓசை கண்டு எரக்கி ஆறவிட்டுடைத்து மேற்படி லவங்கப்பட்டையைச் சூரணித்து திரிகடிப் பிரமாணம் இருபோது 5-7-நாளுண்ண கிரந்தி பவுத்திரம், சூலை, புண் முதலியவை நீங்கும். பத்தியம் சட்டபுளி வறுத்த உப்பு.



## 435 வச்சிரவல்லிச் சூரணம்.

ஒரு படி புளித்த தயிரில் இரண்டு பலம் சயிந்தியலவணம்பொடித்துப் போட்டுக் கலக்கி பத்து பலம் பிரண்டையைசிறு துண்டுகளாக்கி மேற்படி தயிரில் போட்டு ஊரவைத்துச் சுண்டுமளவும் உலர்த்திச் சூரணித்து சித்தரத்தை, கிராம்பு, சுக்கு வகைக்குச் சூரணம் பலம் 1, திப்பிலிச் சூரணம் 2, பிரண்டைச் சூரணத்துடன் கலந்து சீனி சர்க்கரைப் பலம் 2, கூட்டி திரிகடிப் பிரமாணமுண்ண வயிற்றிரைச்சல், பொருமல், விம்மல், மந்தம், உஷ்ணபேதி, பித்தவாய்வு, சூலைநோய் முதலியவை போம்.

## 436 மாவிலிங்கன் பட்டைச் சூரணம்.

1. இருவேலி
2. சிறுகுறிஞ்சான்
3. கொழுஞ்சி
4. பாதிரி
5. முசுமுசுக்கை
6. விளா
7. குருந்தொட்டி
8. விலாமிச்சு
9. பூனைவணங்கி
10. கூவிளம்
11. துளசி
12. முசுட்டை
13. நன்னாரி
14. அசுவகேந்தி

வகைக்கு வேர்ச் சூரணம் பலம் 1,

பரங்கிச்சக்கைச் சூரணம் பலம் 2, மாவிலிங்கன்பட்டைச் சூரணம் பலம் 8, இவைகளை யொன்றுபடுத்தி சூரணங்களொட்டுக்கு மூன்றிலொரு பங்கு சீனி சர்க்கரைச் சேர்த்து திரிகடிப் பிரமாணம் காலை மாலை கால் அல்லது அரை மண்டலமுண்ண உட்சூடு, காமாலை, புண், புரை, மேகவெட்டை, மேகப்படை, தேமல் முதலியவை நீங்கும்,

## 437 அனல் சூரணம்.

புளித்த மோரில் ஊரவைத் துலர்த்தி யெடுத்த பிரண்டைச் சூரணம் பலம் 5, சதுரக்கள்ளிப்பட்டை, புளியம்பட்டை, வகைக்குச் சூரணம் பலம் 1, பரங்கிப்பட்டை, சீரகம் வகைக்குச் சூரணம் பலம் அரை, சோற்றுப்பு பலம் 1, இவைகளை யொன்று சேர்த்து திரிகடிப் பிரமாணம் சர்க்கரை தேன் இவைகளிலுண்ண ஜன்னி, குமரகண்டன், காமாலை, வலி, பித்த சோகை முதலியவை போம்.

### 438 ஆநந்தபைரவச் சூரணம்.

| | |
|---|---|
| 1. தாளிசம் | 10. கோஷ்டம் |
| 2. திப்பிலி | 11. சுக்கு |
| 3. சீரகம் | 12. மாஞ்சில் |
| 4. சோம்பு | 13. வால்மிளகு |
| 5. ஆனைத்திப்பிலி | 14. கிராம்பு |
| 6. வெண்மிளகு | 15. சாதிக்காய் |
| 7. நெல்லிவற்றல் | 16. கடுக்காய்த்தோல் |
| 8. மாசிபத்திரி | 17. கொத்துமல்லிவிதை |
| 9. அக்கராகாரம் | 18. லவுங்கப்பட்டை |

வகைக்குப் பலம் 1.

இவைகளைச் சூரணித்துத் திரிகடிப் பிரமாணஞ் சீனி சர்க்கரையிலுண்ண பித்தம், உஷ்ணம், பித்த வாய்வு, விக்கல், அஸ்தி வெட்டை முதலியவை போம்.

### 439 பாவன ஓமச் சூரணம்.

தேய்த்துப் புடைத்துப் போட்டு நீக்கிய ஓமம் பலம் 8, ஆடாதோடைச்சார், புதினாச்சார், வகைக்குப் பலம் 4, இவைகளில் மேற்படி ஓமத்தை ஊரப்போட்டு உலர்த்தி தேசிச்சார், பலம் 4-ல் சயிந்திவலவணம் பலம் 1, பொடித்துப்போட்டு மேற்படி ஓமத்தை முன்போற்செய்து சூரணித்து இரண்டு வராகனெடை சீனி சர்க்கரைச் சேர்த்துண்ண அக்கினி மந்தம், சுவாசகாசம், உப்பிசம், கழிச்சல், சீதள தோஷ முதலியவைகள் நீங்கும்.

### 440 வேறு பிரமேகச் சூரணம்.

| | |
|---|---|
| 1. சந்தனம் | 7. அகிற்கட்டை |
| 2. ஏலம் | 8. லவுங்கப்பட்டை |
| 3. கிராம்பு | 9. சோம்பு |
| 4. அதிமதுரம் | 10. கார்போகம் |
| 5. வெட்பாலை | 11. தேத்தான் |
| 6. அருகன்வேர் | 12. சித்தாமுட்டி |

வகைக்குப் பலம் அரை

வால்மிளகு பலம் 1, இவைகளைச் சூரணித்து திரிகடிப் பிரமாணம் சீனி கற்கண்டுடனுண்ண நீரெரிவு, வெண்மேகம், நீர்ச்சுருக்கு நீர்ச்செரிப்பு முதலியவை நீங்கும்.



### 441 வேறு பிரமேகச் சூரணம்.

வல்லாரியிலை, வில்வயிலை, வெள்ளைக் கரிசலாங்கண்ணியிலை, பொன்னாங்கண்ணி, வெள்ளருகுயிலை, அத்தியிலை, ஆவாரம்பூ, வகைக்குச் சூரணம் பலம் 1, மதுரம், ஏலம், வால்மிளகு, கூகைநீறு, வெள்ளரி விதை, முள்ளங்கி விதை வகைக்குச் சூரணம் பலம் கால், பரங்கிப்பட்டைச் சூரணம் பலம் 3, இவைகளை யொன்றுபடுத்தி திரிகடிப் பிரமாணம் வெண்ணெய், சீனி கற்கண்டு, இவைகளிலுண்ண நீர்ச்சுருக்கு நீர்த்திக்கல், நீர்ச்செரிப்பு, நீர்க்கடுப்பு, பிரமேக முதலியவை நீங்கும்.

### 442 கபாடச் சூரணம்.

| | |
|---|---|
| 1. அதிவிடயம் | 8. குராசானி |
| 2. ஓமம் | 9. பெருமரப்பட்டை |
| 3. சுக்கு | 10. மாதுளம்பழத்தோல் |
| 4. சாதிக்காய் | 11. சாதிபத்திரி |
| 5. லவங்கம் | 12. முத்தக்காசு |
| 6. வால்மிளகு | 13. அக்கராகாரம் |
| 7. சடாமாஞ்சில் | 14. வெண்மிளகு |

வகைக்குச் சூரணம் கழஞ்சு 1

சுத்தித்த கஞ்சாச் சூரணம் கழஞ்சு 2, இவைகளையொன்று சேர்த்து சுத்தித்த அபின் கழஞ்சு 12-கூட்டி தேக பலமறிந்து 1-2-காசெடை உட்கொள்ளஅதிசாரம், கிராணி, வயிற்றுளைவு, சலக்கழிச்சல், வயிற்றிரைச்சல், குடல் பொருமல், சேர்பம், நித்திரை பங்கம், உஷ்ணபேதி, செரியாமந்த முதலியவை நீங்கும்.

### 443 தினக் காய்ச்சலுக்கு.

| | |
|---|---|
| 1. கெவுரி பாஷாணம் | 3. தாளகம் |
| 2. எலி பாஷாணம் | |

இவை சமன் கூட்டி விஷ்ணுகிரந்திச் சாற்றில் அரைத்து, துவரை மாத்திரம் உருண்டைபண்ணி ஒரு உருண்டை இஞ்சிச் சாற்றில் கொடுத்தால் தினக்காச்சல் தீரும்.

பத்தியம்:—பாலுஞ் சோறு முண்ணவும்.

### 444 கர்ப்பம் நிற்க.

பெரிய உத்தாமணி யிலையை பாலில் கொடுக்கவும்.

## 445 நேத்திர வாய்வுக்கு.

வெள்ளைச் சாறுவேளைவேரும், கப்புவேப்பிலையும் நெய்யில் சமைச்சு 7, நாளிட நேத்திர வாய்வு போம்.

## 446 தலை சூலைக்கு.

குமுளாம் பூவும், பசுநெய்யும் கலந்து நசியம்பண்ண தலை சூலைபோம். நெய்சட்டி யிலையை, விளக்கெண்ணெயில் வதக்கிக் கட்டவும்.

பெருமாத்துப் பட்டையும், எருமைச் சாணியும், கொதிக் கவைச்சுப் புகை காட்டவும், அல்லது, கண்டங் கத்திரிவேரை பசும் வெண்ணெயிற் கலந்து புளியும் சேர்த்து நெருப்பிற் போட்டு புகை காட்டவும்.

## 447 தாகத்திற்கு.

1. அதிமதுரம்
2. சீரகம்
3. கோஷ்டம்
4. சுக்கு
5. வெண்காரம்
6. தேன்
7. பச்ச தகுரு

இவைகளை யெலுமிச்சம் பழச்சாறு வார்த்துக் கொதுப்பித் துண்ண தாகம் போம்.

## 448 வாயி லெடுக்கிறதற்கு.

1. கடுக்காய்
2. சயிந்தவ லவணம்
3. சுக்கு
4. திப்பிலி
5. அதிமதுரம்

இவைகளை சமன் கொண்டு சர்க்கரைக் கூட்டி யுண்ணிற்கும்.

## 449 சன்னிக்கு.

1. கடுக்காய்
2. சயிந்தவ லவணம்
3. சுக்கு
4. திப்பிலி
5. மிளகு
6. பெருங்காயம்
7. வெண்காரம்
8. பச்சை லவணம்
9. சாமரம்
10. சவுபோம்மாடிப்பலி

இவை சமன் கூட்டி தேன் எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து நாசியில் தடவ சன்னி குணமாம்.



## 450 சன்னிக்குக் கலிக்கம்.

1. தாணிக்காய் பருப்பு
2. கடுக்காய் பருப்பு
3. சயிந்தவலவணம்
4. பெருங்காயம்
5. சுக்கு
6. மிளகு
7. திப்பிலி

இவை சமன் கூட்டி கோமூத்திரத் தரைத்து உருண்டை பண்ணி நிழலுலர்த்தி எலுமிச்சம் பழச்சாற்றிலாவது முலைப் பாலிலாவது, காடியிலாவது, கண்ணிலிடச் உரைத்து சன்னி தீரும்.

சண்ட மாலைக்கு:—ஆமணக்குப்பூச் சாற்றிற் கொடுக்கவும்.

[illegible]யாதிக்கு:—பழம் வெல்லத் தோடே கொடுக்கவும்.

குல்மத்திற்கு:—உத்தாமணி யிலைச்சாற்றிற் கொடுக்கவும்.

வயிற்றுக் கழிச்சலுக்கு:—எருமைத் தயிரோடே கொடுக்கவும்.

சூலை ரோகத்து:—கொள்ளுக் கூட்டோடே கொடுக்கவும்.

இப்படி தினமொரு ருண்டை தின்று பத்தியத்தோடே யிருக்கவும்.

## 451 சன்னிக்கு.

1. இரதம்
2. மிளகு
3. வெண்காரம்
4. கெந்தகம்

இவை சமன் கூட்டி யூமத்தை யிலைச்சாற்றில் ஒரு நாளெல்லாம் அரைத்து குன்றிப் பிரமாணம் உருண்டைபண்ணி நிழலுலர்த்தா யுலர்த்தி சித்திரமூலம் எருக்கம்வேர் கியாழம் வைத்து அதில் 2 உருண்டை கொடுக்க சன்னி போம்.

கோதுப்புக்கு:—இஞ்சிச்சாற்றில் ஒரு உருண்டை கொடுக்கவும்.

## 452 தாப சுரத்திற்கு.

1. ஏலம்
2. இலவுங்கப்பத்திரி
3. வெட்டி வேர்
4. இலாமுச்சி வேர்
5. முத்தக்காசு
6. சுக்கு

இவை யிடைக்கிடை கூட்டி கியாழம்வைத்துத் திப்பிலி கூட்டிக் கொடுக்கவும். இப்படி 3-நாள், 2-நேரமுங் கொடுக்கவும்.

## 453 செய்யான் கடிக்கு.

தூதுளையை யரைத்துக் குடிக்கத் தீரும்.

## 451 திமிர் தீர்க.

வெள்ளைக் குன்றிவேரை முலைப்பாலி லரைத்துக் கண்ணி லிடத் திமிர் தீர்க்கும்.

## 455 நீர்க் கட்டுக்கு.

விளாங்காயோடு நாவற்கொழுந்தும் பழம்புளியுக்கு மரைத்துக் கரைத்துச் சர்க்கரை வெல்லங் கூட்டிக் கொடுக்க நீர்க் கட்டு குணமாம்

பத்தியம்:—உப்பு புளிப்பு, மீன், கறியாகாது.

## 456 குளிர் காய்ச்சலுக்கு.

1. நல்லதும்பை வேர் பிடி 1  2. சுக்கு  பலம் ¼

இவற்றை யிருநாழி நீர்வார்த்து உரியாய்க் காய்ச்சி 2, மிளகுக் கூட்டிக் கொடுக்கவும்.

## 457 மேலுப்புசத்திற்கு.

1. சிறு வழுதலை  3. உத்தாமணி யிலை
2. ஆடாதோடை யிலை

இவை சமனிடித்து, அதில் மிளகு, திப்பிலி மூலம் துணியில் முடிந்து, பிட்டவிட்டு, அச்சாற்றி லரைத்துக் கலந்துகொடுக்கவும்.

## 458 கண் தெரியாததற்கு.

கரிசலாங்கண்ணி வேரைச் சிறுகச் சிறுக நறுக்கி, பசும்பாலில் 4-ஜாமம் ஊறப்போட்டு, பின்னர் புது முறத்தில் எடுத்து, நிழலுலர்த்த 3-நாள் உலர்த்தி அப்பால், பசும்பாலிலேனும், எலுமிச்சம்பழச் சாற்றிலேனும் அரைத்துக் கண்ணிலிட கண்தெரியும்.

## 459 இதுவுமதே வேறுமுறை.

சித்திரமூலவேரை யெலுமிச்சம்பழச்சாறுவிட்டரைத்து, எலுமிச்சங் காயளவு வெள்ளாட்டுப்பாலில் துவையல் பண்ணித் தின்னத் தீரும்.

## 460 இதுவுமதே வேறுமுறை.

வேப்பங் கொழுந்தும் மஞ்சளும் அரைத்துப் பூச பிறமலங் கரையும்.



## 461 சர்வ சன்னிக்கும்.

1. இரதம்  4. பெருங்காயம்
2. அரிதாரம்  5. இந்துப்பு
3. வெங்காரம்  6. இலுப்பைப் புண்ணாக்கு

ஆணுக்குக் கிடேரி கன்று போட்ட பசும்பாலையும், பெண்ணுக்குச் சேங்கன்று போட்ட பசும்பாலையும் உபயோகிக்க.

இவை சமன்கூட்டி, பேய்ப்பீர்க்கிலைச் சாறு வார்த்தரைத்து, உருண்டை பண்ணி, நிழலுலர்த்தாயுலர்த்தி, எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து நசியம் பண்ணி அல்லது கண்ணிலிட எந்த சன்னியுந் தீரும்.

1. குங்கிலியம்  6. இந்துப்பு
2. மிளகு  7. முருங்கைப்பட்டை
3. திப்பிலி  8. சித்திரமூலம்
4. சீரகம்  9. நாயுருவி வேர்
5. ஆயில்யப்பட்டை  10. ஆட்டுப்பால்

இவை நல்லெண்ணெயிற் கூட்டி நசியம்பண்ண கழுத்துக்கு மேல் பட்ட வியாதி யெல்லாந் தீரும்.

## 462 வர்ண காமாலைக்கு.

கெடேரிக்கன்று, ஊட்டுகிற எருமைப்பால் நாழியில் தேத்தாங்கொட்டையை நறுக்கிப்போட்டு, இறுகக்காய்ச்சி, அழுகிட்டு, ½-பலம் சீரகத்தில் அந்தத் தயிர் வார்த்து, அந்தத் தேத்தாங்கொட்டையையும் தயிர் வார்த்தரைத்து 5-எலுமிச்சம்பழச் சாறும், (அத்தயிரில்)

1. சீரகம்  2. தேத்தாங்கொட்டை

இவையும் சமனிடை யரைத்துப்போட்டு, கீழாநெல்லிச் சாறு காசிடை பிழிந்து, இவை யெல்லாம் கலந்து கொடுக்கவும். இப்படி 3-நாள் கொடுக்கவும்.

பத்தியம்:—பசுமோரும் சோறும். உப்பு புளிப்பு தவிரவும்.

## 463 மஞ்சள் காமாலைக்கு.

வெள்ளைப் புல்லாந்திக் கொழுந்து எலுமிச்சங்காயளவு எருமைத்தயிர் வார்த்தரைத்து, எருமைத் தயிரிற்கூட்டி விழுங்கவும். இந்தப்படி 3-நாள் விழுங்கவும். உப்பு புளிப்புத் தவிரவும்.

## 464 இதுவுமதே வேறுமுறை,

பச்சை யாமணக்கங் கொட்டையை யிடித்துத் தண்ணீரிலே வேகவைத்து எண்ணெ யெடுத்து, யெண்ணெயிற் சிவதைவேரை யரைத்துக் குழம்பாகக் காய்ச்சி ஆமணக்கிலையிலே தடவிக்கட்ட மூலங்கரையும்.

## 465 மண்டை வியாதிக்கு.

1. துளசி
2. மஞ்சள்
3. இஞ்சி
4. நாயுருவி
5. வெற்றிலை
6. சீந்தில்
7. சாரணை

இவற்றைச் சமன்கொண்டு சாறெடுத்து, கோமயத்திற் கூட்டி, அதில்,

## 466 இரத்த மூலத்திற்கு.

குதிரைவாலி வேர் சமூலமரைத்து நல்லெண்ணெயிற் குழைத்துக் கொடுக்க தீரும். கருங்கோழியைப் பொடுதலைச் சாற்றில் வேகவைத்து,

1. மிளகு
2. கடுகு
3. வெள்ளுள்ளி
4. சீரகம்
5. வெந்தயம்
6. பெருங்காயம்
7. கல்லுப்பு

இவை பொடியாக்கி வேகிற கோழியிற் போட்டுக் கொதி நெய்வார்த்து வேகவைத்துக் கிளறி யிறக்கிவைத்துத் தின்ன இரத்தமூலம் தீரும்.

## 467 பித்த காமாலைக்கு.

1. கரிசிலாங்கண்ணிச்சாறு ஆழாக்கு
2. தாழம் விழுதுச்சாறு ”
3. எலுமிச்சங்காய்
4. நற்சங்கு பொடி பலம் 1

இவை கூட்டி, பசும்பால் வார்த்தரைத்து, நாழி பசும்பாலிற் கலந்து, சர்க்கரை 2-பலங் கூட்டிக் கொடுக்கவும். இந்தப்படி 3-நாள் கொடுக்கவும்.

பத்தியம்:—பசும்பாலுஞ் சர்க்கரையாம்.



## 458 பிரண்டை கற்பம்.

பிரண்டை சமூலத்தை யுலர்த்தி யிடித்துக் கொண்டு வஸ்திரகாயம் பண்ணி புதுப்பானையில் வைத்து வெள்ளாட்டு வெண்ணெயில் கொள்ள மூலந் தீரும்.

1, இந்தப் பொடியுங் கடுக்காயும் காடியில் கொடுக்க சீதமுள்ளது விழும். வல்சத்தி நன்றும்.

2. இந்தப் பொடியை யெலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துத் தடவ படர்தாமரைப் போம்.

3. இந்தப் பொடியைப் புளிக்கச் சுடவைத்துக் குடிக்க சுரம் மாறும்.

4. இந்தப் பொடியை புளியும் விரையில் கலந்த வெள்ளாட்டுப் பாலில் ஊறவிட்டுக் குடிக்க மருந்தூறல் சுரம் போம்.

5. இந்தப் பொடியும் மாதளம் விரையும் கூட்டி யரைத்துக் குடிக்க வயிற்றி லின்னும் பூசி, இரத்தம் விழுகிறது போம்.

6. இந்தப் பொடியும் சங்கம்வேரும் தழுதாழைச் சாறும் குடிக்க குலைக்கடுப்பு போம்.

7. இந்தப் பொடியை தேத்தாம் பழத்தோடு பொடி செய்து வஸ்திரகாயம் பண்ணி யதில் கலந்து மஞ்சள் சாற்றிலே கொள்ள பல் வியாதி தீரும்.

8. இந்தப் பொடியை நல்லெண்ணெயிற் குடிக்க ஈளை, பிருமல் தீரும்.

9. இந்தப் பொடியை நெய்யிற் கூட்டி விழுங்க சுபாண்டு தீரும்.

10. இந்தப் பொடியை ஆட்டு மூத்திரத்தில் கொள்ள குருப்பை தீரும்.

11. இந்தப் பொடியை விழுதியிலைச் சாற்றிலே குடிக்க பிள்ளை யுண்டாம்.

12. இந்தப் பொடியை நெய் சர்க்கரையிற் கூட்டிக் கொடுக்க ஆண்கட்டு விடும்.

13. இந்தப் பொடியை ஆடுதின்னாப் பாளைச்சாறு பலம் 3 ல் கலந்து 3 நாள் கொடுக்க மூலம் அறுக்கும்.

## 469 பைத்தியத்திற்கு.

1. நொச்சிச்சாறு ஆழாக்கு 4. வேளைச்சாறு ஆழாக்கு
2. குப்பைமேனிச் சாறு „ 5. தழுதாழைச் சாறு
3. எருக்கிலைச்சாறு „

இவை யெல்லாங்கூட்டி இத்துடன்,

1. வேப்பெண்ணெ உரி 3. இலுப்பெண்ணெ உரி
2. விளக்கெண்ணெ „

இவை கூட்டிக்கலந்து கொதிப்பித்து, உள்ளிதயிலம் ஆழாக்கு விட்டு பதத்திலிறக்கி இஞ்சிச்சாறு, கால் ஆழாக்கு பெருங்காயம் (குன்றியளவு) உள்ளிப்பூண்டு 1 இவை கூட்டியரைத்து, பசுந்தயிர் நாழி நல்லெண்ணெ கால் ஆழாக்கு, இவை கூட்டி, கலந்துங்கொடுக்கவும். இப்படி 7-நாள் கொடுக்கவும். பயித்தியம் குணமாம்.

## 470 அஷ்டாதிச் சூரணம்.

1. பருத்திவிதை 6. காயம்
2. கழற்சிவிதை 7. சாதிபத்திரி
3. மாசிபத்திரி 8. கிராம்பு
4. கரிவேப்பிலை 9. வளையலுப்பு
5. இந்துப்பு 10. சோற்றுப்பு

வகைக்குக் கழஞ்சு

1. சுக்கு 6. மிளகு
2. திப்பிலி 7. சீரகம்
3. லவங்கப்பத்திரி 8. வாய்விளங்கம்
4. கருஞ்சீரகம் 9. கடுக்காய்
5. கடுரோகணி 10. சூரத்நிலவரை

வகைக்குச் சூரணம் பலம் 1,

இவைகளை யொன்றுபடுத்தி திரிகடிப் பிரமாணம் வெந்நீர் குளிர்ந்த ஜலம் சர்க்கரை, தேன், இளநீர் இவைகளிலொன்றில் பித்தவாய்வு, உஷ்ணவாய்வு, வயற்றுப் பொருமல், வயிற்றிரைச்சல், உஷ்ணபேதி முதலியவை நீங்கும்.



## 471 சிறுகீரைக் கிருதம்.

புடலன், முசுமுசுக்கை, சிறுகீரை, கொடிப்பை, நற்பாலை நெல்லிக்காய் இவைகளின் சாறு வகைக்கு ஆழாக்கு

1. மதுரம் 6. லவங்கப்பட்டை
2. இலுப்பைப்பூ 7. லவங்கம்
3. முந்திரிகை 8. நற்சீரகம்
4. சந்தனம் 9. ஏலம்
5. சாத்திரபேதி 10. திப்பிலி

வகைக்குப் பலம் 1.

ஆவின் பால் விட்டரைத்து மேற்படி சாற்றில் கலந்து ஆவின் நெய் படி 2 விட்டுக் காய்ச்சி வடித்து அரை பலம் வீதம் அந்திசந்தி கொள், அரை மண்டலங்கொள்ள பித்தம் 40-ம் நீங்கும்.

## 472 ஏலாதிச் சூரணம்.

1. கிராம்பு 14. மஞ்சள்
2. மதுரம் 15. சுக்கு
3. மிளகு 16. திப்பிலி
4. திப்பிலிக்கட்டை 17. செவியம்
5. சித்தரத்தை 18. சந்தனத்தூள்
6. சாதிக்காய் 19. சாதிபத்திரி
7. வால்மிளகு 20. முந்திரிகை
8. பேரீச்சு 21. கோற்றுமல்லிவிதை
9. நெல்லிவற்றல் 22. நெற்பொரி
10. பருத்திவிதைப்பருப்பு 23. மாதுளந்தோல்
11. கூவிளத்தோல் 24. நிலப்பனைவேர்
12. அசுவகெந்திவேர் 25. நன்னாரிவேர்
13. சீந்தில்வேர். 26. முத்தக்காசு

வகைக்குச் சூரணங் கழஞ்சு 1,

ஏலரிசிச் சூரணம் பலம் 4, இவைகளை யொன்றுசேர்த்து திரிகடிப் பிரமாணம் இஞ்சிச்சார், சம்பீரச்சார், மாதுளம்பழச்சார், நெய், தேன், சர்க்கரை, இவைகளிலொன்றில் சத்தி, மயக்கம், அஸ்திசுரம், அஸ்திவெட்டை, நெஞ்செரிப்பு, நெஞ்சுக்குத்து, வாய்க் கசப்பு, வாய் நீரூறல், விக்கல், அசீரணம், தலைச்சுற்றல் முதலிய பித்த ரோகங்கள் நீங்கும்.

## 473 வாதகாமாலைக்கு.

சுக்கு, மிளகு, திப்பிலி சமன் கூட்டி, கருக்கம்பழுப்புச் சாறுவார்த்துக் கொதிப்பித்து, உருண்டைபண்ணி 15-நாள் தின்ன, வாதகாமாலை தீரும்.

## 474 குக்கிடச் சூரணம்.

திரிகடுகு, வெள்ளுள்ளி வகைக்குப் பலம் 1¼, வளையலுப்பு, இந்துப்பு, சோற்றுப்பு வகைக்குப் பலம் ½, பருத்தி விதைப் பருப்பு, காரெள்ளு, கடுகு, கறிவேப்பிலை வகைக்குச் சூரணம் பலம் 3; விடயம், மதுரம், அக்கல்காரம், ஓமம், இருசீரகம், காயம், வாய்விளங்கம், கொஞ்சன், ஏலம், இலவங்கப்பட்டை, சாதிப்பத்திரி, கிராம்பு, வெட்பாலை விதை, செவியம், சீனக்காரம், குங்கிலியம், சவுக்காரம், வெள்ளியம், சித்தரத்தை, தாளிசபத்திரி, கருஞ்சீரகப்பட்டை, வெண்காரம் வகைக்குக் கழஞ்சு 3, இவைகளைப் பொடித்துக் கால், தலை, ரோமம், குடல், கவிச்சு போக்கிய கருங்கோழி வயிற்றில் வைத்துத் தைத்து, வாய்கண்ட சட்டியி லிட்டு 4-படி சலம் வார்த்து மேற்சட்டி மூடி சீலை செய்து அடுப்பேற்றிக் கோழி வெந்த சமயங் கண்டிறக்கி எலும்பு, போக்கி மருந்தையும் தசையும் பிசைந்து வேறு புது பாண்டத்திட்டுக் கருகாமலும் சரக்கு சுவில்லாமலும் வறுத்தெடுத்துச் சூரணித்து திரிகடிப் பிரமாணம் அனுபானமறிந்துண்ண அஷ்டகுன்மம் கிரகணி, அதிசாரம், வயிற்றலைவு முதலிய மேகவாய்வு நீக்கும்.

## 475 நன்னாரிவேர் கிருதம்.

நன்னாரிவேர் பலம், 10, தையிடித்துப் பாண்டத்திட்டு 4, படிசலம் வார்த்து அரை, படியாகக் காய்ச்சி வடித்து கொடிப்பைச்சார், பொடுதலைச்சார், புளிப்பு மாதுளைச்சார், கிம்பழச் சார் வகைக்கு உழக்கு, நெய் வீசை அரை, சர்க்கரை வீசை கால், கலந்து,

| | |
|---|---|
| 1. சதகுப்பி | 7. ஏலம் |
| 2. லவங்கம் | 8. சித்தரத்தை |
| 3. நன்னாரி | 9. வெட்டிவேர் |
| 4. விலாமிச்சு | 10. சீந்தில் |
| 5. லவங்கப்பட்டை | 11. விடயம் |
| 6. தாளிசம் | 12. திப்பிலி |

வகைக்குப் பலம் கால்,



## 476 பரங்கிப்பட்டைச் சூரணம்.

| | |
|---|---|
| 1. சிறுபிரப்பன்கிழங்கு | 11. கோன்றைப்பட்டை |
| 2. சாரணைவேர் | 12. கொடிவேலிவேர் |
| 3. கோற்றுமல்லிவிதை | 13. மதுரம் |
| 4. ஓமம் | 14. விடயம் |
| 5. மிளகு | 15. வெண்மிளகு |
| 6. வால்மிளகு | 16. வெந்தயம் |
| 7. சித்தரத்தை | 17. அக்கல்காரம் |
| 8. திப்பிலி | 18. சாதிக்காய் |
| 9. சாதிபத்திரி | 19. கிராம்பு |
| 10. சீரகம் | 20. கருஞ்சீரகம் |

வகைக்குச் சூரணம் பலம் அரை, பரங்கிப்பட்டைச் சூரணம் பலம் 10, ஒன்றுபடுத்தி திரிகடிப் பிரமாணம் சீனி சர்க்கரையிலுண்ண புடை, சொறி, ஊறல், கரப்பான், சூலை, அஸ்திவெட்டை, அக்கினி மந்தம், உப்பிசம், வயிற்றிரைச்சல், முதலியவை நீங்கும்.

## 477 நிலப்பனைக் கிருதம்.

| | |
|---|---|
| 1. சயிந்தியலவணம் | 11. முத்தக்காசு |
| 2. கோஷ்டம் | 12. சிறுதேக்கு |
| 3. கற்சூரக்காய் | 13. மதுரம் |
| 4. சீரகம் | 14. வெட்டிவேர் |
| 5. நெல்லிக்காய் | 15. தான்றிக்காய் |
| 6. கடுக்காய் | 16. கோற்றுமல்லிவிதை |
| 7. திப்பிலி | 17. மிளகு |
| 8. சுக்கு | 18. லவங்கப்பத்திரி |
| 9. லவங்கப்பட்டை | 19. சிறுநாகப்பூ |
| 10. ஏலம் | 20. தாளிசம் |

வகைக்குக் கழஞ்சு 6, இவைகளை நன்றாய்ப் பொடித்துக் கருப்பஞ்சார், கரியாலைப் பூ இஞ்சிச்சார், நெல்லிச்சார், வகைக்குப் படி 2, நிலப்பனைக் கிழங்குச்சார் படி 24, நெய் படி 8, ஒக்கச் சேர்த்து மேற்படி பொடியில் கலந்துக் காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி வீதம் அந்திசந்தி கால் மண்டலமுண்ண நீர்ச்சுருக்கு, நீர்ச்செரிப்பு, பிரமேகம் முதலியவை நீங்கும்.

### 478 சந்திரிகைக் கிருதம்.

| | |
|---|---|
| 1. அத்திப்பட்டை | 4. ஆலம்பட்டை |
| 2. அரசம்பட்டை | 5. இத்திப்பட்டை |
| 3. பெருமரப்பட்டை | |

இவைகளைக் கல்லுரலில் நசுக்கி பாண்டத்திலிட்டு 8-படி ஜலம் விட்டு 1-படியாகக் கண்டக்காய்ச்சி சாறைச்சார், வெள்ளறுகுச் சார், ஆவின் நெய் வகைக்குப் படி 2-கலந்து

| | |
|---|---|
| 1. ஆலன்வேர் | 11. சந்தணம் |
| 2. அத்திவேர் | 12. மதூரம் |
| 3. நன்னாரிவேர் | 13. பேரீச்சு |
| 4. வெள்ளாறுதுமூலம் | 14. இலுப்பைப்பூ |
| 5. கோஷ்டம் | 15. லவங்கப்பத்திரி |
| 6. தாமரைவளையம் | 16. அசுவகெந்தி |
| 7. அரசன்வேர் | 17. சிறுநாகப்பூ |
| 8. நாணல்வேர் | 18. சேண்பகப்பூ |
| 9. செங்கழுனீர்மூலம் | 19. ஏலம் |
| 10. நெய்தற்கிழங்கு | 20. கச்சோலம் |

வகைக்குக் கழஞ்சு 1

ஆவின்பால் விட்டரைத்து ஒன்றாய்படுத்தி சிறிய தீயாய் நாலு நாள் வரையில் காய்ச்சி இறக்கிநாள் இதைவடித்து கால் பலம் வீதம் அந்திசந்தி அரை மண்டலம் கொள்ள சுரம், எலும்புருக்கி, பித்தகாசம், உஷ்ணமிக்கை நீங்கும், அன்றி இப்பாகத்தில் சேர்க்கும் நெய்யை நிறுத்தி எள்ளெண்ணெய் விட்டுக் காய்ச்சி ஸ்நானஞ் செய்துவர நீரிழிவு, தேகவாயு, ரெத்த, பிளவை, கை கால் கண் மெய்யெரிவு நீங்கும்.

### 479 உஷ்ண கரப்பானுக்கு.

| | |
|---|---|
| 1. சங்கம் வேர் | 2. சாரணை வேர் |

இவை சமன் கூட்டி, பசும்பால் வார்த்தரைத்து, உரிப்பசுவில் குழப்பிக் கொடுக்கவும். இந்தப்படி 8-நாள் கொடுத்து, உப்பு புளிப்புத் தவிரவும்.



### 480 தண்ணீர்விட்டான் கிழங்கு கிருதம்.

| | |
|---|---|
| 1. ஓமம் | 13. சிறுதேக்கு |
| 2. கூகைநீர் | 14. சந்தணம் |
| 3. சுக்கு | 15. கோஷ்டம் |
| 4. திப்பிலி | 16. மிளகு |
| 5. இந்துப்பு | 17. பேரீச்சு |
| 6. கடுக்காய் | 18. நெல்லிக்காய் |
| 7. வெட்பாலையரிசி | 19. மதூகம் |
| 8. லவங்கப்பத்திரி | 20. சிறுநாகப்பூ |
| 9. விலாமிச்சவேர் | 21. தான்றிக்காய் |
| 10. கோரைக்கிழங்கு | 22. ஏலம் |
| 11. திராக்ஷி | 23. தாளிசம் |
| 12. சீரகம் | 24. லவங்கப்பட்டை |

வகைக்குக்கழஞ்சு-1½.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. கதலிச்சார் | படி | ½ | 6. கருப்பஞ்சார் | படி | ,, |
| 2. செவ்விளநீர் | ,, | ,, | 7. நிலப்பனைக்கிழங்குச்சார் | | ,, |
| 3. பசும்பால் | ,, | ,, | 8. கலியாணப்பூசினிச்சார் | | ,, |
| 4. நிம்பழச்சார் | ,, | ,, | 9. நெல்லிச்சார் | ,, | ¼ |
| 5. தண்ணீர்விட்டான்சார் | | 6 | 10. ஆவின்பால் | ,, | 2 |

இவ்வகைகளை யொன்றாய்படுத்தி மேற்படி சரக்குகளை பன்னீரால் அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து ஒரு அரிசவீதமுண்ணை உட்சூடு, பிரமேகம், அஸ்திவெட்டை, கல்லடைப்பு, நீர்ச்சுருக்கு முதலியவை நீங்கும், அன்றி இளைவர்களுக்கு தேகபுஷ்டியும் வயசு பெற்றவர்களுக்கு தாதுவிர்த்தியு முண்டாம்.

### 481 செவ்விளநீர்க் கிருதம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. லவங்கப்பத்திரி | பலம் | 2 | 9. மிளகு | பலம் | ½ |
| 2. சாதிக்காய் | ,, | ,, | 10. மாசிக்காய் | ,, | 1 |
| 3. ஏலம் | ,, | ,, | 11. கொற்றுமல்லிவிதை | ,, | ,, |
| 4. சுக்கு | ,, | ,, | 12. சீரகம் | ,, | ,, |
| 5. சிறுநாகப்பூ | ,, | ,, | 13. சந்தணம் | ,, | ,, |
| 6. லவங்கப்பட்டை | ,, | ,, | 14. சோம்பு | ,, | ,, |
| 7. சாதிபத்திரி | ,, | ,, | 15. கற்பூரக்காய் | ,, | 4 |
| 8. திப்பிலி | ,, | ,, | 16. திராட்சி | ,, | ,, |

இவைகளைச் சூரணித்து செவ்விளநீர் படி 8, ஆவின்நெய் படி 2, பசும்பால் படி 2, சர்க்கரை விசை 6, சேர்த்துக் காய்ச்சி வடித்து அரை பலம் வீதம் காலை, மாலை, காள், மண்டலமுண்ண நீரடைப்பு, வரட்சி, வாய்க்குமட்டல், அரோசகம், நீர்ச்செரிப்பு, நீர்க்கடுப்பு, நீர்க்கருக்கு முதலியவை போம்.

## 482 கதலிக் கிருதம்.

கதலிமூலம் கதலிப்பூ வகைக்கு தூலம் 1, மேற்படி சாறு கள் வகைக்குப் படி கால், பாண்டத்திட்டு ஆவின் நெய் படி 1, ஆவின்பால் படி 1, கருப்பஞ்சாறு நெல்லிக்காய்ச்சாறு, நிலப்பனைச் சாறு, தண்ணீர் விட்டான்சாறு வகைக்குப் படி 4, ஒன்றுபடுத்தி,

1. ஏலம்
2. வாளம்
3. சடாமாஞ்சில்
4. தான்றிக்காய்
5. ஆலம்விழுது
6. செங்கழுநீர்க்கிழங்கு
7. லவங்கம்
8. கெந்நகம்
9. நெல்லிக்காய்
10. கடுக்காய்
11. அல்லிக்கிழங்கு
12. நெய்தற்கிழங்கு

வகைக்குக் கழஞ்சு 3,

தண்ணீர் விட்டானைத் மேற்படி பாண்டத்திற் கரைத்து சர்க்கரை விசை அரை, சேர்த்து அடுப்பேற்றி சிறு அனலாய் 4, நாள் கொதிப்பித்து 5 நாள் சிறுகக்காய்ச்சியிறக்கி 10-வது நாள் முதல் வேளை யொன்றுக்கு இருகழஞ்சி வீதம் அந்தி மண்டலம் இருவேளை யுண்ண எலும்புருக்கி, மேகவெட்டை, பிரமேகம், உதரப்பிரமேகம், அஸ்திவெட்டை, நாபி இரணம், நீரிழிவு, காமாலைரோகம், நீர்ச்சுருக்கு, நீர்ச்செரிப்பு, நீர்க்கடுப்பு பெரும்பாடு முதலியவை நீங்கும்.

## 483 துருவாதிக் கிருதம்.

பழக்கிண்ணிப் பாலைப்பட்டை பலம் 32, பாண்டத்திட்டு 8 படி சலம்வார்த்து 2 படியாகச் சுண்டிய வடித்து வெள்ளறுகுச் சார் படி 8, ஆவின் நெய் படி 1½, ஆவின் பால் படி 2, ஒன்று படுத்தி.



1. மதுரம்
2. விலாமிச்சு
3. கோம்பரக்கு
4. மலாக்காய்
5. முந்திரிகை
6. வெள்ளறுகு
7. முத்தக்காசு
8. முள்ளி
9. வெட்பாலை
10. நன்னாரி
11. குங்கிலியம்
12. மடல்
13. கச்சோலம்
14. கோட்டிக்கிழங்கு
15. சல்லிமூலம்
16. வளையம்

வகைக்குக் கழஞ்சு 3,

இவைகளை ஆவின் பாலினாட்டி மேற்படி பாண்டத்திற் கரைத்து சர்க்கரை விசை அரை, சேர்த்து சிறு தீயாய் மூன்று நாள் காய்ச்சி வடித்து அரை, பலம் வீதம் அரை, மண்டலம் முண்ண குழிப்புண், ஆறாப்புண், கிரந்திப்புண், யோனிப்புற்று, லிங்கப்புற்று, வீக்கம், இரத்தபித்தம், நரம்புச்சிரந்தி, சூலை, வீக்க முதலியவை போம்.

## 484 மகாகூழ்ப்பாண்டக் கிருதம்.

1. நிலப்பனைவேர்
2. நெரிஞ்சல்
3. நன்னாரி
4. சிற்றுமல்லி
5. மிளகுசாரணைவேர்
6. அமுக்கரா
7. வில்வம்
8. தாமரைக்கிழங்கு
9. தண்ணீர்விட்டான்மூலம்
10. கோடிவேலி
11. வழுதலைவேர்
12. சித்தாமுட்டி
13. செந்தொருசமூலம்
14. பாதிரிவேர்
15. கோரைக்கிழங்கு
16. நெய்தற்கிழங்கு

வகைக்குப் பலம் 3½.

இவைகளை யிடித்துப் பாண்டத்திட்டு 8, படி சலம் வார்த்து ஒரு படியாகச் சுண்டிய வடிக்கவும், மேல்தோல் உட்சோறு விதை நீக்கிய கலியாணப் பூசினிக்காயை துண்டுகளாக்கி 1½, படி சலம்விட்டு அரை, படியாகச் சுண்டிய வடித்துக் கொள்ளவும்.

1. கருப்பஞ்சார்
2. தாணிச்சார்
3. கலியாணப்பூசினிச்சார்
4. இலுப்பையிலைச்சார்
5. வெள்ளரிச்சார்
6. நெல்லிச்சார்
7. முள்ளிலவம்பட்டைச்சார்
8. மணத்தக்காளிச்சார்

வகைக்குப் படி 1.

மேற்படி யெழுத்தையுஞ் சாயகளாப் பொன்ற படுத்தி ஆவின்பால் படி கால், பசுநெய் படி 2, சர்க்கரை வீசை அரை, சேர்த்துப் பாண்டத் தேற்றி;

| | |
|---|---|
| 1. ஆடாதோடைவேர் | 21. சூஸ்சேநுசாலம் |
| 2. நன்னாரிவேர் | 22. முருங்கைப்பிசின் |
| 3. சாரணைவேர் | 23. சங்கன்விரை |
| 4. தாமரைவளையம் | 24. முள்ளங்கிவிரை |
| 5. பேரீச்சு | 25. நூதரிசுருக் |
| 6. சிற்றுமல்லிவேர் | 26. மதுரம் |
| 7. அமுக்குராவேர் | 27. இலுப்பைப்பூ |
| 8. ஏய்தல்மூலம் | 28. கெந்தகம் |
| 9. முந்திரிகை | 29. மாஞ்சில் |
| 10. கடுகுரோகணி | 30. மஞ்சிட்டி |
| 11. வெட்டிவேர் | 31. மஞ்சள் |
| 12. கோஷ்டம் | 32. கருஞ்சீரகம் |
| 13. மலாக்காய் | 33. செவியம் |
| 14. தேவதாரி | 34. பூனைக்காலிவித்து |
| 15. வெட்பாலையரிசி | 35. சபேத்மீசலி |
| 16. விடயம் | 36. வேலம்பிசின் |
| 17. கார்போகவித்து | 37. வெங்காயவிரை |
| 18. சீரகம் | 38. நீர்முள்ளிவிரை |
| 19. தர்ப்பைபாசிவிரைப்பருப்பு | 93. சிறுநாகப்பூ |
| 20. லால்முசலி | 40 நூதரிசுபேத் |

வகைக்குக் கழஞ்சு 1;

இவைகளை ஆவின் பாலாலாட்டி, மேற்படி பாண்டத்திற் கரைத்து பதமாய்க் காய்ச்சிக் கிருதத்தை ஒருதோலம் வீதம் இருவேளை அரை, மண்டல முன்னா மேகச்சூடு, அத்தியுஷ்ணம், எலும்புருக்கி, கெணக்காய்ச்சல், அஸ்திசுரம், அழலைசுரம், நீர் மூலக்கடுப்பு, பித்தகாசம், பிரமேக முதலியவை நீங்கும்.

## 485 உளைமாந்தத்திற்கு.

சித்தர்மணக்கெண்ணெ அரை படி, பாண்டத்திட்டு; வசம்பு, வாளம், வேம்பவேர், உள்ளி, காயம், சீரகம், நாரத்தன்வேர், வகைக்குக் கால் பலம், இவைகளைத் தக்காளிச் சாற்றாலாட்டிக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து 1-2-காசிடை உள்ளுக்கீயவும்.



## 485 உப்பல்மாந்தம் முக்குமாந்தம்தொந்தமாந்தத்திற்கு

விளக்கெண்ணெ படி 1, பாண்டத்திட்டு கோஷ்டம் மதுரம், சீரகம், திப்பிலி, ஏலம், தேவதாரி, சந்தனம், மாசக்காய், வெந்தயம், சுக்கு, வெள்ளுள்ளி, வசம்பு, கடுகுரோகணி, மூங்கில், பச்சைத்தோல், வகைக்குக் கழஞ்சு 1, பீனாரிச்சாற்றுலாட்டிக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து சூட்டுடன் கஸ்தூரி, கோரோஜனம், பச்சை கற்பூரம், வகைக்குக் கழஞ்சு 1, கலந்து காசெடை உள்ளுக்குக் கொடுக்கவும்

## 486 வேறு கெணத்திற்கு.

வல்லாரை, மாசிபத்திரி, கூவிளம் விரா, உள்ளி, சம்பழம் கொவ்வை இவைகளின் சார் வகைக்குப் படி கால், அத்திப்பால் ஆலம்பால், முலைப்பால், ஆவின்பால், தேங்காய்ப்பால், தேன் வகைக்கு ஆழாக்கு 1, ஆவின் நெய் படி அரை ஒன்றாகலந்து பாண்டத்திட்டு சாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலம், கிராம்பு, திரிகடுகு, திரிபலை, சடாமாஞ்சில், விடயம், மாசக்காய், வகைக்குப் பலம் 1, சூரணித்து மேற்படி பாண்டத்தில் கலந்து சந்தனத்தூள், அருகன் கீட்டை, இருவேலி, விலாமிச்சு வகைக்குப் பலம் 1, இடித்துப்போட்டு மூன்றுழாக்கு சலம் வார்த்து ஆழாக்காகச் சுண்டித்து முன் மருந்துகளோடு சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி வீதம் கொடுக்கவும். அன்றி எலும்புருக்கிய வியாதி கண்டவர்களுக்கும் கொடுக்கலாம்.

## 487 ஊதுமாந்த கெணத்திற்கு.

முத்தெண்ணெ படி 1, தேங்காய்ப் பால், மாதுளம் பழச் சார், வல்லாரைச் சார், முருக்கன் சார், பொடுதலைச்சார், வகைக்குப் படி அரை, ஒன்றுபடுத்தி பாண்டத்திட்டு நீர்முள்ளி வித்து வேற்கொம்பு தேங்காய் நெத்து, கையாந்தகரை வேர், கண்டங்கத்திரி வேர், வசம்பு, ஏலம், வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி பற்பாடகம், முத்தக்காசு, அரிலைத்தாமரை, தாமரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, நிலவாகை, விளாம் பிசின், மருட்காரைப் பிசின், இலவம் பிசின், மாசக்காய், கடுக்காய், விடயம், வால்மிளகு, சாதிபத்திரி வகைக்குப் பலம் கால், ஒன்றுசேர்த்துப் பொடித்து மேற்படி பாண்டத்திற் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து 1-2 பணவெடை கொடுக்கவும்.

## 488 கெணைத்திற்கு.

சித்தாமணக்கெண்ணெய் படி 1, பாண்டத்திலிட்டுக் குமுளன் வேர், [illegible] வேர், வெள்ளெருக்கன் வேர், [illegible] வேர், [illegible] வேர், [illegible] வேர், கொய்யாற வேர், [illegible] வேர், வகைக்குப் பலம் 1, முலைப்பாலாலாட்டிக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஏலம், சீரகம், மதுரம், வகைக்குப் பலம் 1, [illegible] சூரணித்துத் தூவிக் கலந்து காசெடை முலைப்பாலில் கலந்தூட்டவும்.

## 489 பிரத்தியெகுலை மாந்தத்திற்கு.

முத்தெண்ணெய், தேங்காய்ப்பால், செம்பருத்திச் சார், வகைக்குச் சேர் 1, பாண்டத்திலிட்டு சுக்கு, கிராம்பு, ஏலம், அரிசித் திப்பிலி, மிளகு வகைக்குச் சூரணம் விராகனிடை 1, மேற்படி எண்ணெயிற் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து பூரபற்பம் விராகனிடை 1, கலந்து சிக்கரண்டி விதம் கொடுக்கவும்.

## 490 வேறு கெணைத்திற்கு.

ஆவின் நெய் அரை படி, தேங்காய்ப்பால், வெள்ளாட்டுப் பால், தண்ணீர்விட்டான் சார் வகைக்கு கால்படி, ஒன்றுகலந்து பாண்டத்திலிட்டு செண்பகப்பூ, சந்தனம், அவுரிவேர், குமுளன் வேர், விலாமிச்சு வேர், நன்னாரி, கடுகுரோகணி, கிராம்பு, வாய்விளங்கம், பன்னீர்ப்பூ வகைக்குப் பலம் கால், தேங்காய்ப்பாலாலரைத்து மேற்படி பாலிட்டதிற் கரைத்து பதமாய்க் காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி விதம் கொடுக்கவும்.

## 491 மாந்த கெணைத்திற்கு.

மருளன்கிழங்கு, உள்ளி, நிம்பழம், சிறு நெள்ளடி, பொடுதலை, தகரை, மிளகு, தக்காளி, கருநொச்சி, சருள்ளி, வகைக்குச் சார் படி கால், சித்தாமணக்கெண்ணெய் படி 1, பிரமிச்சார், சிறு செருப்படைச்சார், நீர்முள்ளிச்சார், துளசிச்சார், எருமைத் தக்காளிச்சார், கருந்துளசிச்சார், கேழ்வரகுச்சார், நெய்ச்சிட்டிச்சார் வகைக்கு ஆழாக்கு அரை, இவைகளை யொன்றுப்படுத்திப் பாண்டத்தேற்றி பழம் பாசி பலம் 2, சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து 1-2-பணவெடை முலைப்பாலில் கலந்துகொடுக்கவும்.



## 492 கெண்மாந்தத்திற்கு.

ஆமணக்கெண்ணெ படி 2, புனல்முருங்கை நத்தைச்சூரி, நாயுருவி, நாய்வேளை, சிறுகுறிஞ்சான், நரிபயத்தன், நீன்னாரி, பிரமி தும்பை, பொன்னாங்கண்ணி, முசுமுசுக்கை, இவைகளின் சார் வகைக்குப் பலம் 1, ஒன்றுகலந்து சித்திரமூலம், குன்றி வேர், சங்கங்குப்பி வேர், முன்னை வேர், முல்லை வேர், சித்தாமல்லி வேர், பேராமல்லி வேர், காட்டகத்தி வேர், ஆவாரை வேர், பொன்னூரை வேர், மணத்தக்காளி வேர், கொள்ளுக்காய்வேளை வேர் வகைக்குப் பலம் முக்கால் இடித்துப்போட்டு 4-படி சலம் வார்த்து அரை படியாகச் சுண்டித்தயெண்ணெயோடு சேர்த்து அரிதாரம், கெந்தி, வாளம், நாபி, வெள்ளை அப்பிரேக பற்பம், சிலாசத்து பற்பம் வகைக்கு விராகனிடை அரை பொடித்துக் கூட்டி வால்மிளகு, சடாமாஞ்சில், அக்கல்காரம், செண்பகப்பூ, கோஷ்டம், செவியம், மதுரம், கற்கடகசிருங்கி, சுக்கு, தான்றிக்காய், கடுக்காய், சாதிக்காய், லவங்கப்பட்டை, லவங்கப்பூ, கடுக்காய்ப்பூ வகைக்குக் கழஞ்சு 2, சூரணித்தக் கூட்டிப் பதமாய்க் காய்ச்சி வடித்து புனுகு, கஸ்தூரி, கோரோசனை, பச்சைக் கற்பூரம் வகைக்கு விராகனிடை அரை, பொடித்துப் போட்டு பணவெடை கொடுக்கவும்.

## 493 வேறு கெணத்திற்கு.

வெள்ளாட்டுப் பால் படி 2, விளக்கெண்ணெ படி 1, திருகுகள்ளிச்சார் ஆழாக்கு [illegible] சேர்த்துப் பாண்டத்திட்டு இண்டங்கொழுந்து பிடி 1, போட்டு செண்பகப்பூ, சாதிக்காய், லவங்கம், ஏலம், வெள்ளுள்ளி, சாதிபத்திரி, இருசீரகம் வசம்பு விலாமிச்சு, வெட்டி வேர், சிறு நாகப்பூ, முத்தக்காசு, ஆனைக்கிழங்கு, கடுக்காய், கடுகுரோகணி, கோஷ்டம், நாகேசரம், வகைக்குக் கழஞ்சு 1, தேங்காய்ப் பாலாலாட்டிக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து பணவெடை முலைப்பாலில் கலந்தூட்டவும்.

## 494 உரம் விழுதலுக்கு.

வெள்ளுள்ளி-கடுகு-வேப்பின்வித்து வகைக்குப்பலம் 10-ஒன்றுகலந்துக் குழித் தயிலமிறக்கி உடம்பு முழுதும் பூசவும்.

## 495 வேறு கெணத்திற்கு.

நிலக்கடம்பு, பரவட்டம் புல், வேலிப்பருத்தி, பொன்னாங்கண்ணி, நுணா, குதிரைவாலி, முசுமுசுக்கை, வல்லாரை, புளி, யாரை, புங்கிலை, தூதுளை. அம்மான்பச்சரிசி, ஒரிலைத்தாமரை, கீழ்க்காய்நெல்லி, சிறு புள்ளடி, ஆடுதீண்டாப் பாளை, வரப்புலா தகரை, ஆவரையிலை, வெண்ணொச்சிலை, செந்நாயுருவி, மிளகு தக்காளி, ஆடாதோடை, கருநொச்சி, சின்னி, வேம்பு, சிறு கீரை, முருங்கிலை, பொன்முசுட்டை, நரிப்பயத்தன், நிலக்குமிழ், ஆவாரை, விஷ்ணுகரந்தை, சங்கங்குப்பி, நாவல் துளிர், கண்டங் கத்திரி, வில்வம், சீந்தில், குட்டிவிளா, இவைகளின் சார் வகைக் குப் படி 1, சித்தாமணக்கெண்ணை படி 1, ஆவின் நெய் அரை படி, ஒன்றுகலந்து பாண்டத்திட்டுச் சீரகம், கிராம்பு, வசம்பு, உள்ளி வகைக்குப் பலம் 1, ஆவின் பாலாலாட்டிக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து பணவெடை மூலைப்பாலிலூட்டவும். அன்றி அஸ்திவெட்டை, கெணச்சூட்டுக்கு கால், அரை பலம் வீதம் கொடுக்கவும்.

## 496 சுழி கெணத்திற்கு.

மேனிச்சார், உப்பிலாங்கொடிச்சார், சுருள்ளிச்சார் வகைக்குப்படி கால், விளக்கெண்ணெய் படி அரை, ஒன்று சேர்த்துப் பாண்டத்திட்டு கண்டங்கத்திரிவேர், கடுக்காய், வில்வவேர், குன்றிவேர் நிலவிளாப்பைவேர், முசுமுசுக்கைவேர், தூதுளைவேர் வகைக்குக் கழஞ்சு 1, பொடித்துக்கலந்து பதமாய்க்காய்ச்சி வடித்து 1-2பணவெடை கொடுக்கவும்.

## 497 வேறு சுழி கெணத்திற்கு.

சித்தாமணக்கெண்ணெய் படி அரை, நெய் படி கால், பொடுதலைச்சார் செம்முள்ளிச்சார், மணத்தக்காளிச்சார், கொடிவேலிச் கரந்தைச்சார், கண்டங்கத்திரிச்சார், கோழியவரைச்சார், நல்வேளைச்சார், நாய்த்துளசிச்சார் வகைக்கு ஆழாக்கு 1, சேர்த்துப் பாண்டத்திட்டு வெந்தயம், சீரகம், சீரினைவேர், துவர்வேர், நன்னாரிவேர், மிளகு, சுக்கு வகைக்குப் பலம் கால், பொடித்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து கழஞ்சுவீதம் கொடுக்கவும்.



## 498 உப்பல் மாந்தத்திற்கு.

வாய்விளங்கம்-ஆமையோடுபர்பம்-மிளகு-பொடுதலைக்காய்-வசம்பு-கழற்சிப்பருப்பு இவைகளைச் சமன்கொண்டு பொடுதலைச் சாற்றாலாட்டி சுண்டையளவு குளிகைசெய்து நிழலுலர்த்தி-வழுதலை-வேலிப்பருத்தி-ஓமம் இவைகளின் கியாழத்திலிடவும்.

## 499 ஊது மாந்தத்திற்கு.

பொரிகாரம் விராகனெடை ½, கடுகுரோகணி, கருஞ்சீரகம், வாய்விளங்கம் வகைக்கு விராகனிடை 2-இவ்வகைகளைப் பாலைவயர்ப் பாலாலாட்டிச் சிறுசுண்டையளவு குளிகைகட்டி வெந்நீர் அநுபானத்திலூட்டி மாலையில் பொடுதலைநீர்க்கு-நுணாநீர்க்கு-மாநீர்க்கு நொச்சிநீர்க்கு-வேலிப்பருத்திநீர்க்கு-புளிநீர்க்கு-வேப்பன்நீர்க்கு உள்ளி-வசம்பு-ஓமம்-திப்பிலி இவைகளைச் சமன்கொண்டு கியாழமிட்டு ஒருசங்குவூட்டவும்.

## 500 வேறு ஊதுமாந்தத்திற்கு.

சித்தாமணக் கெண்ணெய்படி கால், பாண்டத்திட்டு பூரம் விராகனிடை 1, வாளம், மிளகு, லவங்கம், பூண்டுவகைக்கு விராகனிடை 2, அரைத்துக் கரைத்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து பணவெடை வீதம் உள்ளுக்குக் கொடுக்கவும்.

## 501 அச்சர மாந்தத்திற்கு.

நுணா வில்லம் தைவேளை, பொடுதலை, செம்முள்ளி ஆடாதோடை வகைக்குச்சார் படி 1, அவுரிச்சார் படி அரை, அத்தியிலை, வெந்தயம், ஆடாதோடைநீர்க்கு நுணாநீர்க்கு வகைக்குப் பிடி 1, பாண்டத்திட்டு 2-படி சலம் வார்த்து அரைபடியாகச் சுண்டித்து மேற்படி சாருகளோடு கலந்து சுருள்ளிச்சார்படி கால் வேய்க் கும்மட்டிச்சார் அரைக்கால், விளக்கெண்ணெய் படி 1 ஒன்று சேர்த்துப் பாண்டத்திட்டு அரத்தை கடுகுரோகணி, விளங்கம் வகைக்கு விராகனிடை 1, கடுக்காய் விராகனிடை 5, அக்கல்காரம், வெளிச்சப்பிசின், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள் வகைக்கு விராகனிடை 2, பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துசிறிய உச்சிக் கரண்டிவீதம் கொடுத்து மாலையில் மிளகுகடலிட்டு சுக்கைத்தட்டிப்போட்டுக் கியாழஞ் செய்து கொடுக்கவும்.

## 502 உட்டு மாந்தத்திற்கு.

சிந்தாமணக்கெண்ணெய்படி-ல, சிற்றகத்தி-தூதுவளை-தக்கைரக மூர்ச்சி-நொச்சி செம்முள்ளி-மணித்தக்காளி இவைகளின்சார் வகைக்குப்படி-ல, சதாக்குள்ளிப்பால் பலம் 1¼, ஒன்றாய்ச் சேர்த்துப் பாண்டத்திலிட்டு கடுரோகணி, கடுக்காய், இருசீரகம் உள்ளி, வசம்பு, வேளைவேர், பூதகரப்பன்பட்டை வகைக்கு விராகனிடை 1, இடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து காலையில் பணவெடைக்கொடுத்து மாலையில் மிளகு கடவிட்டு சுக்கைத்தட்டிப்போட்டுக் கியாழஞ்செய்து ஒரு சங்குவீதம்கொடுக்கவும்.

## 503 சுழிமாந்தத்திற்கு.

கோடகசாலை, துழாய், ஆடாதோடை, தும்பை, முதியார்கூந்தல், நற்சங்கன், சிந்தில், நதுகாளி, பெருந்தலை இவைகளின் சார் வகைக்குப்படி கால், விளக்கெண்ணெய் படி கால், ஒன்றாய் படுத்திப் பாண்டத்திலிட்டு சாதிக்காய், திப்பிலி, காயம், கடுரோகணி, உள்ளி வகைக்கு கழஞ்சு 1, பொடித்துப்போட்டுக் காய்ச்சியெரக்குஞ் சமயத்தில் கோரோசனமும், விராகனிடை 1, கலந்து வடித்துப் பணவெடை திட்டவும்.

## 504 உப்பல் மாந்தத்திற்கு.

சிறுதேக்கு, வாய்விளங்கம், கோஷ்டம், வால்மிளகு, கடுரோகணி, சுக்கு, ஏலம், திப்பிலி, கண்டுபரங்கி, ஓமம், கிராம்பு, தான்றிக்காய், உப்பிலாங்கொடி, தக்கோலம், இருசீரகம், குராசானி, பிரமிவேர் வகைக்குப் பலம்-ல, நையபிடித்துப் பாண்டத்திலிட்டு ஒருபடி-சலம்வார்த்து முக்கலாமாக்காகச் சுண்டித்து ஒருவிராகனெடை இந்துப்புகூட்டி சங்குவீதம் கொடுக்கவும்.

முற்றும்

முடிவு